# காத்தவராயசுவாமி
## கதை.




சரஸ்வதி புத்தகசாலை
நெ. 175, செட்டியார் தெரு,
கொழும்பு.

இ, 23,

உ

கடவுள் துணை

புகழேந்திப் புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

# காத்தவராயசுவாமி

# கதை



## அ. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

இதன் விலை] 1951 [ரூபா 2.

நெ. 23, தாண்டவராயப்பிள்ளை வீதி.

Acc No: 77845

உ

கடவுள் துணை.

# காத்தவராயசுவாமி வரலாறு கும்மி

## வெண்பா

ஆத்தி மலரணியு மையன் திருவருளால்
காத்தவனார் கும்மிக் கழறுதற்குப்—போற்றினேன்
விக்கினவி நாயகரே வேலவற்கு மூத்தோரே
அக்கறையா யடியேனை யாள்.

## கும்மி

கும்மியடிப்பெண்கள் கும்மியடியுங்கள் கூந்தலசையாமற் கும்மி யடி, நம்மையாளுங் காத்தவராயனை நாடிக்கும்மி யடியுங்கடி - அவ னைத் தேடிக்கும்பி யடியுங்கடி. 1

அரசனெனச்சொல்லுஞ் சூளையிலேஅமர் அழகனென்று மண் டியிலே, பிரசன்னவிநாயகர் தன்னருளாலிப்போ பெருமையாய்க் கும்மிப்பாடலுற்றேன் சுவாமி- அருமையாய்க்கும்மி பாடலுற்றேன்.

நந்தவனந்தன்னைக் காத்தவண்டி யவன் நான்குபெண்களைப் பார்த்தாண்டி, அந்தமுடன்சிவன் புத்திரன்காத்தனை யாசித்து நேசித்தடியுங்கடி-அவனை பூசித்துவாசித் தடியுங்கடி. 3

ஆரியமாலையி னுறைகொண்டானவன் அம்பிகைகாமாட்சி தன் னைக்கண்டான், காரியமான வரங்கள்பெற்றேயிதோ காத்தவன் வாரதைப் பாருங்கடி-நமக்கேற்றவன்வாரதைக் கோருங்கடி. 4

தொட்டியத்துச் சின்னான் தன்னைக்கண்டு மப்போ தோழமை யாகவே வைத்துக்கொண்டு, அட்டியில்லாமலே யடர்ந்தகாட்டினில் ஐயன்வாரதைப் பாருங்கடி-நமது மெய்யன்வாரதைக் கோருங்கடி 5

கப்பச்சுரக்காயைத் தானெடுத்தே யங்கே கடைந்தகின்னரி யாய்ப்பிடித்தே, அப்பாபட்ட ரத்தினருகினி லடித்தான்கின்னரி கேளுங்கடி-கையிற் பிடித்தான் கின்னரி மீளுங்கடி. 6

வண்ணாவல்லி மனையைக்கண்டு சுவாமி விண்ணாம்பேசி யுறவுகொண்டு, எண்ணமுடனங்க வண்ணாருயிர்களை எட்டியடித்த தைப் பாருங்கடி-சுவாமி கட்டிமுடித்ததைத் தேருங்கடி. 7

சாராயப்பூடி யகம்காடியங்கே பூராயம்பேசி யுறவாடிச் சாராய பீப்பாய் முழுதுமுண்டு ஊரைத் தாண்டிவாரானிங்கே பாருங்கடி- தாயை வேண்டிவாரானிங்கே தேருங்கடி. 8

கிள்ளையைப்போல வடிவுகொண்டுசுவாமி-வெள்ளையெனுந்தாசி தன்னைக்கண்டு, மெள்ளவேமாலையி லுள்ளே நுழைந்தவர் மெல்லியே யோடினான் பாருங்கடி-யவன் கல்லியாய்ப்பாடினான் கோருங்கடி. 9

77845

## கும்மிப் பாடல்

வளையல்கொத்தை யவனெடுத்து சுவாமி மாலையவள்கையிற் றன்றொடுத்து, கலையுண்டாக்கியே கன்னி கழுத்தினிற் கட்டிவந்தான் தாலி பாருங்கடி-மேளங் கொட்டிவந்தானொளி தேருங்கடி. 10

அப்பால்சுவாமி வடிவுகொண்டு ஆயிரம்வேதியர் தன்னைக் கண்டு, அப்பாபட்டர் மனையிற்பறையரை அடிக்கச்செய்ததைப் பாருங்கடி-சுவாமி யடிக்கச்செய்ததைத் தேருங்கடி. 11

ஆசாரங்குலைந்து தன்றேயவர் அலைந்துகெட்டு வரும்போதும், பாசாங்கான குருக்கள்வடிவுடன் பற்றியழைத்தானே வேதியரைச்-சுவாமி ஏற்றிக்கொடுத்தானே சாதிகளை. 12

ஆரியமாலையைக் கொண்டுவந்து மங்கை அழகுமுகனை பெருத்த பொங்கு, வீரியமாகவே யங்குவைத்துச் சுவாமி வேடிக்கையாய் வாரான் பாருங்கடி-மிக சோடிப்பதாய்வாரான் கோருங்கடி. 13

பஞ்சுகொள்ளுஞ்செட்டி போலேவந்து சுவாமி பாவையர்மேலே மனமுவந்து, பஞ்சுப்பொதியுடன் வஞ்சிதனை யவன் பார்த்திருந்து வந்தான் பாருங்கடி-சுவாமி சேர்ந்திருந்துவந்தான் தேருங்கடி. 14

உங்களுடன் வாதாடி யவன் மனமுகந்திடகூசாடி, ஆயன்குமரி யின் விதையெல்லா மிவன் அடக்கிவந்ததைப் பாருங்கடி-சுவாமி முடுக்கிதந்ததைத் தேருங்கடி. 15

அன்னமுத்தின்மே லாசைகொண்டு சுவாமி வன்னமுத்தின் பெட்ட மாளிச்சென்று, கன்னம்வைத்தங்கு மேட்டைதனைசெய்து கன்னிதனைக்கொண்டு வந்தாண்டி - இங்கே என்னவிதமா யமர்ந் தாண்டி. 16

சத்தகன்னித் தவமிருந்து சுவாமி சுத்தமனத்துடனே யெழுந்து, சித்தமுடன்காளி தனைக்கண்டேயவள் சீரருள்பெற்றதைப் பாருங்கடி-அம்மன் பேரருள்பெற்றதைத் தேருங்கடி. 17

முக்கணனிட சாபத்தினாலே யவன் மூன்றுகன்னியர் கோபத் தினால், சக்காம்போல் பெருததகழுவினில் தாங்காமன்மீறினன் பாருங்கடி-பின்வாங்காமல் தேற்றினன் தேருங்கடி. 18

வந்தஜெனங்க ளெல்லாம்போற்றத் தேவ ரிந்திரனங்கு மலர் தூற்ற,சுந்தரமானகழுமரந்தனிலே சொல்லிமுடியா வருத்தங்கொண் டான்-சுவாமி மெல்லியர்மேலே பொருத்தங்கொண்டான். 19

அரசனுங்கண்டு மிறங்குமெனச் சொல்ல ஐயனுந்தேவிகளு மிறங்கித், திறமுடன்சிவனுரைத்தசொற்படி திருச்சிறுப்பள்ளியைச் சேர்ந்திருந்தான்-சிறுதெரிவைமார்களைச் சேர்ந்திருந்தான். 20

கும்மிப்பாடல் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்



# காத்தவராயசுவாமிகதை

## பாயிரம்

### விநாயகர் துதி - கலி விருத்தம்

பூத்தகங்கைப் புணர்முலையாரியை
ஏத்தகாத்தவ ராயனெழின்மணம்
மாத்தரைபுகழ் மன்னியகாதைவேண்
மூத்தவனைவணங்கி மொழிகுவாம்

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மாமேவு பசுந்துளபமாயனும் வேதனுமறியா மறைவலாயன், பூமேவு பொற்பினைக்கோட்டிரலையினங் கன்றினடி புளகப்பூத்துத், தூமேவு மலர்க்கரத்தா னாறியமாதெனுங் கழைத்தோட்டரையாணக், காமேவு காத்தவராயன் மாலையிட்ட கதையைக் கழறுவாமால்.

### அவையடக்கம் - கட்டளைக் கலித்துறை

மூத்தமிழ் கற்று முயங்கறிவாளர்க்கு முன்சிறியோன், பித்தனைப்போலப் பிதற்றுமித்நூலின்றன் பெற்றியென்னே, சுத்தமுருமியப் பொருப்பினிற் காக்கைகள் சூழ்ந்திருப்பின், நித்தமும் பொன்னிறமாகுமென் றுலகினிகழ்த்துவாரே.

பாயிரம் - முற்றிற்று.

---

* இவன் வனக்காக்ககால் காத்தவராயனெனக் காரணமாயிற்று.

## வெண் செந்துறை

முந்திமுந்திவிநாயகரே முக்கணனார்புத்திரனே
சத்திவிநாயகரே சரிந்தவயிற்றோனே
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமெய்ப்பொருளே
வேலவர்க்குமுன்பிறந்த விக்கினவிநாயகரே
சாலைவிநாயகர்க்குஞ் சண்முகர்க்குமிப்பொழுது
பாலும்பழவகையும் பருப்புருண்டைதேங்கனியும்
எல்லாப்பழவகையு மெள்ளுருண்டை மாங்கனியும்
அத்தனையும்நான்படைப்பேன் சித்திவிநாயகர்க்கு
ஈசுரனார்ீன்றெடுத்த விருவாத்திளையவனார்
இணையில்லாக்காத்தவனா ரெழில்கதையையான்பாட
காத்தவனார்கதையைக் கலியுகத்தில்யான்பாட
வேதியர்கள் தன்வயிற்றில் விளங்கியவதரித்த
ஆதியர்கன்னிகையா ளாரியமாலைகதை
காத்தவசுவாமியார் கன்னிகையைசிறையெடுத்து
மகாதேவர்புத்திரனார் மாலைபெண்ணைசிறையெடுத்து
சிறையெடுத்தநற்கதையைச் செந்தமிழாற்பாடுதற்கு
கன்னியந்தமாலைகதை கருந்தமிழால்நான்பாட
வெண்தமிழாற்பாடுதற்கு விக்கினரேகாத்தருளும்
மூஷிகவாகனரே முன்னம்வா விக்கினரே
கதையைநடத்துமென்று கணபதியேகைதொழுதேன்

## சரஸ்வதியம்மன் துதி

வெண்டாமறையாளே வேதசரஸ்வதியே
தண்டாமறையாளே தாயேசரஸ்வதியே
முக்கணனாரீன்றெடுத்த முதன்மையுள்ளகாத்தவனார்
காத்தவனார்மாலைபெண்ணை கண்டுசிறையெடுத்து
சிறையெடுத்தநற்கதையைச் சிறப்பாகயான்பாட
மறையவனார்தேவியரே வாக்குவரமருள்வாய்
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை
குரலிற்குடியிருந்து கொஞ்சுமம்மாசரஸ்வதியே
குற்றங்கள்வாராமல் கூட்டணைக்கவேண்டுமம்மா

## நூல் வரலாறு

மண்ணேழுலகத்து மாகடவுளொருவருண்டு
நண்ணும்பூமிகளிற் சாற்றுகிறேனெற்றிசையும்



புல்லுமரங்களெல்லாம் போற்றுமறிவொன்றாமே
சொல்லுமிரண்டேயாகி தோன்றுமறிவிரண்டாம்
நாக்கால்நகருஞ்சீவன் நல்லவண்டுநான்காமே
மூக்கால் நுகருஞ்சீவன் தும்பிவண்டுநான்காமே
மனிதரிடமானிடரும் மாவிலங்குபுள்ளினமும்
புனிதமுறுங்கண்செவியால் புகலுமறிவைந்தாமே
மாந்தர்தபக்கு மதித்தமொன்றதிகமதால்
போந்கவாறிவென்று புகல்வார்பெரியோர்கள்
பதினாலுலகத்துக்குப் படியளக்குமீசுரனார்
அந்நேரவேளையிலே ஆரணங்கீஸ்வரியாள்
ஈசனைத்தான்பார்த்து ஈஸ்வரியாள்கேட்கலுற்றாள்
எந்தவிடம்போய்வாரீரெனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுபகவானு மரிவைக்கெடுத்துரைப்பார்
உலகம்படியளந்து உத்தமியேவந்தேனென்றார்
அவ்வசனந்தான்கேட்டு ஆரணங்குபார்வதியாள்
சிவனையறியாமற் சிற்றெறும்பைதான்பிடித்து
சிமிளிலடைத்து சிற்றிடையாளப்போது
மற்றுநாள்காலையிலே மயிலனையாள்தான்பார்த்து
சிமிளைத்திறந்து சிற்றெறும்பைப்பார்க்கையிலே
செவ்வாயில்நொய்கவ்வி யிருந்ததங்கேசிற்றெறும்பு
[ட்டு
அப்போதுஈஸ்வரியா ளஞ்சிமிகப்பயந்து
ஆண்டவனார்முன்னே வந்து அடிபணிந்துதெண்டனி
கைகட்டிவாய்புலைத்துக் கட்டழகியேதுசொல்வாள்
என்னைமுகாந்தரத்தா லெனைப்பணிந்தாய்மாதேநீ
என்றுமிகக்கேட்க இளங்கொடியாளப்போது
நான்செய்தஅபசாரம் நாயகரேசொல்கிறேன்கேள்
எறும்புகடையானஉயி ரெண்ணாயிரஞ்செந்துவுக்கும்
அம்பலசிவனுக்கும் படியளந்தபடியாலே
உந்தன்மனதறிய உலகளித்தஈஸ்வரரே
சிற்றெறும்புதான்பிடித்துச் சிமிளிலடைத்துவைத்தே
வாயிலேநொய்கவ்வி வைத்திருந்தபடியினாலே [ன்
இந்தஅபசாரம் அடியாளும்யான்செய்தேன்
அந்தஅபசாரம் எப்படிதீருமென்று
ஈஸ்வரியுந்தான்கேட்டா ளின்பமுடனப்போது
நந்தவனம்பூந்தோட்டம் நதிக்கரையம்வைத்தாயானால்

இந்தஅபசார மேந்திழையேதீருமென்றார்
அப்போதீஸ்வரியு மன்பாகத்தாளெழுந்து
காசிபோகும்வழிதனிலே கடுகவேவந்துநின்று
நந்தவனம்பூந்தோட்டம் நதிக்கரையோரம்வைத்தாள்
சித்திரப்பொய்கைகரை தேன்மொழியுமுண்டுபண்ணாள்
ஏழுசுற்று இருப்புவேலி ஈஸ்வரியுமுண்டுபண்ணாள்
காவல்வைக்கவேண்டுமென்று கட்டழகிபார்வதியும்
ஈசுரனைத்தான்பார்த்து ஈஸ்வரியுங்கேட்கலுற்றாள்
ஆரையிங்குகாவல்வைக்க ஆலோசனைசொல்லுமென்றா
கணபதியைவைப்போயா கட்டழகிபார்வதியே [ள்
கணபதியைவைத்தால் காவல்செய்யமாட்டானே
வேலவனைத்தாமழைத்து வைப்பேனோகாவலென்ன
சூத்திக்கள்ளனுச்சுதே கொற்றவனும்வேலனென்றாள்
வேலனுதவாதென்று மெல்லியருந்தானுரைத்தாள்
அப்போதீசனும் அளித்தாரேபாலகனை
நந்தவனந்தனிலே நலயாகக்காருமென்றார்
பூங்காவனங்காருமென்று புண்ணியனைஏவிவிட்டார்
ஈஸ்வரருமீஸ்வரியு மேகிவிட்டார்கைலையிலே
அந்தவனங்காத்து அரும்பாலகனங்கிருக்க
கைலையிலேதானிருந்து கன்னிமாரேழுபேரும்
ஸ்நானஞ்செய்யவேண்டுமென்று அன்பாகத்தாமிறங்கி
புட்பங்கள்தானெடுத்து போய்விட்டார்கைலைக்கு
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
அன்றந்தநாளையிலே ஆணழகர்தான்பார்த்து
தோட்டத்தைநன்றாகத் துரிதமுடன்பார்க்கலுற்றார்
மல்லிகைபுட்பமெல்லாம் வகையாகக்காணோமென்று
இன்று-கண்டறியவேண்டுமென்று கட்டழகர்காத்திருந்
அந்தச்சமயத்திலே அறிவைமார்கன்னியர்கள் [தார்
நந்தவனந்தேடி நாயகிமார்வாரார்கள்
பூங்காவனந்தேடி பொற்கொடிமார்வாரார்கள்
ஆடைகளைந்து ளரிவையர்கள்கரையில்வைத்து
மந்திரஆடையை மங்கையர்கடாமுடுத்தி
கங்கைதனிலிறங்கிக் காரிழைமாரேழுபேரும்
ஸ்தானஞ்செய்யலுற்றார்கள் தையலிளங்கொடிமார்
அப்போதுபாலகன்தா னன்பாகத்தான்பார்த்து



யாருமறியாம லங்கொருவர்காணாமல்
ஓட்டப்பெருநடையா யுத்தமருமோடிவந்து
ஏழுகன்னிகட்டு மிளையகன்னிபூவாடை
அதனைத்திருடிக்கொண்டு ஆணழகனோடிவந்து
புளியார்புதரிலே புண்ணியனும்போயொளித்தார்

காத்தவராயசுவாமி இளையகன்னி
ஆடையை யொளித்தல்

ஏழுகன்னிமாரு மின்பமொடுதாமெழுந்து
ஆடையெடுக்க அன்பாகவந்துநின்றார்
ஆறுபேர்துகிலாடை அவர்களெடுத்துக்கொண்டார்
இளையகன்னி துகிலாடை யில்லாமற்போனதினால்
கங்கையிலிறங்கிவிட்டாள் காரிழையாளிளையகன்னி
நீங்கள்-கைலைக்குப்போங்களென்று கட்டழகிநின்றாள்
இந்தநல்ல ஆறுபேரு மின்பமொடுபோனார்கள்
ஈசுரனார்தன்னிடத்தே யேந்திழைமார்வந்துநின்று
ஆண்டவனைத்தான்பார்த்து ஆரிழைமார்கூறலுற்றார்
ஸ்நானம்பண்ணசென்றிடத்தே தையலிளங்கொடிமார்
இளையகன்னி துகிலாடை யாரோயெடுத்துக்கொண்டார்
கங்கையிலிறங்கிவிட்டாள் காரிழையாளிளையகன்னி
என்றுமிவர்கள்சொல்ல ஈசுரனார்தான்கேட்டு
இடபத்தின்மீதேறினார்கள் ஈஸ்வரனுமீஸ்வரியுஞ்
சிங்காரவனந்தனிலே சீராகவருகையிலே
அந்தநல்லபாலன் அன்பாகத்தான்பார்த்து
சரக்கொன்றைமீதில் தானேறிநின்றிருந்தான்
பரமனும்பார்வதியும் பட்சமோடிழிறங்கி
சரக்கொன்றைமரமீதில் தாங்கள்வந்துவுட்கார்ந்து
அடர்ந்தவனங்காத்தான் நதிவனமும்நீகாத்தான்
பூங்காவனங்காத்தான் புட்பவனங்காத்தான் [ர்
அடாபேயா இறங்கடாவென்று பண்பாகத்தானழைத்தா
சரக்கொன்றைமரத்தைவிட்டு தனஞ்சயனுந்தானிறங்கி
மூக்கால்வளைந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
வாய்புதைத்துகைகட்டி மன்னவனுமுன்னேநின்றார்
நீ-இளையகன்னி துகிலாடை ஏண்டாயெடுத்தாயென்றார்
பூவைத்திருடினதால் பூவாடைநானெடுத்தேன்
என்றுமிவன்சொல்ல ஈஸ்வரனாரப்போது

### ஈஸ்வரர் காத்தவராயசுவாமிக்குச் சாபமிடுதல்

பிடியடாசாபமென்றார் பிஞ்ஞகரப்போது
மறையா மறைவலைவா கழுவாபிடிசாபமென்றார்
அப்போதுஈஸ்வரியும் அன்பாகத்தான பார்த்து
வேகாசுடலையிலே சாகாவரந்தந்தேனென்றாள்
ஆதிபரமசிவன் அதிககோபங்கொண்டெழுந்தார்

### ஈஸ்வரனார் அம்மனுக்குச் சாபமிட்டு கைலைக்குச் செல்லுதல்

பிடியடாசாபமென்று புண்ணியருந்தானுரைத்தார்
நான்கொடுத்தசாபமதை நலமாகநீயழித்தாய்
இன்றுமுதற்கொண்டு இடப்பாகம்வாராதென்றார்
பேயாயிருசியாய்ப் பிசாசாகப்போகவென்று
அலகையாய்ப்போகவென்று ஆண்டவருஞ்சாபந்தந்தா [ர்
அஞ்சிப்பயந்தாளே ஆரணங்குயீஸ்வரியும்
இச்சாபமெந்தனுக்கு எப்போது நீங்குமென்றாள்
அவன்-கழுவிலிருக்கும்போது கன்னியரே நீங்குமென்
அதன்பின்னிடபாகம் அன்பாகவாருமென்றார்
இந்தப்படிகூறி ஈஸ்வரனார் தானடந்தார் [றார்
கைலைப்பதியதற்கு கர்த்தாவும்போய்ச்சேர்ந்தார்
அந்நேரவேளையிலே அரிவையருந்தான்பார்த்து
மைந்தனைத்தான்பார்த்து மாதரசியேதுசொல்வாள்
உன்னாலேசாபமது உத்தமனேவந்ததென்று
எக்காலம்செல்லுமோ இச்சாபம் நீங்கிவிட
நாற்பிறப்புநீபிறந்து நலமாய்வருவாயானால்
நாடியென்னை அப்போது நன்றாகவந்தாலே
கேட்டவரந்தானே கிளிமொழியேநானுந்தனுக்கு
எமனுடையபூதகணம் நமனுடையபூதகணம்
எந்திழையுமப்போது ஈந்தாளேபாலகனுக்கு
பூர்வக்கியானந்தெரியப் பொற்கொடியுந்தானுரைத்து
வரங்கொடுத்துயீஸ்வரியும் அன்போடுபோய்நடந்தாள்
அந்நேரவேளையிலே ஆணழகரேதுசெய்தார்
வடக்குதிசைநோக்கி வாறானேமன்னவனும்
ஓட்டபிள்ளையார்கோவிலிலே உத்தமனும்போயிருந்து
உற்றுநினைக்கிறார் ஒருகோடிபுத்திதனை



புத்துராகமிருந்து பொற்கொடியாள்பிராமணத்தி
செப்புகுடமெடுத்து ஜலமொள்ளவாராளங்கே

### காத்தவராயசுவாமி இரண்டாவது உற்பத்தி

ஆற்றிலிறங்கியே அள்ளிஜலமொள்ளையிலே
எலுமிச்சம்பழம்போலே இருந்தார்ஜலந்தனிலே
கண்டாள்பிராமணத்தி கட்டழகியப்போது
எடுத்துப்புசித்தாளே இன்பமுள்ளகனியை
தண்ணீருமொண்டு தானடந்துவாறாளே
பத்துப்படிதாண்டி பாவையருமுன்னுழைந்தாள்
பத்துமாதகெர்ப்பம் பாவையற்குவுண்டாச்சி
இவள்-ஆற்றிலேதான்விழுந் திறந்துமடிவோமென்று
ஆற்றுக்குவருகையிலே அரிவையந்தபிராமணத்தி
முழுங்காலஜலந்தனிலே மெல்லியிறங்கினாளே
அப்போதுஆண்டவனார் அன்பாகவேதுசெய்தார்
வயிற்றிலிருந்தவர்தானு மண்ணில்விழுந்தானும்
குவ்வாகுவ்வாவென்று குழந்தையழுகையிலே
குழந்தைவடிவழகை கொடியிடையாள்கண்டுவிட்டாள்
இவள்-கண்ணீர்சொரிந்தல்லோ கதறியழுகலுற்றாள்
காலத்தில்நீபிறந்தால் கட்டழகாநான்வளர்ப்பேன்
காலமில்லாகாலத்திலே கண்மணியேநீபிறந்தாய்
எடுத்துவளர்க்கவென்றால் இன்பமுடனறியேன்
குழந்தைதனையெடுத்துக் கோரைப்புல்மேல்வளர்த்தி
அந்தபுறத்துக்கு அரிவையவள்வந்துவிட்டாள்
காராம்பறைச்சிபெற்ற கற்பூரசாயபவத்தி
அந்தவழியாக அரிவையருர்வருகையிலே
குழந்தையழுகுரலைக் கொடியிடையாள்தான்கேட்டு
அக்குழந்தைதனையெடுத்து ஆரணங்குவாராளே
அந்தப்புரந்தனிலே அரிவையவள்தானுழைந்து
கன்றுதோலின்மேலே கடுகெனவேதான்வளர்த்தி
தெருப்பெடுக்கப்போய்விட்டாள் நேரிழையாளப்போது
மல்லாக்காய்ப்படுத்திருந்த மைந்தன்குழந்தையது
கூவாவென்றழுகையிலே குடிசைபற்றி எரியுதங்கே
அப்போமழுபறைச்சி அன்பாகவே டிவந்தாள்
குடிசைபற்றிவேகிறதை கொடியிடையாள்தான்பார்த்து
குழந்தையழுகிறதைக் கொப்பனையுந்தாமெடுத்து

பிள்ளையார்கோயிலண்டை பொற் காடியுங்கொண்டுவந்
ஆலயத்துமுன்னுகப் பாலகனைவைத்துவிட்டு [து
அந்தப்புரத்துக்கு அரிவையரும்போய் நடந்தாள்
அப்போ-பூர்வக்கியானம்தெரிந்து புண்ணியருந்தாமெ
அந்தவிடம்விட்டு அப்புரத்தேவாருரே [ழுந்து
காளிகோவிலண்டையிலே கடுங்கனவேவந்துநின்று
இன்னமொருபிறப்பு இனிபிறக்கவேண்டுமென்று
எண்ணுதுமெண்ணியே யிருந்தாரே அவ்விடத்தில்
வலையன் சிவப்புடையன் மன்னன்சிவப்புடையன்
அவனுடையபெண்மானும் அக்காளிகோயிலண்டை
மேய்ந்துகொண்டுதானிருக்க மெதுவானபெண்மானுட
அதைவுற்றுப்பார்த்தாரே யொளியுள்ளகண்ணுலே

### காத்தவராயசுவாமி மூன்றுவது
### மான்வயிற்றி லுற்பத்தி

பனித்தண்ணீர்போலிருந்தார் பாங்கானபுல்லதின்மேல்
அந்தவொருபுல்லை அந்தமானுந்தான்புசித்து
நடைநடக்கமாட்டாது நடுவழியில்தான்படுக்கும்
தாதிகள்தான் துரத்த தாடங்கவில்லையது [லுகிறார்
சிவப்புடையான்முனேவந்து தெண்டனிட்டுச்சொல்
விஷப்புல்லைதான்புசித்து வயிறுமெத்தவீங்கினதால்
நடக்கவில்லையென்று நலமாகத்தானுரைத்தார்
இவ்வயணங்கேட்டு இருந்தான்சிவப்புடையான்
அப்போமானின்வயிற்றிலே மன்னவனார்தான்பிறந்தார்
கூவாகூவாவென்று குழந்தையழுகையிலே
மாங்கனிச்சேரிநின்று மன்னன்தலையாரி
சொல்லாதோட்டிமகனுஞ் சீர்காத்தான்தோட்டியென்று
பறையனவன்பார்த்தான் பாலனழுகிறதை [னும்
கொங்கமணிமான் கம்பளியில் குழந்தைதனைவளர்த்தி
சிவப்புடையான்முன்பாக சீக்கிரமாயோடிவந்தான்
அப்போதுசிவப்புடையா னழகன்தான்பார்த்து
என்னடாதோள்மேலே என்றான்சிவப்புடையான்
சுரக்காயிதுசுவாமியென்று சொன்னான்பறையனுமே
அப்போது ஆண்டவனாரவர்காலைத்தொங்கவிட்டார்
இதுவெதடாகுழந்தையென்று இன்பமொடுகேட்கலுற்று
என்மான்வயிற்றிலேபிறந்த மைந்தனிதுவென்றுரைத்தார் [ர்



இந்தநல்லகுழந்தையை எந்தனுக்குதாடாவென்றான்
அப்போதுகொடுத்துவிட்டா னழகன்பறையன்

### சிவப்புடையான் அரண்மனையில் காத்தவராயசுவாமி
### வளருதல்

குழந்தைதனையெடுத்துக் கொற்றவனும்வாரானே
மாளிகைக்குள்ளாக மன்னவனுங்கொண்டுவந்தான்
மனையாளைத்தானழைத்து மைந்தனைக்கைகொடுத்தார்
இந்தக்குழந்தைதான ஏதென்றாள்மனையாட்டி
மான்வயிற்றிலேபிறந்த மைந்தனடியென்றுரைத்தார்
அந்தக்குழந்தையை அரிவையவள்வாங்கிக்கொண்டாள்
பச்சைநரம்போடி பாரஸ்தனங்கட்டுதுபார்
கங்கைபோல்சுரக்கும் கிளிமொழியாள்மங்கையற்கு

### சிவப்புடையான் மனையாள் காத்தவராயசுவாமிக்கு
### தாலாட்டுதல்

மாணிக்கத்தொட்டிலிலே வளர்த்தினள்பாலகனை
ஆராரோ ஆராரோ அப்பனுக்குஆராரோ
மான்வயிற்றில்வந்துதித்த வள்ளலேனுங்கண்மணியே
கோலவனதொட்டிலிலே குழந்தையேகண்வளராய்
கானகத்துமான்வயிற்றில் கண்மணியாய்நீபிறந்தாய்
கானகத்தெடுத்துவந்த கண்மணியேநித்திரைபோ
தாலாட்டத்தாலாட்ட தாதியர்களேனைதன்னில்
அன்னங்கள்தாலாட்ட அரிவையர்கள்சூழ்ந்திருக்க
ரம்பையர்கள்தாலாட்ட ராஜாக்கள்சூழ்ந்திருக்க
விந்தையுள்ளதொட்டிலிலே விற்பனரேநித்திரைசெய்
ஆளப்பிறந்தவனே அரசாளவந்தவனே
கண்ணேயுறங்குறங்கு கண்மணியேநித்திரைசெய்
என்றுமிவள்தாலாட்ட ஏந்தியழையானப்போது
இந்தப்படியாக இருந்துவருகிறார்
நாளொருமேனியாக நட்சத்திரம்போல்வளர்ந்தார்
ஐந்துவயதாச்சு அருமையுள்ளபாலகனுக்கு
சகலமான வித்தைகளும் சாஸ்திரமுங்கற்றாராம்
இடபடியாகவே இருக்குமந்தவேளையிலே
வணங்காத்தசிவப்புடையான் மன்னனென்றுபேருமிட் [டார்
ஆரியப்பூராஜன் அன்பாகத்தான்கேட்டு

வலையன்றலையாரிக்கு மைந்தன்பிறந்ததென்று
சிவப்புடையான்றனக்குச் செல்வன்பிறந்ததென்று
குழந்தைபிறந்ததென்று கொற்றவ ந்தானறிந்து
கோவில்குருதானியரைக் குறிப்பாகத்தாமழைத்து

## ஆரியப்பூராஜன் ஐயமார்க்கு மைந்தன் பிறக்க உபாயஞ் சொல்லுவது

வலையனுக்குப்பிள்ளையது மைந்தன்பிறந்ததுகாண்
உங்களுக்குப்பிள்ளையது உத்தமரேயில்லையேதான்
சாளக்கிராமம்வைத்து தவஞ்செய்துபூசைசெய்தால்
உங்களுக்குப்பிள்ளை உடனேபிறக்குமென்றார்
அவ்வசனங்கேட்டா ரானதொருகுருக்களவர்

## இராஜன் சொற்கேட்டு ஐயமார் பூஜைசெய்தல்

அப்பாபட்டகுருக்களவர் அன்பாகத்தான்கேட்டு
அப்போதுரைமார்கள் அரன்பூஜைசெய்யலுற்றார்
ஆற்றுமணைமேலெடுத்து அரனாரையுண்டுபண்ணி
சேற்றுமணலெடுத்து சிவாலிங்கமுண்டுபண்ணி
ஆறாயிரம்வில்வங்கொண்டு அரன்பூஜைசெய்யலுற்றார்
பத்துலட்சம்வில்வங்கொண்டு பரமபூசைசெய்யலுற்றார்
சாலிக்கிராமம்வைத்து தனஞ்செயரும்பூஜைசெய்தார்
ஸ்ரீரங்கநாயகரைச் சிறப்பாகபூஜைசெய்தார்
மைந்தன்வரம்வேண்டுமென்று மாபூஜைசெய்தார்கள்
புத்திரன்வேண்டுமென்று புகழாகபூஜைசெய்தார்
ஐந்தறிவுமுள்ளடக்கி அரனாரைகைதொழுதார்
மும்மலங்கள் நீக்கியவர் மும்மூர்த்திகளைக்கைதொழுதார்
ஈஸ்வரருப்பிர்மாவும் யிவருக்குத்தாமிறங்கி
ஸ்ரீரங்கநாயகரும் சிந்தைமிகத்தான்குளிர்ந்து
மைந்தன்வரங்கொடுக்க மனந்தனிலேயெண்ணியவர்
இளையகன்னிதன்னுயிரை யின்பமுடன்தான்பிடித்து
எலுமிச்சங்கனிபோலே யின்பமுடன்தான்ஜபித்து

## ஆரியமாலை உற்பத்தி

அன்னதுளசிக்கு அன்பாகத்தான்கொடுத்தார்
பட்சணம்பண்ணுமென்றார் பாங்காகஅப்போது
அன்னதுளசியம்மா ளன்பாகத்தான்புசித்து



அதுவேகெர்ப்பமதா யரிவையருக்குண்டாச்சு
பத்துமாதஞ்சென்று பைங்கிளியையீன்றெடுத்தாள்
மழலைபிறந்ததுகாண் மாணிக்கம்போலாக

## குழந்தை பிறந்ததால் இராஜன் சர்க்கரை வழங்கி தானஞ் செய்தல்

அந்தமொழிகேட்டார் ஆரியப்பூராஜாவும்
சர்க்கரைகொண்டுமவர் தரணியில்வழங்குமென்றார்
யானைமேல்சர்க்கரை யன்பாகவழங்கினார்கள்
ஒட்டையின்மேல்சர்க்கரையை ஊரெல்லாம்வழங்கினார்
சீனிநல்லசர்க்கரையை சீமையில்வழங்குகிறார்கள் [கள்
நாட்டுநல்லசர்க்கரையை நாடெல்லாம்வழங்கினார்கள்
அன்னதானஞ்சொர்னதானம் அழகானமகாதானம்
கோதானம்பூதானங் கொடுத்தான்மகாராசன்
இப்படிக்குத்தானு மிருக்குமந்தவேளையிலே
ஐயமாருக்குப்பெண்தா னருமையாய்பிறந்ததென்று
சோதிடரைத்தானழைத்து சோதிடங்கள்பாருமென்றார்
அப்போதுசோதிடர்க ளன்பாகவேதுசெய்தார்
தங்குலவேதியர்கள் சாஸ்திரத்தைப்பார்க்கலுற்றார்
சோதிடத்தையாராய்ந்து சுருக்காகயெடுத்துரைப்பார்
பிறந்தநாள்தான் துடங்கி பேதையிந்தமாலையற்கு
பதினைந்துவயதளவும் பாக்கியங்கள்பெற்றிடுவாள்
பதினாறுதன்வயதில் தேவன்சிறையெடுப்பான்
சிறையெடுத்தபிற்பாடு சிலநாளில்சென்றிடுவாள்
இப்படியிருக்குதுகாண் யிளங்கொடியாள்மாதருக்கு[ரும்
இவையெல்லாந்தான்குறித்துஎடுத்துரைத்தார்சோதிட

## ஆரியப்பூராஜன் ஆரியமாலைக்குச் செல்வங்க ளமைத்தல்

அப்போ-ஆரியப்பூராஜ னன்பாகத்தான்கேட்டு [ட்டி
வெள்ளெருக்கன்காடுவெட்டி முல்லைவனக்கோட்டைக
ஏழுசுற்றுகோட்டைகளாம் ஈநுழையாமண்டபமாம்
பத்துசுற்றுகோட்டைகளாம் ஈநுழையாமண்டபமாம்
இருபத்தோர்கோட்டைகளாம் ஈநுழையாமண்டபமாம்
கீழேழுசுரங்கங்களாம் மேலேழுசுரங்கங்களாம்
இப்படியாகச்செய்தாராம் இன்பமுள்ளராசாவும்

இருபத்தொருவனங்க ளுண்டுபண்ணாருத்தமனார்
நந்திவனம்மந்திவனமும் நற்பூங்காவனங்களுமே
புட்பவனம்விதவிதமாய் புண்ணியனாருண்டுபண்ணார்
நஞ்சுகொட்டியல்லோ நட்டுவைத்தார்புன்னைகோட்டை
நாகதாளிபுன்னைமரம் நலமுடனேயுண்டுபண்ணார்
சந்தனக்குறடுமல்லோ தையலர்க்குவுண்டுபண்ணார்
பளிங்குமாமண்டபங்கள் பாவையர்க்குவுண்டுபண்ணார்
கோட்டையதற்குள்ளாக கட்டிவைத்தாராழியொன்று
அதில்வயிரியொன்று வண்ணலட்சங்கோடிமுதலை
சின்னாஞ்சின்னானென்று சேனைலட்சமாண்முதலை
ஆயிரம்பெண்முதலை அகழிதனில்விட்டுவைத்தார்
வாளைகண்டபடுவில் வையாறுவுண்டுபண்ணார்
தாளிப்பனையோலை கூந்தற்பனஞ்சோலை
வையாறுகரைகள்சுற்றி வைத்தார்பனஞ்சோலை
வாளைகண்டமடுவில் வாங்கிவிட்டார்பெண்கெண்டை
ஆரால்விரால்மீனும் அருங்கெண்டைமடவைகளாம்
ஆற்றுமடவைகளாம் அதிற்கிளைசந்தகிளுவைமீனும்
உளுவைக்கிளுவைகளாம் வுயர்ந்தவிலாங்குகளாம்
ஆற்றுமணலைகளாம் அதன்சேனைநெற்றிலியாம்
சுருமீனெருக்களுமே சொல்லவொண்ணாவுல்லங்களும்
முள்ளுவாளையோலைவாளை முசியவொண்ணாவெளவா
இத்தனையுமுண்டுபண்ணா மெழிலானராசாவும் [லாம்
ஆரியமாலையற்கு ஆராயிரம்தாதிகளாம்
அன்னமென்றுதாதிகளாம் சொர்ணமென்றுதாதிகளாம்
சின்னியென்றதாதிகளாம் சேர்ந்தலட்சங்கோடியுண்டு
இத்தாதிப்பெண்களின்னமுண்டுசொல்லுகிறேரும்
ஈயடிக்கத்தாதிகளா மெறும்படிக்கத்தாதிகளாம்
கால்பிடிக்கத்தாதிகளாம் கண்துடைக்கத்தாதிகளாம்
இத்தாதிபெண்டுகளை வைத்தார்மகாராசன்
இன்னமந்தமாலையற்குயென்னயென்னவுண்டுபண்ணார்
நாலுபக்கஞ்சங்கிலியாய் நவரத்தினவுஞ்சலுண்டு
சொர்ணப்பதுமைகளும் சுற்றிலுங்கட்டிவைத்தார்
தங்கப்பதுமைகளை தகுந்தபடியமைத்தார்
ஒன்பதுரத்னவகை உஞ்சலுக்குதானமைத்தார்
இத்தனையுமுண்டுபண்ணா ரின்பமுடன்மன்னவனார்
நவரத்னகூண்டுமொன்று நங்கையருக்காஸ்திவைத்தார்



முத்துகெண்டிமாலை மெல்லியர்க்கலங்கரித்தார்
இத்தனையாபரண மேந்திழைக்குத்தான்கொடுத்தார்
கொச்சுமஞ்சள்குடகுமஞ்சள் கொல்லத்தரக்குமஞ்சள்
சீரங்கமஞ்சள் திருநெல்வேலிருக்குமஞ்சள்
பச்சிலைக்கிச்சிலிக்கிழங்கு பாவையருந்தான்குளிப்பாள்
அவள்குளிக்குமஞ்சலோடை ஆறாய்ப்பெருகிவரும்
வாளைகண்டமடுவு வைகையாற்றுவரைக்கும்
கூந்தற்பனையோலை தாளிப்பனையோலைகளும்
எல்லார்தலைக்கூந்தல் இருபாகமூன்றுபாகம்
ஆரியமாலைகூந்தல் அறுபத்துமூன்றுபாகம்
தங்கக்கம்பிபோலிருக்குந் தையலிடகூந்தல்
அப்படிப்பட்ட அழகுள்ளமாலையவள்
அவளுடையதேசத்தில் ஆணாய்ப்பிறந்தவர்கள்
யாருமவள்பதியில் அடிவைக்கக்கூடாது
புத்தூரில்தான்வாழும் புண்ணியராமையன்மார்கள்
அப்பாபட்டர்குப்பாபட்டர் அனந்தபட்டர்சுப்புபட்டர்
ஆயிரம்வேதியர்க்கு அருமைதிருமகளாம்
அழகுதிருமகளாம் ஆரியபூமாலையிவள்
வணங்காதசிவப்புடையான் மன்னவன்தானிருக்க
அப்போ-ஆரியப்பூராசன் அன்பாகத்தான்பார்த்து
சிவப்புடையான்தன்னை சீக்கிரமாய்தானழைத்து
ஆயிரம்பொன்சம்பளமாய் அன்பாகத்தான்செய்து
மோகனப்பல்லக்கு மெத்தவேதான்கொடுத்து
மூலைக்கொடியாலையமா முதல்தெத்துவாசலுக்கு
இவ்விடத்தில்காவலென்று வின்பமுடன்வைத்தார்கள்
அப்போ-பஞ்சவர்ணசுவாமியவர் பரிமளஆண்டவனார்
கோலாகலவயிரி கொல்லிமலைசுவாமிதுரை
சிவப்புடையான்மாளிகையில் சிறப்பாய்வளர்ந்துவாரார்
நாளொருமேனியாக நட்சத்திரம்போல்வளர்ந்தார்
இப்படியாக இவர்வளர்த்துவருகலுற்றார்
ஐந்துவயதளவும் அன்பாய்வளர்ந்துவாரார்
இப்படிக்குத்தானா யிருக்குமோர்நாளையிலே [ர்
தன்-பூர்வக்கியானந்தெரிந்து புண்ணியனாரேதுசெய்தா
சிவப்புடையான்முகம்பார்த்து சுவாமியவரென்னசொல்வார்
தாயாரிடம்நான்போறேன் தனஞ்செயனேஎன்றுரைத்
ஐயோமகனேயென்று அழுதுபுலம்புறனே [தார்

பூஞ்சோலைமாமரங்கள் பொற்கொடிக்குதானமைத்தார்
வாழையிளவாழை வான்கமுகுபூஞ்சோலை
சோலைப்பலாமரங்கள் தோகையர்க்குத்தானமைந்தார்
தாம்பூலசிலவுக்கென்று தையலர்மாதினுக்கு
ஆயிரம்பொன்னென்று அன்பாயெழுதிவிட்டார்
மாலையற்குச்சிலவுசெய்த மயிலனையாள்வண்ணாத்தி
மானீசப்பேட்டையது வண்ணாரவல்லியவள்
வண்ணாரவல்லிக்கு மானியமாய்த்தான்கொடுத்தார்
பதினெட்டுகிராமம் பாவையற்குத்தான்கொடுத்து
நானூற்றெட்டுகிராமம் மெல்லியற்குத்தான்கொடுத்து
வண்ணாரவல்லிபெற்ற மயிலனையாள்சாந்தழகி
சாந்தழகிமெல்லியரும் சார்ந்திருந்துவுண்பார்கள்

## ஆரியமாலை கோட்டைக்கு இராஜன் காவலமைத்தல்

கோட்டைக்குமேற்புறத்தில் சுற்றிவரும்மந்திரிகள்
நாட்டுக்கணக்கெழுதும் நாயகத்தார்பிள்ளையென்று
ஊர்கணக்குத்தானெழுதும் உலந்தாச்சிபிள்ளையென்று
சீமைக்கணக்கெழுதும் செகக்குருநாதபிள்ளை [ம்
சுண்டுவில்லிரங்கப்பையன் துணைக்குமகன்மந்திரியாம்
ஒன்பதுமந்திரிகள் உலாவுவதுகோட்டைசுற்றி
மூன்றுபேர்ராசாக்கள் உலாவுவதுகோட்டைசுற்றி
துற்போசிமகாராசன் துளசிமகாராசன்
ஆனைலழகுமன்னன் ஆரியப்பூமகாராசன்
இம்மூன்றுராசர்களும் கோட்டைசுற்றியுலாவுவதும்
இப்படியாய்மாலையற்கு காவல்வைத்தானிராசாவும்

## இராஜன் ஆரியமாலைக்கு ஆபரணமளித்தல்

ஆரியமாலைக்கு ஆபரணந்தான்கொடுத்தார்
சந்திரகண்டிசூரியகண்டி தையலர்க்குத்தான்கொடுத்தார்
நவரத்தினத்தோடா நாயகிக்கலங்கரித்தார்
வங்கியிருகைக்கும் மயிலனைக்குத்தானணிந்தார்
ரத்தினசடைபில்லை நலமாயலங்கரித்தார்
மூக்குத்திசிந்தாக்கு மூன்றெற்றிச்சுட்டிகளும்
காலாழிபீலி கண்டசரப்பதக்கம்
மார்பிலுருட்டுவடம் மார்நிறைந்தகட்டுவடம்
தோளிலுருட்டுவடம் தோள்நிறைந்தகட்டுவடம்



என்னையேழ்பேர்பெற்றீர்களா யிளங்கொடியேசொல்லெ
அப்போதுகன்னியர்கள் அன்பாகக்கூறலுற்றார் [ன்றார்
பெற்றவர்கள்நாங்களல்ல புண்ணியரேசொல்கிறோம்
ஆலமரத்தருகே ஆச்சியவள்தவமிருந்தாள் [கேள்
அவள்தானுன்னைப்பெற்றவள் ஆணழகாவென்றுரைத்
வளர்க்கவறியாமல் மங்கையும்கொடுத்துவிட்டாள் [தார்
நாங்கள்பிள்ளையில்லாததினால் புண்ணியரேயுனைவளர்த்தோம் [ர்
என்றிவர்கள்சொல்லையிலே யின்பமுடன்கேட்டுவிட்டா
அய்யரிடம்நான்போறேன் தையலரேவிடைகொடென்றார்
அப்படியேபோகவென்றார் அரிவையந்தகன்னியர்கள்

## காத்தவராயர் ஆரும்பிறப்பில் கியானந்தெரிந்து தாயிடம் வருதல்

ஆபரணமத்தனையும் அடைவாககழற்றிவிட்டார்
கன்னியர்கள்முன்னேவைத்தார் கட்டழகனப்போது
எப்போதினைப்பேனோ அப்போதுதரவேண்டும்
அப்படியேநல்லதென்று அன்பாய்விடைகொடுத்தார்
பன்னிரண்டுகோடிமந்திரம் பாங்காகவுபதேசித்தார்
எப்போநினைத்தாலும் அப்போவருவேனென்று
அன்பாகதானுரைத்தார் ஆறொருவர்கன்னியற்கு [டார்
மூன்றுமுழதுண்டமதை முடியின்மேல்சுற்றிக்கொண்
நான்குமுழதுண்டமதை நன்றாயிடுப்பில்கட்டி
தாற்றுக்கோல்கைபிடித்து சுவாமியவர்வாறாரே
தாயாரைத்தேடிக்கொண்டு தனஞ்செயனார்வாறாரே
வீரசுரங்காவேரி வெற்றிபுகழ்ஓமந்தூர்
ஓமந்தூரோடைதேடிக்கொண்டு வுத்தமனார்வாறாரே
தாயார்தவநிலையில் சுவாமியவர்வந்துநின்றார்

## காத்தவராயசுவாமி தாயாரைக் கண்டு நமஸ்கரித்தல்

தோட்டந்திறந்துமவர் தொன்னைதைத்துபூவெடுத்தார்
அன்றுமலர்ந்தமலர் ஆயிரமலரெடுத்தார்
வில்வதளமெடுத்தார் விதவிதமாய்பூவெடுத்தார்
தும்பைமலரெடுத்தார் துளசிதளமெடுத்தார்
சொல்லமுடியாத கொன்றைமலரெடுத்தார் [வந்தார்
எண்ணவொண்ணாபுட்பமெல்லாம் ஈஸ்வரிக்குகொண்டு

பாதந்துலக்கியவர் பட்டாலடி துவட்டி
ஈரமுலர்த்தியவர் யிருபாதந்தான் துடைத்து [ந்து
கொண்டுவந்தபுட்பமெல்லாங் குபுகுபென றுதான்சொரி
வாரிவந்தபுட்பமெல்லாம் மலைபோலேதான்சொரிந்து
மக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்

தெண்டனிட்ட தன்பிள்ளையை அம்மன்
வாழ்த்துதல்

வந்துபணிந்தவரைக் கண்டுவிட்டாள் காமாட்சி
நெற்றிக்கண் தான் திறந்து நேரிழையாள் காமாட்சி
மூன்றுகண்ணால் தான்பார்த்து மூக்கங்கொடுத்தாளே
என்னைப்பெறுவாய்நீ எதிர்த்தார்முடி பெறுவாய்
தன்னைப்பெறுவாய்நீ சகலரையும்வென்றிடுவாய்
கலியுகத்துகன்னிகளை வாழசிறைபிடிப்பாய்
மண்டலத்துகன்னிகளை வாழசிறைபிடிப்பாய்
என்திருஷ்டிபொல்லாது எழுந்திருமகனேயென்றாள்
அப்போதுகாத்தவனார் அவசரமாய்தானெழுந்து
கைகட்டிவாய்புதைத்து காமாட்சிமுன்பே நின்றார்
இப்படிக்குத்தானுமங்கே யிருக்குமந்தவேளையிலே
அம்மாள்முகம்பார்த்து ஆண்டவனாரே சொல்வார்
நான்வேட்டைக்குபோய்வாரேன் சொல்லிவிடைதாருமெ
அப்போதுகாமாக்ஷியம்மனவனோடு சொல்லுவாள் [ன்றார்
அப்போது-தெறகுமுகப்போகாதே யென்றாளே காமாட்சி

காத்தவராயசுவாமி வனசாரி வருதல்

அப்படியேநல்லதென்று ஆண்டவனார் தாமெழுந்து
அனுப்பிவிடைகொடுக்க ஆண்டவனார் தாமெழுந்து
மாட்டுக்காரப்பையனைப்போல் மன்னவரும்வாறாரே
பஞ்சைபனாதியைப்போல் பக்குவமாய்வாறாரே
காடுசெடி தாண்டி கடுகெனவேவாறாரே
அப்படியாக அவர் அங்குவரும்வேளையிலே
கொண்டைகட்டிவேளாளர் கொறவர்களோ பதுபேர்
பந்துகளைத்தானெடுத்துப் பெண்களனாறார்கள்
சப்பாணியம்மையப்பன் தனஞ்சயனைத் தானெடுத்து
வாவுநல்ல உடையிலே தூக்கிக்கொண்டுவாறார்கள்



அரனேபரனேயென்று ஆண்டவனைத்தான் துதித்து
கண்மூடித்தவமிருந்தாள் கட்டழகிகாமாட்சி
ஆலமரத்தின்மேல் அநேகவிகடட்சிகளும்
வாசமாய்தானிருக்கு மயிலணையாளண்டையிலே [லாம்
கொக்கினங்கள்குருவினங்கள் அதினுடையஎச்சமெல்
ஏந்திழையாள்மேனியிலெங்கு நிறைந்திருக்கும்
இப்படிக்குத்தவமிருந்தா ளீஸ்வரியாளன்னேரம்
அந்தநல்லவேளையிலே ஆண்டவனார்வாராராம்
பசியென்றார்பாலமல்லவென்லேப்பிடுங்குதுபார்
இவர்பசியின் கொடுமையால பாங்குடனே துசெய்தார்
கவுண்டுசல்தானெடுத்து அடித்தாராம்பட்சிகளை
அடித்தவுடன்பட்சி அழுதுபுலம்புதுபார்
அடித்தவுடனே சுழன்று அலறிவிழுகுதுபார்
காமாட்சிக்கபயமென்று கதறிவிழுகுதுபார்

காத்தவராயசுவாமி இருபிறப்பு பிறந்தெரித்தது

அப்போ-நெற்றிக்கண்தான் திறந்தாள் நேரானகாமாட்
சிக்கென்றுதான் பறந்து சாம்பலாயெறிந்துவிட்டார்[சி
சாம்பலின்மேடையின்மேல் செங்கீரைத்தண்டானார்
செங்கீரைத்தண்டாகச் செழிப்பாகவளர்ந்தாரே
நெற்றியிலுலாவுகிறார் நேரானஆண்டவனார்
கண்ணைத்திறந்துவிட்டான் கடுகயெறிந்தாராம் [ந்தார்
ஆணிமுத்துத்தாண்டவத்தில் ஆண்டவனார்தான்மறை
இவள்-ஆணிமுத்துத்தான்வெடித்து ஆண்டவனார்தனமறைந்தார்

மூன்றுவது அம்மன் கையில் பிறக்க
அம்மனெடுத்து தாலாட்டல்

இவள்-கையிரண்டுமேந்தி கடுந்தவஞ்செய்கையிலே
இவள்-கையில்விழுந்தாராம் கட்டழகன்குழந்தையைப்
தன்னாதநாளையிலே சுவாமிதயவுசெய்தார் [போல்
எப்படியாய்வளர்ப்பேனென்று சொன்னாளே காமாட்சி
ஆலம்விழுதுகள் ஊஞ்சலாயுண்டுபண்ணி
கலைத்தோலும்மான்தோலும் கடுகெனவேதான்விரித்து
அதிலேகுழந்தைதன்னை அம்மனும்வளர்த்திவைத்து
ஆரிவரோ ஆரிவரோ அப்பனுக்கு ஆராரோ
ஆரிவரோவென்று சொல்லி ஆட்டுகின்றபாலகனை

தவஞ்செய்யுநாளையிலே சந்ததியாய் நீபிறந்தாய்
வரமிருக்குநாளையிலே மைந்தனாய் நீபிறந்தாய்
இப்படிதாலாட்டியிருந்தா ளீஸ்வரியாள ந்நேரம்
கொல்லிமலைகன்னியர்கள் கொல்லியர்கள்வாரார்கள்
இந்த-குழந்தையழுகிறதைக் கொம்பனைமார்கேட்டுவிட்
ஆடிகிழவியென்று அண்டையிலேவந்துநின்றார் [டார்
தள்ளாதநாளையிலே தையலிலங்கொடியே [மார்
உனக்கு-குழந்தைவந்தவாறேது கூறுங்கள்கொம்பனை
அப்போதுஈஸ்வரியாள் அவர்களுக்கேதுசொல்வார்
தள்ளாதநாளையிலே சுவாமியவர்கொடுத்தார் [ம்
நான்வளர்க்கப்பயனறியே னென்றுசொன்னாளீஸ்வரியு
எங்களுக்குந்தாயாகி லீஸ்வரியேவளர்ப்போமென்றார்
அப்படியேகொடுத்துவிட்டா ளாணழகுமைந்தனை தான்
குழந்தைதனை எடுத்துக்கொண்டு கொம்பனைமார்வாரார்
கொல்லிமலைதேடி கொம்பனைமார்வாரார்கள் [கள்
வெண்கலத்துக்குள்ளே மெல்லியர்கள்வந்துவிட்டார்

### காத்தவராயசுவாமி கொல்லிமலை கன்னியர்களிடத்தில் வளருதல்

இந்தக்குழந்தைதன்னைஏந்திழையாள்வளர்க்கலுற்றாள்
தரையிலேவிட்டாக்கால் தண்டைக்கால்நோகுமென்று
பூமியிலேவிட்டாலே பொன்னடிகள்நோகுமென்று
பஞ்சணைமேலாக பாங்குடனேவளர்த்துவாறார்
இவர் ஆடையாபரண மன்பாயணிவார்கள்
இந்திரஜாலமந்திரஜால மின்பமாய்க்கற்கவைத்தார்
கூடுவிட்டுகூடுபாயக் கோடிவித்தைகற்கவைத்தார்
கோகரணங்கஜகரணம் கொம்பனைமார்கற்பித்தார்
வேலைக்கொருவேஷ்டிபூண மெல்லியர்கள்கற்பித்தார்
இப்படியாகவல்லோ ஏந்திழைமார்கற்பித்தார்கள்
சகலமுங்கற்றுக்கொண்டார் தனஞ்சயனாரப்போது
ஐந்துவயதுமல்லோ ஆண்டவர்க்காச்சுதுபார்

### காத்தவராயசுவாமி கன்னிகளிடத்தில் தன் பிறப்பு வளர்ப்பறிதல்

பூர்வக்கியானந்தான்தெரிந்து புண்ணியனாரென்னசொ
கன்னிகள்முகம்பார்த்து கட்டழகர்கேட்கலுற்றார் [ல்வார்
என்னைப்பெற்றவர்களியா ரெனக்கறியசொல்லுமென்றார்



நடுமத்தியிலிவனைவைத்து நலமாகவேவேளாளர்
அந்தநல்லவேளையிலே ஆண்டவனார்வாறாரே [று
யாட்டுக்காரப்பையனைப்போல் மன்னவனார்வந்துநின்
இவர்கள்பந்துகளாடுவதைப்பார்த்திருந்தார்மன்னவனார்
நான்கூட ஆடுகிறே னென்றாராம்ஆண்டவனார்
அப்போதுவேளாளர் ஆணழகரேதுசொல்வார்
உன்னாலேயாகுமோடா உத்தமனேயாடுதற்கு
அப்படியேயாடுகிறேன் அன்பாகப்பாருமென்றார்
ஐம்பதுபேரொருபக்கம் அன்பாகநின்றார்கள்
ஆண்டவனோர்பக்கம் அவ்விடம் நின்றுவிட்டார்
ஐம்பதுபேர்விட்டபந்து ஆண்டவனாரேதுசெய்தார்
வலதுகையில்தட்டி இடதுகையில்தான்பிடித்தார்
இவர்விட்டெறிந்தபந்து வெகுதூரம்போகுதுகாண்
ஐம்பதுபேர்பந்துபின்னால் அன்பாகஓடுகிறார்
இதுவேசமயமென்று எழுந்தி ந்தார் ஆண்டவனார்
சப்பாணியம்மையப்பன் தனஞ்சயனைஎடுத்துக்கொண்டு

### காத்தவராயசுவாமி பந்தாடி தாயாரை வந்துகாணல்

தாயாரின்முன்னேவந்து தனஞ்சயனார்தெண்டனிட்டார்
அப்போதுகாமாட்சி அம்மனவள்கண்விழித்தாள்
ஆரையடாகொண்டுவந்தாய் அரும்பாலாசொல்லுமென்றார்
சப்பாணியம்மையப்பன் தன்னையெடுத்துவந்தேன் [ன்
உன்-தவசடியைகாத்திருக்க தாயேநான்கொண்டுவந்தே
என்றுமிவர்சொன்னார்காண் யின்பமுடனம்மனுக்கு
காலுகையுமில்லையம்மா கட்டழகர்மன்னனுக்கு
அந்தவுரைகேட்டு அம்மனவள்காமாட்சி [கொடியாள்
அப்போ - விபூதியைத்தான்போட்டாள் மெல்லியிளங்
காலுங்கையும் வளர்ந்தது கடவுகனுக்கப்போது
அம்மையப்பன்காராளன் அவனுமொருவேளாளன்
காராளனென்றுசொல்லி காமாட்சிபேருமிட்டாள்
அம்மன்தவநிலையை அம்மையப்பன்காத்திருந்தான்

### காத்தவராயர் மறுபடியும் வேட்டைக்குப்போக தாயை கேட்டல்

இப்படிக்குத்தானிருக்க வெங்கள்துரைபஞ்சவர்ணம்
முக்கால்வலம் வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்

நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டுமனமகிழ்ந்தாள்
என்னடாஎன்மகனே யென்னைப்பணிந்ததென்ன
என்னைப்பணிந்தவகை யெவ்வகைசொல்லுமென்றாள்
நான்யெட்டினதுலவு காமாட்சிபோகவேண்டும்
வனவேட்டையாடிவர மெல்லியரேவிடைகொடென்றார்
அப்போதுகாமாட்சி அன்பாகவேதுரைப்பாள்
தெற்குவடக்குநீ கிழக்குமுகம்போய்வரலாம்
மேற்குமுகம்போகாதே யென்றாளேகாமாட்சி
அப்படிக்கேநல்லதென்றார் ஆண்டவனார்பஞ்சவர்ணம்
வெண்ணீறள்ளிகொடென்றார்மெல்லியிளங்கொடியாள்
திருநீறுதான்கொடுத்தாள் தையலிளங்கொடியாள்

காத்தவராயர் தாயிடம் விடைபெற்று
மலையாளம் வருதல்

நெற்றியிலள்ளியிட்டு ஆண்டவனார்வாறாராம்
எங்கென்றுவாராரு மெங்களிட ஆண்டவனார்
மலையாளந்தேடியல்லோ வாராரே ஆண்டவனார்
அது-உப்பங்கிடாரவழி பார்மணல்மேடையது [ர்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
உற்றுநினைத்தாராம் ஒருகோடிபுத்திகளை
எண்ணுதுமெண்ணுகிறார் யெண்ணமற்றசிந்தையிலே
கொல்லிமலைக்கன்னிகளைக் கொற்றவனார்தானினைந்தார்
வாவென்றழைத்தாரும் வருகுதுபார்மறுவேஷம்
என்னவிதமாய்வேஷம் யெடுத்தாரும்ஆண்டவனார்
கூப்பிட்டழைத்தாரும் வருகுதங்கேமறுவேஷம்
பாம்பாட்டும்ஜோகியைப்போல் பாங்குடனேவேஷங்கொண்டார்
ஊரில்லாபிடாரனைப்போல் வுன்னதமாய்வடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனானார்
நானூறும்பத்துஞ் சென்ற நரைத்தகிழவனைப்போல்
பண்ணைப்பூபோலே பழுத்தக்கிழவனானார்
காணியகலமது கட்டழகன்பாகையென்ன
மயிலிறகுகுயிலிறகு வைத்தாரும்ஆண்டவனார்
கொக்கிறகுகுயிலிறகு வைத்தாரும் ஆண்டவனார்
பாம்புத்தோல்தன்னாலே மன்னவனாரங்கிகளாம்
நடுதட்டிகட்டினார் நடுமடியில்பாங்குவைத்தார்



காலில்நல்லவண்டயமாம் கலகலென்றுஓசையிடும்
முப்பத்திரண்டுவிருது எடுத்துமிககட்டினாராம்
ஆராயிரம்பாம்புபெட்டி ஆண்டவனாருண்டுபண்ணார்
வைரவனவானரத்தை வகையாகத்தானழைத்தார்
காளியைத்தானழைத்து மகடிக்குழலுண்டுசெய்தார்
கடைக்கோலுவுண்டுபண்ணார் தனஞ்செயனாராண்டவனா
கைதனில்காப்புமது கட்டழகருண்டுபண்ணார் [ர்
பிடாரக்கிழவனைப்போல் புண்ணியருவாறாராம்

காத்தவராயர் ஜோகி வேஷங்கொண்டு
சின்னானைத் தேடி வருதல்

செப்போடுசாதகமுஞ் சீராககைபிடித்து
மலையாளந்தேடியல்லோ வாராருங்கொல்லிமலை
சின்னானிருப்பிடத்தைச் சீராகத்தேடிவாறார்
கடையாங்கடைத்தெருவில் கட்டழகர்வந்துநின்றார்
முதற்கடையில்வந்தல்லவோமுடிமன்னனுட்கார்ந்தான்
கடைக்கோர்பணமலவோ கட்டழகர்தாருமென்றார்
அடா-எந்தவூர்பிடாரா நீஎங்குவந்தாயென்றுகேட்டார்
காஞ்சிபுரத்திலிருக்கும் ஏகாம்பரஜோகிமகன்
கடைக்கோர்பணம்வாங்க கட்டழகாவந்தேனென்றார்
அப்போதுகடைக்காரர் ஜோகியருக்கேதுசொல்வார்
சின்னராசனுத்தரவு வந்தாற்கொடுப்போமென்றார்
அப்படிகொடுப்போமென்று ரானகோர்வர்த்தகர்கள்
மகடிக்குழலூதி மலைப்பாம்பையேவிட்டார்
வர்னவிதப்பாம்புகளை வர்த்தகர்மேலேவிவிட்டார்
பாம்புகளையேவிவிட்டார் பாங்குடனேகடைமீதில்
கடையெல்லாம்பாம்பாக கௌவிபறவுதுபார்
அப்போதுகடைக்காரர் அலறியபயமென்று
நெஞ்சுலர்ந்துநாவறண்டு நினைவுதடுமாறி
ஐயோசிவனேயென்று அலறிகெட்டோடுகிறார்
சின்னானல்லராஜாண்டை யோடுகிறாரலறிகெட்டு
அப்போதுசுவாமியவர் அங்ஙனமேயேதுசெய்தார்[றார்
கடையிலுள்ளபண்டங்களை கண்டவர்க்குகொள்ளையென்
கடையெல்லாங்கொள்ளையென்று கட்டழகர்தானுரைத்
இப்படியேசுவாமியவ ரிங்கிருக்கும்வேளையிலே [தார்
அப்போதுசின்னானு மவன்மனையிலென்னசெய்வான்

எண்ணெயிட்டுக்கொள்ளுகிறா னியலான சின்னராசன்
அப்போகடைக்காரர் ஐயோசிவனேயென்று
கூச்சல்முறையிட்டார்கள் நம்பலாய்க்கடைக்காரர்
முறையிட்டசத்தமதை கொப்பெனவேகேட்டுவிட்டார்
ஆடாவென்றுசொல்லி அதட்டிமிகக்கேட்கையிலே
அப்போதுகடைக்காரர் அனைவருமேதுசொல்வார்
ஆரோஒருபிடாரனையா அநீதஞ்செய்கிறான்
என்றுமிகச்செட்டியார்க ளெல்லோருந்தாமுரைத்தார்
அந்தவுரைகேட்டு ஆனதொருசின்னானும்
மீசைதுடி துடிக்க விழிகள்பொறிபறக்க
அடங்கவொண்ணக்கோபமுடன் ஆக்கரித்துபற்கடித்து
துள்ளியெழுந்தானே தொட்டியத்துச்சின்னானும் [னும்
அவன்-எண்ணைத்தலையுடனே எழுந்திருந்தான்சின்ன
அவன்-குடுமிதானுட மூகங்கள்சிவப்பேற
தங்கமிதியடியாய் தனிக்குமிழ்கண்ரத்தினமாம்
முத்துமிதியடியைத் தொட்டுநடந்துவாறான் [றார்காண்
அவன்-பொற்பிரம்புதான்பிடித்து பொட்டெனவேவா
ஆடாவென்றுசொல்லி அதட்டிமிகக்கேட்கையிலே
பாம்பாட்டிஜோகிநான் பாங்காய்பிடாரனென்றார்
கடைக்கொருபணந்தான் கட்டளையாய்வாங்குவன்யான்
அப்படிக்குத்தான்கொடுத்தால் ஆணழகாயான்போவேன்
என்றுமிவர்சொல்லுகையில் கேட்டானேசின்னானும்
அப்போதுசின்னானு மாண்டவருக்கேதுசொல்வான்
தான்-வைக்கின்றமோடி தன்னைமன்னவனேயெடுத்தால்
அப்படியேநான் தாரேன் ஆணழகாவுந்தனுக்கு
எப்படிவையுமென்றார் இன்பமாய்பிடாரனவன்

### தொட்டியத்துச்சின்னான் மோடிவைக்க சுவாமி யெடுத்தல்

அப்போதுசின்னானு மன்பாகமோடிவைத்தான்
மோடி யெடுமென்று மெத்தெனவேசின்னானும்
அப்போது ஆண்டவனர் அன்பாகயேதுசொல்வார்
மகுடிக்குழல்வாயில்வைத்து மன்னரெடுக்கவந்தார்
ஆட்டுத்தலைகோழித்தலை பன்றித்தலைமூன்றுவைத்தார்
கொல்லிமலையாண்டவனர் கொற்றவனர்தானெழுந்து
அட்சதையுந்தானெடுத்து ஆணழகன்சின்னானும்



மோடிக்குமுன்னாலே குந்தினான்சின்னானும்
அவன் தகப்பன்ராமன்தோட்டியன்பாகயேதுசெய்தான்
ஆயிரம்பொதிமந்திரங்கள் கற்றவனாராமன்தோட்டி
என்மகன்சின்னானை எவன்வந்துகெலிப்பானோ
அவன்சிரசுதான்விழுந்து என்கையில்விழவேண்டும்
கண்மூடித்தவசிருந்தான் கடுகெனவேராமன்தோட்டி
மோடியெடுக்கவென்று மெத்தனவேவாராரிவர்
மோடியெடுத்தவரு மட்சதையுமுறைப்பாரும் [பார்
அட்சதையிறைக்கையிலே அடித்துக்கொண்டுபோகுது

### காத்தவராயர் மோடி யெடுக்கவந்து மூர்ச்சையாய் விழுந்தது

கொல்லிமலையாண்டவனர் குறித்தமோடியெடுக்கவந்து
இவராலேயானமட்டும் எடுக்கவும்கூடவில்லை
வாயிலேரத்தங்கக்கி மன்னவனர்தான்விழுந்தார்
ஆயன்மகள்கறுப்பழகி ஆரணங்கப்போது
தயிர்பானைதலையில்வைத்து தையலரும்வாறாளாம்
அத்தைமகனையங்கே ஆரணங்குதான்பார்த்தாள்
மோசம்வந்துநேர்ந்ததென்று மெல்லியவளேதுசொல்
சக்கரத்தைத்தானனுப்பி தையல்கறுப்பழகி [வாள்

### கறுப்பழகி காததவராய சுவாமியை யெழுப்புதல்

இராமதோட்டியன்சிரசை நலமாகத்தானறுத்து
அத்தைமகன்காலிலே ஆரணங்குகட்டிவிட்டார்
இவர்மூச்சைதெளிந்து யெழுந்தாராமாண்டவனர்
கண்டுவிட்டான்சின்னானுங் கட்டழகனப்போது
இவன் தகப்பன்சிரசை கட்டழகனப்போது
காணுதுபோலேயல்லோ கண்டாராஞ்சின்னானும்

### காத்தவராயசுவாமி சின்னானை யிழுத்துக்கொண்டு தாயிடம் வருதல்

அபயமபயமென்று அலறிவந்துதான்விழுந்தான்
அப்போது ஆண்டவனு ராணழகர்தானெழுந்து
அவன்-முன்குடுமிதான்பிடித்து யிழுத்துவாரார்சின்னா
கம்பாநதிகேடி காமாட்சிமுன்னிலையில் [னை
இழுத்துக்கொண்டுவாறாரா மாண்டவனாரப்போது

அவனுடையதேவியர்களாரணங்கு அழுதுவாறார்
தாலிநல்லபிச்சை தரவேண்டுமென்றார்கள்
முந்தாணிப்பிச்சையது முன்பிச்சைதரவேண்டும்
மங்கிலியப்பிச்சையது மடிபிச்சைதரவேண்டும்
அழுதுகொண்டுவாறார்களச்சின்னான்தேவியர்கள்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுவாறார்கள்
கம்பாநதிதனிலே கட்டழகர்கொண்டுவந்தார்
அப்போதுகாமாட்சி அரிவையருங்கண்விழித்து
பாராததுபோல பார்த்துவிட்டாள்காமாட்சி
என்னடாயென்மகனே இப்பெரியகூச்சலென்றாள்
மலையாளச்சின்னானை கொண்டுவந்தேன்மாதாவே [ள்
என்றுமிவர்சொலலுகையில் ஈஸ்வரியாள்தான்பார்த்தா
அப்போதுஈஸ்வரியாள் அம்மனவளேதுசொல்வாள்
சின்னான்முகம்பார்த்து தேவியவள்கூறலுற்றாள்
மலையாளச்சின்னானும் மன்னவனும்நீதானோ

### காமாட்சியம்மன் சின்னானுக்கு அபயஸ்தங் கொடுத்தது

அடாதொட்டியத்துசின்னானும்துரையகனும்நீதானோ
அப்போதுசின்னானும் அம்மனுக்கேதுசொல்வான்
நான்தான்சின்னானென்று நலமாகத்தான்பணிந்தான்
பணிந்ததொருசின்னானை பாவையருந்தான்பார்த்து
எழுந்திரடாசின்னானென் றீஸ்வரியுந்தானுரைத்தாள்
கைகட்டிவாய்புதைத்து கட்டழகன் நிற்கலுற்றான்
அப்போதபயஸ்தம் எல்லோருந்தான்கொடுத்தார்
அபயஸ்தந்தான்கொர்டுத்துயஞ்சாதேஎன்றுசொன்னாள்
அனைவரையும்போகவென் றன்பாய்விடைகொடுத்தாள்
சின்னானைத்தானிறுத்தி யெல்லாரையும்போகச்சொன்னா
அப்போதுசின்னானும் ஆச்சிமுகந்தான்பார்த்து [ள்
இளைப்பாயிருக்கிறேனேந்திழையேயெந்தனுக்கு
பசியிளைப்பைத்தீர்த்துவிடும் பாவையரேயெந்தனுக்கு

### சின்னானுக்கு அம்மன் அன்னமிடுதல்

அப்போதுஈஸ்பரியும் ஆரணங்கேதுசெய்தாள்
சடையைக்குலுக்கினாளே தையலந்தகாமாட்சி
எழுபேர்பெண்கள் அம்மனுக்குத்தான்பணிந்து



எங்களையுண்டுபண்ண தேதுக்கென்றுகேட்கலுற்றார்
அப்போதுஈஸ்பரியாள் அவர்களுக்கேதுசெய்தாள்
மலையாளசின்னானுக்கு வகையுடனேசாதமதை
சமையல்செய்யுமென்றுசொல்ல தையலருந்தானுரைத்
ஏழுநாளைவண்டியரிசி யினபமுடன்பிண்ணாக்கு [தாள்
எட்டுத்தோட்டக்கீரை ஏத்தமுள்ளபிண்ணாக்கு
இதமாகத்தான்சமைத்து யின்பமுடன்வைத்தார்கள்

### அம்மன் சின்னானை சாப்பிடச்சொல்ல சின்னான் வருதல்

சின்னானைத்தான்பார்த்து தேன்மொழியாளென்னசொல்வாள்
சர்வதீர்த்தப்பொய்கையிலே தந்தசுத்திசெய்துகொண்டு
தந்தசுத்திசெய்துகொண்டு தனஞ்செயரேவாருமென்றா
நான்குழலைச்சவுக்கை நலமாகத்தான்கொடுத்து [ள்
குட்டையைத்தானெடுத்து கொற்றவனுமேதுசெய்தார்
சமைத்ததொருசாதமெல்லாந் தையலரேகொட்டுமென்றார்
அப்படியேகொட்டினார்கள் அங்கிருந்தசாதமெல்லாம்
முந்தானைத்தான்பிடித்து மெத்தெனவேவாரார்கள்
கண்டுவிட்டாள்காமாட்சி கட்டழகியப்போது
சின்னான்சபர்த்தை தேன்மொழிமெச்சிக்கொண்டாள்
சர்வதீர்த்தப்பொய்கையிலே தனஞ்செயரேநீர்போயி
சாதமுண்டுவாருமென்று தையலருஞ்சொன்னாளே
அப்போதுசின்னானும் அன்பாகவோடிவந்து
கொண்டுவந்தசாதமதை விசிரிட்டாள்கெங்கையிலே
அப்போதுசின்னானும் அங்கெனவேயேதுசெய்தான்
மண்டியிட்டுவுட்கார்ந்தான் வங்கணத்துச்சின்னானும்
வாயைவைத்துறிஞ்சுகின்றார் வகையானகெங்கைதனை
ஒருமுணருக்குள்ளாக ஒருசுற்றுசலம் வடியும்
மூன்றுமுணருக்குள் முழுதும்வடியுதுபார்
ஆராலுளுவைமீனும் அக்குளத்துமச்சமெல்லாம்
வாளைவிராலுளுவை வகையானமீன்களெல்லாம்
வங்கணத்துச்சின்னானவன் வயிற்றில்நிறைந்ததுகாண்
மூன்றுமுணருக்குள்ளே முட்டவடிந்ததுபார்
அத்தனையுந்தான்குடித்து கரைமேற்படுத்திருந்தான்
பாம்பாய்புரளுகிறான் பாங்கானசின்னானும்

### ஈஸ்வரி சின்னானைத் தேடிப்பிடித்தல்

சின்னானைக்காணோமென்று எழுந்தாளே ஈஸ்வரியாள்
சடைகுலுங்கமுடிகுலுங்க தையலெழுந்திருந்தாள்
கலைத்தோல்புலித்தோலும் மான்தோலுந்தானசைய
பொற்பிரம்பைகைபிடித்து பொற்கொடியும்வாராளே
சர்வதீர்த்தப்பொய்கைதேடி தையலரும்வாராளே
வங்கணத்துச்சின்னானைக் கண்டுவிட்டாள்காமாட்சி
குளத்தையும்பார்த்தாளே கொடியிடையாள்காமாட்சி
குளத்திற்சலமுமில்லை கொடியிடையாள்கண்டுவிட்டாள்
அப்போதுசின்னானும் அன்பாகயேப்பமிட்டான்
ஏப்பமிடும்போது எழுந்ததுபச்சமெல்லாம்
வாளைவிரலும் வகையுடனேமீன்களெல்லாம்
வாயிலிருந்துமல்லோ வந்துவிழுந்ததுபார்
துள்ளிவிழுகுதுபார் சீரானவக்குளத்தில்
இவனுடையதன்சமர்த்தைக் கண்டாளேயீஸ்வரியும்
இவனைஜெயிக்கவல்லோ ஒருவனாற்கூடாது
எப்படிஜெயிப்பேனென்று ஈஸ்வரியுமனதிலெண்ணி
கறுப்பாயிதருமத்தாலே கட்டழகன்பிழைத்தானே
இவனைச்செயிக்கவல்லோ ஒருவரால்முடியாது
என்றுமனதிலெண்ணி யின்பமுடன்காமாட்சி
பொற்பிறப்பங்கோலாலே பொற்கொடியும்தட்டிவிட்டா
துடித்துயெழுந்தானே தொட்டியத்துச்சின்னானும் [ள்
அம்மன்முகம்பார்த்தவனுமேயேதுசொல்வான்
எனக்கென்னகெதியெனவே ஈஸ்வரியைகேட்கலுற்றா
அப்போதுகாமாட்சி அவனுக்குயேதுசொல்வாள் [ன்
காத்தவனுஞ்சின்னானும் கலந்துமிகப்பட்சமுடன்
அண்ணனுந்தம்பியுமாய் அன்பாயிருங்களென்றாள்
சின்னானதுகேட்டு சிந்தைமிகமகிழ்ந்து
ஆண்டவர்க்கடிமையென்றான் ஆணழகன்சின்னானும்
சின்னானுஞ்சுவாமியுமாய் சிறாகந்தானிருந்தார்
அன்றுபோய்மற்றாநாள் ஆண்டவனை ரெனைசெய்தார்
தாயாரைவணங்கியந்த சுவாமியவர்கேட்கலுற்றார்
வேட்டைக்குபோய்வாரேன் மெல்லியரேவிடைகொடெ
சின்னானுங்காணுமாய் தேன்மொழியேபோய்வாரோம் [ன்றான்
அப்போது அம்மனவள் ஆண்டவருக்கேதுசொல்வாள்
அப்படியேபோமென்று அனுப்பவிடைபெற்று



### வேட்டைக்கு வருதல்

காத்தனும்சின்னானும் கடுகெனவேவாரார்கள்
புல்லங்கிமாமலையில் புலிவேட்டையாடுதற்கு
வாரார்கள்இருவருமாய் மண்ணதிரவிண்ணதிர
மானிலத்திலுள்ளதொரு மாற்றான்குலைநடுங்க
சில்லென்றகாடுவிட்டு செடியும்வனந்தாண்டி
கரடியுறங்கும்வனம் காட்டானைதூங்கும்வனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிகள்தூங்கும்வனம்
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்கூண்டுகட்டும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
எட்டடிவேங்கை யிருக்கும்வனந்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வாரார்கள்வெகுதூரம்
புல்லங்கிமாமலைகள் புண்ணியர்கள்வந்துநின்றார்

### காத்தவராய சுவாமியும் சின்னானும் வேட்டையாடுதல்

மானுக்குக்கன்னிகுத்தி மலையோரம்போயிருந்தார்
சிட்டுக்குக்கன்னிகுத்தி செடியோரம்வந்துநின்றார்
மான்படுங்கன்னியிலே மயிலனையாள்பட்டாள்காண்
சிட்டுபடுங்கன்னியிலே தேன்மொழியாள்பட்டாள்காண்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
ஆரியமாலை அவள்குளிக்குமோடையிலே
கொச்சிமஞ்சள்குடகுமஞ்சள் கொல்லத்தாக்குமஞ்சள்
ஏழுமஞ்சள்தான்குளித்தாள் யிளங்கொடியாள்மாதுகன்
அவள்குளித்தமஞ்சளோடை ஆறாய்ப்பெருகுதுபார் [னி
வாளைகண்டமடுக்கரைகள் வையாறுபெருகுதுபார்
தாளிப்பனஞ்சோலை கூந்தற்பனஞ்சோலையது
அதிலேபெருகிவரும் அவள்குளிக்கும்மஞ்சளது
மஞ்சளோடைக்கண்டாராம் மாரிபிள்ளைபஞ்சவர்னம்
அடா-தொட்டியத்துச்சின்னானே துரைமகனேஊழிய
வங்கணத்துச்சின்னானே மதகளிறேஊழியனே [னே
மஞ்சள்மணக்குதடா மருவாடைகொள்ளுதுபார்
தாழம்பூவாடை தனிவாடைகொள்ளுதுபார் [ர்
ஆர்குளிக்கும்மஞ்சளோடை ஆணழகாசொல்லுமென்றா
தொட்டியத்துச்சின்னானும் துரைமகனேதுசொல்வான்
ஆச்சான்மகள்பெண்ணாம் ஐயன்மகள்மாலைபெண்ணாம்

அவள்குளிக்கும்மஞ்சளோடை என்றாராம்சின்னானும்
மஞ்சள்கமகமென்ன மதிவாடைகொள்ளுதுபார்
ஆர்பெற்றசீர்பகளோ ஆரியமாலையவள்
வங்கணத்துச்சின்னானும் மன்னவனுஞ்சொல்லுகிறார்
ஆச்சாளழகுபெண்ணாளையன்பெண்காளையிவள்
ஆயிரம்வேதியற்கு அருமைத்திருமகளாம்
அப்பர்பட்டனீன்ற ஆரியப்பூமாலையவள் [ன்
அவள்குளித்தமஞ்சளோடை ஆறாய்ப்பெருகுதென்றா
கண்டறிந்துவாரேனென்று கடுகெனவேபஞ்சவர்ணம்

### காத்தவராயசுவாமி மச்சவடிவாய் ஆரிய மாலையைக் காணுதல்

ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்பஞ்சவர்ணம்
ஒருசேற்கெண்டைபோல் சுவாமிவடிவெடுத்தார்
சிவுக்கென்றுதான்குதித்தார் வாளைகண்டமடுவிலே
அம்மைமடுவில்மாரிபிள்ளை அன்பாகவாராரே
ஆரியமாலைகெண்டை ஆடுமேபெண்களண்டை
ஆண்டவனைத்தான்பார்த்து அங்கெனவருகுதுபார்
பங்குகள்போடுகுது பார்ப்பாரக்கெண்டையது
இதைக்-கண்டுவிட்டாராண்டவனார் கட்டழகர்வேல்முருகர்

### காத்தவராயசுவாமி யாவரையுந் தொழுது வெண்ணீ ரிறைத்தல்

மோசங்கள்வருகுதென்று விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
ஆரைநினைக்கின்றா ளவற்றசிந்தையிலே
தாயைமனதிலெண்ணி தகப்பனையுமனதிலெண்ணி
அண்ணன்கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
கொல்லிமலைக்கன்னிகளைக் கொப்பெனவேதானினைந்து
வெண்ணீறூதிவிட்டார் விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
ஆயிரங்கெண்டையர்கள் மதிமயங்கிக்கொள்ளுதுபார்
அத்தைமகனேயென்று மருங்குள்ளமைத்துவரே
எங்களைநீர்மருவி யிருந்தாசைதீருமென்று
காதல்விடாய்கொண்டு கட்டழகிபெண்கெண்டைகள்
மோகவிடாய்கொண்டு மெத்தெனவேயேதுசொல்லும்
எங்களைச்சேருமென்று எந்தனுடன்கேட்குதுபார்



அப்போது ஆண்டவனா ராரைநினைக்கலுற்றார்
நமனாரின்பூதத்தை நாதரவர்தானழைத்தார்
அக்குரல்தான்கேட்டு அங்குவந்தபூதமது
ஆண்டவனார்முன்னேவந்து அப்பூதமேதுசொல்லும்
என்னையழைத்தவகை யேதுவகைசொல்லுமென்று
பூதமதுகேட்கையிலே புண்ணியனாரேதுசொல்வார்
எமனார்தன்பூதமது யின்பமுடன் நீயுமாக
ஆண்கெண்டைவடிவெடுத்து அங்ஙனமேநீங்களுமே
பெண்கெண்டையாகியதை புகழாகமருவுமென்றார்
அப்போதுபூதங்கள் ஆண்டவனார்சொற்கேட்டு
ஆண்கெண்டைபோலாக ஆச்சுதுபூதங்கள்தான்
ஆயிரங்கெண்டைகளை யன்பாய்மருவுதுபார்
அந்தப்பெண்கெண்டைக்கு ஆசைகள்தீர்ந்துதப்போ
வாளைகண்டமடுவைவிட்டு வருகுதுவெண்கெண்டையெல்லாம்
மதுவங்கரைதேடி வருகுதுகெண்டைகள்தான்
ஆரியமாலைகெண்டை அன்பாகத்தாமிருக்கும்
ஆரியமாலைகெண்டைரெண்டு மான்பாகயேதுசெய்யும்
ஆண்டவனார்செலவுபெற்று அதனிடத்திற்போய்சேரும்

### ஆரியமாலை கூந்தல் காத்தவராயசுவாமியைக் காட்டுவது

பூதங்கள்போனபின்பு புண்ணியனார்கொல்லிமலை
மச்சவடிவுகொண்டு மடுவில்வரும்பொழுது
அப்போது-ஆயிரம்வேதியற்கு அழகுபெண்ணாள்மாலை
மாலைகன்னிகூந்தலது மட்டுமிதங்களில்லை [கன்னி
எல்லார்தலைகூந்தல் ஐந்துபாகமாறுபாகம்
ஆரியமாலைகூந்தல் அறுபத்துநான்குபாகம்
அவ்வளவாய்நீண்டதொரு அழகுள்ளகூந்தலது
தங்கக்கம்பிபோலாந் தலைகூந்தல்தானிகளாம்
அப்படியாக்கொற்றதொரு அழகுள்ளகூந்தலிலே
அதிலேயொருகூந்தல் அறுத்துவருகுதுபார்
அவள்குளிக்கிறவோடையிலே கூந்தல்தனித்துவந்து
கொல்லிமலையாண்டவரை கொடுதலையாய்சுற்றுதுபார்
ஆண்டவரைக்கட்டுதுபார் அரிவையிடகூந்தலது
முன்கட்டும்பின்கட்டுமாய் மூன்றுகட்டுங்கட்டுதுபார்
கட்டினகட்டுடனே கெங்கையிலேமுன்சுழன்று

அடித்துக்கொண்டுவருகுதுபார் ஆறுதனிலாண்டவரை
யல்லக்காய்ப்படுத்துவிட்டார் பாரிபிள்ளைபஞ்சவர்னம்

### காத்தவராயர் தனக்கபாயம் வருகுதென்று சின்னானை நினைக்க சின்னான் கெருடனாய் வருதல்

ஆரை நினைக்கலுற்றார் ஆண்டவனார்கொல்லிமலை
எவரை நினைக்கலுற்றார் எங்கள் துரைபஞ்சவர்னம்
வங்கணத்துச்சின்னானே மதகளிறேயூழியனே
தொட்டியத்துச்சின்னானே துள்ளுபுலிவீரியனே
என்னுயிர்போகுதடா யிலஞ்சியனே வாருமென்றார்
தனித்துயிர்போகுதடா தனஞ்செயனே வாருமென்றார்
ஆண்டவனார்கூப்பிடவே அறிந்தானே சின்னானும்
காத்தவராயருக்கு கனமோசம்வந்ததென்று
மலையாளவித்தைகளால் என்னவடிவெடுத்தான்
செங்கருடன்போலாக சீக்கிரமாய்வடிவெடுத்து
செட்டைதட்டிசிறகொதுக்கி சிவ்வென்றுதான்பறந்து
மடுவின்கரையோரம் வான்கெருடன்வந்துநின்று
கட்டுண்டகாத்தவரைக் கரையிலொதுக்கக்கண்டு
மல்லாக்காய்குண்டுகட்டா யிருக்கக்கண்டுசெங்கருடன்
அக்கரையில்வேலமரம் ஆற்றங்கரையோரம்
வெம்பாமணல்தனிலே போட்டவர்கட்டவிழ்ப்பார்
குத்திகுத்தியவிழ்ப்பாரே குணமுள்ளசின்னானும்
சிக்குபட்டகூந்தல்தனை சீக்கிரமாயவிழ்த்துவிட்டார்
கட்டவிழ்ந்தபிற்பாடு காத்தவர்தாமெழுந்தார்
அப்போ-நிஜரூபங்கொண்டாரே நிமலிபிள்ளைபஞ்சவர்
கட்டுண்டகூந்தல்தனை காத்தவனார்தான்பார்த்து [னம்
ஆரியமாலைகூந்தல் ஆண்டவனார்தானெடுத்து
அதை-அளவிடபார்த்தாரே அறுபத்துநான்குபாகம்
கதிர்க்கம்பிபோலாகக் கண்டுவிட்டார்பஞ்சவர்னம்
கூந்தல்படைத்தவள்காண் கொடியிடையாளெவ்வழகோ
அவள்கூந்தலிவ்வழகு கொடியிடையாளெவ்வழகோ
முடிகூந்தலிவ்வழகு மொய்குழலாளெவ்வழகோ
அழகுடையமாலைதன்னை அவளைசிறையெடுக்கவேண்டும்
வடிவுடையமாலைதன்னைமன்னன்சிறையெடுக்கவேண்டு
அவளைசிறையெடுக்க அன்பாய்மனதிலெண்ணி [ம்
கன்னியரைசிறையெடுக்க கட்டழகர்மனதிலெண்ணி



### காத்தவராயசுவாமி தாயாரிடம் வருதல்

அப்போதுபஞ்சவர்னம் ஆண்டவனாரங்கேவாரார்
தாயாரைத்தேடியல்லோ சுவாமிதுரைவாரார்
மாதாதவநிலைக்கு மன்னவர்வாராரே
ஆறுசுனைதாண்டி அடர்ந்தவனந்தாண்டி
ஆலமரம்கம்பாநதி ஆண்டவனார்தேடிவந்தார்
தாயார்தவநிலையில் சுவாமிவந்துதெண்டனிட்டார்
மாதாவின்முன்னேவந்து மலர்தூவிதெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவனை மகனென்றுதானறிந்து
கண்ணைத்திறந்துமப்போ காமாட்சிதான்பார்த்து •
வாழ்த்திவிடைகொடுத்து மைந்தனுக்கேதுசொல்வாள்
என்னைப்பணிந்தவகை யேதுவகைசொல்லுமென்றாள்
எவ்விடம்போய்வந்தாய்எனக்கறியச்சொல்லுமென்றாள்
போய்வந்தகல்லிடத்தை புண்ணியரேசொல்லுமென்றாள்

### காத்தவராயசுவாமி தாயாரிடத்தில் ஆரியமாலையின் வரலாறு கூறுதல்

அப்போதுகாத்தவனார் அம்மனுக்கேதுசொல்வார்
நான்-புல்லங்கிமலைமேலே புலிவேட்டையாடிருந்தேன்
மானுக்குக்கன்னிகுத்தி மலையோரம்போயிருந்தேன்
சிட்டுபடுங்கன்னியிலே தேன்மொழியாள்பட்டாள்காண்
மான்படுங்கன்னியிலே மங்கையவள்பட்டாள்காண்
கண்டுவந்தமாலையரை கொண்டுவரவேணுமம்மா
பார்த்துவந்தமாலையரை பாரிபண்ணவேணுமம்மா [னி
கூந்தல்படைத்தவள்காண் கொடியிடையாள்மாலைகன்
கூந்தலைப்பாருமென்று கொற்றவனார்முன்னேவைத்தார்
அப்போதுகாமாட்சி அங்கெனவேயேதுசெய்தாள்
அளவிட்டுப்பார்த்தாளே அழகுடையகூந்தல்தன்னை
அறுபத்துநான்குபாகம் அளவுபடாகூந்தலது
அப்போதுகாத்தவனாராண்டவனாரேதுசொல்வார்
ஆச்சாளழகுபெண்ணை ஐயன்மகள்மாலைதன்னை
அவளைச்சிறையெடுக்க அன்பாய்விடைகொடென்றார்
அவள்கூந்தலேயிவ்வழகு கொடியிடையாளெவ்வழகோ
தலைச்சிறைபோயிவ்வழகு தையலவளெவ்வழகோ

### காத்தவராயர் ஆரியமாலையைச் சிறையெடுக்க மாதாவைக் கேட்டல்

அழகுடையமாலைதன்னை சிறையெடுக்கவேண்டுமம்மா
கன்னியந்தமாலைதன்னை கண்டுசிறையெடுக்க
போகவிடைதாருமென்னை போய்வாரேன்மாலைவனம்
கண்டுவந்தமாலையைநான் கொண்டுவரவேணுமம்மா
பார்த்துவந்தமாலையைநான் சேர்த்துவரவேணுமம்மா
பாயிற்படுத்தாலும் பாம்பாய்புரட்டுதம்மா
தரையிற்படுத்தாலும் செந்தேளாய்கொட்டுதல்லோ
உண்டாலுஞ்சாதமது உடலிற்றரிக்கவில்லை
தின்றாலுமிலையடைக்காய் செவ்வாய்சிவக்கவில்லை
கட்டிடமெல்லாமுன்னிடத்தே கருத்தெல்லாமாலையிடம்
செத்தகட்டையுன்னிடத்தே சீவனெல்லாம்மாலையிடம்
மாண்டகட்டையுன்னிடத்தே வல்லுயிர்கள்மாலையிடம்
கன்னிதனைசிறையெடுக்க கடுகவரங்கொடம்மா

### காமாட்சி காத்தவருக்கு வெண்ணீறு கொடுத்து தடை சொல்லல்

அப்போதுகாமாட்சி ஆண்டவருக்கேதுசொல்வாள்
வென்றுவாமகனேயென்று விபூதியையள்ளியிட்டாள்
தாயையிவர்கேட்கையிலே தந்துவிட்டாள்விபூதிதனை
விபூதியள்ளியிட்டு மெல்லியவளேதுசொல்வாள்
ஆர்குடியை நீகெடுக்க ஆண்டிவேடங்கொண்டாயடா
எவர்குடி நீகெடுக்க யிவ்வேடங்கொண்டாயடா
அவளாருஐயன்மகள் நீயாருஆண்டிமகன்
ஆண்டிமகனார்க்கு அய்யன்மகளாமோ
சாதிக்கெல்லாமுயர்ந்ததடா தையலிளங்கொடியாள்
நாலானசாதியிலே மேலானசாதியவள்
அய்யன்மகளாரை ஆசரிக்கவொண்ணாது
பிர்மகுலப்பெண்ணல்லவோ பிரமஹத்திசுற்றுமடா
பாவம்வந்துநேருமடா பழிகாராவுந்தனுக்கு
வினைகள்வந்துநேருமடா வேதியர்கள்பெண்ணாலே
நாலானசாதியிலே மேலானசாதியடா
பாலானமேனியவள் சேலானகன்னியடா
பிர்மகுலமாலையடா வேதியர்மகளாலே
வினைகள்வந்துசேருமடா வேதியர்மகளாலே



பழிகள்வந்துநேருமடா பட்டர்மகளாலே
தாயிலும்பத்தினியை தாரமென்றுயெண்ணாதே
என்னிலும்பத்தினியா ளிடைகூறுசொல்லாதே
மாதாவிலும்பத்தினியாள் மனையாளென்றெண்ணாதே

### காத்தவராயர் தாயாருடன் மறுமொழி கூறல்

என்றம்மன்சொல்லையிலே ஏதுசொல்வாராண்டவனார்
ஆச்சிமுகம்பார்த்து ஆண்டவனார்கூறலுற்றார்
அம்மா-தோஷம்வந்துநேர்ந்தாலும் தோகையால்நான்படுவேன்
பாவம்வந்துநேர்ந்ததென்றால் பச்சிலையாலோட்டுவேன்
வினைகள்வந்துநேர்ந்ததானால்வெந்நீரால்போக்கிடுவே
மாற்றான்பிடித்தாலே மருந்துண்டுவையகத்தில் [ன்
கூற்றுவன்பிடித்தாலே குண்டுமுண்டுவையகத்தில்
காத்தான்பிடித்தாக்கால் கடைக்கிறையாக்கிடுவேன்
போகவிடைகொடம்மா போய்வாரேன்மாலைவனம்
மாலைதனைக்கொண்டுவர வரங்கொடம்மாபெற்றவளே

### காத்தவராயசுவாமிக்கு காமாட்சி மொழிகூறல்

காமாட்சிதான்கேட்க காத்தருக்கேதுசொல்வாள்
என்றிவர்கேட்கையிலே மீஸ்வரனார்பத்தினியும்
கம்பாநதிகாமாட்சி காத்தவருக்கேதுசொல்வாள்
அப்பாமகனேயடா அழகுள்ளகண்மணியே
மாலைதனைசிறையெடுக்க மனதிலேயெண்ணங்கொண்டா
கன்னியரைசிறையெடுக்க கருத்தில்நினைவானாய் [ய்
மாலைதனைக்காணுதற்கு மைந்தாவுன்னாலாகுமோடா
அவளுக்கு-கட்டென்னகாவலென்ன காவலதிகாரமெ
சுற்றுஞ்சுரங்கமென்ன துரைமக்கள்காவலென்ன [ன்ன
கீழேசுரங்கமுண்டு மேலேசுரங்கமுண்டு
இருபத்தேழுசுரங்கத்துள்ளேயிருக்கின்றாள்மாலையவள்
அவளுடையகோட்டைதனில் அதிகாரமெத்தவுண்டு
வலையன்சிவப்புடையான் மன்னன் தலையாரி [டையான்
முத்துடையான்சுகத்துடையான் முடிபொறுத்தசிவப்பு
அவளுக்கு-காணிகளத்தாரு காமுருவல்நன்னாடு
முத்திரியப்பேட்டையப்பா முதல்வரிசைகிராமமுண்டு
வம்பனுக்கும்சோழனுக்கும் வம்புலிக்காலாண்டிச்சி
மாவண்டமறக்காண மகிழ்ந்திருக்குஞ்செய்யூராம்

மங்களபங்காள மாமஞ்சள்உரையூராம்
சேலூர்உரையூராஞ் செல்லப்பன்பாளையமாம்
கோலூர்உரையூராங் கொண்டயன்பாளையமாம்
ஆலூராம்சேலூராம் அசலூராம்பேட்டைகளாம்
காவேரிவடகிழக்கு நேர்கிழக்குதென்மேற்கு
பாம்படிப்பட்டலூராம் பத்துசுற்றுபாளையமாம்
பாய்ச்சலூர்ஓமந்தூராம் பத்துலட்சமானியமாம்
கோட்டைக்குநேர்கிழக்கே கோடிசுற்றுமுல்லைவனம்
நாலுபக்கங்காவல்களாம் நலமானகோவில்களாம்
பிச்சாண்டியீசர்தேவர் பிரபலமுள்ள ஆலயமாம்
அந்தவொருஆலயத்துக் கப்பாலேலூர்களுண்டு
புத்தூரகரமது புதுகுடிசைஓமந்தூர்
ஐந்நூற்றெட்டுகிராமமது ஆரியர்க்குச்சொந்தமுண்டு
மாலைகன்னியானவட்கு மாளாதகாவலுண்டு
முப்பதுபேர்ராசாக்கள் மூந்நூறுமந்திரிகள்
ஐம்பதுபேர்ராசாக்கள் ஆயிரம்பேர்மந்திரிகள்
இத்தனைபேர்காவலுக்கு மேலானகாவலுண்டு
சிவப்புடையான்காவலிலே சிட்டுப்பறவாது
சிட்டுபறவாது சிறுகுருவிநாடாது
வக்காபறவாது வனக்குருவிநாடாது
பட்சிபறவாது பலகுருவிநாடாது
காகம்பறவாது கருங்குருவிநாடாது
அள்ளப்பழுத்தாலும் அணிகள்வந்துசேராது
கிள்ளப்பழுத்தாலும் கிளிகள்வந்துசேராது
ஆரியமாலைகன்னி அவளுடையகோட்டையிலே
இன்னமுண்டுகாவலர்களெத்தனையோகோடிமன்னர்
இட்டசட்டைவாங்காத ஏழுலட்சம்கிங்கிலியர்
போட்டசட்டைவாங்காத பொல்லாதகாவல்களாம்
உருவினகத்திகையில் ஒருலட்சங்காவலுண்டு
இப்பெரியகாவலிலே எப்படிநீபோய்வருவாய்
மாலையென்றசொல்வசன மறந்துவிடுயென்மகனே
கன்னியென்றசொலவசனம் கடுகமறந்துவிடு
மாலைபிறக்கையிலே கூடப்பிறந்ததோடா
கன்னிபிறக்கையிலே கழுமரந்தானுண்டாச்சு
தச்சனுளிநாடாமல் தானாய்வளருதுபார்
சித்துளிநாடாமல் சிலைபோல்வளருதுபார்



கருவோகழுப்பெருமை கழுமரத்தின்சிங்காரம்
தொழுவோதொழுப்பெருமை தொழுமரத்தின்சிங்காரம்
தூண்டில்துடைபெருமன் தூண்டிமுள்கைப்பெருமன்
தொண்டைக்குதூண்டிமுள்ளுதுடைபெருமன்வளருது
மண்டைக்குக்கோடாலி மார்புக்கிருப்புலக்கை [பார்
மண்டையிலேபாய்ந்தமுள்ளு மார்புருகிப்போகுதடா
தொண்டையிலேபாய்ந்தமுள்ளுதோளுருகப்பாயுதுபார்
நாவிலேபாய்ந்தமுள்ளு நாசியிலுருகுதுபார்
கழுவிலிருக்கணுமா காய்ந்துலர்ந்துபோகணுமா
தூண்டிலிருக்கணுமா துடிதுடித்துமாளணுமா
காமாட்சிபிள்ளையென்ன கண்டவர்களேசணுமா
வேண்டாமடாயென்மகனே மாலையென்றசொல்வசனம்
மாலையென்றசொல்வசன மறந்துவிடுயென்மகனே
என்னிலும்பத்தினிதானிடையூறுசொல்லாதே
தாயிலும்பத்தினிதான் தாரமென்றுகூறாதே
மாதாவிலும்பத்தினிதான் மனையாளென்றெண்ணாதே
அவள்-கோதையென்றுசொல்லாதே ரோஷம்வருமெந்தனுக்கு
பாப்பாரபெண்ணல்லவோ பாவம்வரும்தோஷம்வரும்
தொட்டாலுந்தோஷமடா தோகையென்றுசொல்லாதே
வேண்டாமடாயென்மகனே வெண்மலரைச்சொல்லாதே

### காத்தவராயர் தாயை மறுபடியும் விடை கேட்பது

அப்போதுகாத்தவராயர் ஆச்சிமுகம்பார்த்து
கொல்லிமலைசுவாமி கொற்றவனுரேதுசொல்வார்
கழுவுவந்தால்பாரமில்லை கன்னிவந்தால்போதுமம்மா
தூண்டிவந்தால்பாரமில்லை தோகைவந்தால்போதுமம்
வாதனையும்வேதனையும் வந்தாலும்யான்படுவேன் [மா
ஆசையென்றலாசையது அளவற்றபேராசை
பெண்ணாசைகொண்டல்லோ பிராணனையுழட்டுதம்மா
என்றிவன்சொல்லையிலே யீஸ்வரியாளேதுசொல்வாள்
அரிவைதனைகாண்பதற்கு ஆணழகாசொல்லுவேன்கே
அவளுடையவடிவழகையுன் அருங்கையாளெழுதிவந்தால [ள்
அவளைசிறையெடுக்கப் போகவிடைதாரேனென்றாள்

இதுவரையில் காத்தவராயர் ஆறுபிறப்பும்
முற்றுப்பெற்றன.

உ

திருச்சிற்றம்பலம்

# காத்தவராயசுவாமி கதை

## முதலாவது

## கிண்ணரவனம்

**இதுமுதல் காத்தவராயர் ஏழாவது பிறப்பில் 12-வனங்கடோறும் ஆரியமாலையின் வரலாறு கூறுகின்றோம்**

### விநாயகர் துதி

தும்பிமுகமுடைய தொப்பைக்கணபதியே
நம்பிக்கைவைத்துயெந்தன் நாவில்குடியிருந்து
காத்தவராயன்கதை களிப்பாய்மிகப்பாட
ஏற்றவரமருள்வா யீஸ்வரனார்புத்திரனே

### சரஸ்வதி துதி

அச்சுதன்மருமகளே அரியகலைமகளே
மெச்சியேயாவர்களும் விரும்பிமிகப்படிக்க
அடியேன்சிறுவன்வாயி லன்பாய்மிகவந்து
படிறுகள்பாயும் பாவையேயில்லாமல்
வனங்காத்தசுவாமியை வணக்கமாயான்பாட
மனதுவைத்திக்கதையை மறையவளே நடத்துமம்மா

### சுப்பிரமணியர் துதி

திருத்தணிவேலவரே திருமாற்குமருமகரே
பொருத்தமாயிக்கதையைப் பூவுலகில்யான்பாட
அன்புமிகவைத்து அடியேனை துவாக்கில்
முன்புநீர்குடியிருந்து முழுதுங்கதைநடத்த
வேலவரேசீலவரே வெய்யவினைவாராமல்



### ஈஸ்வரனார் துதி

காலனணுகாமல் கர்த்தாவேகாத்தருளும்
தும்பைமலர்தரித்த துய்யச்சுடரொளியே
அம்மாளிடபாகம் அன்புடன்பெற்றவரே
இந்தக்கதைபாட ஈஸ்வரரேயென்னாவில்
தொந்தமாய்நீயிருந்து துகளுகள்நேராமல்
ஐயனேமெய்யனே ஆணழகன்கதையை
பையவேநீரும்வந்து பகவானேநடத்துமையா

### கதையின் வரலாறு வெண்செந்துறை

அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவரேதுசெய்தார்
அப்படியேபோய்வாரே னென்றுமவரெழுந்தார்
எங்கேயவர்வாராராம் எங்கள்துரைபஞ்சவர்ணம்
உப்பங்கிடாரவழி உயர்ந்தமலைக்குன்றருகே
மஞ்சையப்பன்கட்டிவைத்தமண்டபத்தில்வந்துநின்று
உற்றுநினைத்தாராம் ஒருகோடிபுத்தியிலே
இருந்துநினைத்தாராம் ஏழுகோடியோசனையை
ஆரைநினைக்கலுற்றார் அளவற்றசிந்தையிலே
எவரைநினைக்கலுற்றா ரின்பமுள்ளசிந்தையிலே
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சில்வைத்தார்
அண்ணன்கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமாளை மனதில்நினைத்துக்கொண்டார்
கொல்லிமலைக்கன்னிகளை கொற்றவனார்தானினைந்து

### காத்தவராயர் மாறுவேடங்கொண்டு ஆரிய மாலையைக் காண வருதல்

அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனாரேதுசெய்தார்
என்னென்னவேடம்போடுகிறார் எங்கள்துரைபஞ்சவர்
வாவென்றழைத்தாரே வருகிறதுமறுவேடம் [ணம்
என்னென்னவேட மெடுத்தாராமாண்டவனார்
குப்பையின்சுரக்காயும் குடுக்கைமூன்றும்பொன்னாலே
கப்பல்சுரக்காய் கடைந்தெடுத்தகின்னரிகை
நிலத்தில்வளர்ந்ததொரு நீலவர்ணப்பேய்ச்சுரைக்காய்
தரையில்வளர்ந்ததொரு தங்கவர்ணப்பேய்ச்சுரைக்காய்
மூனைகுடுக்கைமுத்துவர்ணம் நடுகுடிக்கைநாகரத்தினம்
மூன்றுன்குபன்னிரண்டு மெட்டுலைவத்தார்கின்னரிக்கு

ஆனை நரம்பெடுத்து ஆட்டிவிட்டார்கின்னரியை
அப்பவும்சேரவில்லை அண்ணனிட கின்னரிதான்
பூனை நரம்பெடுத்து பூட்டிவிட்டார்கின்னாரம்
முழங்கைநரம்பெடுத்து மூன்றுபிருவாக்கி
வாசித்தார்கின்னரியை வானுலகந்தான திர
அப்போதுபேசுதுபார் ஆண்டவனார்கின்னாரம்
அவர்-மார்பில்வைத்தகின்னாரம் மடியில்வைத்தார்சிற்றடுக்கை
தோளில்வைத்தகின்னாரந் தொடையில்வைத்தார்சிற்றடுக்கை
ஆச்சாளழகுபெண்ணை ளையன்மகள்கோட்டைதேடி
வாறாராங்கோட்டைதேடி மன்னவனார்பஞ்சவர்ணம்
எங்கேயவர்வாறாராம் யீசனார்புத்திரனும் [ம்
மாலைகன்னிகோட்டைக்குள்ளே மதிலோரப்புன்னைமர
நாகதாளிபுன்னைமரம் நாதர்பிள்ளைவந்துநின்றார்
புன்னைமரமேறி பெருமான்மகனும்
நடுகிளையிலுட்கார்ந்தார் நாதர்பிள்ளைபஞ்சவர்னம்
கின்னரியைக்கைப்பிடித்து மீட்டுவாரப்பொழுது
ஆள்காட்டும்விரல்சுற்றி தானடித்தார்கின்னரியை
என்னவென்றுபாடுதுபார்பரமன்மகன்கின்னரியும் [ன்
சொல்லாதுஞ்சொல்லுதுபார் துரைமகன்கின்னரிதா
அது-என்னென்னபாடுதுபார் எங்களண்ணன்கின்ன
தன்னானவென்னுதுபார் நயனகவிபாடுதுபார் [ரிதான்
தன்னானவென்னுதுபார் தானேகவிபாடுதுபார்
வெண்பாகலித்துறையும் வேணகதைசிந்துகளும்
கட்டளைக்கலித்துறையு கலந்தநல்லசிந்துகளும்
இன்னமென்னபாடுதுபார் எழிலானகின்னரிதான்
ஆச்சாளழகுபெண்ணே ஐயன்மகள்மாலையரே
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனாரண்மனையை யாளவந்தரத்தினமே
தமையனாரண்மனையை தாங்கவந்தரத்தினமே
சுற்றம்பெருத்தவளே சோமராயர்சீர்மகளே
பட்டம்பெருத்தவளே பரமசிவன்மருமகளே
அப்புபட்டன்பெற்றெடுத்த அழகுள்ளமாலையரே
அன்னதுளசிபெற்ற அழகுள்ளமாலையரே
கோட்டையுனக்கேண்டி கொத்தளங்களேதுக்கடி
நாகதாளிபுன்னைமாம் நடுக்கிளையில்நானிருக்க
மாத்தின்மேல்நானிருந்து மாளிகையில்நீயிருந்தால்



காம்-கூடிக்கலப்பதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ
மருவியணைவதெப்போ மனக்கவலைதீர்வதெப்போ
மாமாங்கம்பொங்குதடி வாருமடி போய்வருவோம்
ஸ்ரீரங்கந்தேரோட்டஞ் சேவிப்போம்வாரும்பெண்ணே
கும்பகோணத்தேரோட்டங் கும்பிடுவோம்வாரும்பெண்ணே
மாமாங்கப்பொங்குதடி வையகத்தோர்போற்றார்கள்
போரஜனங்களுடன் போய்பார்த்துவருவோமடி
காஞ்சிபுரந்தேரோட்டம் கைகலந்துபோவோமடி
குளிர்ந்தநிழல்சோலையிலே கூடிவிளையாடிருப்போம் [ம்
தென்னல்திரும்பையிலே யிருவர்களுஞ்சேர்ந்திருப்போ
இப்படியாய்சொல்லியல்லோ பாடுதுபார்கின்னரிகை

## ஆரியமாலை கின்னாரக்காரனை யழைக்கச் சொல்லுதல்

ஆரியமாலையவள் ஆரணங்குதான்பார்த்து
உற்றுற்றுக்கேட்டாளே உத்தமியாளப்போது
கின்னாரவோசைதன்னைக் கிளிமொழியாள்தான்கேட்டு
தாதிமுகம்நோக்கி தையலருமேதுசொல்வாள்
கேளுங்கள்தாதிகளே கின்னாரவோசைதன்னை
தாதிகளேகேளுங்கள் தம்பூருவோசைதன்னை
தம்பூருதானிவ்வோசை சாமியவரெவ்வழகோ
கின்னாரமிவ்வோசை கீர்த்திமன்னனெவ்வழகோ
தம்பூருக்காரர்வந்தால் தையலரேநான்பிழைப்பேன்
கின்னாரக்காரர்தனை கீர்த்தியுடனழையுமென்றார்

## தாதிகள் கின்னாரக்காரரைத் தேடிவருதல்

அப்போதுதாதியர்கள் ஆயிரம்பேர்தானெழுந்து
ஆயிரம்தாதியர்கள் அவள்விடைபெற்றுக்கொண்டு
அந்தநல்லதாதியர்கள் அட்சணமேதேடிவாறார்
கின்னாரக்காரன்தன்னை கிளிமொழியார்தேடிவாறார்
தம்பூருக்காரன்தனை தையலர்கள்தேடிவாறார்
எங்கெங்கும்பார்த்தார்கள் இனியவிடமாராய்ந்தார்
கின்னாரக்காரன்தன்னை கிளிமொழியார்தேடலுற்றார்
தம்பூருக்காரன்தன்னை தையர்கள்தேடலுற்றார் [து
சந்தனப்பொன்கொறட்டின்மேல தையலர்களுட்கார்ந்
அன்னம்போலேநடந்து அமுதம்போல்வந்தார்கள்

நாகதாளிபுன்னைமரம் ஆண்டவனைத்தேடிவந்தார்
பகலேவழிநடந்து பாங்கியர்கள்தேடிவந்தார்

### காத்தவராயசுவாமி ஆரியமாலையின் தாதிகளை சின்னப்படுத்துதல்

ஆயிரம்பேர்தாதிகளை ஆண்டவனார்கண்டுவிட்டார்
இரத்தினகிண்ணரியை நடுக்கிளையில்மாட்டிவிட்டார்
கையிலிருந்தசிற்றுடுக்கை ஒருகிளையில்மாட்டிவிட்டார்
ஒருகிளையிற்சார்ந்துகொண்டார் ஒருகிளையிலுதைத்துகொண்டார்
உல்லாசமாகவேதான் வுத்தமனார்தாமிருந்தார்
வாயைக்கட்டிக்கொண்டார் மாரிபிள்ளைபஞ்சவர்னம்
அந்தசமயத்தில் அரிவையர்கள்வந்தார்கள்
சந்தனப்பொன்மேடையிலே தையலர்கள்வந்தமர்ந்தார்
இளைப்பாயிருந்தார்கள் இத்தண்டதாதிகளும்
அன்னேரவேளையிலே ஆண்டவனாரேதுசெய்தார்
நாகதாளிபுன்னைமரம் நடுக்கட்டையின்மேலிருந்து
சந்தனப்பொன்மேடையெல்லாஞ்சுவாமியவரேதுசெய்
தாம்பூலந்தின்றுமவர் சாமியுமிழ்ந்தாரும் [தார்
இரத்தம்போல்தோற்றவேண்டுமநாயகிமார்கண்களுக்கு
இப்படிக்குவாடைகட்டி யிருந்தாரேபஞ்சவர்னம்
ஆயிரந்தாதியர்கள் இளைப்போடுஅங்கிருந்தார் [றார்
மல்லாக்காய்படுத்துக்கொண்டு வானத்தைப்பார்க்கலுற்
அதிலேயொருதாதியவள் ஆண்டவரைக்கண்டுவிட்டா
கிண்ணாரந்தோற்றுவதுஞ் சுவாமிதுலங்குவதும் [ள்
தம்பூருதோற்றுவதும் தானேதுலங்குவதும்
இவருடையதன்னழகை எந்திழைமார்கண்டுவிட்டார்
கண்டேண்டியென்றாளே கட்டழகிதாதியவள்
கிண்ணாரந்தன்னைக் கிளிமொழியேகண்டேனென்றாள்
கண்டேனென்றுசொன்னவளைக் கண்ணைத்தெரித்துவிட்டார்
மற்றும்சிலதாதியர்கள் மங்கையருக்கேதுசொல்வார்
கண்டேனென்றுசொன்னாயே கண்டவிடமெங்கேயடி
பார்த்தேனென்றுசொன்னாயே பார்த்தவிடஞ்சொல்லுமென்றார்
கண்கெட்டதாதியவள் கன்னியுடனேதுசொல்வாள்
கண்டதைச்சொல்வேனென்று கைநீட்டிகாட்டலுற்றார்
கைநீட்டிகாட்டுவாளாங் கட்டழதாதியவள்
ஆயிரம்பேர்தாதியர்கள் ஆகாயம்பார்க்கலுற்றார்



கண்டோமேயென்றுசொல்லி கன்னியர்கள்கூறலுற்றார்
அப்போது ஆண்டவனார் அங்கெனவேயேதுசெய்தார்
ஆயிரம்பேர்தாதிகட்கும் அவிழ்த்துவிட்டார்கண்களிரண்டும்
கண்டேனென்றுசொன்னவர்கள் கண்ணையவிழ்த்துவிட்டார்
பார்த்தேனென்றுசொன்னவர்கள் பார்வையவிழ்த்துவி
அப்போதுதாதியர்கள் அலண்டுபுரண்டவர்கள் [ட்டார்
அய்யோசிவனேயென்று அழுதுபுலம்பலுற்றார்
குய்யோமுறையோவென்று கூவிப்புலம்பலுற்றார்
எப்படிக்குப்போய்ச்சேர்வோம் இளங்கொடியாள்மாலையண்டை
என்றுவிசனப்பட்டார் யெழிலானதாதியர்கள்
அத்தண்டதாதியர்கள் அதிலொருத்தியேதுசொல்வாள்
கண்கட்டுவித்தையினால் கன்னியவளொருத்தி
மாயவித்தைகற்றவளாம் மந்திரங்கள்பெற்றவளாம்
அத்தண்டதாதிகட்கும் அருங்கிளியாளேதுசொல்வாள்
எல்லவருமென்பின்னாலே யிடுப்பைபிடித்துக்கொண்டு
என்பிறகேயாவர்களும் யினிதாகவாருமென்றாள்
அப்படியேநல்லதென்று அனைவரும்வந்தார்கள்
முன்னேயவள்நடக்கப் பின்னேதுடர்ந்துவாரார்

### காத்தவராயர் சின்னானைக்கண்டு வசனித்தல்

கொல்லிமலைசுவாமி குமரேசர்கண்டுவிட்டார்
தொட்டித்துச்சின்னானை துருசாய்நினைக்கலுற்றார்
வக்கணத்துசின்னானை வாவென்றழைக்கலுற்றார்
ஆண்டவனார்தானினைக்க அறிந்தானேசின்னானும்
காத்தவரைக்காணவென்று கடுகிவழிநடந்து
எட்டடியும்ஓரடியாய் பறந்துவழிநடந்து
பத்தடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து [வான்
ஆண்டவனார்முன்னேவந்து அழகுசின்னானேதுசொல்
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றான்
அப்போதுசுவாமியவர் ஆணழகரேதுசொல்வார்
என்னவென்றுசொல்லுகிறாரெங்கள் துரைபஞ்சவர்னம்
ஆயிரந்தாதியர்கள் அழகாயெனைக்காணவந்தார்
கண்ணைக்கெடுத்துவிட்டேன் கட்டழகாசின்னானே
பார்வைகெடுத்துவிட்டேன் பார்க்கவந்ததாதிகளை
அவர்-போறவழியிலொரு படுகுழிதானுண்டுபண்ணி
படுகுழியுண்டுபண்ணி பாங்கியரைத்தள்ளுமென்றார்

அந்தவுரைகேட்டு அழகுசின்னானே துசொல்வான்
உந்தன் மனதின்படி யுத்தமனே செய்வேனென்றார்
அப்போதுசின்னானும் ஆணழகனே துசெய்தான்
ஆயிரந்தாதியர்கள் இவர்கள்வரும்வழியிலே
ஆனையமரும்பள்ளம் குதிரைகுளிக்கும்பள்ளம்
ஆளைப்படுகுழியை அங்ஙனவேவெட்டிவிட்டார்
குதிரைமுழுகும்பள்ளம் கொற்றவனார்வெட்டிவிட்டார்
மாட்டெருவுகண்ணெருவு மன்னவனார்வாரிவந்து
பள்ளத்தில்கொட்டியவர் ஜலம்வார்த்துஊறவைத்தார்

### சின்னான் வெட்டின பள்ளத்தில் ஆரிய மாலையின் தாதிகள் விழுதல்

ஆண்டவனாற்சொற்படியே அழகுபள்ளம்வெட்டிவைத்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே [தார்
அப்போதுதாதியர்கள் அந்தவழிவாரார்கள்
வெட்டுபள்ளம்வழியாக வாரார்கள்தாதியர்கள்
தட்டுகெட்டுவாரார்கள் தையலந்ததாதியர்கள்
திட்டுதிட்டுவென்றுவந்து பொட்டென்றுகீழ்விழுந்தார்
பள்ளத்தில்விழுந்தார்கள் பாங்கியர்களெல்லோரும்
ஒருத்தியவள்கீழேவிழ உடன்வந்தார்மேலேவிழ
அருங்கிளியாள்கீழேவிழ ஆயிரம்பேர்மேலேவிழ
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்பலுற்றார்
குய்யோமுறையோவென்று கூவிபுலம்பலுற்றார்
விழுந்தவர்களெழுந்திராமல் அழுந்திவிட்டார்பள்ளத்
இவர்-கூவியழுதசத்தம் குவலயங்கள்தானதிரும் [திலே
வாய்விட்டழுதசத்தம் மண்டலங்கள்தானதிரும்
இப்படியாகவே யிவர்களிருக்கையிலே

### சின்னான் பள்ளத்திலிருக்குந் தாதிகளை யெடுத்தல்

அப்போதுசின்னானு மங்கனவேயே துசெய்தான் [ண்டு
தோட்டக்காரனைப்போல் தொட்டியத்தான்வேஷங்கொ
வங்கணத்துச்சின்னானும் மாறுவேஷங்கொண்டுவந்து
ஆரடிநீங்களென்று அதட்டிமிரட்டலுற்றான்
ஓட்டம்பெருநடையா யோடிவந்துகேட்கலுற்றான்
அப்போதுதாதியர்க ளரிவையவளே துசொல்வாள் [ம்
தோட்டக்காரவையாவே துரிதமுடன்சொல்லுகின்றோ



ஆரியமாலைகன்னி அவளுடையதாதிநாங்கள் [யாள்
கிண்ணாரக்காரன்தன்னை யழையுமென்றாள்கிளிமொழி
அவனையழைப்பதற்கு ஆயிரம்பேர்தேடிவந்தோம்
நாகதாளிபுன்னைமரம் நல்மரத்தின்சோலையண்டை
சந்தனப்பொன்மேடையண்டை தையலர்கள்தாம்படுத்தோம்
மல்லாக்காய்தான்படுத்து வானத்தைப்பார்த்திருந்தோம்
கிண்ணாரக்காரன்தன்னை கிளைதனிலேகண்டுவிட்டோம்
பார்த்தவுடனே எங்கள் பார்வைமழுங்கினது
வழிகள்தெரியாமல் வந்துவிழுந்துவிட்டோம்
இதுதான்வரலாறு யென்றுரைத்தார்தாதியர்கள்
அந்தவுரைகேட்டு அழகுசின்னானே துசெய்தான்
தொட்டியத்துச்சின்னானுந் துறவுபள்ளந்தானிறங்கி
கைகொடுத்துதூக்கிவிட்டு கட்டழகனே துசொல்வான்
ஆயிரம்பேர்தாதிகளே அரிவையரேசொல்கிறேன்கேள்
கண்ணவிந்துபோனதொரு கர்மத்தைசொல்கிறேன்கேள்
தெய்வத்தைகைதொழுது தெண்டனிட்டுபூஜைசெய்து
அஞ்சனத்தைதான்போட்டாராய்ந்துபார்த்துரைப்பேன்
வேண்டுமென்றால்கேட்டிருங்கள் வேண்டாமென்றால்போய்விடுங்கள்
அந்தவுரைகேட்டு அருங்கிளிமாரேதுசொல்வார்
சொல்லுமையாவென்றுசொல்லி தெண்டனிட்டுக்கைதொழுதார்

### சின்னான் தாதிகளுக்கு அவிந்தகண் தெரியச்செய்தல்

அப்போதுசின்னானு மப்படியேசொல்வேனென்று
பூமிமெழுகியவர் பிள்ளையாருண்டுபண்ணி
அபிஷேகந்தான்செய்து அருகுபுஷ்பஞ்சூட்டியே
தூபதீபங்கொடுத்து சொல்லலுற்றான்சின்னானும்
கேளுங்கள்தாதிகளே யென்றுபவருரைப்பார்
நந்தவனங்காத்தவர்தான் நல்விழியைகொண்டுசென்றா
வனங்காத்தசுவாமியவர் மான்விழியைகண்டுசென்றார் [ர்
காத்தமுடிசாமியடி கண்ணைப்பறித்தவர்கள்
விக்கினர்க்கிளைத்தவண்டி விழியைக்கொண்டுபோனவர்காண்
அவிந்தகண்தான்தெரிய அதற்கோருபாயஞ்சொல்வே
ஆளுக்கோராயிரம்பொன் அன்பாகத்தந்தாலே [ன்
கண்ணைத்தெரியவைப்பார் காத்தமுனிசாமியென்றார்
அந்தவுரைகேட்டு ஆயிரம்பேர்தாதியர்கள்

ஆளுக்கோறாயிரம்பொன் அப்படியேதான்கொடுத்தா
கொடுத்ததொருபொன்னைவாங்கி குணமுள்ளசின்னானும்
பொன்னைமுடிந்துகொண்டு பொட்டெனவேஓடிவந்து
பச்சிலையைத்தான்கசக்கி பாவையவர்கள்கண்ணில்விட்டார்
பச்சிலைச்சார்பட்டவுடன் பார்வைதெரிந்துதங்கே
கண்கள்தெரிந்தது கட்டழகிமாதுகட்கு
காத்தமுனிசாமியவர் கண்கொடுத்தாரப்போது
அப்படியேயாகுமென்றான் ஆணழகன்சின்னானும்
கண்ணெடுத்துப்பார்த்தார் காத்தமுனிசாமிதன்னை

காத்தவராயர் மாலையற்கு ஓலையெழுதி யனுப்புதல்

அப்போதுகாத்தவனா ரரிவையர்க்கேதுசொல்வார்
தாதிமுகம்நோக்கி சுவாமியவரேதுசொல்வார்
மாலைகன்னிமாதினுக்கு வக்கணையுமொப்பனையும்
ஓலையெழுதிதாரேன் உத்தமியாள்கன்னியற்கு
கொண்டுபோய்மாலையற்கு கொடுங்களென்றார்பஞ்சவர்ண
அந்தவுரைகேட்டு அரிவையர்கள்சம்மதித்தார் [ம்
அப்போதுபஞ்சவர்ணம் அண்ணனைத்தானினைந்து
விக்கினரைத்தானினைந்து எழுத்தாணிகைப்பிடித்து
முத்துபதித்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
பவளம்பதித்ததுபோல் பத்துவரிதானெழுதி
ஆச்சாலழகுபெண்ணே ஐயன்மகள்மாலைகண்டேன்
கோட்டையிலேநீயிருக்க கொத்தளத்தில்நானிருக்க
மாளிகையில்நீயிருக்க மரத்தின்மேல்நானிருக்க
இருவர்நமக்குமல்லோ ஏகாந்தமெங்கேயடி
கல்லோடியுன்மனது கரையிலையோயிந்தமட்டும்
ஆசையெல்லாமுன்மேலே அலையுதடியென்மனது
சீவனெல்லாமுன்மேலே சிதறுதடியென்னசெய்வேன்
ஓலைகண்டநாழிகைக்கு உத்தமியேயிங்கேவாடி
கைனாட்டைகண்டவுடன் கட்டழகியிங்கேவாடி
நிருபங்கண்டநாழிகைக்கு உத்தமியேயிங்கேவாடி
தாதிகையிலோலையது தானனுப்பிவைத்தேனடி
ஓலைகண்டநாழிகைக்கு வுத்தமியேவரவேண்டும்
என்றுமிவர்சொல்லி எழுதினாரோலையிலே
செந்தரிக்கந்தான்போட்டு தாதிகையிலேகொடுத்தார்



காத்தவராயர் கொடுத்த ஓலையைத் தாதிகள் மறைத்துவிட்டது

அப்போதுதாதியர்கள் அரிவையர்களேதுசெய்தார்
அந்தச்சுருள்வாங்கி அரிவையர்கள்வாறார்கள்
ஆரியமாலைகோட்டைதேடி அன்பாகவாறார்கள்
வாழைமரச்சோலையண்டை வந்துநின்றார்தாதியர்கள்
ஓலையைத்தான்விரித்து வுடனேயிவர்கள்வாசித்தார்கள்
அதிலுள்ளமர்மமெல்லாம் அறிந்தார்கள்தாதியர்கள்
ஒருத்திக்கொருத்தியவர் வுண்மையிட்டுபேசலுற்றார்
கன்னியவள்கண்டாலே கடகநடந்திடுவாள்
ஓலைதனைக்கண்டாலே உத்தமியாள்போய்விடுவாள்
காத்தமுனிசாமியுடன் கலந்துமிகப்போய்விடுவாள்
என்றவர்கள்யோசனையாய் யேதுசெய்தார்தாதியர்கள்
ஓலைச்சுருளெடுத்து வுத்தமியாள்கைபிடித்து
வாழைச்சருகாலே கொளுத்திவிட்டார்மங்கையர்கள்

தாதிகள் ஓலையைக் கொளுத்திவிட்டு ஆரியமாலையைக் காணுதல்

அப்போதுதாதியர்கள் அனைவோருமொன்றாகி
மாலைகன்னிகோட்டைதேடி வாறார்கள்தாதியர்கள்
கின்னாரக்காரன்தன்னை கொண்டுவாச்சொன்னேனே
தம்பூருக்காரன்தன்னை தானழைத்துவாருமென்றேன்
அவனையழையாமல் நீங்கள்வந்தகாரியமேன்
அந்தவுரைகேட்டு அரிவையவர்களேதுசொல்வார்
கின்னாரக்காரன்தன்னை கிளிமொழிமார்தேடிப்போனோம்
வனங்களெல்லாந்தேடிபோனோ மன்னவனைக்காணோமம்மா
தோப்பெல்லாந்தேடிப்போனோம் சுவாமிதனைக்காணோ
அந்தவுரைகேட்டு மாலைகன்னியேதுசெய்தாள் [மம்மா
முழுகிக்குளித்துமல்லோ மெல்லியிளங்கொடியாள்
போசனமண்டபத்தில் பொற்கொடியும்போய்புகுந்தாள்
அங்கிருக்குந்தாதியர்கள் அனைவரும்வந்தார்கள்
ஆசனங்கள்போட்டார்கள் அரிவையந்தமாலையற்கு
வாழையிலைபோட்டு மணிச்சொம்புநீர்தெளித்தார்
அம்பைமலர்போல போசனமுந்தான்சொரிந்தார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் யிருபத்தோர்பச்சடியும்

சுற்றிக்கறியைவைத்து புத்துருக்குநெய்வார்த்தார்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு [தார்
அத்தளிகைமாற்றியொரு பொற்றளிகைமுன்னேசெய்
காய்ச்சியபாலுந் திருத்தியமுப்பழமும்
வாழைப்பழமு மதுரையின்மாம்பழமும்
வேரில்புரத்தில் வெடித்தபலாச்சுளையும்
கொம்பில்சிறுதேனுங் கோதுபடாசர்க்கரையும்
மலையில்சிறுதேனும் பாங்கானசர்க்கரையும்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
பாலடிசலுண்டு பன்னீரால்கையலம்பி [தாள்
உருவுகொண்டுவாய் துடைத்து வுத்தமியாள்வீற்றிருந்
வாசங்கொடுக்கு மயிலணையாளோடிவந்து
வாசகலபேழையது வலுகுலுக்குதாள் திறந்து
வாடாயிலைச்சுருளும் வண்ணத்துவர்பாக்கும்
கோவையிலைச்சுருளும் கொச்சைகளிப்பாக்கும்
ஆங்கிப்பாக்குகளும் அதற்கேற்றவெற்றிலையும்
ஏலம்லவங்கங்களும் யிசைந்தபரிமளமும்
சுருளைச்சுருள்மாத்தி சுண்ணாம்பைகூட்சமிட்டு
வைத்துகொடுத்தாளே மதிக்குமந்தவாசகத்தை
வந்தமுகவாசந் தின்றுமவள்குந்திருந்தாள்
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

## காத்தவராயர் மறுபடியும் கிண்ணாரம் வாசித்தல்

அப்போதுகாத்தலிங்கம் ஆண்டவனுரேதுசெய்தார்
அவர்-உள்ளங்கைஅஞ்சனத்தை உற்றுற்றுப்பார்க்கலுற்றார்
அஞ்சனத்தைதான்போட்டு ஆராய்ந்துபார்க்கலுற்றார்
ஓலைகொளுத்திவிட்டு உத்தமரைக்காணோமென்று
பொய்வசனந்தானுரைத்துபோசனங்களுண்ணாரென்று
அஞ்சனத்தில்தோற்றுவதா லாண்டவனுரேதுசெய்தார்
கிண்ணாரங்கைபிடித்து வாசித்தாருத்தமரும்
என்னவென்றுபேசுதுபார் அண்ணைவர்கின்னரிதான்
ஆச்சாலழகுபெண்ணே வையன்மகள்மாலைகண்ணே
உனக்குஓலையெழுதி கொடுத்தேதண்டி தாதிகையில
வாழைச்சருக்கால் கொளுத்திவிட்டுமங்கையர்கள் [ல்
இல்லையென்றுசொன்னார்க ளேந்திழைமாருன்னிடத்தி
என்னையவர்காணோமென்றுஎடுத்துரைத்தாதாதியர்கள்



நாகதாளிபுன்னைமரம் நடுங்கிளையிலுட்கார்ந்து
என்னேரமட்டாக இரக்கங்கள்பேசுவண்டி
கல்லோடியுன்மனது கரையிலையோகன்னியரே
இரும்போடியுன்மனது யிரங்கிலையோயிந்தமட்டும்

## ஆரியமாலை கிண்ணார சத்தங்கேட்டு தாதிகளை ஆக்கினை செய்தல்

அப்போதுமாலைகன்னி அட்சணமேயேதுசெய்தாள்
கிண்ணாரசத்தமதை கிளிமொழியாள்கேட்டுவிட்டாள்
அன்னமென்றதாதிகளை யழைத்தாளேகன்னியவள்
மாலையவளழைக்க வாரார்கள்தாதியர்கள்
ஆயிரந்தாதிகளும் அட்சணமேயோடிவந்தார்
ஆயிரந்தாதிகட்கு அழகுமொட்டைசெய்யுமென்றாள்
மாலைகன்னிசொற்படிக்குமழுங்கமொட்டைசெய்தார்கள்
வார்க்காதநீர்வார்த்து மழுங்கமொட்டைசெய்தார்கள்
ஐந்துகுடுமிவைத்து அழுத்திதலைசிறைத்தார்
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாய்பொட்டுமிட்டார்
காடைவிளக்கேற்றி கன்னியர்கள்தலையில்வைத்தார்
கழுதையின்மேலேற்றி எருக்கமாலைசூட்டிவிட்டார் [ன்
தப்பட்டைகழுத்தில்மாட்டி தாதிகளேபோங்களென்று
வடகோடிகானகத்தில் மங்கையரேபோங்களென்றாள்

## தாதியர்கள் வேதியரிடத்தில் சிபார்சு சொல்லுதல்

அப்போதுதாதியர்கள் அனைவருமொன்றாகி
அய்யோசிவனேயென்று அழுதுபுலம்புகையில்
குய்யோமுறையோவென்று கூவிப்புலம்புகையில்
புத்தூரகந்தேடிப் பெண்களெல்லாம்வாறார்கள்
அய்யமாரைத்தேடி அழுதுகொண்டுவாறார்கள்
அபயமபயமென்று அழுதுகொண்டுவாறார்கள்
ஸ்நானங்கள்செய்திருந்தார் தனஞ்சயர்களப்பொழுது
குய்யோமுறையோவென்ற கூக்குரலைக்கேட்டார்கள்
இராக்காலமானதினால் வெருண்டந்தவேதியர்கள்
பேயோபிசாசோவென பிணைந்திக்கொண்டுவேதியர்கள்
கொள்ளிவாய்பிசாசோவென கொப்பெனவேயடிக்கலுற்
கல்லுகளைவாரிக்கொண்டு கதறஅடிக்கலுற்றார் [றார்
சேறுகளைவாரிக்கொண்டு சிதறஅடிக்கலுற்றார்

அப்போதுதாதியர்கள் அங்ஙனமேயேதுசெய்தார்
அழுதகண் ணுஞ்சிந்தையுமாய் ஐயமாருக்கேதுசொல்
பேயும்பிசாசுமல்ல பெண்கொடியாள் தாதியென்றார்[வார்
கொள்ளிவாய்ப்பேய்களல்ல கொம்பனையாள் தாதியென்றார்
கிண்ணாரக்காரனாலே கிளிமொழிமார்கேட்டோமென்றார்
தம்பூருக்காரனாலே தாதியருங்கேட்டோமென்றார்
ஆரியமாலைதன்னை அவனெடுத்துப்போனானையா
என்றுமேதாதியர்கள் எல்லோரும்சொல்லலுற்றார்

### வேதியர் மகளுடைய வரலாறறிந்து கிண்ணாரக்காரனை துரத்தல்

அப்போது அப்பாபட்டர் அனைவருந்தாமறிந்து
தாதிமுகம்பார்த்து தா ங்கெடுத்துரைப்பார்
என்னவயணமென்று இன்பமுடன்கேட்கலுற்றார்
அப்போதுதாதியர்களையமாருக்கேதுசொல்வார்
நாகதாளிபுன்னைமரம் நடுமரத்தின்சோலையிலே
கிண்ணாரமீட்டிக்கொண்டு தேவனவனங்கிருந்தார்
அவளைமழையுமென்று அனுப்பினானெங்களையும் [ம்
ஆள்தேடப்போனவிடத்தி லாயிரம் பேர்கண்ணவிந்தோ
மற்றுமொருவனாலே விழிகள்பெற்றிங்கேவந்தோம்
எங்களைக்கண்டவுட னெழுதினானோலையொன்று
ஆரியமாலைக்கென்று அவன்கொடுத்தானோலைதன்னை
வாங்கிவரும்போது வாசித்துப்பார்த்தோமையா [ன்
மாலையின்மேல்மோகங்கொண்டு மன்னனெழுதிவிட்டா
கண்டாலேகன்னியவள் கடுகநடப்பாளென்று
ஓலைதனைக்காட்டாமல் வழியில்கொளுத்திவிட்டோம்
கட்டழகிமாதினுக்கு காணவில்லையென்றுரைத்தோம்
அவன்பேரில்மையல்கொண்டு ஆரியமாலையவள்
எங்களையிப்படிக்கு யிழிவானகோலஞ்செய்தாள்
தாதிகள்சொல்லையிலே தான்கேட்டுவேதியர்கள்
வேர்த்துவிருவிருத்து வெங்கண்சிவப்பேறி
சிற்றுடம்புவேர்த்து இருகண்சிவப்பேறி [ள்
இதுவென்னமோசமென்று எழுந்திருந்தார்வேதியர்க
ஆயிரம்வேதியர்களவசரமாய்த்தானெழுந்து
கல்லுகளைவாரிக்கொண்டு கடுகெனவேமடியில்கட்டி
செங்கல்கருங்கல்லும் சேர்த்துமடியில்கட்டி



ஆளுக்கோர்தடியெடுத்து அனைவோரும்வாறார்கள்
கிண்ணாரக்காரனை தேடியேவாறார்கள்
அப்போது ஆண்டவனா ரன்பாகயேதுசெய்தார்
நாகதாளிபுன்னையிலே நாயகனார்வீற்றிருந்தார்
உல்லாசமாகவேதான் உத்தமனார்வீற்றிருந்தார்
அப்போதுதாதியர்க ளங்கனமேயேதுசெய்தார்
காணாததுபோல கண்டுவிட்டார்தாதியர்கள்
பாராததுபோல பார்த்துவிட்டார்தாதியர்கள்
கற்களைவாரியல்லோ கடுகெனவேஅடிக்கலுற்றார்
அப்போதுகாத்தவனார் ஆண்டவனாரேதுசெய்தார்
வெண்ணீறுவாடையல்லோவிமலிபிள்ளையுண்டுபண்ணு
வேதியர்கள்போடுங்கல் இந்தமரத்திலேறும் [ர்
இலைக்கொருகல்லாக இனிதாகத்தொத்திக்கொள்ளும்
அப்போதுதாதியர்க ளங்கனமேயேதுசெய்தார்
ஆளுக்கொருதடியெடுத்து ஆண்டவர்மேல்விட்டெறிந்
அப்போதடிகளெல்லா மழகுபுன்னைதன்னிலையில் [தார்
பேய்ச்சுரைக்காய்ப்போல பெருத்ததடிகளெல்லாம்
தோற்சுரைக்காய்ப்போலாகத் தொங்குதிலைகளெல்லாம்
கப்பற்சுரைக்காய்ப்போலாக தொங்குதுதடிகளெல்லாம்
அப்பேரைபோலாகக் காணுதுதடிகளெல்லாம்
புன்னைவேதியர் அப்பாபட்டரேதுசெய்தார்
இருகாலைத்தான்பிடித்து இழுத்தாரேஅப்பாபட்டர்
காலையிழுக்கலுற்றார் கனமுள்ள அப்பாபட்டர்

### வேதியர்கள் ஆயிரம்பேரும் சுவாமி காலை பிடித்துத் தொங்குகிறது

அப்போதுகாத்தவனா ரங்கெனவேயேதுசெய்தார் [னார்
தன்யாலுக்கும்வாலைகளுக்கும் கடுபந்தமென்றுசொன்
காலைப்பிடித்துக்கொண்டு காக்கைபோலத்தொங்குகிறார்
கால்பிடித்துதொங்குவதை கண்டுவிட்டார்வெங்குபட்டர்
தானுமரமேறித் தமையனார்கால்பிடித்து
இருகாலைகைப்பிடித்து வெங்குபட்டர்தொங்கலுற்றார்
அவருமேதொங்குகின்றா ரண்ணனிடகால்பிடித்து
ஏலம்பட்டரோடிவந்து யிருவருமதிலேறி
ஏலம்பட்டரேறிவந்து வெங்குபட்டன்கால்பிடித்தான்
ஏலன்கூடதொங்குகின்றான் அன்பானயேலம்பட்டன்

ஏலம்பட்டன்கால்பிடித்து சுப்பாபட்டன்தொங்குகிறான்
ஒருவன்காலைப்பிடித்து ஒன்பதுபேர்தொங்கலுற்றார்
ஆண்டவனார்கால்பிடித்து ஆயிரம்பேர்தொங்கலுற்றார்
ஆலமரத்தின் வெளவால்போல் அல்லவருந்தொங்கலுற்
அப்போது ஆண்டவனாங்கெனவேயேதுசெய்தார் [றார்
தன்காலை நழுவவிட்டார் காமாட்சிபெற்றபிள்ளை
அப்போதுவேதியர்க ளாயிரப்பேர்களுக்கும்
இறங்கவழியில்லாமல் யிருந்தார்மரந்தனிலே

### காத்தவராயர் பூதத்தை கழுதையாக்கி வேதியர்களை ஓட்டிவிடுதல்

வணங்காத்தசுவாமியவர் மாரிபிள்ளையேதுசெய்தார்
ஏமனவர்பூதந்தன்னை யின்பமுடன் தானழைத்து
கோவேறுகழுதையைப்போல் கொற்றவனாருண்டுசெய்
ஆயிரம்வேதியர்க்கு முன்பாகநில்லுமென்று [தார்
உபதேசந்தானுரைத்து உத்தமனார்போகலுற்றார்
அப்போதுகழுதையது அவ்வசனந்தான்கேட்டு
வேதியற்குமுன்பாக வந்ததுகாண்கழுதை
அப்போதுவேதியர்க ளனைவருந்தான்பார்த்து
கழுதையைத்தான்பார்த்து யிருக்கின்றவேளையிலே
அந்நேரவேளையிலே ஆண்டவனாரேதுசெய்தார்
ஆயிரம்வேதியரை யங்கேவிழச்செய்வாராம்
மரத்தைவிட்டுவேதியர்கள் மண்ணில்விழுந்தார்கள்
கண்ணிழந்தபாவனைபோல் மண்ணில்விழுந்தார்கள்
புன்னைமரத்தைவிட்டுப் பூமியிலேதான்விழுந்தார்
விழுந்துயெழுந்தவர்கள் கண்டார்கழுதைதன்னை
காணாதுபோலக் கண்டுவிட்டாரப்பாபட்டர்
பாராதுபோலப் பார்த்துவிட்டாரப்பாபட்டர்
வண்ணாரவல்லியவள் வளர்த்தகழுதையது
இங்கேவரவிட்டாளே யிளங்கொடியாள் நல்லியவள்
என்றுசொல்லி அப்பாபட்டர் எழுந்திருந்தாரன்னேரம்
அந்தக்கழுதைதன்னை அடிக்கவென்றுஓடிவந்து
வாலைப்பிடித்துக்கொண்டு மன்னவனார்தான்மடிந்தார்
காத்தவனார்தாபபார்த்து கழுதைக்குயேதுசொல்வார்
பத்திரமென்றுசொல்லி பரமன்யகனெச்சரித்தார்
காத்தவனார்சொன்னசொல்லைக் கண்டுகழுதையது



அப்பாபட்டர்கைகளிரண்டும் அழுத்திக்கொண்டுவாலின்மேல்
பந்தனமென்றுசொல்லி பறந்தோடிவருகுதுபார்
இழுத்துக்கொண்டுவருகுதுபார் இன்பமுடன்கழுதை
அப்பாபட்டர்கழுதைதானும் அலைந்துகெட்டுபோகுது
அப்பாபட்டர்போம்பொழுது கண்டுவிட்டாரெங்குபட்
என்காணுமப்பாபட்டர் இப்படிபோறீரென்று [டர்
அவர்வந்துகைகொடுத்தா ரவரையுமிழுத்துக்கொண்டு
ஓடுதுபாரக்கழுதை ஒளியுள்ளவீதியிலே
அந்தநல்லவீதியிலே அனந்தபட்டரோடிவந்து
அனந்தபட்டரோடிவந்து அன்பாகக்கைகொடுத்தார்
அவரையுமிழுத்துக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
இன்னஞ்சிலவீதியிலே யிழுத்துவரும்போது
எங்குப்பட்டரோடிவந்து இன்பமுடன்கைகொடுத்தார்
அவரையுமிழுத்துக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
சுப்புபட்டரோடிவந்து சுறுக்காகக்கைகொடுத்தார்
அவரையுமிழுத்துக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
ஓரிலைப்பட்டரவ ருத்தமனார்கைகொடுத்தார்
அவரையுமிழுத்துக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
இரண்டிலைப்பட்டரவ ரினிதாகக்கைகொடுத்தார்
இவரையுமிழுத்துக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
ஓரிலைப்பட்டர்முதல் நூறிலைப்பட்டர்களும்
பத்திலைப்பட்டர்முதல் நூறிலைப்பட்டர்களும்
புளியோரைபட்டர்களும் தத்தியன்னபட்டர்களும்
மிளகோரைபட்டர்களும் மிளகுதோசைபட்டர்களும்
அனைவருமோடிவந்து அன்பாகக்கைகொடுத்தார்
அத்தனைபேர்களையு மக்கழுதையிழுத்துக்கொண்டு
புத்தனூரகந்தேடி வருகுதங்கேயக்கழுதை

### வேதியன் ஸ்திரீகள் ஆயிரம்பேரும் கழுதையுடன் ஒட்டிக்கொள்ளல்

கழுதைவருகிறதைக் கண்டாள் துளசியம்மாள்
அப்பாபட்டன்தேவி யன்னத்துளசிகண்டு
என்றுமவளோடிவந்து யின்பமுடன்கைகொடுத்தாள்
அவளையும்பற்றிக்கொண்டு ஓடுதுபாரக்கழுதை
குப்பாபட்டன்தேவி கொம்பனையாளோடிவந்து [ள்
ஏனம்மாவென்றுசொல்லி ஏந்திழையாள்கைகொடுத்தா

அவளையுமிழுத்துக்கொண் டன்பாகவோடுதுபார்
சுப்பாபட்டன்தேவியவள் சுந்தரியாளோடிவந்து
ஏனம்மாவென்றுசொல்லி யின்பமுடன்கைகொடுக்க
அவளைமிழுத்துக்கொண் டன்பாகவோடுதுபார்
இப்படியெல்லாரையு மிழுத்துக்கொண்டோடுதுபார்
ஆண்மானம்பெண்மானம் அவமானமானார்கள்

### சுவாமி கழுதையை விட்டுவிடச்சொல்ல கழுதை இவர்களை விடுத்தல்

இப்படியாக இவர்களிருக்கையிலே
அப்போது ஆண்டவனா ரங்கெனவேயேதுசெய்தார்
கழுதையைத்தானெடுத்து கடுகெனவேபோகவிட்டார்
உபதேசங்கேட்டுமது உடனேயங்கேபோய்நடந்து
வேதியரைவிட்டுமங்கே வெகுதுரிசியாய்பேசியது
எமனாரிடந்தனிலே யிருந்ததுபூதமது
அப்போதுவேதியர்க ளங்ஙனமேயேதுசெய்தார்
ஆண்சாதிபெண்சாதி அடங்கலுந்தாமெழுந்து
அலைகுலையத்தலைகுலைய யரண்மனைக்குவோடலுற்றார்
கெட்டேன்பிழைத்தேனென்று பட்டுவந்துவீடுசேர்ந்தா
அந்தப்புரந்தனிலே யவர்களிருக்கையிலே [ர்
அப்போது ஆண்டவனா ரங்கெனவேயேதுசெய்தார்
கொல்லிமலைசுவாமி குமரேசர்பஞ்சவர்னம்
அவர்உற்றுப்பார்த்தாரே ஒருகோடியுத்திகளை
இருந்து நினைத்தாரே ஏழுகோடியோசனையை
ஆண்டுநினைத்தாரா மளவற்றபுத்திகளை

### காத்தவராயசுவாமி தாயாரைக்காண வருதல்

மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தைவிட்டகன்று
இனிநிற்கதியாயமில்லை யென்றுமவரெழுந்து
தாயார்தவநிலையைச் சண்முகனார்தேடிவாரார்
மாதாதவநிலையை மாரிபிள்ளைதேடிவாரார்
தோட்டந்திறந்தாரே தொன்னைதைத்துப்பூவெடுத்து
தோட்டந்திறந்து வர்னலட்சம்பூவெடுத்தார்
கையாலேயரும்பெடுத்தால் காம்பழுகிப்போகுமென்று
வாயால்மலரெடுத்தால் வாடிவதங்குமென்று
பொன்னின்துறடுகட்டி புஷ்பங்கள்தானெடுத்து



தங்கத்துறடுகட்டித் தாழப்பூதானெடுத்து
தளுட்ட கின்றகங்கையிலே தங்கச்செம்பால்நீர்முகந்து
தாயாருகில்வந்து சுவாமிதுரையேதுசெய்தார்
பாதந்துலக்கியவர் பட்டாலடிதுவட்டி [ந்து
கொண்டுவந்தபுட்பமெல்லாங் குபுகுபென்றுதான்சொரி
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
தெண்டனிட்டுசாமியவர் தீவிரமாய்த்தானெழுந்து
கைகட்டிவாய்புதைத்து கட்டழகர்நிற்கையிலே
கட்டழகர்நிற்கையிலே கண்டுவிட்டாள்காமாட்சி
வந்துபணிந்தவனை வாழ்த்தலுற்றாளப்பொழுது
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பக்கத்தில்கைகொடுத்தால் பழுவெலும்புநோகுமென்று
நெற்றியில்கைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டு [ள்
எங்கேயடாபோயிருந்தா யென்மகனேசொல்லுமென்றா

### காத்தவராயர் தாயாருக்கு மறுமொழி கூறல்

காத்தவனார்தான்கேட்டு காமாட்சிக்கேதுசொல்வார் [ன்
அம்மாநான்போய்வந்தவிடம் நலமாகச்சொல்வேன்யா
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடும்மாபெற்றவளே
பெண்ணைச்சிறையெடுக்கப் போகவரந்தாருமம்மா
போய்வாமகனேயென்று போற்றிவிடைகொடுத்தாள்
விடைபெற்று ஆண்டவனார் விமலிபிள்ளைவாறாராம்
அப்போது ஆண்டவனா ரன்புடனேயெங்கேவாரார் [ர்
மஞ்சையப்பன கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்றா

### காத்தவராயசுவாமி மாறுவேடங் கொள்ளல்

எங்கள் துரைபஞ்சவர்ன மென்னவேடங்கொள்ளுகிறார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போ
நானூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனைப்போல் [ல்
தும்பைப்பூபோலாக துவண்டகிழவனானார்
நாணற்பூபோலாக நரைத்தகிழவனானார்
கிண்ணாரக்காரன்போல கிருபனாவேடங்கொண்டார்
கொட்டாங்கச்சிகிண்ணரியை கொற்றவனாருண்டுபண்
கடைநல்லவீதிதனில் கட்டழகர்போய்படுத்தார் [ணார்
இப்படிக்கிவரிருக்க யின்பமுடனாண்டவனார்

ஆயிரம்வேதியர்க ளட்சணமேயோடிவந்து
கிண்ணாரக்காரன் கிருபனவன்வந்தான்காண்
ஆரியமாலையை யவன்கொண்டுபோய்விட்டான்
என்றுசொல்லிவேதியர்கள் முறையிட்டாராசரண்டை

### ஐயர் ராசருடன் முறையிட ராசன் கேட்டு சேவகர்க் குறைத்தல்

ஆரியப்பூராச னன்புடனேகேள்விப்பட்டு
முத்திரைபில்லைசேவகரை மெத்தெனவேதானழைத்து
நாகதாளிபுன்னைமரம் நலமுடனே நீங்கள்போய்
கிண்ணாரக்காரனைக் கட்டிக்கொண்டுவாருமென்றார்

### சேவகர்கள் கிண்ணாரக்காரனைத் தேடிவருதல்

அப்படியேவாரார்கள் ஆனதோர்சேவகர்கள்
கடைகள்நல்லவீதியிலே கட்டழகர்தேடிவாரார்
கொட்டாங்குச்சிகிண்ணரியைக் கிருபையுடன்வைத்து
தள்ளாதகிழவனைப்போல் தனஞ்செயனுந்தானிருக்க
கண்டுவிட்டார்சேவகர்கள் கட்டழகரப்போது
அப்போதுசேவகர்கள் அங்ஙனமேயேதுசெய்தார்
ஆரியப்பூராசன்முன்னே அவர்கள்வந்தேதுசொல்வார்
ஆகடுசெயதகிண்ணாரக் காரன்தனைக்காணோமென்று
கடைநல்லவீதியிலே குழவனொருவன்
தள்ளாக்கிழவனவன் கிண்ணாரங்கைபிடித்து
ஈளையிருமலுடன் யிருக்கக்கண்டோங்கிழவன்றன்னை
அவனைக்கண்டோமல்லாமல் மற்றவனைக்கண்டதில்லை
என்றவர்சொல்லையிலே ஏதுசொல்வாராசரவர்
அவனைக்கொண்டுவாருமென்றார் ஆரியப்பூராசாவும்
அப்போதுசேவகர்கள் அங்கெனவேயேதுசெய்தார்
கடைநல்லவீதியிலே கண்டாரேகிழவன்றன்னை
சீழுஞ்சிலத்தண்ணியும் சிந்துதேதேகமெல்லாம்
நாறுங்கிழவன்றனை நாம்தொடத்தகாதென்று

### சேவகர் சுவாமியைக் கட்டி இராசனண்டை கொண்டு வருதல்

அப்போதுசுவாமிதனை அங்கெனவேயேதுசெய்தார்
சாதுங்கிழவன்தனைச் சாக்கிரதையாய்க்கட்டலுற்றார்



கத்தாழைநாரெடுத்து க[illegible]முடனேகட்டலுற்றார் [கி
பாடைகட்டியேற்றிக்கொண்டு பக்குவமாய்ச்சேர்த்திருக்
தலைமேலேயெடுத்துமவர் தாக்கவேதோள்கொடுத்து
பாடையெடுத்துக்கொண்டு பக்குவமாய்வாரார்கள்

### காத்தவராயர் மறுபடியுங் காசிக்குருக்கள் வேஷங் கொள்ளுதல்

கொல்லிமலைக்கன்னிகளைக் கொப்பெனவேதானினைந்து
அப்போது ஆண்டவனு ரென்னவடிவெடுத்தார்
காசிக்குருக்களைப்போல் கடவுளவர்வேஷங்கொண்டார்
காதில்ரெண்டுகுண்டலங்கள் கடுக்கன் துலங்குதுபார்
காவிகாஷயமுமாய்க் கட்டழகர்தானணிந்தார்
சகலாத்துகுல்லாவுந் தரித்தார்தலைமேலே
கையிற்செபமாலையது கட்டழகர்தான்பிடித்து
காசிக்குருக்களைப்போல் பாடையின்மேல்வீற்றிருந்தார்
கண்டார்களெல்லோருங் காசிக்குருக்கள்தன்னை
கைகூப்பிதெண்டனிட்டார் கடுகெனவேவேதியர்கள்
சேவகர்கள் தான்பார்த்துச் சிந்தையிலேதான்பயந்து
பாடைதனையிறக்கிப் பாதையிலேவைத்தார்கள்
சேவகர்களோடிவந்து சோசியங்கள்சொல்லுமென்றார்
அப்போதுவேதியர்கள் அங்கெனவேயேதுசெய்தார்
குருக்களருகில்வந்து கும்பிட்டுகேட்கலுற்றார்
ஆரியமாலைகன்னி யவள்போக்குச்சொல்லுமென்றார்

### காத்தவராயசுவாமி வேதியர்களுக்கு ஆரூடஞ் சொல்லல்

அப்போது ஆண்டவனு ரவர்களுக்கேதுசொல்வார்
ஆரியமாலைதன்னை யழகுள்ளதேவனவன் [றே
எட்டுதிங்கட்குள்ளாக எடுத்துக்கொண்டுபோவானென்
அப்போதுவேதியர்கள் ஆண்டவர்க்கேதுசொல்வார்
என்னைக்கொண்டுபோகவிட்டா லென்னவுன்னைசெய்கி
ஆக்துளகில்செய்கிறது அடியேனிடதலையை [றேன்
இன்றெட்டாநாளைக்குள்ளே இராஜனிடயானைதன்னை
பார்த்துமேகன்னம்வைத்து ராத்திரியில்கொண்டுசெல்
எடுத்துக்கொண்டுசென்று லெனக்கென்னநீர்கொடுப்பீர் [வான்
என்றவர்கேட்கையிலே எடுத்துரைப்பார்வேதியர்கள்

ஐந்நூறுமஞ்சாங்காணி ஆறூறுக்குமேலேதாறேம்
பத்தூருமஞ்சாங்காணி பதினாயிரம்பொன் கொடுப்போம்
என்றுசொல்லிவேதியர்களேதுசொல்வாராஜாவும்
சுவாமிமுகம்பார்த்துத் தானங்கெடுத்துரைப்பார்
ஆரியமாலைதன்னை அவனெடுத்துபோகுமட்டும்
என்னுடையமாலைதனை யவனெடுத்துபோகுமட்டும்
உனக்கு-கால்விலங்குகைவிலங்குகழட்டவொண்ணாபெரு
விலங்கு, தோள்விலங்குதாள்விலங்கு சொல்லவொண்ணா
பெருவிலங்கு, கால்கைக்குவிலங்குமிட்டு கிடங்கிலடைப்
போமென்றார், அந்தவுரைகேட்டு ஆண்டவனாரேதுசெ
உங்கள்மனதின்படி வுத்தமரேசெய்யுமென்றார் [ய்வார்

## ராஜன் சுவாமியை ஆக்கினைசெய்து காவலில் வைப்பது

இராஜாவுஞ்சேவகரும் நலமுள்ளவேதியரும் [வார்
அனைவோருஞ்சேர்ந்திருந்து அங்ஙனமேயேதுசொல்
சேவகரைத்தானழைத்து சொல்லலுற்றார்வேதியரும்
ஆயிரம்சேர்விலங்கை யப்பொழுதேமாட்டுமென்றார்
அப்படியேநல்லதென்று யங்கிருந்துசேவகர்கள் [டை
பாடையுடன்தூக்கியல்லோ பாழ்பிள்ளையார்கோவிலண்
அங்கேயிறக்கியவர் ஆக்கினைகளேதுசெய்தார்
கால்விலங்குலகைவிலங்கு மாளாப்பெருவிலங்கு [ங்கு
மார்விலங்குதோள்விலங்கு கழட்டவொண்ணாபெருவில
இத்தனைவிலங்குபூட்டியேதுசெய்தார்சுவாமிதன்னை [து
பிள்ளையார்கோவிற்குள்ளே புண்ணியரைக்கொண்டுவந்
மல்லாக்காய்தான்வளர்த்தி மார்பேலேகல்லைவைத்தார்
சாத்திக்கதவடைத்தார் தாள்பூட்டிமண்ணறைந்தார்
இப்படிக்குச்செய்தார்களின்பமுடன்சுவாமிதன்னை

## காத்தவராயசுவாமி சின்னானை வரவழைத்தல்

அப்போதுகொல்லிமலை யாரைநினைக்கலுற்றார்
வங்கணத்துச்சின்னானை வாவென்றழைத்தாராம்
தொட்டியத்துச்சின்னானை சுவாமியழைக்கலுமே
அப்போதுசின்னானு மங்கெனவேயேதுசெய்தான்
சுவாமிநினைப்பறிந்து சாகுண்ணிவேஷங்கொண்டு
ஓட்டம்பெருநடையா யோடிவந்துசின்னானும்



ஆருமறியாமலங்கொருவர்காணாமல்
ஆண்டவனார்முன்னேவந்து அன்பாகயேதுசொல்வார்
என்னையழைத்தவகை யேதுவகைசொல்லுமென்றார்

## சுவாமி தன் விலங்கைத் தரித்து சின்னானுக்குப் பூட்டுவது

அப்போதுபஞ்சவர்ன மாண்டவனாரேதுசொல்வார் [கு
கால்விலங்குகைவிலங்கு கழட்டவொண்ணாப்பெருவிலங்
இப்படிக்குபோட்டார்களெனக்குமெத்தநோகுதென்றார்
கால்விலங்குகைவிலங்கு கழட்டுமென்றார்சின்னானை
அப்போதுசின்னானு மங்கெனவேயேதுசெய்தான்
கால்விலங்குகைவிலங்கு கழட்டிவிட்டார்சின்னானும்
மார்விலங்குதோள்விலங்கு வாங்கிவிட்டார்சின்னானும்

## சுவாமி சின்னானுக்கு விலங்கைப்பூட்டி தான் வெளியில் வருதல்

காத்தவனாரப்பொழுது காவலிட்டதென்றுசொல்லி
தன்விலங்கைத்தானெடுத்துதாக்குடையாரேதுசெய்தார்
சின்னானுக்குபூட்டிவிட்டார் சீரானவிலங்கையெல்லாம்
மல்லாக்காய்படுக்கவைத்து மார்மேலேகல்லைவைத்தார்
பத்திரமாய்நீயிரென்று பஞ்சவர்னனுந்தானுரைத்து
சின்னானைத்தனியேவிட்டு சீக்கிரமாய்த்தானெழுந்து
கோயில்விட்டுவெளியில்வந்து கொற்றவனாரப்போது [ர்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று

## காத்தவராயசுவாமி மாட்டுக்காரப்பையன் வேஷங் கொள்ளல்

இருந்துநினைத்தாரா மெழுகோடிபுத்திகளை
உற்றுநினைத்தாரா மொருகோடியோசனையை
ஆரைநினைக்கலுற்றா ரளவற்றசிந்தையிலே
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சில்வைத்தார்
அண்ணன்கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமானை மனதில்நினைத்தவரும்
கொல்லிமலைகன்னிகளைக் கொற்றவனார்தானினைந்து
வாவென்றழைத்தாராய் வருகுதுபார்மறுவேஷம [ண்டு
மாட்டுக்காரப்பையனைப்போல் மாரிபிள்ளைவேடங்கொ
தாத்துக்கோல்கைபிடித்து சுவாமியங்கேவீற்றிருந்தார்

## இராஜன் தன் யானைக்கு காவலமைத்தல்

இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
ஆரியப்பூராசாவு மன்னேரபென்னசெய்தார்
ஆனையைக்கொண்டுவந்து அன்பாகவேதுசெய்தார்
வலையன்சிவப்புடையான் மன்னர்களைத்தானழைத்து
இன்றெட்டாநாள்வரைக்கு மிவ்வானையைக்காத்தி ங்க
ஆனதனைக்காருமென்று யரசரவர்திட்டம்செய்தார் [ள்
இப்படிக்குதிட்டஞ்செய்தா ரின்பமுள்ளராஜாவும்
அப்போசிவப்புடையா னரசனுரைகேட்டு
என்னென்னகாவல்களை வைப்பான்சிவப்புடையான்
ஈட்டிபிடிக்குமன்ன ரேழுலட்சங்காவல்களாம்
உருவினகத்தியது உரையில்வையார்காவல்களாம்
பேச்சுமூச்சறியாத பேய்த்துலுக்கர்காவல்களாம்
ஆயிரம்வேதியர்கள் யானைசுற்றிகாவல்களாம்
முப்பதுபேர்ராஜாக்கள் முன்னூறுமந்திரிகள்
ஐம்பதுபேர்ராஜாக்கள் ஆயிரம்பேர்தாதியர்கள்
இத்யாதிகாவல்களை வைத்தார்கள்யானைசுற்றி
சிலேட்டுக்குள்குலோப்புகளைச் சிராயலங்கரித்தார்
கடுகெனவேயப்போது காடைவிளக்கேற்றிவைத்தார்
பகல்வத்திதீவட்டிகள் மத்தாப்புமேத்திவைத்தார்
இரவுபகலாக இனிதாய்த்துலங்குதுபார்
ஆனையின்பக்கபவந்து அங்கேசிவப்புடையான் [ன்
இடதுகையால்வாளுருவி இழுத்துபிடித்துக்கொண்டா
வலதுகையால்பட்டாவை மன்னன்பிடித்துக்கொண்டு
இப்படிக்குத்தானுமங்கே யிருக்கின்றவேளையிலே

## காத்தவராயர் மூதேவியை யழைக்க மூதேவி வந்து வணங்கல்

சிவப்புடையான்காவலிலே சுவாமியவரேதுசெய்தார்
அப்பெரியகாவலதை ஆண்டவனார்தானறிந்து
ஆரைநினைக்கலுற்றா ராண்டவனார்பஞ்சவர்னம்
மாமணிடபத்தினியாள் மாமியந்தசிதேவி
சீதேவிக்குமுன்பிறந்த திருவினையேமூதேவி
அத்தையரேமூதேவி அன்பாகவாருமென்றார்
மாமியரேமூதேவி மயிலணையேவாருமென்றார்
அழைத்தாரேகூச்சலிட்டு அண்டரண்டந்தானதிர



கூவியழைத்தாரே குவலயங்கள்தானதிர
ஆண்டவர்தானழைக்க அறிந்தாளேமூதேவி
அப்போதுமூதேவி ஆரணங்குவாராளே
கழுதையின்மேலேறி கட்டழகிவாராளே [ன்
இருப்பிடத்தைவிட்டுமவளேந்திழையாள்வந்துவிட்டா
காத்தவனார்முன்னேவந்து கட்டழகிஏதுசொல்வாள்
ஏண்டாமகனே என்னையழைத்ததென்ன
என்னையழைத்தவகை ஏதுவகைசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு ஆண்டவனாரேதுசொல்வார்
யானையைத்திருடவேண்டு மத்தையரேமூதேவி
யானைக்குக்காவலர்க ளனைவரும்நித்திரையாய்
மாறாமல்நித்திரைகளுண்டுபண்ணுமத்தையரே
எல்லோர்க்கும்நித்திரையை ஏந்திழையேநீகொடென்
அந்தவுரைகேட்டு அத்தையந்தமூதேவி [றார்
அந்தவிடத்தைவிட்டு வாராளேமூதேவி
யானையிருப்பிடத்தைத் தேடிவந்தாள்மூதேவி
அங்கிருக்குங்காவலரை யடங்கலுந்தான்பார்த்து

## மூதேவி காவலர்களுக்கு மாறாமல் நித்திரை வரச்செய்தல்

வந்துநிறைந்தாளே வளம்பெரியமூதேவி
எடுத்தாள்பழமுறத்தை யெங்கும்விசிறிவிட்டாள்
எல்லார்க்கும்நித்திரையை யெங்குமுண்டாக்கிவிட்டாள்
ஆடும்பெண்கள்பாடும்பெண்கள் அனைவருந்தூங்கிவிட்
முப்பதுபேராசாக்கள் முந்நூறு மந்திரிகள் [டார்
ஐம்பதுபேராசாக்கள் ஐந்நூறு மந்திரிகள்
ஆயிரம்வேதியர்க ளடங்கலுந்தூங்கிவிட்டார்
மன்னன்தலையாரி மகாநித்திரைசெய்தார்
இத்தாதிபேர்களெல்லாம் இனிதாகநித்திரைசெய்தார்
காவலுள்ளமன்னரெல்லா மேவல்கொண்டுநித்திரை
இப்படியாக இவர்களிங்கேதூங்கையிலே [செய்தார்
தன்னைமறந்துமிங்கே தலையாரிதூங்கையிலே
அப்போதுமூதேவி யழைத்தாளேகாத்தவரை
வாடாமருமகனே யென்றழைத்தாள்மூதேவி

## காத்தவராயர் காவலரைப் பங்கஞ்செய்து யானையைத் திருடுதல்

அத்தையழைக்கையிலே ஆண்டவனார்தான்கேட்டு
எட்டியுமோரடியா யிட்டுமவர்நடந்து
ஆனையிடபக்கத்தில் ஆண்டவனார்வந்துநின்று
உற்றுநினைத்தாரே ஒருகோடியோசனையை
ஆலோசனைபுரிந்து ஆண்டவனாரேதுசெய்வார்
ஏமனாரின்பூதமதை யிங்கே வாவென்றழைத்தார்
காத்தவனார்தானழைக்க கண்டறிந்தபூதமது
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய் பறந்துமிகவந்து
ஆண்டவனார்முன்னாலே அடைவுடனேவந்துநின்று
என்னையழைத்தவகை யேதுவகைசொல்லுமென
அப்போது ஆண்டவனார் அங்கனவேயேதுசெய்தார்
அழைத்தவகைசொல்லுகிறே னருகாகவாருமென்று
வலையன்சிவப்புடையான் மன்னன்தலையாரி [று
அவனுடைய அண்டையிலே ஆண்டவனார்வந்துநின்
ஏமனார்தன்பூதமதை யின்பமுடன் தானழைத்து
சிவப்புடையானை நீ சீராகத்தானெடுத்து
முன்பக்கம்பின்பக்கம் யின்பமாய்த்திருப்பியதை
ஆண்டவனார்பஞ்சவர்னம் அங்ஙனவேயேதுசெய்தார்
வலதுபக்கமீசைதனை மன்னவனார்கத்தரித்தார்
பாதையிலேகொண்டுவந்து பக்குவமாய்தான்வளர்த்தி
மூன்றுகுடுமிக்கு மூன்று முளையடித்தார்
இரண்டுகரங்களுக்கு யிரண்டுமுளையடித்தார்
மல்லாக்காய்படுக்கவைத்தார் மன்னன்தலையாரியை
செங்கல்மாவுதானிடித்து வாயநிறையரொப்பிவைத்தார்
* அச்சுமுச்சித்தாளி அன்பாகச்செய்தாராம்
பூதத்தைத்தானழைத்து வாய்நிறையத்துப்புமென்றார்
அப்படியேதுப்பியது அழகுசிறுபூதம்

## சுவாமி யானையைத் திருடி சாராய பூபியிடத்தில் வைப்பது

அப்போதுகாத்தவனார் ஆண்டவனாரேதுசெய்தார்
ஆனையின்மேலேறிக்கொண்டு அழகுதுரைபஞ்சவர்னம்

* அச்சிமுச்சுததாளி என்பது-ஆனை, இது வழக்கச்சொல்



பட்டத்துயானையின்மேல் பக்குவமாயுட்கார்ந்து
எங்கேயவர்வாராராம் யெங்கள் துரைபஞ்சவர்னம்
அந்த-மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தின்பின்
சாராயபூபியவள் தையலைத்தேடிவாரார் [னாலே
சாராயம் விற்கின்ற கடைக்குள்ளே தானுழைந்து
அக்காபூபியரே அரிவையரேயென்றழைத்தார்
அந்தவுரைகேட்டு பூபியவளேதுசொல்வாள்
ஏனப்பா தம்பியென்று யெதிரில்வந்துநிற்கலுற்றாள்
ஆண்டவனார்பஞ்சவர்னம் அரிவையர்க்கேதுசொல்வார்
ஆனைக்குட்டிகேட்டதனால் கொண்டுவந்தேனுந்தனுக்கு
என்றிவர்சொல்லையிலே யேதுசொல்வாள்பூபியவள்
யானையைக்கொண்டுபோய் அந்தப்புறக்கடையில்
கட்டிவையுந்தம்பியென்று கட்டழகிதானுரைத்தாள்
அப்போதுபஞ்சவர்னம் ஆண்டவனாரேதுசெய்தார்
புறக்கடையில்வைத்துமல்லோ புண்ணியனாரப்போது
நாலுகாலுபாக்கட்டி நலமாகத்தொங்கவிட்டார்
எங்கள்துரைபஞ்சவர்னம் ஏதுசொல்வாரப்போது
ஏழுபீப்பாசாராயம் பாவையரேகொண்டுவாடி
என்றுமிவர்சொல்லையிலே யேதுசொல்வாள்பூபியவள்
பத்துபீப்பாய்எட்டுபீப்பாய் பாங்காகசாராயத்தை [வள்
கொட்டியொன்றாய்தான்கலந்துகொண்டுவந்தாள்பூபிய
அந்தநல்லசாராயத்தை ஆண்டவனார்தான்பார்த்து
எட்டுபீப்பாய்சாராயத்தை யின்பமுடன்தான்குடித்தார்
பத்துபீப்பாய்சாராயத்தைப் பக்குவமாய்தான்குடித்தார்
பாவையழகியரே பஞ்சணைசோடியென்றார்
அப்படியேசோடித்தாள் ஆங்கிருந்தபூபியவள்
அப்போதுபஞ்சவர்னம் ஆண்டவனார்தாமெழுந்து
பஞ்சணைமெத்தையின்மேற் படுத்தாரேசுவாமிதுரை
காலைப்பிடிவாடி கட்டழகுபூபியரே
அப்படியேகால்பிடித்தாள் ஆரணங்குபூபியவள்
நித்திரைதான்போராரே நிமிலிபிள்ளைபஞ்சவர்னம்

## இராசனும் காவலரும் யானையைத் தேடுதல்

இப்படியாக யிவர்களிருக்கையிலே
அன்னேரவேளையிலே யானையின்காவலர்கள்
நித்திரைதெளிந்தெழுந்தார் நேரானமன்னரெல்லாம்

யானையைக்காணமல் அலைகின்றார்மன்னரெல்லாம்
சிவப்புடையான் தன்னைச் சீராகக்கண்டுவிட்டார்
வலதுபக்கம்மீசையது மன்னனுக்குத்தோற்றவில்லை
ஆறுமுளையடித்து அவனையங்கேகட்டிருக்க
கையிலேசெங்கல்மாவு வகையாகத்தானிருக்க
கண்டுவிட்டார்ராசாக்கள் கட்டழகரப்போது
சிவப்புடையான் தன்னை சீராகத்தானவிழ்த்தார்
வெட்கித்தலைகுனிந்து விசாரமுற்றான் சிவப்புடையான்
யானைகொண்டுபோனவனை அரைக்ஷணத்தில்கொண்டுவாரேன்
என்றுயெழுந்திருந்தானியலானசிவப்புடையான்
வலதுபக்கம்மீசையிலே மன்னவன்கைபோட்டான்
ஒருபுறத்தில்மீசையது ஒளிவாகத்தோற்றவில்லை
மூக்காடுபோட்டுக்கொண்டு மெத்தெனவேவாரானே

### சிவப்புடையான் யானையையும் சுவாமியையும் கொண்டு வருதல்

அப்போசிவப்புடையான் எங்கேயவர்போனாராம்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தின்பின்னாலே
சாராயபூபிகடையில் தனஞ்சயனுமுள் நுழைந்தான்
ஒருபீப்பாசாராயத்தை வுடனேகுடித்துவிட்டு [னை
புறக்கடையால்போகையிலே கண்டுவிட்டான்யானைதன்
யானையிங்கேவந்ததென்ன அறிவையரேசொல்லுமென்
அப்போதுபூபியவள் அங்கெனவேதுசொல்வாள் [றான்
யாரோஒருவன்வந்து யானையெனக்குவிற்று
பத்துபீப்பாய்சாராயமும் பக்குவமாய்த்தான்குடித்து
மயக்கந்தெளியாமல் பாங்கியவன்பஞ்சணையில்
நித்திரைபோனானென்று நேரிழையாள்தானுரைத்து
கதவைத்திறந்துவிட்டாள் கட்டழகிபூபியவள்
அப்போசிவப்புடையான் அங்கெனவேயேதுசெய்தான்
உள்ளேநுழைந்தானே ஒருபக்கமீசையிலான்
யானையைத்தானழைத்து அங்கெனவேகொண்டுவந்து
காத்தவனார்முன்னேவந்து கட்டழகனேதுசெய்தான்
கட்டிலுடன்தானெடுத்து கட்டழகனப்போது
யானையின்மேலெடுத்து அழகாகக்கட்டுகிறான்
முன்கட்டும்பின்கட்டும் மூன்றுகட்டுகட்டியவன்
யானையைநடத்திக்கொண்டு வாரான்சிவப்புடையான்



### காத்தவராயர் யானையின்மே லேறிக்கொண்டு சேனைகளைச் சாடுதல்

காத்துமழையுங் கனமழையும்பெய்யுதங்கே
அப்போதுசுவாமிக்கு நித்திரைதெளிகின்றது
கண்ணைத்திறந்தாரே கட்டழகர்பஞ்சவர்ணம்
மோசம்வந்துநேர்ந்ததென்றுவிமலிபிள்ளைபஞ்சவர்ணம்
யானையிடநெற்றியிலே அன்பாகக்கைபோட்டு
நகத்தால்சுரண்டினாரே நேராயதின்கழுத்தை
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சில்வைத்தார்
அண்ணன்கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமாளை மனதில்நினைத்தாராம்
கொல்லிமலைக்கன்னிகளை கொப்பெனவேதானினைந்து
கட்டிருந்தகட்டுகள்தான் கடுகயவிழ்ந்துமங்கே
மூலைக்குமூலையல்லோ முறியுதுபாளையங்கள்
அடிபட்டுமாளாமல் அலைந்துகெட்டோடுகின்றார்

### சின்னான்வந்து அரசனைத் தியாகங் கேட்பது

இப்படியாக இவர்சாடும்வேளையிலே
அந்தச்சமயத்திலழகுசின்னானேதுசெய்தான்
பிள்ளையார்கோவில்விட்டுப் புண்ணியனும்வாரானே
வந்துவளைந்துகொண்டான் வளம்பெரியசேனைதன்னை
ஐந்நூறுதாரோமென்று அரசரெல்லாஞ்சொன்னீர்களே
ஐந்நூறுபஞ்சாகாணி அன்பாகத்தாரோமென்றீர்
பத்தூறுமஞ்சாசாணி பாங்காகத்தாரோமென்றீர் [றீர்
யானைகொண்டுபோனாக்கால் அத்தனையுந்தாரோமென்
தாரோமென்றுசொன்னதெல்லாம் தந்திடுங்களென்று
ஆரியப்பூராசாவும் மவனால்சிவப்புடையான் [கேட்டான்
சின்னானுரைகேட்டு சொல்லாமலோடலுற்றார்
அப்போதுபஞ்சவர்ணம் ஆனைவிட்டுத்தானிறங்கி
சின்னானையனுப்பிவிட்டு சீக்கிரமாயேதுசெய்தார்

### காத்தவராயசுவாமி தாயாரைக் காணவருதல்

கொல்லிமலைசுவாமி குமரேசரெங்கேவாராரும்
தாயாரைத்தேடியவர் சுவாமியவர்வாராரும்
மாதாதவநிலைக்கு வடிவழகர்வாராரே
வீரசூரங்காவேரி வெற்புகழோமாந்தனார்

சர்வதீர்த்தப்பொய்கைதேடி சுவாமியவர்வாராரே
தாயார்தவநிலையைச் சண்முகனார்வந்துகண்டு
தோட்டம்திறந்து தொன்னைதைத்துபூவெடுத்து
ஓடுகின்றகெங்கையிலே ஒருசொம்புநீர்முகந்து
தாயாரெதிரில்வந்து சாமியவரேதுசெய்தார்

## காத்தவராயர் தாயாரை வணங்க தாயா ரெடுத்து வாழ்த்துதல்

பாதந்துலக்கியவர் பட்டாலடிதுவட்டி [ந்து
கொண்டுவந்தபுட்பமெல்லாம் குபுகுபென்றுதான்சொரி
வாரிவந்தபுட்பமெல்லாம் மலைபோலேதான்சொரிந்து
மூக்காலடிவணங்கி மூவொருகால்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
வந்துபணிந்தவனைக் கண்டந்தகாமாட்சி
வாரியெடுத்துமந்த மகாதேவியேதுசொல்வார்
என்னைப்பெறுவாய்நீ எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
என்திருஷ்டிப்பொல்லாது எழுந்திருமகனேயென்றாள்
கண்திருஷ்டிபொல்லாது கடுகயெழுந்திரென்றாள்
அந்தவுரைகேட்டு ஆண்டவனார்தாமெழுந்து
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்நிற்கலுற்றார்
கண்டுவிட்டாள்காமாட்சிகடுகெனவேயேதுசொல்வாள்
எங்கேயடாபோயிருந்தாய் என்மகனேசொல்லுமென்று
தாயாருரைகேட்டு சுவாமியவரேதுசொல்வார் [ள்
மாலைவனம்போயிருந்தேன் மாதாவேயென்றுரைத்தார்
பெண்ணைச்சிறையெடுக்க போகவிடைதாருமென்றார்
போகவிடைகொடம்மா போய்வாரேன்மாலைவனம்
மைந்தனுரைகேட்டு மாதாவுமேதுசொல்வாள்
வேண்டாமடாயென்மகனே வெண்மலரைதீண்டாதே
தொட்டாலும்தோஷம்வரும் தோகையந்தமாலையரை
பார்ப்பாரபெண்ணலவோ பாவம்வருமென்மகனே
மாலையென்றசொல்வசனம் போட்டுமறந்துவிடு
என்னிலும்பத்தினிதா னிடையூறுசொல்லாதே
தாயிலும்பத்தினிதான் தாரமென்றுயெண்ணாதே
என்றுமிவள்தானுரைத்தா ளிளங்கொடியாள்காமாட்சி



## காத்தவராயசுவாமி மாலைவனம்போக தாயாரை விடைகேட்பது

பஞ்சவர்னசுவாமியவர் பக்குவமாயேதுரைப்பார்
தன்தாயேகாமாட்சி யீஸ்வரியேசொல்கிறேன்கேள்
கண்டுவந்தமாலையரை கொண்டுவரவேணுமம்மா
பார்த்துவந்தமாலையரை சேர்த்துவரவேணுமம்மா
பாயில்படுத்தாலும் பாம்பாய்புரட்டுதம்மா
நான்-தரையில்படுத்தாலும் சரகாயுலருகிறேன்
உண்டாலுஞ்சாதமது உடலிற்றரிக்கவில்லை
தின்றாலிலையடக்காய் திருவாய்சிவக்கவில்லை
போகவரங்கொடம்பா போய்வாறேன்மாலைவனம்
என்றுமவர்கேட்கையிலே ஈஸ்வரியாளேது சொல்வாள்

## காமாட்சியம்மன் காத்தவராயருக்கு புத்தி சொல்லுதல்

போகாதேமகனேயென்று புத்திமிகசொல்லையிலே
தாயாருரைகேட்டு சுவாமியவரேதுசொல்வார்
என்னதான்சொன்னாலும் யேற்கவில்லையுன்செவிக்கு
பொன்திருடிகழுவிருப்பார் பூலோகத்திலுள்ளவர்கள்
பெண்ணுக்காய்கழுவிருந்தார் பூலோகத்தாரேசார்களா
கன்னிக்காய்கழுவிருந்தால் கலியுகத்தாரேசுவார்கள்
மாலையற்காய்கழுவிருந்தால் மண்டலத்தாரேசுவார்கள்
கழுவிலிருக்கணுமா காய்ந்துலர்ந்துசாகணுமா
தொழுவிலிருக்கணுமா தொல்லுலகோரேசணுமா
கழுவிலிருக்கணுமா கண்டவர்களேசணுமா
காமாட்சிபிள்ளையென்று கண்டவர்களேசணுமா
ஈஸ்வரியாள்பிள்ளையென்று எல்லவருஞ்சொல்லணுமா
மரக்கழுவிலிருக்கணுமா மாண்டுமடியணுமா
மாலையென்றசொல்வசன மறக்கவுநீபோறதில்லை
என்றுசொல்லிகாமாட்சி எடுத்துரைப்பாள்மைந்தனுக்
ஆச்சாளழகுபெண்ணை அய்யன்மகள்மாலைகண்ணாள் [கு
அவளுடையதன்னழகு அதுகண்டெழுகிவந்தால்
அழகுபடாகூந்தலிலே அவளுடையகூந்தலது
ஏழாயிரம்பொன்பெற்ற இரத்தினவர்னபட்டாடை
அதிலேஒருமுழந்தா னணழகாகொண்டுவந்தால்
முத்துகொடிமாலையதை மெத்தெனவேவாங்கிவந்தால்

கணையாழிமோதிரத்தைக் கழட்டிவந்தாலிப்பொழுது
அவளைச்சிறையெடுக்க அப்போவிடைதருவேன்
அந்தவுரைகேட்டு ஆண்டவனுமேதுசொல்வார்

காத்தவராயருக்கு அம்மன் வெண்ணீறு
அள்ளித் தருவது

அப்படியேநல்லதன்று அனுப்பிவிடைதாருமென்றார்
அப்போதுகாமாட்சி அம்மனவளேதுசொல்வாள்
பஞ்சாட்சரமோதி பாவைகிளிமொழியாள்
ஈஸ்வரைத்தானினைந்து யீஸ்வரியாளப்பொழுது
ஐந்தெழுத்தைதானோதி அவள்கையில் நீறெடுத்து
மைந்தன்முகம்நோக்கி மாதாவுமேதுசொல்வாள்
வென்றுவாமகனேயென்று வெண்ணீறு அள்ளியிட்டு
ஜெயித்துவாமகனேயென்று திருநீறு அள்ளியிட்டாள்
காமாட்சிநீறைத்தான் காத்தவனுமேதுசெய்தார்
ஒருகையில்வாங்காமல் ஒளிவுள்ளபஞ்சவர்ணம்
இருகையால்தான்வாங்க யெங்கள்துரைபஞ்சவர்ணம்
பஞ்சாட்சரந்தானணிந்தார் பாங்கானபஞ்சவர்ணம்
திருநீறு அள்ளியிட்டு தேவிமுகம்பார்த்து
வாழ்த்தியனுப்பவென்று மலரடிக்கீழ்தெண்டனிட்டார்
தெண்டனிட்டதன்மகனை தேவியெடுத்தணைத்து
வாழ்த்திவிடைகொடுத்து மகனே நீபோய்வாவென்று
போகவிடைகொடுத்து பூமிகிள்ளிநெற்றிக்கிட்டாள்
விடைபெற்றெழுந்தாரே விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
தாயார்விடைபெற்று சுவாமியவரெழுந்தார்
மாதாவிடைபெற்று மன்னவனுர்தானெழுந்தார்

முதலாவது கின்னார வனம்
முற்றுப்பெற்றது.

---

இரண்டாவது

# கிள்ளை வனம்

விநாயகர் துதி வெண் செந்துறை

வாரணமாமுகனே பலராமர்மைத்துனரே
காரணவிமலருக்குக் கருத்துள்ளபுத்திரனே
தோத்திரஞ்செய்யுமுன்னே தொப்பைக்கணபதியே
காத்தவராயன்கதை களிப்பாகயான்பாட
பக்கத்துணையிருந்து பகவானேயிக்கதைக்குத்
தக்கவரந்தருவாய் தயாளகுணபதியே.

கதையின் வரலாறு

அப்போதுபஞ்சவர்ணம் அங்ஙனவேயேதுசெய்தார்
ஐந்துவிதமைந்துவர்ணப் பஞ்சவர்ணக்கிளியானார்
எட்டிப்பரந்தாராம் உயிர்நிலைகள்தப்பாமல்
செட்டையுதிர்ப்பாராந் தேவிபிள்ளைவரும்வழியில்
இரத்தினமாய்க்குவியுது நலமாகவப்போது
மாணிக்கஞ்சொரிகிறது மாரிபிள்ளைவரும்வழியில்
காமாட்சிதோள்மேலே கட்டழகர்வந்துநின்றார்
இரங்கமிரங்கமென்பாராம் யிரங்ககவிபாடுவாராம்
காவேட்டிரங்கமென்பார் கஸ்தூரிரெங்கமென்பார்
காமாட்சிதோள்மேலே கனகஞ்சொரிவாராம் [ட்டாள்
இவர்-இரங்கமிரங்கமென் கையிலே நாயகியாள்கண்டுவி
நீர்யார்வளர்த்தரங்கம் அன்பாகச்சொல்லுமென்றார்
ஆர்வளர்த்தரங்கமல்ல அருமைத்திருமகனுன்
காமாட்சிதான்வளர்த்த காத்தரங்கமென்பாராம்
ஆரியமாலையண்டை அவளிடத்திற்போனுயாகில்
அவள்வைத்துதான்வளர்ப்பாள் ஆனந்தரங்கையனை
என்றுவரங்கொடுத்தா ஈஸ்வரியாள்காமாட்சி
அவ்வார்த்தைபெற்றுக்கொண்டு ஆண்டவரும்வாருரே

காத்தவராயர் கிளிப்பிள்ளை வடிவெடுத்து
மாலையிடம் வருதல்

செட்டையொதுக்கியவர் சிவ்வெனத்தான்பறந்தார்
புத்தூரகந்தேடிப் புண்ணியனுர்வாருராம்

ஆயிரம்வேதியர்மே லன்பாகத்தான்சொரிந்தார்
மாணிக்கந்தான்சொரிந்தார் மாரிபிள்ளைபஞ்சவர்ணம்
அன்னத்துளசியின்மே லன்பாகத்தான்சொரிந்தார்
ஐம்பத்தெட்டுகிராமம் அடைவுடனேசுத்திவந்தார்
வாடைகொடிகட்டினார் மாலையிடகோட்டையிலே
நாகதாளிபுன்னைமரம் நடுவனத்துசோலைகளாம்
வெண்ணாவல்மரத்தின்மேல் விமலிபிள்ளைவந்துநின்று
ரங்கரங்கமென்றுசொல்லி யிவரிரங்கம்பாடுகின்றார் [ர்
காவேரிரங்கமென்று கனத்தகவிபாடுகையில்
வெண்பாகலித்துறையும் வேணகவிபாடுகிறார்
காசிலிக்கத்துறையும் வேணகவிபாடுகிறார்
இரங்கமிரங்கமென்றுசொல்லி யிரங்ககவிபாடுகையில்
இந்தநல்லவார்த்தைதனை மாலைகன்னிகேட்டுவிட்டாள்
அப்பெரியரங்கையனை அன்பாகத்தான்பிடித்து [த்தாள்
கொண்டுவரவேண்டுமென்று கொம்பனையாள்தானுரை
அப்போதுதாதியர்கள் அன்பாகவாறார்கள்
நாகதாளிபுன்னைமரம் நடுவனத்துச்சோலையிலே
வெண்ணாவல்மரமருகில் மெல்லியர்கள்வாறார்கள்
அப்போ-அஞ்சனந்தான்போட்டு ஆராய்ந்துபார்த்தா
தனைத்தேடிவருபவரைத் தேவிபிள்ளைதான்கேட்டு [ராம்
அப்போது ஆண்டவனா ரழகாகதொன்னைதைத்து
ஒருதொன்னைக்குள்ளாக உத்தமனார்தானிருந்தார்
மறுதொன்னைமேல்மூடி மௌனமாய்த்தானிருந்தார்
ஆறுமறியாம லாண்டவனார்தானிருந்தார்
ஆயிரந்தாதியர்கள் அப்போதுதேடிவாறார் [து
ஜெனங்களெல்லாந்தேடுகிறார் வனமொழிமாரப்பொழு
செடிகளெல்லாந்தேடுகிறார் தேன்மொழிமாரப்பொழுது
எங்கிலும்கிள்ளைதனை யினிதாகக்காணோமென்று
மாலையுடன்சொல்வோமென்று வருகிறார்கள்பெண்களெல்லாம்
மாலையற்குமுன்புவந்து வகையுடனேயேதுசொல்வார்
கண்ணிலேபார்ப்போமென்றாற் காணோமேகிள்ளைதனை
இப்படிக்குச்சொன்னார்க ளிளங்கொடியாள்முன்பாக
அப்போதுமாலைகன்னி யவ்வசனந்தான்கேட்டு
சோழிமிகவிரித்து சொக்கட்டானாடிருந்தார்
அந்தசமயத்தி லாண்டவனாரேதுசெய்தார்
கொல்லிமலைகன்னிகளைக் கொற்றவனார்தானினைந்தார்



வெண்ணீறுதானெடுத்து விமலிபிள்ளைதூவிவிட்டார்
ஆயிரங்கிள்ளைகட்கும் அகோரபசியாச்சு
மாலையிடம்வந்து வணங்கியதுசொல்லுகுது
எங்களுக்குப்பசியதுதா னிருக்கமுடிகூடவில்லை
மதுவனம்போய்வர மங்கையரேவிடைகொடம்மா
பசியாரிவ நகிறோம் பாங்குவிடைகொடம்மா
என்றுவிடைபெற்று யின்பமாய்த்தானெழுந்து
சிவ்வென்றுதான்பறந்து சீக்கிரமாய்வந்தது
அவ்வனத்திலுள்ளகனி யன்பாகத்தான்பொசித்து
சரக்கொன்றைமேடையிலே தயவாகவிருக்குதங்கே
சலங்களைப்பொசித்து சிறப்பாகயிருந்ததப்போ
சிவ்வென்றுதான்பொசித்து சீக்கிரமாய்மரமீது
ஆளுக்கோர்மரத்தின்மே லன்பாகக்குந்துதங்கே
இராஜனல்லகிள்ளை நலமாகத்தானெழுந்து
அந்த-தொன்னையின்மேலேதான் துருசாகுந்துதங்கே
இராசனுடகிள்ளையை நலமாகசுமக்குகிறார்
மாலையுடகிள்ளையை மாரிபிள்ளைசுமக்குகிறார்
கண்டுவிட்டுமெய்மறந்து கலகலந்துமேனியெல்லாம்
அப்போது ஆண்டவனா ரன்பாகயேதுசொல்வார்
எந்நேரவரையிலும்நா னிருந்துமிகச்சுமப்பேன்
என்றுசொல்லிக்கொண்டு இருந்தாராம்தொன்னையிலே
மாலையுடகிள்ளையெல்லாம் வகையாகத்தானிறங்கி
சந்தனப்பொன்மேடையிலே தயவாகநின்றது
அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனா ரென்னசெய்தார்
தொன்னையைநீக்கிமெள்ள விமலிபிள்ளைபார்க்கலுற்றார்
அப்போது ஆண்டவனை யன்பாகக்கண்டது
ஆணாய்ப்பிறந்தபிள்ளை யன்பாகவந்ததென்று
பங்குகள்போடுதுபார் பார்ப்பாரக்கிள்ளையது
கண்ணுகளென்னுதென்று காதுகளென்னுதென்று
மூக்குகளென்னுதென்றுமுகங்களெல்லாமென்னுதென்
கால்களென்னுதென்று கைகளுமென்னுதென்று [று
பங்குகள்போடையிலே பார்த்துவிட்டார்பஞ்சவர்ணம்
வெண்ணீறைத்தானெடுத்து விமலிபிள்ளைதூவிவிட்டார்
மாயப்பொடிதானெடுத்து மதிமயங்கதூவிவிட்டார்
ஆயிரங்கிள்ளைகள் அன்பாகத்தான்பார்த்து
அத்தைமகனாரே ஆசையுள்ளமைத்துனரே

மாமிமகனாரே மருங்குள்ளமைத்துனரே
எங்களை நீர்சேர்ந்து எங்களாசைதீருமென்றார்
பெண்களைச்சேர்ந்து பெண்ணாசைதீருமென்றார்
மாலையிடகிள்ளையெல்லாம் வருந்துதேயாண்டவனை
ஏமனாரின்பூதத்தை இன்பமுடன்தானழைத்து
பஞ்சவர்ணகிளியாகப் பாங்குடனேயுண்டுபண்ணார்
ஆயிரங்கிள்ளையுடனன்பாகவாருமென்றார்
அந்ததோர்கிள்ளைகளும் அப்போதுகருவாச்சு
இந்த- ஆண்டவனைவிட்டு அன்பாகவருகுதங்கே
ஆரியமாலையண்டை அழகாகவருகுது
ஆயிரங்கூண்டிலே அமர்ந்ததுகிள்ளையெல்லாம்
ஒவ்வொருகிளிகளுக்கு இரண்டிரண்டுகுஞ்சாச்சு
காச்சுகாச்சென்றுசொல்லி கத்துதுகிள்ளையெல்லாம்
கிளிகளதுசத்தத்தை கிளிமொழியாள்கேட்டுவிட்டாள்
கிளிகளைப்பார்த்துவாவென்றாளே மாலையவள்
அந்தக்கிளிகளை யன்பாகத்தான்பார்த்தாள்
ஒவ்வொருகூண்டுக்கு மும்மூன்றுகிளியாகி
இத்தையெடுத்துக்கொண்டு ஏந்திழையாள்முன்னேவை
பாராததுபோலப் பார்த்துவிட்டாள்பாவையரும் [த்தார்
சோரம்போய்வந்ததென்று தோகையிளங்கொடியாள்
கண்ணைப்பிடுங்கியவள் காட்டுக்குத்துரத்துமென்றாள்
அப்போதுகிள்ளையெல்லாமழுதுகொண்டுபோகுதங்கே
கிள்ளைகள்போனபின்பு கிளிமொழியாள்மாலைகன்னி
மெத்தவிசனமதாய் மெல்லியவள்தானிருந்தாள்
அப்போது ஆண்டவனா ரன்பாகத்தான்பார்த்து
அஞ்சனத்தைத்தான்போட்டுஆராய்ந்துபார்க்கலுற்றார்
ஆயிரங்கிள்ளைகளை யன்பாகத்தானழைத்து
கண்ணைப்பிடுங்கியல்லோ காட்டுக்குத்துரத்திவிட்டாள்
என்றுசொல்லிபஞ்சனத்தி லின்பமுடன்தோற்றுகுது
அப்போதுசுவாமியவர் ஆண்டவனாரென்னசெய்தார்
இரக்கமிரங்கவென்றுசொல்லி இரங்ககவிபாடுவாராம்
இப்படியாக ஆண்டவனார்பாடுகையில்
நாகதாளிபுன்னைமரம் நாய ருந்தாமிருந்தார்
அந்தநல்லசத்தம் ஆரணங்குதான்கேட்டு
இப்பெரியகிள்ளைதன்னை யேந்திழையேகொண்டுவாரும்
இது- ஆர்வளர்த்தரங்கமது அருமையாய்பாடுகிறார்



எவர்வளர்த்தரங்கனோ இப்படிப்பாடுகிறார்
இப்பெரியரங்கம் என்னிடமிருந்துதானால் [ண்டி
அருமையாய்நான்வளர்த்து ஆசையெல்லாந்தீருவே

### ஆரியமாலை கிளிப்பிள்ளையைக் கொண்டு வரும்படி கட்டளையிடுதல்

அப்பெரியரங்கனை யழைத்துக்கொண்டுவாருமடி
நாகதாளிபுன்னையண்டை நலமாகவந்துநின்று
நீ-யார்வளர்த்தரங்கனோ அருமையாய்வந்துவிட்டீர்
இப்போதுமாலையண்டை யின்பமாய்வாருமென்றார்
அப்போதுசுவாமியவர் அன்பாகவாறாராம்
அன்னமென்றதாதிகையில் அன்பாகவந்துநின்றார்
தாதியவள்தானெடுத்து தையலரும்வாராளே
கிள்ளையைத்தானெடுத்து கிளிமொழியாள்வாராளே
மாலையிடங்கொண்டுவந்து மங்கையவள்வைத்தாளாம்
ரங்கரங்கமென்கையிலே ரத்தினமுதிருமங்கே
ஸ்ரீரங்கமென்பாராம் சொர்ணங்கவியுதங்கே [ள்
சொர்ணநல்லரங்கனடி தேர்விசையரேயென்றுரைத்தா
இது-மாணிக்கரங்கனடி மயிலணையேயென்றுரைத்தாள்
நீ-யார்வளர்த்தரங்கனோ வருமையாய்சொல்லுமென்று
காமாட்சிதான்வளர்த்த காத்தரங்கமென்றுரைத்தார் [ள்
இவ்வசனங்கேட்டு ஏந்திழையாள்மாலையவள்
சந்தோஷமாகத் தையலரும்வைத்திருந்தாள்
என்னிடத்திருமென்றாள் ஏந்திழையாள்மாலையவள்
அப்போதுஆண்டவனார் அன்புடனேதுசொல்வார்
ரங்காவென்றழைத்தாலே நாயகியேநானிருக்கேன்
என்றுசொல்லிகிள்ளையது யியலாயுரைக்கையிலே
அப்போதுமாலையரும்கிளியாளென்னசொல்வாள்
என்-அத்தைபிள்ளைரங்கையா அன்பாகவாருமென்று
மாமிபிள்ளைரங்கையா மன்னவரேவாருமென்று
இப்படிக்குதனையழைத்தா லிருப்பேண்டியுன்னிடத்தில்
இவ்வசனங்கேட்டாளே ந்திழையாள்மாலையவள்
சந்தோஷமிகவானாள் சரீரங்கள்பூரித்தாள்
இப்பெரியகிள்ளையைநா னெங்கிலுங்கண்டதில்லை
என்னிடத்திலிருமென்று ஏந்திழையும்பிடித்துக்கொண்
மாலையிடத்திலே மாரிபிள்ளைதானிருந்தார்
[டாள்

இப்படிக்குத்தானிருந்தா ரெங்கள் துரைபஞ்சவர்ணம்
அந்நேரவேளையிலே ஆரணங்குமாலையவள்
சோழிவிரித்துமவள் சொக்கட்டான் தான்பரப்பி
ஆடவேணுமென்று அரிவையவள் தானிருந்தார்
ஆகாயகன்னியர்கள் அரிவையர்கள் வருவார்
வழிபார்த்து தானிருந்தாள் மயிலணையாள் மாலையவள்
அப்போது பஞ்சவர்ணம் ஆண்டவனாரேது சொல்வார்
நான்கூட ஆடுகிறேன் நல்லபகடை னை
உன்னாலேயாகுமோதான் உத்தமனே பகடையாட
ஆடுகிறேன்பாரடி நீ ஆண்தன்மையிப்போது
ஆனால்நீபோடுமென்றாள் அரிவையந்தமாலைகன்னி

## கிளிப்பிள்ளையும் ஆரியமாலையும் சொக்கட்டானாடல்

அப்பொழுதாண்டவனார் அரிவையர்க்கேது சொல்வார்
ஆட்டங்களாடினால் பந்தியங்கள் வேண்டுமோதான்
என்னென்னபந்தியங்கள் என்றாளே மாலைகன்னி
நான்தோற்றேனாமாகில் நலமாகவுந்தனுக்கு
அ ப்பஞ்சமக்கின்ற ஆணழகாரங்கையா
என்றுயெனை ழையும் ஏந்திழையேமாலையரே
நீதோற்றாயாமாகில் நேரிழையேயெந்தனுக்கு
என்னதருவீரென்றார் இயலானரங்கையனும்
நீஎன்னதான்கேட்பாய் எனக்கறியசொல்லுமென்றாள்
முத்துகெண்டிமாலை மெல்லியரே நீர்தாரும்
கூந்தலிலேயோரிழைதான் சொம்பனையே நீகொட்டி
உன்-வஸ்திரத்திலோரிழை மயிலணையே நீகொட்டி
கணையாழிமோதிரத்தைக் கன்னியரே தாருமென்றார்
இப்படிக்குத்தருவாயானா லரிவையரேயாடிடலாம்
குலுங்கவேதானகைத்தாள் கொடியிடையாள்மாலைகன்னி
இப்பெரியரங்கந்தனை எங்கிலும்நான்கண்டதில்லை
சந்தோஷமானாள் சரீரங்கள் பூரித்தாள்
அப்படியேபோடுமென்றாள் அரிவையந்தமாலைகன்னி
அப்பொழுதாண்டவனார் அன்பாகவேது செய்தார்
எமனாரின்பூதத்தை இடதுகையில்தானழைத்தார்
நமனாரின்பூதத்தை வலதுகையில்தானழைத்தார்
பகடைகளாடினார் பாங்காகஆண்டவனார்
இருக்காலுமெட்டுதுகை பனனிரண்டுவிழுகுதங்கே



பகடையதுபுரளப் பாங்காய்விழுகுதங்கே
ஆரியமாலையவ ளாடுகின்றவேளையிலே
நாலத்தொண்ணூறுமூணத்தொண்ணூறு நலமாகவிழுகுதங்[கே
நாலுமூன்றேவிழும் நலமுடையமாலையற்கு
உயிர்போகவில்லையே உத்தமியாள்மாலையற்கு
ஆரியமாலையவள் ஆரணங்குதான்தோற்றாள்
பஞ்சவர்ணச்சுவாமி பாங்காகத்தான்கெலித்தார்
வெட்கித்தலைகுனிந்தாள் விசாரமிட்டாள்மாலைகன்னி
ஆரியமாலைகன்னி யரிவையரைத்தான்பார்த்து
குலுங்கவேதானகைத்தார் கொல்லிமலையாண்டவனார்
ஆரியமாலைகன்னி அந்நேரமேது செய்தாள்
முத்துகெண்டிமாலை மெல்லியவள் தான்கழற்றி
கிள்ளையின்தன்கழுத்தில் கிளிமொழியாள்போட்டாள்
கூந்தலிலோரிழைதான் கொடியிடையாள் தானெடுத்து
இந்தாருமென்றுசொல்லி ஏந்திழையாள் தானெடுத்து
காலிலேசுத்துமென்றார் கட்டழகரப்போது
அப்படியேசுத்துகின்றா ளாரணங்குமாலையவள்
வஸ்திரத்திலோரிழைதான் மயிலணையாள் தானெடுத்து
கணையாழிமோதிரத்தைக் கால்தனிலேமாட்டுமென்று
உத்தரவுதான்கொடுத்து உத்தமியாளப்போது
போசனமண்டபத்திற் போய்புகுந்தாள்மாலையவள்

## காத்தவராயர் மாலையிடம்விட்டு மாதாவிடம் வருதல்

இதுதான் கருணமென்று எழுந்திருந்தார்பஞ்சவர்ணர்
சட்டை தட்டுசிறகொதுக்கி சிவ்வென்றுதான்பறந்தார்
ஓடிப்பறந்தாராம் உயர் நிலைகள் தப்பாமல்
மாதாயிருப்பிடத்தை மாரிபிள்ளைதேடிவாரார்
அம்மையின்றோண்மேலே யன்பாயமர்ந்திருந்தார்
இரங்கமிரங்கமென்பார் யிரங்ககவிபாடுவாராம்
நீர்-ஆர்வளர்த்தரங்கனடா அருமைதிருமகனே
ஆர்வளர்த்தரங்கனல்ல அரிவையரேசொல்லுகிறேன்
காமாட்சிதான்வளர்த்த காத்தரங்கம்நான் தாண்டி
முக்காலடிவணங்கி முடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனைக் கண்டுவிட்டாள்காமாட்சி
என்னைப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்

பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
கண்ணிரண்டும்பொல்லாது கடுகவெழுந்திரப்பா
பக்கத்திற்கைகொடுத்தால் பழுவெலும்புநோகுமென்று
நெற்றியிற்கைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டாள் [ள்
எங்கேயடாபோய்வந்தாய் என்மகனே சொல்லுமென்று
போகச்சொன்னவிடத்துக்கு போய்வந்தேனென்றுரைத்தார்
நீமாலையிடஞ்சென்று வாங்கிவரச்சொன்னதெல்லாம்
அன்புடன்வாங்கிவந்தேன் ஆச்சியரேபாருமென்று
முத்துகெண்டிமாலைகளுங் கணையாழிபௌத்திரமும்
வஸ்திரத்திலோரிழையுங் கூந்தலிலோரிழையும்
வாங்கிவந்தேனென்று மயிலணையாள்முன்னேவைத்தார்
கண்டுவிட்டாள்காமாட்சி கன்னியடையாளம்
எத்தொழிற்கும்வல்லவண்டா எதுக்குஞ்சமர்த்தனப்பா
உன்னைப்போல்நல்லபிள்ளை உலகத்திற்கண்டதில்லை
வாளையவன்கைகொடுத்து தவசடியைக்காத்திரென்றாள்
கண்மூடித்தவமிருந்தாள் கட்டழகிகாமாட்சி
மூன்றுநாளாறுபொழுது நிண்ணயமாய் தவமிருந்தாள்

இரண்டாவது கிள்ளை வனம்

முற்றுப்பெற்றது.

மூன்றாவது

## வண்ணாரவல்லி வனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

வல்லபைத்தன்கணவா வாரணமாமுகனே
வில்லமர்கரித்த விமலனார்புத்திரனே
வணங்காத்தசுவாமியின்றன் வண்ணக்கதைபாட
மனம்வைத்துயென்னாவில் வந்துகுடியிருந்து
குற்றங்கள்வாராமல் கோபாலன்மருமகனே
முற்றும்படியாக முக்கணனேமுன்னடவாய்



### கதையின் வரலாறு

அப்போதுகாத்தலிங்கம் ஆண்டவனாரேதுசெய்தார்
கண்டுவிட்டார்பஞ்சவர்ணம காமாட்சிதவநிலையை
என்னடிஎன்தாயே யிரங்கலையோவுன்மனது
கல்லோதானுன்மனது கரையிலையோஎள்ளளவும்
எந்நேரந்தன்னளவி லிருப்பேனுன்றவசடியில்
மாண்டகட்டையுன்னிடத்தில் வல்லுயிரோமாலையிடம்
மாதுவனம்போக வரங்கொடடிகாமாட்சி
எந்நேரந்தன்வரைக்கும் யிதம்பாடிநிற்பேனம்மா
செய்யான்சிறையிருக்குஞ் செங்கழனியோடையண்டை
கொழுந்திலைபங்கிலேதான் குடியமர்த்திவைக்கவேண்டு [ம்
எட்டுநாளானாலும் விட்டுவரப்போறதில்லை
கண்டுவந்தமாலையைநான் கொண்டுவரவேணுமென்றார்
பார்த்துவந்தமாலையரை போர்த்துவரவேணுமென்றார்
என்றிவர்கேட்கையிலே யெடுத்துரைப்பாள்காமாட்சி
பத்தினியைத்தீண்டினால் பாவம்விளையுமப்பா
உத்தமியைத்தீண்டினால் உயிர்க்கழுவுநேருமப்பா
தகப்பன்தந்தசாபது தனஞ்சயனேபலிக்குதடா
கழுவிலிருக்கணுமா காய்ந்துலர்ந்துபோகணுமா
ஆண்டிலிருக்கணுமா துடிதுடித்துச்சாகணுமா
மாக்கழுவிலிருக்கணுமா மங்கையர்களேசணுமா
காமாட்சிபிள்ளையென்று கண்டபெண்களேசணுமா
பொன்திருடிக்கழுவிருப்பார்பூமியிலுற்றபடி
பெண்ணுக்காய்கழுவிருந்தால் பூவுலகிலேசிடுவார்
தாயிலும்பத்தினி தாரமென்றுகூறுதே [வலோகம்
பெண்ணுனக்குவேண்டுமென்றால் போறேனப்பாதெய்
தெய்வலோகம்போறேன் தெய்வகன்னிகொண்டுவாறேன்
மாமன்மகள்கருப்பழகி மயிலணையைக்கொண்டுவந்து
கலியாணஞ்செய்துவைத்து கண்குளிரப்பார்க்கிறேன்
வாங்கருப்பன்பூங்கருப்பன் மதுரைசிறுகருப்பன் [டா
ஏழுகருப்பனுக் கிளையவள்கருப்பழகி
நாகப்பழமதிலும் நல்லகருப்பழகி
சாமளவர்ணம்போல் தையல்கருப்பழகி
அப்படிப்பட்டபெண்ணை யன்பாய்முடித்துவைப்பேன்
மாலையென்றசொல்வசன மறந்துவிடுமென்றுரைத்தார்
அப்பொழுதுதாண்டவனா ரன்பாகவேதுரைப்பார்

வடக்கத்திபெண்களெல்லாம் மாற்றாந்தாயெந்தனுக்கு
தெற்கத்திபெண்களெல்லாஞ் சிறியதாயெந்தனுக்கு
மேற்கத்திபெண்களெல்லாம பெற்றதாயெந்தனுக்கு
கிழக்குதிசைபெண்களெல்லாம் அக்காளுந்தங்கையடி
மாலையவளொழிய மற்றபெண்களாகாதென்றான்
இப்படிச்சொன்னாராம் யெங்கள் துரைபஞ்சவர்னம்
ஆரியமாலையென்று அவளை நினைக்கிறையோ
அவளைவிட நல்லழகி அரிவையரைச்சொல்கிறேன் கேள்
ஆரென்றுகேட்டாராம் ஆண்டவனார்பஞ்சவர்னம்
மானிசம்பேட்டையடா வண்ணாரவல்லியவள்
வண்ணாரவல்லிமகள் மயிலனையாள்சாந்தழகி
அவளழகுக்கீடாமோ ஆரணங்குமாலையவள்
அவளழகுபெருவாளோ கட்டழகிமாலைகன்னி
கண்டுவந்தால்தெரியுமடா கட்டழகிநாயகியை
அடி-அழுக்கெடுக்கும்வண்ணாத்தி அவளைபெரிதாக
அதிகப்பிரியமதாய் ஆரணங்கேசொல்லுகிறாரும் [றார்
அவளைநான்பார்த்துவர அரிவையரேவிடைகொடேன்
அப்படியேபோமென்று அனுப்பிவிடைகொடுத்தான்
வெண்ணீறுகைகொடுத்தாள் மெல்லியந்தகாமாட்சி
வட்டமிட்டுக்கொண்டாராம் மாரிபிள்ளைபஞ்சவர்னம்

### காத்தவராயசுவாமி வண்ணாரவல்லி வனம் வருதல்

மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
வங்கணத்துச்சின்னானே மனக்களிரேவூழியனே
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானழைத்தார்
அப்போதுசின்னானும் ஆணழகனோடிவாறான் [டார்
ஆண்டவனார்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்
அடிமையையழைத்ததென்ன ஆணழகாசொல்லுமென்றார்
என்னை-கொள்ளைகொண்டவேல்முருகா குமரேசாசொல்லுமென்றார்
அழைத்ததோர்காரியத்தை ஆண்டவனேசொல்லுமெ
ஆரியமாலை யவளைநாம்காணுதற்கு [ன்றார்
தாயைவரங்கேட்டேன் தனஞ்செயனேசின்னானே
மானிசம்பேட்டையாம் வண்ணாரவல்லியாம்
வண்ணாரவல்லிபெற்ற மயிலனையாள்சாந்தழகி
அவள்-காலழகுக்கீடாமோ மாலைமுகமழகு
அவளைநான்காணுதற்கு ஆரணங்குவிடைகொடுத்தாள்



போய்பார்க்கவேண்டுமடா டறப்படடாசின்னானே
சின்னானுஞ்சுவாமியுமாய் சிறப்பாகவாறார்கள்
ஆண்டவனாரப்போது சின்னானுக்கெடுத்துரைப்பார்
அவளுக்கு-மக்கள்மனிதருண்டோ வண்ணாரவல்லியற்கு
காஞ்சிபுரத்திலே யேகாம்பரவண்ணானும்
கூடப்பிறந்தவனாங் கொற்றவன்வண்ணானும்
அவனுடையபிள்ளைகளை ஆணழகாசொல்லுகிறேன்
காத்தவண்ணான்சின்னவண்ணான் கட்டழகிருவருண்டு
காத்தவண்ணானுக்கென்று கன்னியரைவளர்க்கின்றார்
அண்ணன்மகனுக்கென் றரிவையரைவளர்க்கலுற்றான்
அவனுடைய அழகுக்கு ஆருமெதிரில்லை
என்றுசொல்லக்கேட்டிருப்பேனென்றானேசின்னானும்

### காத்தவராயரும் சின்னானும் வேஷங்கொண்டு வருதல்

அவ்வசனங்கேட்டார் ஆணழகர்பஞ்சவர்னம்
காத்தவண்ணான்போல கடுகெனவேவேஷங்கொண்டார்
சின்னவண்ணான்போல சின்னானும்வேஷங்கொண்டார்
ஒ கண்ணுயில்லிக்கண்ணு ஒருகண்ணுசில்லிக்கண்
ஒருகைதிரும்புபோல ஒருகைதூலம்போல [ணு
ஒருகாலுதூலம்போல ஒருகாலுதிரும்புபோல
சட்டித்தலையழகும் பொட்டிவயிறழகும்
மறுகாலைத்தானெடுக்க யிரண்டரைநாழிசெல்லும்
குக்கென்றிரும்புவார் கோழைவந்துமாறடைக்கும்
வப்புவாய்கொட்டிவர வாய்நீரொழுகிவர
பதங்கோரமையாகப் பஞ்சவர்னப வடிவெடுத்தார்
மூன்றுமுழமழுக்குகந்தை தலையினிற்சுற்றிக்கொண்டார்
நான்குமுழமழுக்குகந்தை அரையிற்சுற்றிக்கொண்டார்
தள்ளாடித்தள்ளாடி சுவாமியவர்தான்வாறார்
மானிசன்பேட்டையது வண்ணாரவல்லிவனம் [ர்
சலவைபண்ணும்நல்லிடத்தேசுவாமியவர்வந்துநின்றா
மல்லாக்காய்தான்விழுந்து மாரிபிள்ளைநித்திரையோரார்
தொட்டியத்துச்சின்னான் துரைமகனேதுசெய்தான்
சட்டியைத்தானெடுத்து தனஞ்செயனுந்தான்வாறான்
மாடுகுடிக்கின்ற தொட்டிகளைத்தானெடுத்து
தலைமேலேவைத்துக்கொண்டுதனஞ்செயனும்வாறானே
மானிசன்துறையிலே வண்ணார்களாயிரம்பேர்

சிப்பிசிப்பியென்றுசொல்லித் தப்புகிறார்வண்ணார்கள்
இப்படியாய்த்தானிருக்க யெங்கள் துரைபஞ்சவர்னம்
அந்நேரவேளையிலே ஆரணங்குவல்லியவள்
பட்டுவுடுத்திக்கொண்டு பட்டாடைமேல்சாத்தி
முத்துமெருவடியைத் தொட்டுநடந்துவாராள்
மானீசன் துரைதேடி வாராளேவல்லியவள் [ல்லியவள்
அப்போமண்டபத்தில்வந்து நின்றாள் மயிலணையாள்வ
காணாததுபோலக் கண்டுவிட்டாளாண்டவனை
ஆரடாவென்றுசொல்லி அகட்டியவள்கேட்கையிலே
அப்பொழுதாண்டவனா ரரிவையரைத்தான்பார்த்து
நான்-காஞ்சிபுரந்தனிலிருந்து கட்டழகிவந்தேனம்மா
என்-தகப்பன்பேர்ஏகாம்பரம் என்தாயார்காமாட்சி
காமாட்சிபெற்றெடுத்த காத்தவண்ணானன் தாண்டி
அண்ணன்பேர்கணபதியாம் மாமன்பேர்மணவாளன்
காற்றுமழையுங் கருப்புவந்துநேர்ந்துதங்கே
பிழைக்கவிடமில்லாமல் யாவரையுங்கூட்டிவந்தேன்
அரும்நெல்லிமரத்தண்டை யாவருபகுந்திறோம்
மாமனும்அண்ணனும் மாண்டார்களவ்விடத்தில்
சின்னானும்நானுமாய்த் தப்பிபிழைத்துவந்தோம்
மானீசம்பேட்டையாம் வண்ணாரவல்லியாய்
அவளையுந்தான்பார்க்க அன்பாகவந்துவிட்டோம்
என்றுசொல்லியாண்டவனா ரின்பமுடன் தானெழுந்தார்
அப்போதுவல்லியவ ளன்பாகவேதுசெய்தாள்
என்-அண்ணனிடபிள்ளை யருமைமருமகனே
இப்படிக்குவந்ததேன் என்னுடையமருமகனே
கட்டிக்கொண்டாவலுடன் கதறியழுகலுற்றாள்
உனக்கென்றுயென்மகனை உவர்ந்துவளர்க்கிறேனே
அத்தைமகன்வேண்டுமென்று அருமையாய்வளர்க்கிறே
என்றுமிகச்சொல்லி ஏந்திழையாள்தானழுதாள் [னே
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டார் [ள்
மருமகனைத்தானெடுத்து மார்போடணைந்துக்கொண்டா
குக்கென்றிரும்பினார் கொப்பெனவேயாண்டவனார்
குத்துசளியுமங்கே கோழையுந்துப்பிவிட்டார்
வல்லிமுகத்திலே நாயனார் துப்பினாராம்
ஐயோசிவனேயென்று ஆரணங்குநாயகியாள்[கொடியும்
அந்த - துரையருகிற்கொண்டுவந்தாள் தோகையிளங்



ஸ்நானங்கள்செய்துவைத்தாள் தையலிளங்கொடியும்
நல்லநல்லஆடைகளை நாயகியுந்தான்கொடுத்தாள்
அலங்கரித்தானபின் அரிவையருங்கொண்டுவாராள்
அந்தசமயத்திலே சின்னானும்வாரானங்கே
கஞ்சிதனைத்தானெடுத்து தலைமேலேவைத்துக்கொண்டு
வருகிறதைக்கண்டாராம் மாரிபிள்ளைபஞ்சவர்னம்
அத்தையரேவல்லியடி தயபியிதோவாராண்டி
எங்கேயடாமருமகனேயென் றெதிரோடிவாராளங்கே
அத்தையடியென்றுசொல்லி அவள்தலையில்போட்டுடைத்தான்
பிள்ளைகளாசையினால் பொற்கொடியும்பார்த்து
ஆற்றிலேகொண்டுவந்து ஸ்நானங்கள்செய்துவைத்து
நல்லநல்லஆடைகள் நலமாகத்தானுடுத்தி
தானுமேஸ்நானஞ்செய்து தையலிளங்கொடியாள்
நல்லதோர்பட்டாடையை நலமாகத்தானுடுத்தி
மருமகனைத்தானழைத்து வாராளேமாளிகைக்கு
ஒருகாலெடுத்துவைப்பார் ஒருகாலைத்தூக்கிவைப்பார்
மூங்கில்வேர்தட்டுமானால் முப்பத்தெட்டிடம்விழுவார்
குக்கென்றிரும்புவாராங் கோழைவந்துமாரடைக்க
தோள்மேலேகைபோட்டு துரைமகனும்வாரானே
வண்ணானைத்தானழைத்து மாளிகைக்கனுப்புராளே
முத்துமுத்தாலாலாத்தி முறைமுறையாய்வையுமென்று
பவழத்தாலாலாத்தி பாங்காகவையுமென்றாள் [ள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகரோடிவாரார்
சாந்தழகிமுன்னேவந்து தனஞ்செயனுமேதுரைப்பான்
உங்களத்தைமகன்வாரானே ஆரணங்கேமங்கையரே
ஆலாத்திவைக்கச்சொன்னா ளாச்சியந்தவல்லியம்மாள்
இவ்வசனங்கேட்டாளே ஏந்திழையாள்சாந்தழகி
சந்தோஷமானாள் சரீரங்கள்பூரித்தாள்
அப்படியேஆலங்களை யரிவையவள்கொண்டுவைத்தாள்
அவரழகைப்பார்ப்போமென்று ஆரணங்குசாந்தழகி
உப்பரிகைமேலேறி உத்தமியாள்சாந்தழகி
சின்னலெல்லாஞ்சாத்தியொரு சன்னல்வழிபார்த்திருந்
அப்போதுவல்லி யழைத்துமவள்வாராளிங்கே [தாள்
ஒருகால்துருப்புபோல் ஒருகைதுரும்புபோல்
சட்டித்தலைபோல பெட்டிவயிறுபோல்
ஒருகாலைவைப்பாராம் ஒருகாலையிழுப்பாராம்

தள்ளாடித்தள்ளாடி சாமிவருகையிலே
தலைவாசல்முன்னாகத் தையலருங்கொண்டுவந்தாள்
ஆலாத்திதட்டை அரிவையர்கள தானெடுத்தார்
அப்போதுசாந்தழகி அருங்கிளியாளோடிவந்தாள்
இவரழகைக்கண்டு காறியுமிழ்ந்தார்கள்
காறியுமிழ்ந்ததைக் கடைக்கண்ணாற்பார்த்துவிட்டார்
எனைக்காறியுமிழ்ந்ததினா லுனைக்காறியுமிழவைப்பேன்
என்றிவர்பஞ்சவர்னம் எண்ணினார்மனதிலேதான்
அரண்மனைக்குவந்துவிட்டார் ஆணழகர்பஞ்சவர்னம்
அப்போதுவல்லியவ ளருங்கிளியாளென்ன சொல்வாள்
நீவரவேண்டுமென்று மாதெய்வங்கோறினேனான்
பலபலதெய்வங்களைப் பிரார்த்தனைசெய்தேனான்
அப்போதுகொல்லிமலை ஆண்டவனாரேதுசெய்தார்
ஆயிரம்பூதங்களை யன்பாகத்தானழைக்க
சுற்றுள்ளதெய்வங்கள்போல் வந்ததுபூதமெல்லாம்
இவள்-கோறினதெய்வமெல்லாம் வந்தது அட்சணமே
நீமதிக்கவென்றுசொல்லித் தாண்டவங்களாடுதங்கே
மருமகள்வந்தால்பூசை மகிழ்ச்சியாய்த்தாரேனென்றாய்
தாடியென்றுசொல்லியல்லவோ தாண்டவங்களாடுகுது
கண்டுவிட்டாள்வல்லியவள் கால்கைநடுங்குது
என்னிட மருமகனே இப்படிக்குவந்ததடா
அப்பொழுதாண்டவனார் அரிவையரைக்கையமர்த்தி
ஆரடாவந்தவர்கள் அன்பாகச்சொல்லுமென்றான்
பூசைமிகத்தாரோம் புகழாகவுங்களுக்கு
நாளையதினத்துக்கு நலமாகவாருமென்றார் [னம்
இருப்பிடத்தேபோங்களென்றார் எங்கள்துரைபஞ்சவர்
போவென்றுசொல்லவே போச்சுதுதெய்வமெல்லாம்
வண்ணாரவல்லியவள் மனமகிழ்ந்தேதுசொல்வாள்
இப்படிக்குவந்ததுண்டோ மருமகனேதெய்வமிங்கே
தகுமானபூசையிட்டால் தங்களிடம்போய்ச்சேரும்
என்னதான்செலவு எனக்கறியச்சொல்லுமென்றாள்
ஆயிரந்தேங்கா யரிவையரேவேண்டுமடி
ஆயிரப்படியரிசி அன்பாகவேண்டுமடி
ஐந்துபீப்பாய்நெய் அரிவையரேவேண்டுமென்றான்
ஐம்பதுவீசையது அன்பானசர்க்கரைகள்
ஆயிரம்குடம்பால் அரிவையரேவேண்டுமடி



ஆயிரங்குடுவைத்தயிர் ஆரணங்கேவேண்டுமென்றார்
சாம்பிராணிகற்பூரந் தையலரேவேண்டுமென்றார்
தாம்பூலங்கள்வேண்டுமடி தையலரேஅத்தையரே
தளிகைநல்லசாதம் தையலரேசெய்யவேண்டும்
இப்படிக்குச்செய்தா லேந்திழையேஅத்தையரே
அந்தந்ததெய்வமெல்லாம் அப்புறம்போய்விடுமே
என்றிவர் சொல்லையிலே ஏந்திழையாள்சம்மதித்தாள்
அப்படியேசெய்வோமென்று ஆரணங்குவல்லியவள்
அந்தப்படியே அரிவையருஞ்செய்யலுற்றாள்

## காத்தவராயசுவாமி தெய்வங்களுக்குப் பூஜை சமர்ப்பித்தல்

ஆயிரம்வண்ணாரை ஆண்டவனார்தானழைத்து
எல்லாருமொருபொழுதாய் வையுமென்றாரத்தையரை
ஆத்தாள்மகளுமா யிருங்களொருபொழுது
இப்படியாகவே வைத்தாராம்ஆண்டவனார்
ஐந்துபீப்பாய்சாராயம் அடைவாகவைக்கவேண்டும்
ஆயிரங்கடாக்க ளரிவையரேவேண்டுமடி
இத்தனையும்வேண்டுமடி அரிவையரேஅத்தையரே
அப்படியேசெய்தாளே அருங்கிளியாள்வல்லியவள்
குறுக்கச்சுவரையல்லோ கொற்றவனார்தானிடித்து
வெட்டவெளியாக்கி விமலரந்தபஞ்சவர்னம்
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதமது
சர்க்கரைதளிகைமிகச் சுவாமிக்குத்தான்போட்டார்
அம்பாரக்கும்பலது ஆண்டவனார்தான்போட்டார்
பலபலதெய்வங்களுக்குப் படையலதுபோட்டாராம்
ஆட்டுக்கடாபூஜையது அன்பாகத்தான்போட்டார்
மதுவுநல்லமாங்கிஷமும் மாஜினமும்கெஞ்சாவும்
தேங்காயுடைத்துமவர் செவ்விளநீர்கண்திறந்து
வாழைப்பழங்கள் வகையாயுரித்துவைத்தார்
மாவிளக்குத்தானபோட்டார் மாரிபிள்ளைபஞ்சவர்னம்
கற்பூரதீபாராத்தி காட்டினாரப்போது
அத்தையரேவல்லியமே உன்மகளைக்கொண்டுவாடி
ஆத்தாளும்மகளுந் தலைவாசல்காத்திருங்கள்
ஆயிரம்வண்ணாரை அங்ஙனமேகுந்தவைத்தார்
அரண்மனைக்குள்ளாகத் தானிருந்தாராண்டவனார்

கள்ளிக்காட்டுபூதங்களைக் கண்காட்டித்தானழைத்து
கொள்ளிமலைபூதங்களை கூப்பிட்டுத்தானழைத்தார்
தண்டவாளங்களாடுகுது சுவாமியுடபூதங்கள்
அடைபட்டபூதத்துக்கு வேணபூஜைதான் கொடுத்தார்
வாரிமுழுங்குதையா மாரிபிள்ளைபூதமது
எடுத்துமுழுங்குதுயேமனிடபூதகணம்
மண்ணைப்பரிக்குதுபார் மாரிபிள்ளைபூதகணம்
ஆயிரம்பீப்பாசாராயம் அடங்கலுந்தான்குடித்து
தத்திமிகவென்றுசொல்லித் தாண்டவங்களாடுகுது
இப்படிக்குத்தானிருக்க ஏந்திழையாள்சாந்தழகி
கதவைத்திறந்துமவள் கட்டழகிபார்க்கலுற்றாள்
அதிலொருநொண்டிபூதம் அருங்கிளியைத்தானெடுத்து
பள்ளத்தில்தான்போட்டு பாங்காய்ப்புறட்டுகுது
அம்மாடிவல்லியரே அந்நீதமாய்ச்சாகிறேனே
மாமன்விளையாடுகிறான் மயிலணையேகூத்தாடி
மாமனல்லயிழவுமல்ல பூதமென்னைப்பிடுங்குதடி
அப்பொழுதாண்டவனா ரன்பாகப்பார்த்துவிட்டார்
மொண்டிநல்லபூதத்தை வாவென்றுதானழைத்து
சிமிளிலேபோட்டடைத்தார் சிராகப்பூதத்தை
நடுவிலையென்னுதென்றார் பக்கத்திலே கனுதென்றார்
வாங்கடியென்றுசொல்லி கதவைத்திறந்துவிட்டார்
வந்துமெள்ளபார்த்தாளாம் வண்ணாரவல்லியரும்
ஒன்றையுங்காணோமங்கே உத்தமனேமருமகனே
வந்ததோர்தெய்வமெல்லாம் வாரிவிழுங்குவது
காபருவுள்ளதெய்வங் கட்டழகியத்தையரே
இலைகூடஇல்லாம லெடுத்துமுழுங்கிற்று
ஏமாந்துநின்றாளே ஏந்திழையாளல்லியரும்
ஆயிரம்வண்ணார்கள் அடங்கலுமேயமர்ந்தார்
அப்பொழுதாண்டவனா ரையரவரைதள்ளிவிட்டு
ஆயிரம்வண்ணாரை அரிவையரேதள்ளிவிடு
ஆயிரம்பேர்செய்யும்வேலை அரிவையரேசெய்கிறேன்
ஆயிரம்வண்ணாரை யருங்கிளியாள் தள்ளிவிட்டாள்

காத்தவராயர் வண்ணாரத்தொழில் செய்தல்

அப்போதுகொல்லிமலை யாண்டவனாரேதுசெய்தார்
எமனாரின்பூதத்தை இடதுகையில்வாருமென்றார்



ஆயிரம்பொதிகளை ஆனைமேல்போட்டாராம்
மானீசன் துறைதேடி வாராரும்பஞ்சவர்னம்
ஆயிரம்பொதிகளை அன்பாகத்தானிறக்கி
ஆயிரம்பூதங்களை அன்பாகத்தப்புமென்றார்
அப்படியேபூதங்க ளன்பாகத்தப்புதங்கே
தாறுமாறாயழிக்குதடா சுவாமியுடபூதமது
கொட்டிகட்டித்தான்மடித்துக் கொற்றவனார்பூதமது
அம்பாரம்போலாக ஆடையைக்குவித்ததங்கே
இப்படியாய்ச்செய்தது சுவாமியிடபூதங்கள்
ஆயிரம்பூதத்தை சுவாமியவர்தானழைத்து
சிமிளிலேபோட்டடைத்தார் சுவாமிபிள்ளைபஞ்சவர்னம்
ஒண்டிபொருவனுமா யுத்தமனுந்தானிருந்தார்

வண்ணாரவல்லி காத்தவராயருக்கு கஞ்சிகொண்டு வருதல்

அப்போதுவல்லியவ ளருங்கிளியாளேதுசெய்வாள்
பகல்கஞ்சிகாய்ச்சிக்கொண்டுபைங்கிளியாள்வாராளங்கே
மடவைக்கருவாடு மயிலணையாள்கட்டிக்கொண்டு
கஞ்சிபல்லாயேலேவைத்து கட்டழகிவாறாளே
கண்டுவிட்டாராண்டவனார் கஞ்சிகொண்டுவருகிறதை
எமனாரின்பூதத்தை இன்பமுடன்தானழைத்து
காலாலேயிரடிவிடு கஞ்சிபல்லாதான்விழவே
என்றுசொல்லியாண்டவனார் எடுத்துரைத்தார்பூதத்துக்
அப்படியேயிரடினது ஆண்டவனார்பூதமது [கு
கஞ்சிபல்லாவுடைந்தது கண்டுவிட்டாளல்லியரும்
என்னசெய்வேனென்றுசொல்லி ஏந்திழையாள்கிட்டே
கொண்டுவந்தகஞ்சியெல்லாம்இரடிவிழுந்தது[வந்தாள்
போனாற்பெரிதல்ல பொற்கொடியேஅத்தையரே
தாம்பூலந்தாருமென்றார் தையலிளங்கொடியை
பைபவிழ்த்துப்பாக்கு பண்பாய்மிகக்கொடுத்தார்
வெற்றிலையுஞ்சுண்ணாம்பும் வல்லியெடுக்கையிலே
தங்கச்சிமிழதனைத் தையலருந்தானெடுத்தாள்
ஆரியபாலைதுகில் அரிவையரும்வைத்திருந்தாள்
மோசம்வந்துநேர்ந்ததென்று மெல்லியவள்தானொளித
என்னடிஅத்தையரே எனக்குஒளித்ததென்ன [தாள்
ஒளித்தவிவரமதை உத்தமியேசொல்லுமென்றார்

ஒன்றுமில்லைமருமகனே வுத்தமனே யென்றுரைத்தாள்
சொல்லாமற்போனாலே தோகையரேமீளுவண்டி
என்றிவர்சொல்லையிலே கண்டுவிட்டாளல்லியரும்
மாலைதுகிலாடை மருமகனே யென்றுரைத்தாள்
கண்ணாலேகாணவேண்டுங் கட்டழகிதாருமென்றார்
கைகால்குறையுமடா கட்டழகாகண்டாயானால்
குறைந்தால்குறையுதடி கொடியிடையேதாருமென்றார்
இந்தாடாவென்றுசொல்லி எடுத்தவன்கைகொடுத்தாள்
மாலைத்துகிலாடை மாரிபிள்ளைகண்டுவிட்டார்
ஏழுதுகிலாடை யின்பமுடன்கண்டாராம்
இழையாயிரம்பொன்பெறுமாம்ஏந்திழையாள் பூவாடை
சலவைசெய்துதாரேனடி தையலரே அத்தைநான்
கொண்டுவருகிறேன் கொடியிடையே அத்தையரே
வல்லியவள்போனபின்பு மன்னவனாரேதுசெய்தார்
சலவைபண்ணுமண்டபத்தில் சுவாமியவர்வந்துநின்று
ஏழுதுகிலாடை யாண்டவனார்தானெடுத்து [ர்
இளநீரில்தான்துவைத்து எங்கள் துரைபஞ்சவர்ணம்
காற்றுநல்லவாடையிலே கட்டழகருரைக்கலுற்றார்
தட்டிக்கொட்டித்தான்மடித்தார் தையலிட்ட பூவாடை
ஐந்துதுகிலாடை யாண்டவனார்தான்மடித்து

## ஆரியமாலை துகிலாடையில் சுவாமி உருவெழுதல்

இரண்டுதுகிலாடை யிதமாகத்தானெடுத்து
மாலையைப்போலுருவு மாரிபிள்ளையெழுதுகிறார்
உச்சிதொடங்கியல்லோ வுள்ளங்கால்தான்வரைக்கும்
தொடையெழுதிவரும்போது மயங்கிவிழுவாராம்
கலைக்கக்கலைக்க கலைக்கமுடியவில்லை
கொட்டிதட்டித்தான்மடித்தார் கொற்றவனார்பஞ்சவர்ண
மறுநல்லவஸ்திரத்தை மன்னவரேதுசெய்தார் [ம்
தன்னைப்போல்வஸ்திரத்தில் சுவாமியவரெழுதலுற்றார்
அதையுமேதான்மடித்தார் ஆண்டவனார்பஞ்சவர்ணம்
ஏழுபுடவையுஞ் சிமிளிலேபோட்டடைத்தார்
எழுந்துமெள்ளவாறாம் யெங்கள் துரைபஞ்சவர்ணம்
மானிசம்பேட்டைக்கு வந்துவிட்டாராணழகர்
வண்ணாரவல்லியரை மயிலனையைத்தானழைத்து
தங்கச்சிமிழதனைத் தான்கொடுத்தாராண்டவனார்



மாலைதனைத்தேடி வாராளேவல்லியவள்
ஏழுதுகிலாடை வல்லியவள்தான்கொடுத்தாள்

## ஆரியமாலை யுருவத்தைப்பார்த்து வண்ணாத்தியைத் தண்டித்தல்

மூன்றாம்படியிலே வல்லியவள்தானிருந்தாள்
சேலையைத்தானெடுத்து தேன்மொழியாள்பார்க்கலுற்றா
அருகில்கோட்டைகொத்தளமும் கொம்பனையாள்பார்க்கலுற்றாள் [ர்
ஆண்ரூபங்கண்டுவிட்டாள் ஆரணங்குமாலையவள்
மெத்தப்பயந்தாளே மெல்லியிளங்கொடியாள்
விடவிடென்றுகால்நடுங்கி மாலையவள்தான்விழுந்தாள்
கன்னியென்றதாதியரை நலமுடனே தானழைத்து
ஐந்துகொத்துபிரம்பை யரிவையரேகொண்டுவாடி
வண்ணாரவல்லியரை வரவழைத்தாள்மாலையவள்
கொத்துப்பிரம்பாலே கொல்லுகிறாள்மாலைகன்னி
இப்படிக்குத்தானடிப்பா ளேந்திழையாள்மெல்லிநல்லா
சுரணைத்தெரியாமல் தோகையாள்விழுந்துவிட்டாள் [ள்
அப்போ-அழுதுபுலம்புகிறா ளாரணங்குவல்லியவள்
எங்கிருந்துவந்தாயடா என்குடிக்குத்தீம்பாக
அப்போதுசொன்னேனே அழும்புவந்துநேருமென்று
என்றிவள்தானழுது ஏந்திழையாள் நிற்கையிலே

## ஆரியமாலை தன் ரூபத்தைக்கண்டு வண்ணாத்திக்கு வெகுமதி செய்தல்

அப்போதுமாலைகன்னி யரிவையவளேதுசெய்தாள்
மற்றதோர் துகிலெடுத்து மயிலனையாள்பார்க்கையிலே
தன்னைப்போலுருவதனை தையலாள்பார்த்துவிட்டாள்
வலதுதொடையிலே மச்சமிருக்கிறதை
கண்டுவிட்டாள்மாலை கன்னியிளங்கொடியாள்
தன்னுடையைத்தானும் தையலரும்பார்க்கலுற்றாள்
தனக்குமச்சமிருக்கிறதை தையலருங்கண்டுவிட்டாள்
என்துடையமச்சமதை எப்படிகண்டானடி
கண்டுஎழுதினவன் கட்டழகியார்தாமோ
வண்ணாரவல்லிதனை மயிலனையாள்தான்பார்த்து
சொல்லடிவல்லியென்று தோகையவள்கேட்கலுற்றார்
கைநடுங்கிக்கால்நடுங்கி வல்லியவளேதுசொல்வாள்

அண்ணன்மகன்வந்தா ளறிவான்காத்தவண்ணான்
சிப்பிநல்லசாஸ்திரத்தைக் கற்றவண்டியுன்மருகன்
என்னைக்கண்டெழுதினானே யிளங்கொடிவல்லியரே
எழுதினவர்தனக்குயிதோ தாரேன்பவுத்திரங்கள் [ள்
தன்னுடையபவுத்திரத்தை தையலவள்தான்கொடுத்தா
சிங்கமுகம்யாளிமுகத் தோடாவைத்தான்கொடுத்தாள்
கழுத்திலேதரித்திருந்த கண்டசரந்தான்கொடுத்தாள்
முத்துகெண்டிமாலை மெல்லியவள்தான்கழற்றி
மருமகனுக்கென்றுசொல்லி மாலையவள்தான்கொடுத்தா
ஆயிரம்வராகனை யரிவையவள்கைகொடுத்தாள் [ள்
இந்தட்சணத்திலே ஏந்திழையேவல்லியரே
கலியாணஞ்செய்துவையுங் கன்னியிளமயிலே
என்றுசொல்லித்தான்கொடுத்தா ளேந்திழையாள்மாலை
சாந்தழகிக்கேற்ற தனஞ்செயண்டிமோசமில்லை [கன்னி
சந்தோஷமிகவானாள் தையலந்தவல்லியரும்
காத்தவண்ணான்முன்னேவந்தாள் கட்டழகிவல்லியரும்
அப்போ-மாலையவள்கொடுத்ததெல்லாம் மருமகன்கை
இந்தட்சணத்திலே மருமகனேயுந்தனுக்கு[கொடுத்தாள்
கலியாணஞ்செய்யச்சொன்னாள் கட்டழகிமாலையரும்
அவ்வசனந்தான்கேட்டா ராணழகர்பஞ்சவர்னம்
கைகால்குறைந்ததே கலியாணமென்னத்திற்கு
மாலைகொடுத்த பவுத்திரத்தைதானெடுத்து
உச்சிதொடங்கியவ ருள்ளங்கைகள்வரைக்கும்
இறங்கினால்வல்லியவ ளேந்திழையாளாண்டவனை
வாலைப்பருவம் வயதுபதினாறாய்
அழகுதுலங்குவதும் ஆனந்தங்கொஞ்சுவதும்
அழகிருந்தமேனியிலே புனுகிருந்துவீசுகுது
சாந்துமணக்குது சுவாமியுடமேனியிலே
அழகுசொரிகிறது ஆனந்தங்கொஞ்சுகுது
அப்போதுவல்லியவ ளாரணங்குவோடிவந்து
அடி-என்மகளேசாந்தழகி யிளங்கொடியேவாவென்று
அம்மான்மகனை அரிவையரேபாருமென்று
சன்னலிலேதானிருந்து தையலவள்கண்டுவிட்டாள்
இந்தட்சணத்திலே மாலையிட்டுவையுமென்றாள்
கைநிறைந்தபொன்னிலும் கண்ணிறைந்தபுருஷனிவன்
இப்பெரியபுருஷனை எங்கிலும்நான்கண்டதில்லை



அப்போதுவல்லியவ ளாரணங்குமென்னசெய்தாள்
நாள்கேட்கவேணுமப்பா நலமாகமருமகனே
அப்படியேகேளுமென்றா ராணழகர்பஞ்சவர்னம்
புரோகிதனைத்தேடிக்கொண்டு வாறாளேவல்லியவள்
அந்தச்சமயத்தில் வாராரேபிராமணர்காண்
ஐயரைக்கண்டவுட னடிதொழுதுதெண்டனிட்டாள்
எங்கேயடிவல்லியரே ஏந்திழையேபோறாயென்றார்
கலியாணஞ்செய்யவேண்டுங் கன்னியிளங்கொடிக்கு
நாளிடவந்தேனென்றாள் நாயகியாளப்போது
அப்போதுவேதியனா ரன்பாகத்தானுரைத்து
பந்தற்கால்நாட்டிவிடு பாவையிளங்கொடியே
நாளையன்றைக்கு நலமாகமுகூர்த்தமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்குமோடிவந்தாள்
மூன்றுங்கால்நட்டாளே மெல்லியிளங்கொடியும்
அப்போதுகாத்தவண்ணா னன்பாகவேதுரைப்பான்
ஊருக்குதாம்பூல முடனேதான்வையுமென்றார்
ஊரிலுள்ள அழுக்கெல்லாம் உத்தமியேகொண்டுவாரும்
அப்படியேவாராளா மாரணங்குவல்லியவள்
ஐம்பத்தெட்டுகிராமத்துக்குந் தாம்பூலம்வைத்தார்கள்
அங்கிருக்குமழுக்கெல்லா மன்பாகக்கட்டுமென்றார்
அழுக்கெல்லாந்தானெடுத்து ஆரணங்குவாறாளே
மானீசம்பேட்டைக்கு வந்துவிட்டாள்வல்லியவள்
அழுக்குகள்தான்போட அன்பாககொண்டுவந்தாள்
யானைமேல்பொதிபோட்டார் ஆண்டவனார்பஞ்சவர்னம்
மானீசன்துறையதுக்கு வாறாராம்பஞ்சவர்னம்

## காத்தவராயர் ஆடையைக் கொளுத்துதல்

ஆயிரம்பூதங்களை யன்பாகத்தானழைத்து [கொடுத்தார்
கொண்டுவந்தபொதிகளெல்லாம் போர்குவிக்கவிடை
நல்லநல்லவஸ்திரத்தை நலமாயெடுக்கச்சொன்னார்
அப்படியேயெடுத்தது ஆண்டவனார்பூதமது
ஆரியவள்பூவாடை யன்பாயெடுத்துக்கொண்டு
அதைவேறேகட்டுமென்றா ராண்டவனார்பஞ்சவர்னம்
மற்றெல்லாம்போராக வகையாகக்குவியுமென்றார்
நஞ்சோடுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
அந்தநல்லவேளையிலே அக்கினியைமூட்டுமென்றார்

அப்படியேமூட்டினது ஆண்டவனார்பூதமது
பற்றியெரிகிறது பாங்கான ஆடையெல்லாம்
சாம்பலாய்ப்போமளவும் சாமியவரங்கிருந்தார்

## காத்தவராயசுவாமி மற்ற துகிலாடையை விற்கக் கட்டளையிடுதல்

மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்திருந்தார்
ஆயிரம்பூதத்தை யன்புடனே தானழைத்து [ணார்
யாழ்ப்பாணலப்பையைப்போல் அன்புடனேயுண்டுபண்
காயலார்போலாக கடுகெனவேயுண்டுபண்ணார்
கொண்டுவந்துசேலையெல்லாங் கொற்றவனார்முன்னேவைத்தார்
எட்டுநாள்சந்தையிலே எடுத்துப்போய்வில்லுமென்றார்
அப்படியேவிற்கிறது இவருடையபூதங்கள்தான்
ஆத்தாளுமகளுமாய் அன்பாகயேதுசெய்வார்
ஒருமுழக்கந்தையது உத்தமியாள்கட்டிக்கொண்டு
அந்தப்புறத்திலே யரிவையார்தானிருந்து
கூறப்பட்டதலையாரி கொற்றவனுமப்போது
காத்ததோட்டிப்பறையன் கடுகெனவேவாரானே
ஊரிலுள்ள துணிகளெல்லா மொருமிக்கவேகுதங்கே
கண்டுவந்துசொன்னானங் கட்டழகன் தலையாரி
ஊரிலுள்ளபன்னரெல்லா மூத்தமார்களோடிவந்து
வண்ணாரவல்லியை மயிலணையைத்தானழைத்து
எங்கேசலவையென்று எல்லோருங்கேட்கலுற்றார்
காத்தவண்ணான்போனான் காண்காட்டுக்குளத்துறைக்கு
வாடியென்றுசொல்லி மங்கையரையிழுத்துவந்தார்
அம்பாரம்வேகிறதைக் கண்டாளரிவையரும்
அப்பிகொண்டாளடிவயிற்றி லறைந்துகொண்டாள்மார்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிறாள் [கலங்க
அப்போதுசேவகர்க ளரிவையரைக்கட்டிக்கொண்டு
இழுத்துக்கொண்டுவாறார்க ளேந்திழையாள்வல்லியரை
கடைநல்லபஜாருக்கு கன்னிதனைக்கொண்டுவந்தார்
யாழ்ப்பாணத்துலப்பையைப்போலிருந்தார்களப்போது
புடவையதனைவாங்கிக்கொண்டு புண்ணியர்கள்பார்க்கலு
வண்ணாரவல்லி மயிலணையைத்தான்பார்த்து [ற்றார்
இந்தநல்லசேலை யென்னுதென்றுதானெடுத்தார்



காயலார்தானுமாய்க் கடுகெனவேவாறார்கள்
இராஜனிடம்போவோமென்று நலமாய்வருகையிலே

## காத்தவராயர் ராஜவடிவுகொண்டு தீர்ப்புசெய்தல்

அப்பொழுதாண்டவனா ரன்பாகயேதுசெய்தார் [டார்
ஆரியப்பூராஜனைப்போல் ஆண்டவனார்வேஷங்கொண்
முத்திரைபில்லைசேவகரைமெத்தெனவேயுண்டுபண்ணார்
மண்டபமுண்டுபண்ணி மாரிபிள்ளை தானிருந்தார்
அப்போதுசேவகர்கள் வல்லியைக்கொண்டுவந்தார்
இராஜன்முன்புகொண்டுவாறார் துன்மார்க்கசேவகர்கள்
என்னடாபிராதென்று எங்கள்துரைகேட்கலுற்றார்
யாழ்பாணத்துலப்பைதானென்னவென்றுசொல்லுவார்
நாங்கள்-சந்தைகடைசேலைவிற்க வந்தோமேவண்ணாத்தி
என்னுதென்றுசேலை யிழுத்துவந்தாராஜராண்டை
என்சேலைச்சுவாமியென்றா ளேந்திழையாள்வல்லியவள்
சேலைக்கடையாளம் உண்டோடிவல்லியரே
கொண்டுவாபோவென்றார் கொல்லிமலையாண்டவனார்
அப்படியேகொண்டுவந்து அரிவையருந்தான்கொடுத்தாள்
தான்போட்டகுறியைத்தான் தையலருங்கேட்கலுற்றார்
அவள்போட்டகுறியை ஆண்டவனார்மறைத்துவிட்டார்
நீ-எங்கேயடிபோட்டகுறி யென்றாராம்ஆண்டவனார்
அபாண்டமாய்ச்சொல்லவந்தா ளாரணங்குவல்லியவள்
கட்டிவைத்துதையுமென்றார் கட்டழகராண்டவனார்
கட்டிவைத்துமோதுகுது கட்டழகர்பூதமது
ஐயோசிவனேயென்று அழுகிறாள்வல்லியவள்
லப்பைகளைத்தானழைத்து நலமாகபோங்களென்றார்
வண்ணாரவல்லியவள் மயிலணையாள்சாந்தழகி
அவள்காலில்பிரிகட்டிக் கடுகியேயிழுத்துவாரும்

## வண்ணார சாந்தழகியை பூதமெடுத்து வருதல்

ஆண்டவனார்பூதமது அப்படியேயோடிவந்து
காலில்பிரியைச்சுற்றி யிழுத்துக்கொண்டுவருகுதங்கே
கல்லிலுமுள்ளிலுங் கடுகவிழுத்துக்கொண்டு
இப்படியாய்க்கொண்டுவரு மிவருடையபூதமது
அழகானமேனியெல்லாம் அவதியட்டுவாராளிவள்
முள்ளுக்கொருசடையும் கல்லுக்கொருசதையாய்

தேய்பட்டுபோகுதே தேன்மொழியாள்தேகமது
ஐந்துபஞ்சதன் னுயிரும் அவலோகம்போகுதங்கே [ள்
செத்தகட்டைகொண்டுவந்து சுவாமிமுன்னேவிட்டார்க

### காத்தவராயசுவாமி வண்ணாத்திகளைத் தகனஞ்செய்து தன் தாயாரை வந்து காணல்

மாலையிவள்கண்டுவிட்டாள் பயிலணையாள்வல்லியரும்
வடிவான்தன்மகள்தான் மாண்டுமடிந்தாளென்று
தன்னுயிரைவிட்டுவிட்டாள் தையலந்தவல்லியரும்
தாயுமகளையுஞ் சுவாமியவரென்னசெய்தார்
காஷ்டத்திலடையுமென்றார் கட்டழகர்பஞ்சவர்ணம்
கொள்ளிவைத்துதகனம்செய்தார் கொடியிடைமாரிருவ
வீடுகளரண்மனையை யிடித்துதிரவுமென்றார் [ர்களை
அவள்-உள்ளபொருளையெல்லாமுத்தமனார்தானெடுத்து
மாலைக்குச்சீதனமாய் மாரிபிள்ளைதான் கொடுத்தார்
கொலைதனைகன்னிலே கொண்டுபோய்வையுமென்றார்
அப்படியேவைத்தது ஆண்டவனார்பூதமது
தாயார்தவநிலையைச் சுவாமியவர்தேடிவாரார்
சர்வதீர்த்தபொய்கையிலேசுவாமியவர்ஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்தார்
தோட்டந்திறந்தாரே தொன்னைதைத்துப்பூவெடுத்தார்
ஓடுகிறகங்கையிலே ஒருசொம்புஜலமெடுத்தார்
பாதந்துலக்கியவர் பட்டாலடி துடைத்தார்
வாரிவந்தபுட்பமெல்லாம் மலைபோலதான்குவித்தார்
முக்கால்வலம்வந்து மடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டேனுன்பாதமென்று கைதூக்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவனைக் கண்டுவிட்டாள்காமாட்சி
பிள்ளைப்பெறுவாயடா என்மகனேபஞ்சவர்ணம்
பிள்ளைபெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
கற்புதைத்ததூண்போலக் கலங்காதரசாள்வாய்
என்திருஷ்டிபொல்லாது எதிர்திருஷ்டிபொல்லாது
கண்திருஷ்டிபொல்லாது கடுகவெழுந்திரென்று
பக்கத்தில்கைகொடுத்தால் பக்கெலும்புநோகுமென்று
நெற்றியிற்கைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டாள்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்நின்றாராம்
எங்கேயடாபோய்வந்தாய் என்மகனேகொல்லிமலை



போய்வந்தவிவரத்தை புண்ணியனேசொல்லுமென்றார்
வண்ணாரவல்லியை வரவழைத்தேனம்மா
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடடிகாமாட்சி
கண்டுவந்தமாலையைநான் கொண்டுவரவேணுமென்றார்
பார்த்துவந்தமாலையைநான் பேர்த்துவரவேணுமென்றார்
கொழுதலைபங்கிலேநான் குடியமர்த்திவைக்கவேண்டும்
எனக்கு-போகவிடைகொடடி பொற்கொடியேகாமாட்சி
ஆர்குடியை நீகெடுக்க ஆண்டிவேஷங்கொண்டாயோ
எவர்குடியைநீகெடுக்க யிக்கோலமாகிவந்தாய்
தாயிலும்பத்தினி தாரமென்றெண்ணாதே
தீண்டாநெருப்போடா தேன்மொழியாள்மாலையடா
அண்டாநெருப்போடா ஆரணங்கு மாலையவள்
மாலையென்ற ஆசையை மறந்துவிடுமென்றுரைத்தாள்
என்ன தான்சொன்னாலும் ஏற்காதுஎந்தனுக்கு
செத்தகட்டையுன்னிடத்தில் சீவனெல்லாமாலையிடம்
ஆசையுருகுதம்மா அரிவையந்த மாலையிடம்
மாலையைச்சிறையெடுத்து வாரேனம்மாகாமாட்சி
நீ-வாக்கிட்டால்தப்பாது வரமளித்தால்பொய்யாது
மாலையிடப்போறேனென்ன மன்னவனார்தானெழுந்தார்
சாதகமுந்தப்பாது தலையெழுத்தும்பொய்யாது
தகப்பனார்தந்தசாபம் மெய்யாய்பலிக்குமடா
கழுவிலிருக்கணுமா காய்ந்துலர்ந்துபோகணுமா
தூண்டிலிருக்கணுமா துடிதுடித்துப்போகணுமா
காமாட்சிபிள்ளையென்று கண்டபேரேசணுமா
வேண்டாமடாயென்மகனே விண்மலரைத்தீண்டாதே
நாலானமேனியவள் மேலானசாதியடா
பாலானமேனியவள் மேலானசாதியவள்
பிர்மகுலப்பெண்ணடா கர்மவிதிசுத்ததடா
என்னதான்சொன்னாலு மேற்கிலையோஎன்மகனே
ஆனாலுமொருசேதி ஆணழகர்சொல்லுகிறேன்
என்றுமேகாமாட்சி யின்பாயெடுத்துரைத்தாள்

மூன்றாவது வண்ணாரவல்லி வனம்

முற்றுப்பெற்றது.

---

நான்காவது

# சம்பங்கிதாசி வனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

தும்பிமுகமுடைய துய்யகணபதியை
நம்பியுனைத் துதித்தேன் நாயகனைக்கைவிடாமல்
கானகமிகக்காத்த கர்த்தாவின் றன்கதையை
ஊனங்கள்வாராமல் உண்மையையான்பாட
முந்தியேயென்னாவில் முக்கணனார்புத்திரனே
வந்துகதைநடத்து மதகரிமாமுகனே.

### கதையின் வரலாறு

சம்பங்கிதாசியடா தையலிளங்கொடியாள்
சம்பங்கிதாசிவனந் தனஞ்சயனையவ்விடம்போய்
அவளைச்ஜெயிக்கவென்றா லாராலுங்கூடாது
அனேகம்பேர்ராஜர்முன்பு ஆடினாள்பகடசாலை
பகடைகள்தானாடிப் பாவைதெரிந்தாள்காண்
நாக்கிலேதான்குத்தி யிரப்பிலேசொருகிவைத்தாள்
கால்விலங்குகைவிலங்கு கனவிலங்குதான்பூட்டி
அடிமைப்படுத்திக்கொண்டா ளனேகம்பேர்ராஜர்களை
துந்துபியெனும்பாலே அநேகரைத்தான்கெலித்தாள்
அவளைக்கெலிக்க ஒருவராலாகாது
அம்மாதைகெலித்துவந்தா லாரியமாலைதன்னை
மகிழ்ச்சியாய்சிறையெடுக்க வரந்தாரேனென்றுசொல்ல
அப்போதுபஞ்சவர்ன மன்பாயெடுத்துரைப்பார்
வெண்ணீறுந்தான்கொடுத்தால் விருப்பமுடன்போறேனென்றார்
அப்படியேவெண்ணீறு அல்லியிட்டாள்காமாட்சி
வட்டமிட்டுக்கொண்டாராம் மாரிபிள்ளைபஞ்சவர்னம்

### காத்தவராயசுவாமியும் சின்னானும் சம்பங்கிதாசி வனம் வருதல்

மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தேவாறாராம்
ஆரைநினைத்தாராம்! அளவற்றசிந்தையிலே
கொட்டியத்துச்சின்னான்! துரைமகனேவாருமென்றார்
அப்படியேஓடிவந்தார் ஆணழகன்சின்னானும்



சின்னானுஞ்சுவாமியும் யெங்கிவர்வாராரென்றால்
சம்பங்கிதாசிவனந் தான்தேடிவாறார்கள்
என்னவேஷங்கொள்ளுகிறார் எங்கள்துரைபஞ்சவர்ன
இராஜாவைப்போல நலமாகவேஷங்கொண்டு [ம்
மார்க்கப்புரவியின்மேல் சுவாமியவரேறிக்கொண்டு
சப்பங்கிகோட்டைதேடிச் சுவாமிதுரைவாறாராம்
வந்துகொத்துஆராட்சி அடிக்கிறதைதான்கேட்டு
அடித்தாராம்பஞ்சவர்னம் ஆராட்சிமணியதனை
கலகலவென்றுசப்தமிட கலகமணிகளோசையிட
மாமரத்துச்சோலையிலே மாரிபிள்ளைவந்துநின்று
மண்டபங்களுண்டுபண்ணி மாரிபிள்ளைதானிருந்தார்
அப்போதுசமபங்கி ஆரணங்குதான்பார்த்து
தாதிகளைதானழைத்தார் தையலருமேதுசொல்வாள்
கல்லால்மணியடித்தார் கட்டழகியாரடித்தார்
கண்டறிந்துவாடியென்ன அறிவையிடதாதியர்கள்
மாமரச்சோலையிலே மண்டபத்தைத்தேடிவந்தார்
கொல்லிமலைசுவாமியைக் கொயபனைமார்கண்டுவிட்டார்
ஆரையாயடித்தவர்கள் ஆராட்சிமணியதனை
நான்தானடித்தேனென்றா தாதர்பிள்ளைபஞ்சவர்னம்
அவ்வசனங்கேட்டு அரிவையர்களோடிவந்து
சயபங்கிதாசிமுன்னே தையலர்கள்தெண்டனிட்டார்
மாமரச்சோலையிலே வந்தாராம்ராஜனவர்
அவரழகுபோலே அப்புவியில்கண்டதில்லை
இவரழகுபோலே யிப்புவியில்கண்டதில்லை
என்றுசொல்லாதாதியர்க ளெடுத்துரைத்தாளப்போது
அவரையழைத்துவாடி ஆரணங்குதாதியரே
அப்படியேவோடிவந்தா ளாரணங்குதாதியவள்
ஆண்டவரைத்தான்பார்த்து அழைக்கலுற்றார்தாதியர்க [ள்
அப்படியேவாரேனென்றா ராணழகர்பஞ்சவர்னம்
முத்துமெருவடியைத் தொட்டுமிகநடந்தார்
சம்பங்கிகோட்டைதேடிச் சுவாமிதுரைவாறாரே
மூன்றாம்படித்தளத்தில் மெத்தெனவேவந்தாரும்
பூனைத்தலைமேலே புதுமைவிளக்கெரியும்
பெருச்சாளிமத்தளத்தைப் பிரியமுடன்கொட்டிநிற்கும்
எலிவந்துதாளமதை யின்பமுடன்போடுதங்கே
கொக்குகள்தான்வந்து கூட்டமாயாடுதங்கே

இவ்வண்ணமாக யிருக்கின்றவதிசயத்தை
கண்ணாலேகண்டுவிட்டார் கட்டழகரப்போது
நான்குவதிசயத்தை நலமாகக்கண்டுவிட்டார்
பூனையைவெட்டிவிட்டார் புகழானபஞ்சவர்ணம் [டார்
பெருச்சாளியெலியதனையும் புண்ணியனார்கொன்றுவிட்
அரண்மனைக்குள்ளாக ஆணழகர்போய்நுழைந்து
தங்கத்தடுக்கினமேலே சுவாமியவருட்கார்ந்தார்
வெள்ளித்தடுக்கின்மேலே மெல்லியவளுட்கார்ந்து
துந்துபியெலுப்புதன்னை துடையின்மேல்வைக்கச்சொ
அப்படியேவைத்தார்களாரணங்குதாதியர்கள் [ன்னாள்
அதின்பேரிலுட்கார்ந்தாளரிவையந்தசம்பங்கி
சோழிசதுரங்கஞ் சொக்கட்டான்தாள்விரித்து
அப்போதுசின்னானும் ஆணழகன்கண்டுவிட்டான்
சுண்டெலிபோலாகச் சீக்கிரமாய்வடிவெடுத்து
சுரங்கத்துக்குள்ளாக வாரானேசின்னானும்
துந்துபிதன்னெலும்பை தூக்கிக்கொண்டுபோய்விட்டா
அப்போதுசொக்கட்டானாடினாராண்டவனார் [ன்
எட்டுத்தொகையிரிக்கால் பன்னிரண்டுமாய்விழவே
ஆட்டங்கெலித்தாராமாண்டவனார்பஞ்சவர்ணம்
துடைதட்டிதானகைத்தார் சுவாமிதுரைபஞ்சவர்ணம்
அப்போதுயென்னசெய்தாராண்டவனார்பஞ்சவர்ணம்
அவளை-எட்டிசிகைபிடித்தாரெங்கள்துரைபஞ்சவர்ணம்
என்னசெய்தாளப்பொழுது யிளங்கொடியாள்சம்பங்கி
பல்லைத்திறந்தாளாம் பைங்கொடியாள்சம்பங்கி
அகப்பட்டராஜரெல்லாம் அன்பாகவிடச்சொன்னார்
அவரவர்கள்தேசத்துக்கு அனுப்பிவிட்டாராஜரெல்லா
ஆத்தாள்மகளையுமே அன்பாகக்கொண்டுவந்து [ம்
இப்படிக்குச்செய்தாயல்லோ ஏந்திழையேசம்பங்கி
சுழல்கம்பமீதிலே சுருக்காகயேற்றிவிட்டார்
சுழல்கம்பந்தனிலே சுழலுகிறாரிருவருமாய்
அப்போ-அஞ்சுபஞ்சுந்தன்னுயிரு மாகாமெழுப்புதங்
மாண்டுமடிந்தார்கள் மயிலணையாரிருவருமாய் [கே
கோட்டைகள்கொத்தளமுங் கொற்றவனாரேதுசெய்தார்
இடித்துதிரவினார் எங்கள்துரைபஞ்சவர்ணம்
பெட்டிப்பொருள்களும் பொக்கிஷங்களத்தனையும்
மாலைக்குச்சீதனங்க ளென்றுசொல்லிபஞ்சவர்ணம்



கோமுதலைவங்கிலே கொண்டுபோய்வையுமென்றார்
அப்படியேவைத்தது ஆண்டவனார்பூதமது
சம்பங்கியைக்குடிகெடுத்து சுவாமியவரெங்கேவாரார்
தாயார்தவநிலையைச் சங்கரனார்தேடிவாரார்
மூக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டுவிட்டாள்காமாட்சி
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
என்திருஷ்டிபொல்லாது எழுந்திரடாயென்மகனே
நெற்றியிலேகைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டாள்
எங்கேயடாபோய்வந்தாயென்மகனேபஞ்சவர்ணம்
போய்வந்தயிடத்தை புண்ணியனேசொல்லுமென்றாள்
சம்பங்கியைகுடிகெடுத்துத் தையலரேவந்தேனென்றார்
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடடியெந்தனுக்கு
பெண்ணைச்சிறையெடுக்க வரங்கொடடியெந்தனுக்கு
பெண்ணைச்சிறையெடுக்கப் போகவரம்நீகொடென்றார்
என்னாலேயாகாது என்மகனேபஞ்சவர்ணம்
உன்-அம்மானை நீகேட்டால் அவராலேயாகுமென்றார்

நான்காவது, சம்பங்கி தாசிவனம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## பெருமாள் வனம்

77845

### விநாயகர் துதி வெண் செந்துறை

கயமாமுகனே கண்ணன்மருமகனே
பயம்வைத்துனைத்துதித்தேன் பரமனார்புத்திரனே
அந்தமிகக்காத்த ஆடல்பெற்றசுவாமிகதை
சுந்தரமாயான்பாடச் சுருக்காகவென்னாவில்
மகிழ்ச்சியுடனிருந்து வழுவுகணோமல்
புகழ்ச்சியுடனிருந்து புழக்கைமுகத்தோனே.

### கதையின் வரலாறு

அப்படியேபோறேனென்று எழுந்தாராய்பஞ்சவர்ணம்
மாயவரைத்தேடியல்லோ வாராரேயப்போது

மாயவரைத்தேடிக்கொண்டு வாரார்களிருவருமாய்
அப்போதுயெம்பெருமா ளன்பாகயேதுசெய்தார்
ஒருபுரோகிதனைப்போலல்லவோ சாமியங்கேவாராரும்
மார்பிலேபூநூலுங் கிழிந்தவொருவேட்டியுடன்
ஓட்டைத்தலை யொடிந்ததெண்டாயுதமாம்
செல்லெரித்தபஞ்சாங்கம் சுவாமியவர்கைப்பிடித்து
வாரவழிதனிலே வருகிறாரப்போது
கண்டுவிட்டார்பஞ்சவர்ணம் கடுகெனவேவேதியரை
மாமனைத்தேடப்போக வருகிறானொற்றைப்பார்ப்பான்
கட்டிவருத்துகிறான் கட்டழகுசின்னானை
கட்டிவருத்துகிறான் கட்டழகுசின்னானும்
வெம்பாமணலிலே யுருட்டிவிட்டார்வேதியனை
ஆலமரத்தடியி லன்பாகவந்துநின்றார்
கண்டுவிட்டாராண்டவனார் கனமோசம்வந்ததென்று
அவர்-கட்டையவிழ்த்துக்கொண்டு கடுகெனவேஓடலுற்
மாயமாய்ப்போய்விட்டார் மாயன்பெருமாளும் [றார்
கண்டார்களிருவருமாய் கட்டழகன்வேதியரை
அஞ்சனந்தான்போட்டு ஆராய்ந்துபார்க்கலுற்றார்
மாமன்வந்தானென்று அஞ்சனத்தில்தோற்றுகுது
தெரியாமல்செய்துவிட்டோம் சீரானசின்னானே
அவரை-எங்குகண்டுதேடுவோ மின்பமுடன்மாமனைத்
எப்படிக்குக்காணுவோ மின்பமுள்ளவம்மானை [தான்
என்செய்யப்போறோமென்று யின்பமுடன்வாரார்கள்
காத்தானுஞ்சின்னானுங் கடுகெனவேவாரார்கள்
துளசிபரிமளிக்குந் துவாரகைக்குவாரார்கள்
மாடுமேய்க்கும்பிள்ளைகளை வகையுடனேதான்பார்த்து
சுவாமியிருக்குமிடஞ் சீக்கிரத்திற்சொல்லுமென்றார்
அரிசேர்வைதன்னிடத்தில் ஆண்டவனைக்காணலாம்
மற்றவிடந்தனிலே சுவாமியைக்காணொணாது

## காத்தவராய சுவாமியும் சின்னானுந் தாதவேஷங் கொள்ளுதல்

என்றுசொல்லியிருவரும் இன்பமுடனேதுசெய்தார்
என்னவேஷங்கொள்ளுகிறார்எங்கள் துரைபஞ்சவர்ணம்
காத்தவீரப்பெண்போல் கடுகெனவேஷங்கொண்டார்
செகன்மோகினிபோலச் சீராகவேஷங்கொண்டார்



குள்ளவண்டுதாதனைப்போல் சின்னானும்வேஷங்கொ
தப்புகளுஞ்சேபகலந் தாளமுந்தானெடுத்து [ண்டு
காலிலேகெச்சையது கட்டினான்சின்னானும்
ஜோளிசுரக்குடுக்கை கட்டினான்சின்னானும்
தலையிலேகோணகுல்லா தரித்தானேசின்னானும்
எண்ணைக்கச்சைஏழுமுழம் எட்டுகச்சைபிகுவெடுத்தார்
பட்டைபட்டை நாமங்களை யிட்டானேசின்னானும்
குல்லாவிலொருபூதம் ஜோளியிலொருபூதம்
தப்பிலொருபூதம் தாளத்திலொருபூதம்
கெருடகப்பத்திலொருபூதம் கொச்சையிலொருபூதம்
இப்படிக்குவைத்துக்கொண்டு வாரானேசின்னானும்
அருந்தநாதன்வீதியிலே கொம்பனையும்வந்துநின்று
அப்போதுரையவனா ரன்பாகயேதுசெய்தார்
பெருமாள்தன்மாளிகையில் வந்தாராமாயவனார்
நாமநல்லபெட்டியிலே நாமமாய்நின்றாராம்
நடுமேட்டில்கட்டிவைத்தார் நாமம்வைக்கும்பெட்டிதன்
ஆருமறியாம லங்கொருவர்காணாமல் [னை
காத்தன்வருவானென்று சுவாமியவரொளித்திருந்தார்
அந்தச்சமயத்தில் காத்தானுஞ்சின்னானும்
தப்பையடிக்கலுற்றான் தனஞ்செயன்சின்னானும்
அவன்தலையிலிருந்தகுல்லா தானெகிறியாடுகுது
தோளில்குராகுடுக்கை துள்ளிதுள்ளியாடுகுது
கையிலிருக்குந்தாளங் கணகணென்றுகாட்டுதுபார்
காலிலிருக்குங்கச்சை கலகலென்றுபாடுதுபார்
தரையில்கெருடகம்பந் தானெகிறியாடுகுது
கால்தலையுந்தெரியவில்லை குள்ளத்தாதனாடுவது
அங்கிருக்குந்தாதர்க ளனைவோரும்கண்டார்கள்
எந்தவூர்தாதனோ விதவிதமாயாடுகின்றான்
ஊரேதுபேரேது ஒருமையாய்ச்சொல்லுமென்றார்
நான்-இருப்பதுகாஞ்சிபுர மென்தகப்பன்யேகாபரம்
தாதச்சியென்தாயார் அவள்பேருகாமாட்சி
மாமன்பெருமாள்தான் அண்ணன்கணபதியாம்
என்பேர்குள்ளதாதன் உடன்பிறந்தாள்காத்தவீரி
இவ்வண்ணமாகவே யெடுத்துரைத்தான்சின்னானும்
இந்தசொல்லைக்கேட்டு யெழுந்தாராங்கொண்டிதாதன்
தன்மகளையிட்சணத்தில் தாலிகட்டவேணுமென்று

குள்ள நல்லதாதனுக்குதன்பெண்ணைக்கொடுக்கவென்று
சந்நிதிமுன்பாகத் தாலி தரித்தார்கள்
குள்ளவண்டுதாதனுங் கொற்றவனுமேது செய்தான்

### சின்னான் மாமனாராகிய தாதனை பங்கு கேட்குதல்

மாமனாரைத்தான்பார்த்து மருமகனுமேதுசொல்வான்
எனக்குள்ளபங்கையெல்லாமெந்தனுக்குத்தாருமென்று
பெரியவீடெந்தனது சின்னவீடுந்தனது [ன்
வெங்கலச்சட்டியெந்தனது வெறும்பாயுந்தனது
பெரியசொம்பெந்தனது சின்னசொம்புந்தனது
அரைச்சுவரிடித்துவிடு குறுக்கேசுவர்வைத்துவிடு [ளு
உனக்கேதாகிலும்வேண்டுமென்றாலென்னைவந்து நீகே
என்றுசொல்லிச்சின்னானு மெடுத்துரைத்தாரப்போது
இப்படிக்குச்சமதித்தா ளின்பமுடனாக

### பெருமாள் தாதனுக்குத் தாம்பூலங் கொடுத்தல்

அன்றுபோய்மற்றநாள் கொண்டிதாதனெழுந்திருந்து
தாம்பூலமெடுத்துக்கொண்டு ஓடிவாறான் தனஞ்சயனும்
பெருமாள்நல்லதாதனரண்மனைக்கோடிவந்தான்
தாம்பூலமுன்னேவைத்தான தனஞ்செயன்தாதனுமே
ஏதுக்கென்றுதாம்பூலங் கொண்டுவந்தாய்பெருமாளே
கலியாணமென்றுசொல்லி தாம்பூலங்கொண்டுவந்தேன்
பெண்ணுக்குகல்யாணமென புகழுடனே தானுரைத்தார்
பிள்ளையெங்கேயென்று சொல்லி கேட்டாராம்பெருமாள்
காஞ்சிபுரத்திலிருந்து குள்ளவண்டுதாதன்
காத்தவீரியப்பெண்ணென்று கட்டழகிஇங்கேவந்தாள்
அவளுடையஆட்டஞ்சொல்லி ஆராலுமுடியாது
அவளுடைய ஆட்டங்களைசுவாமியவர்பார்க்கவேண்டும்
அவளாட்டஞ்சுவாமிபார்த்தால் மயங்கிவிழுந்திடுவார்
என்றிவர்சொல்லையிலே கேட்டுவிட்டார்சுவாமியப்போ
தாமப்பெட்டிதானறுந்து நடுவீட்டில்விழுந்துதங்கே
பெருமாள்நல்லதாதனை வாருமென்றுதானழைத்தார்
ஓடிவந்துதாதனும் பெருமாளைத்தெண்டனிட்டார்
காத்தானுஞ்சின்னானும் வருவாரென்றானொளித்தேனை
காத்தவீரியப்பெண்களைக் கடுகக்கொண்டுவாருமென்றார்
அவளைக்கொண்டுவாருமென்றார் ஆண்டவனாரப்போது



அப்படியேகொண்டுவந்து ஆண்டவனார்முன்னேவிட்
அப்போகொண்டிதாதனை யழகாகத்தானழைத்து [டார்
காத்தானுஞ்சின்னானும் வரப்போறார்பார்த்திரென்றார்
வாசலிலேகாவல்வைத்தார் மாயன்பெருமானும்
அப்படியேதானிருந்தா னணழகன்கொண்டிதாதன்

### காத்தவீரியப் பெண்ணைக்கண்டு பெருமாள் இச்சித்தல்

காத்தவீரியப்பெண்ணைக் கண்டதில்லைவையகத்தில்
உன்னைப்போலபெண்ணைக் கண்டதில்லைவையகத்தில்
ஆசையலையுதே ஆரணங்கேயுன்மீதில்
காதல்விடாய்கொண்டேன் கன்னியரேயுன்மீதில்
உன்னாசையெந்தனுக்கு ஒழியவில்லை பெண்ணரசே
என்னை-மருவியிருந்தாயானால் மங்கையரேயிப்போது
கேட்டதுநான்தாரே னென்றாராமாண்டவனார்
காத்தானுஞ்சின்னானும் வரப்போறாரெழுந்திரென்றார்
காதல்விடாய்தீரக் கடுகவெழுந்திருப்பாய்
கட்டித்தழுவவந்தார் காத்தவீரியப்பெண்ணையவர்
எனக்கொருநோம்பதுதா னிருக்குதுயென்றாளாம்
என்னபெண்ணேநோன்புகிளிமொழியா ளுற்கவேண்
பட்டுப்படிச்சிலவு பாங்காகவேண்டுமென்றார் [டும்
கொண்டிதாதர்சின்னானுக் காத்தானும்வரப்போறார்
என்னதான்வேண்டு மிளங்கொடியேசொல்லுமென்றார்
வாடாதமாலை வடமாலைவேண்டுமென்றார்
கூறையுந்தாலியுங் கொம்பனைக்குவேண்டுமென்றார்
அப்போதுசுவாமி யழைத்தாராங்காத்தனைத்தான்
தாலியுங்கூறையது தகுந்தபணிதிகளும்
அரண்மனைக்குச்சென்று யெடுத்தோடிவாருமென்றார்
அந்தவிடஞ்சென்று அன்பாகக்கொண்டுவந்தார் [தார்
காத்தவீரியபெண்ணிடத்தே கடுகெனவேதான்கொடுத்
இனியென்னவேண்டும் இளங்கொடியேகேளுமென்றார்
சேர்ந்திருக்கவேண்டுமென்று தேன்மொழியாள் தானுரைத்தாள்
பக்கத்தில்சேர்ந்திருந்தார் பாங்கியிருவருமாய்

### காத்தவராயசுவாமி எம்பெருமானைக் கட்டுதல்

கண்ணைமிகமூடிக் கையிரண்டுமேந்திருந்தார்
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானினைந்தார்

மணிக்கயிற்றைத்தானெடுத்து வகையுடனே சின்னானும்
ஆண்டவன்கைதனிலே யன்பாகப்போட்டுவிட்டார்
சேர்த்திறுக்கிக்கட்டினா ராணழகர்பஞ்சவர்ணம்
அம்மானைக்கட்டிவிட்டா ராணழகர்பஞ்சவர்ணம்
வாவென்றழைத்தா வருகுதுபூதமங்கே [கொண்டார்
பஞ்சவர்ணச்சுவாமியைப்போல் பரிமணத்தான்வேஷங்
ஆத்தையண்டைவாருமென்று அன்பாயழைக்கலுற்றார்
வெட்கித்தலைகுனிந்து விசாரமிட்டார்மாயவரும்
அடா-உன் மாயமறியாமல் உன்னை மருவவந்தேன்
வெட்கமாயிருக்கிறது விட்டுவிடுமருமகனே
கேட்டவரந்தந்தாயானால் விடுவேன்காண்மாமாவே
என்னவரமீயவேண்டுங் கேளடாமருமகனே
மாலையைமாலையிட வரங்கொடுக்கவேண்டுமென்றார்
அவளை-இட்டுநீர்வாருமென்று எந்தனுக்குகைகொடே
அப்படியேகைகொடுத்தா ராண்டவனாரப்போது [ன்றார்
எப்போ நினைப்பேனோ அப்போவரவேண்டுமென்றார்
அப்படியேவாரேனென்று அஸ்தங்கொடுத்தாராம்
என்னைகட்டினேனென்று ஒருவரிடஞ்சொல்லாதே
சொல்லவில்லையென்றாராஞ் சுவாமிதுரைபஞ்சவர்ணம்
மாலைக்குவளையலிட வகைசொல்லவேண்டுமென்றார்
கன்னிக்குகடகம்பூணக் கட்டழகர்வேண்டுமென்றார்
அந்தவுரைகேட்டு அரிராமரேதுசொல்வார்
சம்புமாரிஷிவனத்தே தனஞ்சயருந்தேடிவாரார்
தங்கமணலுண்டு தனஞ்சயருந்தேடிவாரார்
வளையல்செய்புமென்று மாயவருந்தாமுரைத்தார்
அவ்வசனங்கேட்டு வாரார்களிருவருமாய்
சம்புமாரிஷிவனத்தே தனஞ்சயருந்தேடிவாரார்
அந்தசுனையிலே ஆண்டவனார்தானிறங்கி
தங்கமண்ணைத்தானெடுத்தார் சுவாமிதுரைபஞ்சவர்ணம்
பொன்மண்ணைத்தானெடுத்தார் புத்தியுள்ளபஞ்சவர்ணம்
மாலைக்குவளையலது வகையாகச்செய்யலுற்றார்
செம்புவளையல்முத்து வளையிலுமாயிரமாம்
பச்சைவளையலாம் பவளவளையலாம்
நாலுதினுசாகச் செய்தாராமாலையற்கு
வாவென்றழைத்தார் வருகுதுமறுவேஷம்
பண்ணைப்பூப்போலே பழுத்தகிழவனானார்



தும்பைப்பூப்போலே துவண்டகிழவனானார்
கண்ணிரண்டுங்கீரைவிரை காதிரண்டுங்கேளாது
மெத்தப்பெரியவராம் வெகுநாள்பிழைத்தவர்போல்
தள்ளாதகிழவனைப்போல் சுவாமியவர்வாறாராம்
வளையல்மூட்டைதோளில்வைத்துவாறாராமாண்டவனார்
காமாட்சியைத்தேடி கடுகெனவேவாரார்கள்
ஆலமாமேடைசுற்றி ஆண்டவனாரேதுசொல்வார்
என்னவென்றுசொல்லிவாரா ரிளம்பிள்ளைபஞ்சவர்ணம்
வளையல்விதங்களென்ன வளையலிடநேர்த்தியென்ன
செப்புநீரோட்டங்களு முத்துச்சிவட்டங்களும்
பச்சைக்கல்மின்னுவதும் பவளக்கல்மின்னுவதும்
இப்பெரியவிநோதங்களை யார்வேண்டப்போறாரென்று
தன்மனதில்தானினைந்து சுவாமிதுரைபஞ்சவர்ணம்
வளையல்வளையலென்று மாரிபிள்ளைகூறுவாரும்
கண்ணைத்திறந்துவிட்டாள் கட்டழகிகாமாட்சி
ஆரையாபெரியவரே யன்பாகயிங்குவந்தீர்
வளையல்வளையலென்று வனமதில்கூறிவந்தாய்
இந்தவளையலிங்கே யார்கொள்ளப்போறார்கள்
மாலையண்டைபோவாயானா லவள்கொள்வாள்வளையலை
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான் [த்தான்
அப்படியேநீறுதந்தா லரிவையரேநான்போறேன் [து
போய்வாரேன்பேத்தியென பொட்டெனவேதானெழுந்
வளையல்மூட்டைதோளிலிட்டு வாராரேயாண்டவனார்

### வேதியர் வீதிகளில் காத்தவராயசுவாமி வளையல் விற்றல்

புத்தூரைத்தேடியல்லோ புண்ணியனார்வாறாராம்
ஆயிரம்வேதியர்க ளன்பாகக்கண்டதில்லை
இந்தவளையலது மெங்கிலும்நாபகண்டதில்லை
அப்பாபட்டரோடிவந்து அழைத்தாராமப்போது
அன்னத்துளசிமுன்னே யழைத்துவந்தார்வேதியரும்
அன்னத்துளசியம்மா ளன்பாகக்கண்டுவிட்டாள்
இந்தவளையலது என்னவிலையென்றுரைத்தாள்
ஐம்பதுபொன்கொடுத்தா லன்பாகக்கொடுப்போமென்
அப்படியேகொடுமென்றா ளன்னத்துளசியம்மாள் [றார்
அப்படியேதான்கொடுத்தா ராண்டவனார்பஞ்சவர்ணம்

ஆயிரம்பெண்களுக்கு அன்பாகத்தான் கொடுத்தார்
வளையலைக்கொடுத்து வந்துவிட்டார்மாரிபிள்ளை
ஆயிரம்பூதங்களை யன்பாகத்தானழைத்து
ஆளுக்கொருபூத மேவிவிட்டார்பஞ்சவர்ணம்
பளபளப்புகொடுத்து பைங்கொடிமார்மங்கையற்கு
சீழுஞ்சிலைத்தண்ணியும் சிந்துதேகைதனிலே
வாதனைகள்வேதனைகள் வருத்தங்களுண்டாச்சு
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிறார்
குய்யோமுறையோவென்று கூவியழுகலுற்றார்
வளையற்காரசெட்டிதனை வரவழைத்தார்பார்ப்பார்கள்

## வேதிய ஸ்திரீகளுக்கு காத்தவராயர் உபசாந்தி செய்தல்

தள்ளாடித்தள்ளாடி சுவாமியவர்வந்துநின்றார்
வேதனைப்படுகிறதை கண்டுவிட்டார்பஞ்சவர்ணம்
தாதைநிலை நிறுத்துமென்று தன்மனதிலெண்ணாராம்
வீட்டுக்கோர்வளையலது கொண்டுவரச்சொன்னாராம் [ம்
மணல்மேடை போடச்சொனனார்மாரிபிள்ளைபஞ்சவர்ண
வேப்பிலைகொத்துவைக்கச் சொன்னாரேயாண்டவனார்
இளநீருபாணகம் இன்பமுடன்வைக்கச்சொன்னார்
வடைபருப்புதாம்பூலம் வையுமென்றுதாமுரைத்தார்
அப்படியேவைத்தார்களன்பாகவேதியர்கள்
அப்போதுஎல்லோர்க்கு மன்பாகநின்றுதாம்
குத்தல்குடைச்சலது கொப்பெனவேதீர்ந்தது
வாதனைவேதனையும் வகையாகநின்றுதங்கே
அன்பானதெய்வமென்று அனைவருந்தோத்தரித்தார்
இப்படிக்குச்செய்தபின்பு ஏங்கள்துரைபஞ்சவர்ணம்

## காத்தவராயர் ஆரியமாலை வீதிக்கு வளையல் கொண்டுவருதல்

எங்கேமெள்ளவாறாராம் எழிலானகாத்தவனார்
மாலையிடகோட்டைதேடி வாறாரேபஞ்சவர்ணம்
இருபத்தோர்கெவுனிதாண்டி யெழிலாகவாறாராம்
முல்லைவனக்கோட்டைக்குள்ளே மெத்தெனவேவாறாரா
நாகதாளிபுன்னைமரம் நடுவனத்துசோலையிலே [ம்
சந்தனப்பொன்மேடையிலே சுவாமியவருட்கார்ந்தார்



அப்போ-ஆரை நினைக்கலுற்றார் அளவற்றசிந்தையிலே
எவரை நினைக்கலுற்றா ரின்பமுள்ளசிந்தையிலே
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சில்வைத்தார்
அண்ணன்கணபதியை யன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
எள்ளளவுநீறெடுத்து கொள்ளளவாய்மந்திரித்தார்
கடுகளவுநீறெடுத்து கணமுடனேமந்திரித்தார்
கொல்லிமலைக்கன்னிகளைக் கொற்றவனார்தானினைந்து
வெண்ணீறைத்தூவிவிட்டார்விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
வெண்ணீரின்வாடைபட்டு மெல்லியர்கள்வாறார்கள்
சந்தனப்பொன்மேடையிலே தையலர்கள்வாறார்கள்
குங்குமப்பூமேடையிலே கொம்பனைமார்வாறார்கள்
சந்தனப்பொன்மேடையிலே தையலரைக்கண்டுவிட்டா
காணாததுபோலக் கண்டுவிட்டாராண்டவனார் [ள்
பாராததுபோலப் பார்த்துவிட்டார்சுவாமிதன்னை
தள்ளாதகிழவனென்று தையலர்கள்முன்னேவந்து
ஆரையாவென்றுசொல்லி அரிவையர்கள்கேட்கலுற்றா
வளையல்கொண்டுவந்தேனென்றார் மாரிபிள்ளைபஞ்சவர்ணம் [ர்
எவ்விடத்திலணிகிறது எங்களுக்குச்சொல்லுமென்றார்
எட்டெட்டுப்பதினாறா யெடுத்தார்வளையலதை
வளையல்தனையெடுத்து மயிலணைமார்கைகொடுத்தார்
என்னவிலையென்று ஏந்திழைமார்கேட்கலுற்றார்
ஐந்துவளையலது ஆயிரம்பொன்னென்றுசொன்னார்
மாலைகன்னிமுன்னே மயிலணைமார்வளையல்வைத்தார்
கண்டுவிட்டாள்மாலைகன்னி கட்டழகியப்போது
காத்திலணியுமென்றாள் கன்னியிளங்கொடியாள்
காத்திலணிந்தார்கள கட்டழகிதாதியர்கள்
நிலைக்கண்ணாடிமுன்பாக கட்டழகர்பார்க்கலுற்றார் [லே
முன்னழகைத்தான்பார்த்து பின்னழகைப்பார்க்கையி
பொடிப்பொடியாய்ப்போச்சுதுகாண் பொற்கொடியாள்கைவளையல்
பஞ்சவர்ணந்தான்கேட்டு பக்குவமாயேதுசொல்வார்
சாந்தியதுச்செய்தாலே தரிக்கும்வளையலது [ன்றார்
என்னசாந்திசெய்யவேண்டுமெனக்கறியச்சொல்லுமெ
நாலுவிதக்கால்கள நட்டு நடுவேயொருபந்தலிட்டு
அம்மிக்குழவியது அரிவையரேவைக்கவேண்டும்
சாலுங்கரகமது தையலரேவைக்கவேண்டும்

குத்துவிளக்குநல்ல குடவிளக்கேற்றவேண்டும்
ஏறுகின்றபல்லக்குத்தா னெந்தனுக்கனுப்பவேண்டும்
மேளங்கள் தாளங்கள் மெல்லியரேவருகவேண்டும்
கோடிதலைப்பாகையும் கோடி துணியெனக்கு
எந்தனுக்குக்கொண்டுவந்து ஏந்திழையேகொடுத்தாயா
பல்லக்குமேலேநான் பவனிகோலம்வரவேண்டும் [னால்
அப்படிக்குசாந்திசெய்து அரிவையற்குநான்கொடுத்தா
நீடூழிகாலமட்டும் நிலைக்குமடிமங்கையற்கு [ல்
அப்படிக்குச்சம்மதித்து அரிவையர்கள்கொண்டுவந்தார்
பல்லக்குமேலேறிப் பவனிக்கோலம்வாரார்
மாப்பிள்ளைகோலமாய் வாராரேபஞ்சவர்னம்

### காத்தவராயர் பெருமாளுக்குமுன் மாலைக்கு மங்கிலியந் தரித்தல்

மாலைமுன்னேவந்துநின்று மாரிபிள்ளை தானிறங்கி
மாமனைத்தானினைத்தார் மாரிபிள்ளைபஞ்சவர்னம்
வேதியனைப்போல விதமுடனேவடிவெடுத்து
தள்ளாதகிழவனைப்போல் சுவாமியவர்வேடங்கொண்டு
அறுந்ததொருபூநூலாங் கிழிந்ததொருவேஷ்டிகளாம்
ஓட்டைத்தவலை ஒடிந்ததண்டாயுதமாம்
செல்லெரித்தபுத்தகமும் சுவாமியவர்கைபிடித்து
தள்ளாடிதள்ளாடி தடியூணிவந்துநின்றார்
காத்தனுக்குமுன்னேவந்து சுவாமியவர்வாராரே
எப்போவந்தீர்வேதியரே என்றாராம்பஞ்சவர்னம்
அறுபத்தேகெவுனிக்குள்ளே யிருந்தாளேமாலையவள்
அவளுக்குக்கொடுத்தீரே பண்பானவளையல்தன்னை
இருபத்தோர்கெவுனிக்குள்ளே இருக்கின்றமாலையற்கு
வளையல்கொடுக்கநல்ல வர்த்தகரேகாத்தான்செட்டி
ஆகையால்வேதியரே யதுகாணவந்தேனென்றார்
வட்டமணைமேலே மாலையவளுட்கார்ந்தாள்
அருகாகவுட்கார்ந்தார் ஆண்டவனார்பஞ்சவர்னம்
ஓமம்வளர்த்தினார் உத்தமனார்வேதியரும்
சொர்னப்பூதாலியது நூலிழையாய்த்தான்கோர்த்து
காத்தான்செட்டிகையதனில் கடுகெனவேதான்பார்த்து
கண்டுகொள்காமாட்சி கட்டுகிறேன்தாலியைத்தான்
என்று-தாலிதரித்தாராந் தனஞ்செயனார்பஞ்சவர்னம்



நெற்றியில்திலர்தப்பொட்டு நேராகத்தானுமிட்டார்
எட்டெட்டுப்பதினாறு யிசைந்தவளையலிட்டார்
இட்டுதீர்வார்த்தாரே எம்பெருமாள்மாயவரும்
இனியிருந்தால்மோசமென்று எழுந்துநடந்தார்கள்
துவாரகைப்போகலுற்றார் சுவாமியவரப்பொழுது [ர்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்றா

### ஆரியமாலை தன் கழுத்தில் தாலியைக் காணுதல்

அப்போதுமாலையற்கு சோபந்தெளிந்தது
சோபந்தெளிந்துமல்லோ தோகையவள்தானெழுந்து
கண்ணாடிமுன்னிலையில் கன்னியவள்பார்க்கலுற்றாள்
கொண்டையிலேபூவும் குவளைவிழிமையழகும்
கையிலேகங்கணமும் கழுத்தினிற்றாலியதும்
கட்டியிருக்கிறதை கண்டுவிட்டாள்மாலையவள்
அப்பிக்கொண்டாளடிவயிற்றி லறைந்துகொண்டாள்மார்கலங்க
ரங்கரைமனதிலெண்ணியிளங்கொடியாள்புலம்புகிறாள்

### ஆரியமாலை சமுத்திரத்தில் விழுந்து கல்லா யிருத்தல்

இனியிருக்கலாகாதென் றெழுந்துநடக்கலுற்றாள்
கங்கைகொண்டசமுத்திரத்தை கிளிமொழியாள்தேடிவா
அம்மாடிமாலையென்று அரிவைமார்ஓடிவாரார் [ரான்
அவர்களைத்தள்ளிவிட்டு ஆரணங்குவாராளே
கங்கைகொண்டசமுத்திரத்தில்கன்னியவள்போய்நின்றா
கழுத்தளவுசலத்திலே கன்னியவள்போய்நின்றாள் [ள்
மோசம்வந்துநேர்ந்ததென் றுவிமலிபிள்ளைபஞ்சவர்னம்
கல்லாய்ச்சமைத்துவிட்டார் கட்டழகர்பஞ்சவர்னம்
அப்போதுதாதியவ ளழுதுக்கொண்டோடிவாராள்
புத்தூரைத்தேடி பெண்களெல்லாம்வந்துநின்று
அப்பாபட்டர்முன்பாக அழுதுபுலம்புகிறார்
என்னத்தினாலே நீங்க ளேந்திழையேயழுகிறீர்கள்
என்றுமவர்கேட்க எடுத்துரைப்பார்தாதியர்கள்
கங்கைகொண்டசமுத்திரத்தில் கட்டழகிபோய்விழுந்தா
கல்லாகநின்றுவிட்டாள் கட்டழகிமாலையவள் [ள்
இவ்வசனங்கேட்டுவிட்டார்। இன்பமுள்ளவேதியர்கள்

## வேதியர்கள் புலம்பல்

அப்போதுவேதியர்க ளனைவோருந்தாமெழுந்து
ஐயோசிவனேயென்று அழுதுகொண்டொருர்கள்
கங்கைகொண்டசமுத்திரத்தில் கடுகெனவேயோடிவந்து
ஆயிரம்வேதியர்க ளழுதுபுலம்புகையில்
ஆரியப்பூராஜனும் அழுதுபுலம்புகிறான்
இத்தாதிபேர்களு மிடருற்றழுகையிலே
ஆரியப்பூராஜாவு மன்பாகத்தான்பார்த்து
தெர்ப்பைநல்ல ஆசனங்கள் சீராகத்தான்போட்டு
இரங்கரைத்தான துதித்து நலமாகத்தானிருந்தார்
கல்லாய்ச்சமைந்தவள் பெண்ணாயுருவானாள்
அப்போதுராஜாவு மன்பாகத்தான்பார்த்து
நவரத்தினபல்லக்கில் நலமாகத்தானேற்றி
ஆடலும்பாடலுட னனைவோருந்தான்சூழ
அந்தப்புரத்தி லரிவையரைக்கொண்டுவந்து
விட்டார்களப்போது விருப்பமுடன்வேதியர்கள்
இப்படிக்குச்செய்தவனை ஏந்திழையேமாலையரே
மூன்றுநாளைக்குள்ளாக மெல்லியரே நான்பிடித்து [பேன்
உன்-முன்பாககொண்டுவந்து ஆக்கினைகள்செய்துவைப்
என்றுசொல்லிமகாராஜன் யின்பமுடன் தானுரைத்தார்
அன்றுமுதற்கொண்டு அரிவையிட கோட்டையிலே
வைத்தாரேகாவலனை வரிசைமுறைப்படியே
மூன்றுபேர்ராஜாக்க ளொன்பதுபேர்மந்திரிகள்
வலையன்சிவப் டையான் மன்னன்தலையாரி [லே
இத்தாதிபேர்களெல்லா மேந்திழையாள்கோட்டையி
ரஸ்துக்கள்வாறார்கள் நாயகியாள்கோட்டையிலே
இப்படிக்குத்தானிருக்க ஏந்திழையாள்கோட்டையிலே
மஞ்சையப்பன்கட்டிவைத்தமண்டபத்தில்வந்துநின்று
உற்றுநினைத்தா ரொருகோடிபுத்திகளை
இருந்துநினைத்தா ரிருகோடிபுத்திகளை
தாயார்தவநிலைக்குச் சுவாமிதுரைவாறாராம்
மாதாதவநிலைக்கு மாரிபிள்ளைவாறாராம்
தோட்டமதுதிறந்து தென்னைகைத்துப்பூவெடுத்து
சாவடியதுதிறந்து சரக்கொன்றைபூவெடுத்து
ஓடுகிறதண்ணீரி லொருசொம்புநீரெடுத்து
பாதமதுதுலக்கிப் பட்டாலடிதுவட்டி



கொண்டுவந்தபூமலரைக் குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
என்னைப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைபெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
என் திருஷ்டிபொல்லாது எழுந்திரடாவென்மகனே
கண்களதுபொல்லாது கடுகவெழுந்திரடா
எங்கேயடாபோய்வந்தா யென்மகனேசொல்லுமென்று
மாலையைச்சிறையெடுக்க வரம்கொடம்மாகாமாட்சி [ள்
கண்டுவந்தநாள் முதலாய் கண்ணுறக்கம்வாரதில்லை
பார்த்துவந்தநாள்முதலாய் பசியெடுப்பதில்லையம்மா
கன்னியைச்சிறையெடுக்க கடுகவரங்கொடம்மா
என்றுமவர்கேட்க இளங்கொடியாள்காமாட்சி
ஊர்குடியைநீகெடுக்க ஆண்டிவேடமானாயடா
தீண்டாநெருப்படா தெய்வப்பசுங்கிளியாள்
என்னிலும்பத்தினியாள் இடையூறுசொல்லாதே
தாயிலும்பத்தினியாள் தாரமென்றுசொல்லாதே
வயிரஞ்செட்டிபாளையத்தில் மயிலனையாளுகந்தழகி
அவளைவிடப்பெண்க ளவனியிலேகிட்டாது
ஐந்துவயதிலிருந்து ஆரணங்குமாது அவள்
கோட்டைபிள்ளையார்கோவிலுக்கு கொடியிடையாளுகந்
ஐந்துவயதுண்டு பத்துவயதளவும் [தழகி
பஞ்சு அவள் நூற்றுக்கொண்டு பாவையரும்வாராளிப்
அவளழகுபோலே அவனியிலேகிட்டாது [போ
அவளைச்சிறையெடுத்தா லாணழகாவென்மகனே [னாள்
மாலையைச்சிறையெடுக்கவரங்கொடுப்பேனென்றுசொன்
வெண்ணீறுதந்தாயானால் மெல்லியரேபோய்வாறேன்
அவளைச்சிறையெடுப்பே னாணங்கேகாமாட்சி
என்றுசொல்லத்தான்கேட்டு ஈஸ்வரியாளப்போது
வெண்ணீறுகைகொடுத்தாள் விமலியந்தகாமாட்சி

ஐந்தாவது, பெருமாள் வனத்தில் கல்யாணவனம்
முற்றுப்பெற்றது.

---

ஆறுவது

# செட்டிப்பெண்ணாகிய உகந்தழகிவனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

அத்திமுகனே அரனார் திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்றோனே
துகிலுந்தனைக்காத்த தீரன்சுவாமிகதை
புலவன்மிகப்பாட புகழ்ச்சியாயென்னாவில்
பொருந்தியேநீரிருந்து போற்றும் பலவாகப்
பெருக்கத்தைநடத்தும் பெருமாளின்மைத்துனரே

### கதையின் வரலாறு

வெண்ணீறுதானணிந்து விமலிபிள்ளைவாறாராம்
என்னவேஷங்கொள்ளுகிறாரெங்கள் துரைபஞ்சவர்ணம்
தள்ளாதகிழவனைப்போல் சுவாமிவடிவெடுத்தார்
தும்பைப்பூப்போலத் துவண்டக்கிழவனானார்
நாணற்பூப்போல நரைத்தக்கிழவனானா
கண்ணிரண்டுங்கீரைவிரை காதிரண்டுங்கேளாது
ஏமனிடபூதத்தை யெங்கள் துரைதானழைத்தார்
தட்டுத்தராசதுபோல் சுவாமியவருண்டுபண்ணார்
சின்னனொருசின்னசெட்டி தானுமொருபெரியசெட்டி
காத்தானுஞ்சின்னானுங் கலந்துமெள்ளவாரார்கள்
வயிரஞ்செட்டிபாளையத்தை வகையுடனேதேடிவாரார்
குக்கென்றிரும்புவாராங் கோழைவந்துமாரடிக்கும்
தள்ளாடித்தள்ளாடி தடியூன்றிவாறாராம்
வப்புவாய்கோட்டுவாய் வாய்நீருசொள்ளொழுக
விழியிரண்டுமுன்குருடு செவியிரண்டுங்கேளாது
தள்ளாதகிழவனைப்போல் சுவாமிதுரைவாறாராம்
அறுகம்வேர்தட்டினாலே யறுபதிடம்விழுவார்
மூங்கில்வேர்தட்டினாலே முப்பதிடம்விழுவார்
நாணல்வேர்தட்டினாலே நார்பதிடம்விழுவார்
தள்ளாடிதள்ளாடிச் சுவாமிதுரைவாராரே
பாக்குமரச்சோலைகளும் வன்னிமரச்சோலைகளும்
கமுகுமரச்சோலையெல்லாம் கடுகெனவேதாண்டிவாரார்
வயிரஞ்செட்டிபாளையத்தில்வகையுடனேவந்துநின்றார்



தவித்துவருபவற்கு தண்ணீர்பந்தல்போட்டுவைப்பார்
பசித்துவருபவற்கு பாலமிர்தஞ்செய்துவைப்பார்
இளைப்பாய்வருபவற்கு இளநீறுகண்திறப்பார்
இப்படிக்குத்தர்மமது நடக்குமாமவ்விடத்தில்
பூங்காவனத்திற்குள்ளே புண்ணியனார்வந்துநின்றார்
அங்கிருக்கும்பெண்களெல்லா மரிவையிளங்கொடிமார்
பந்துகளும்செண்டுகளும் பரிந்துவிளையாடலுற்றார்
சோழிசதுரங்கம் சொக்கட்டானாடலுற்றார்
அம்மானையாடலுற்றார் ஆரணங்குமாதரெல்லாம்
இப்படிக்குத்தானிருக்க கண்டுவிட்டாரரிவையரும்
தள்ளாதகிழவனண்டை தையலர்கள்ஓடிவந்து
ஆரையாவென்றுசொல்லி அரிவையர்கள்கேட்கிறதை
கண்டுவிட்டார்பஞ்சவர்ணம் கன்னியர்கள்கேட்கிறதை
சின்னஞ்செட்டிஎன்னான்செட்டி வந்தவர்களாரடா
துற்கந்தநாற்றமது வீசுதேசின்னான்செட்டி
பெண்வாடைவீசுதடா புண்ணியனேயிவ்விடத்தில் [ல்லாது
என்னையப்புறத்தேகொண்டு போடாயரிவைநாற்றம்பொ
இந்தயெழவிலேண்டா யெந்தனை நீகொண்டுவந்தாய் [ம்
மூக்கைப்பிடித்துக்கொண்டார் விமலிபிள்ளைபஞ்சவர்ண
கண்டுவிட்டார்பெண்களெல்லாங் கவனமாயப்பொழுது
இவன்-ஆணாய்ப்பிறந்தவனும் ஆணழகமன்னவனும்
பெண்ணாற்றங்கூடாதென்றான் புண்ணியனிவ்விடத்தில்
ஆணிலேபத்தினியாம் ஆணழகக்கிழவனவன்

### செட்டிப்பெண்களுங் காத்தவராயசுவாமியும் பஞ்சுவர்த்தகஞ் செய்தல்

ஐயாபெரியவரே அரிவைப்படைத்தவரே
எங்கேவந்தீரென்று யிளங்கொடிமார்கேட்கலுற்றார்
பஞ்சுகொள்ளவந்தேனடி பாவையரேயென்றுரைத்தார்
எந்தவூரெந்தநாடு யெனக்கரியச்சொல்லுமென்றார்
நானிருக்குந்திருக்காஞ்சி நங்கையரேசொல்லுகிறேன்
செட்டிச்சிஎன்தாயா ரவள்பேருகாமாட்சி
என்தகப்பனேகாம்பரம் செட்டிஎன்றெல்லோரும்
காத்தவராயசெட்டி கன்னிகளேயென்பார்தான்
என்னோடுதான்பிறந்த என்தம்பிசின்னான்செட்டி
எனக்குநல்லமூத்தவர்தான் விநாயகசெட்டியென்பார்

மாமன்பெருமாள்செட்டி மங்கையரேசொல்லுகிறேன்
பஞ்சிகொள்ளவந்தேனடி பட்டணத்துக்கன்னிகளே
பஞ்சிருந்தால்தாருமென்றார் பஞ்சவர்ன ஆண்டவனார்
அஞ்சுவயதிலிருந்து பத்துவயதளவும்
நூற்றுக்கொண்டுவாராளே நுட்பமுள்ளமங்கையரும்
ஏழுமலைபஞ்சு நூற்றாளினிதாயுகந்தழகி
ஒட்டப்பிள்ளையார்கோவில் செய்யவேண்டுமென்றுசொ
ஒருநாளபிஷேகஞ்செய்யவேண்டுமென்றுசொல்லி [ல்லி
பஞ்சவர்னசுவாமியவர் பக்குவமாய்கொள்வேனென்று
பதிவிரதைநூற்றபஞ்சு பாவையரேகொள்வேனென்றார்
பத்தினியாள் நூற்றபஞ்சு பக்குவமாய்கொள்வேனென்
கொண்டுவாருமென்றுசொன்னார் கொல்லிமலைஆண்டவனார் [றார்
மலைமலையாய்க்கொண்டுவந்தார் மயிலனையாள் நூற்றபஞ்
கொண்டுவந்தபஞ்சுகளைக் கொற்றவனார்தட்டில்வைத்தார் [சு
எவ்வளவுவைத்தாலு மெழுந்திருக்கப்போறதில்லை
எமனாரின்பூதமது அஞ்சுபலங்குண்டாங்
அப்படியுமிப்படியு மசையவில்லைபூதமது
பத்தினியாளுகந்தழகி எவ்வளவுநூற்றாலும்
ஐந்துபலங்குண்டுக்கு ஆகவில்லைபஞ்சதுதான்
ஆரடிதாதிகளே அழகுள்ளபாங்கிகளே
இதுதானோபஞ்சியது இன்னமுண்டோவென்றுரைத்தார்
இவ்வளவுதானோ ஏந்திழையாள் நூற்றபஞ்சு
ஐந்துபலம்பஞ்சுதானோ அரிவையவள் நூற்றபஞ்சு
என்றிவர்சொல்லையிலே ஏந்திழைமார்தான்பார்த்து
ஐந்துபலங்குண்டுக்கு அரிவையவள் நூற்றாள்காண்
என்றுவிசனப்பட்டார் ஏந்திழைமாரப்போது

## செட்டிப்பெண் உகந்தழகி தராசிலுட்காருதல்

கொல்லிமலைசுவாமி குமரேசரேதுசொல்வார்
பஞ்சியை நூற்றதொரு பாவையவள்வாராளோ
பூட்டிருக்குமாபரணம் பொற்கொடியும்வரவேண்டும்
அத்துடன்வந்து அரிவையவளுட்கார்ந்தால்
அப்போசரிப்படுமோ ஆரணங்கு நூற்றபஞ்சு
அப்படியேயுகந்தழகி ஆரணங்குதானெழுந்து
ஓய்ந்தநடையழகும் ஓய்யாரக்கைவீச்சும்
சாய்ந்தநடையழகும் சதிரானகைவீச்சும்



அவளுக்கு-தங்கமிதியடியாம் சரிக்குமிழாரத்தினமாம்
முத்துக்குடைநிழலிலே மெல்லியும்வாராளே
இருபுறமுந்தாதியர்களேந்திழைமார்சூழ்ந்துவர
அன்னம்போல்வாராளே ஆரணங்குவுகந்தழகி
மாணிக்கம்போல மயிலனையாள் துலங்குகிறாள்
ஆசுமணைராட்டினமும் அதனையுங்கொண்டுவந்து
அப்படியேகுந்தினாள் ஆரணங்குதட்டின்மேலே
தட்டைப்பிடித்தாராம் சுவாமியவர்பஞ்சவர்னம்
உற்றுற்றுப்பார்த்தாள் ஒளிபிறந்தகண்ணாலே

## காத்தவராயசுவாமி செட்டிப்பெண்ணை சிறையெடுத்து வருதல்

தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சிலெண்ணி
அண்ணன்கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமானை மனதிலெண்ணியப்போது
கண்காட்டிவிட்டாராம் கட்டழகிபூதமதை
ஆகாயமெழும்புதே ஆரணங்கிருந்ததட்டு
செய்யான்சிறையிருக்குஞ் செங்கழனியோடையிலே
முதலைப்பங்குபாறையிலேமெல்லியரைக்கொண்டுவாரும்
கண்டுவிட்டார்தாதியர்கள் கட்டழகிபோகிறதை
உகந்தழகியென்றுசொல்லி ஓலமிட்டழுகிறார்கள்
ஆகாயம்போறாளே ஆரணங்குஉகந்தழகி [ற்றார்
என்றுசொல்லி பெண்களெல்லா மேந்திழைமாரழுகலு
அப்போதுசுவாமியவர் ஆண்டவனாரேதுசெய்தார்
சாக்கிலேயிருந்தபணஞ் சுவாமியவர்விட்டெறிந்தார்
பணத்தைமிகக்கண்டவுடன்பாவையவர்களெல்லோரும்
பாவையர்மேலாசைவிட்டு பணத்தின்மேலாசைகொண்
ஒருத்திமேலொருத்தி விழுந்துகெட்டுவாராலுற்றார் [டார்

## காத்தவராயசுவாமி தாயாரிடம் வருதல்

இப்படியிருக்கையிலே எங்கள்துரைபஞ்சவர்னம்
இதுதான்சமயமென்று எழுந்திருந்தார்பஞ்சவர்னம்
சுரக்காயின்பச்சடியாஞ் சொல்லாமற்போய்நடந்தார்
பாவற்காய்பச்சடியாம் பார்த்திருக்கப்போய்நடந்தார்
எங்கேமெள்ளவாறாராம் எங்கள்துரைபஞ்சவர்னம்
வீரசுரங்காவேரி வெற்றிபுகழோமாத்தூர்

சர்வதீர்த்தப்பொய்கைதேடி சுவாமியவர்வாருராம்
முழுகிமயிராற்றி முன்மயிரைப்பின்போட்டு
தோட்டந்திறந்தாரே தொன்னைதைத்துப்பூவெடுத்தார்
வகைக்கொருபுட்பமாக மாரிபிள்ளைதானெடுத்தார்
ஓடுகிறஜலத்திலே ஒருசொம்புநீரெடுத்தார்
தாயார்தவநிலையைச் சண்முகனார்தேடிவாரார்
பாதமதுதுலக்கிப் பட்டாலடிதுவட்டி [ந்தார்
கொண்டுவந்தபுட்பமெல்லாங் குபுகுபென்றுதான்சொரி
வாரிவந்தபுட்பமெல்லாம் வகைவகையாய்த்தான்சொரிந்
காண்கிறேனுச்சியென்று கமலமுடிவணங்க [தார்
கண்ணைத்திறந்துவிட்டாள் கட்டழகிகாமாட்சி
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைபெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
திருஷ்டிரெண்டும்பொல்லாது சீக்கிரமாயெழுந்திரடா
என் திருஷ்டிபொல்லாது யெழுந்திரடாயென்மகனே
பக்கத்தில்கைகொடுத்தால் பக்கெலும்புநோகுமென்று
நெற்றியிலேகைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டாள்
உச்சிமுகந்து வுடம்பெல்லாமுத்தமிட்டாள்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகிமுன்னே நின்றார்
மைந்தன்முகம்பார்த்து மயிலனையாள்கேட்கலுற்றாள்
எங்கேயடாபோயிருந்தாய் என்மகனேசொல்லென்றார்
நீ-போகச்சொன்னவிடத்துக்கு போய்வந்தேனென்தா
செய்யான்சிறையிருக்குஞ் செங்கழனிஓடையிலே [யே
முதலைபங்குபாறையிலே மெல்லியரைகொண்டுவந்தேன்
செட்டிபெண்ணுகந்தழகி தேன்மொழியைகொண்டுவந்
முதலைபங்குபாறையிலேகுடியமர்த்திவைத்தேனம்மா[து
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடடிகாமாட்சி
பெண்ணைச்சிறையெடுக்க போகவிடை நீகொடம்மா
என்றிவர்சொல்லையிலே ஏந்திழையாள்கேட்டுவிட்டாள்
தீண்டாநெருப்படா தெய்வப்பசுங்கிளியாள்
அண்டாநெருப்படா அருங்கிளியாள்மாலையவள்
என்னிலும்பத்தினியாளிடக்கூறு சொல்லாதே
தாயிலும்பத்தினியாள் தாரமென்றுசொல்லாதே
அண்ணன்மகள்கருப்பழகி ஆரணங்குகாளையவள்
அவளைக்கொண்டுந்தனுக்கு அழகுமணஞ்செய்வேனே
ஏழுகருப்பனுக்கு இளையவள்கருப்பழகி [ன்றாள்



நாகப்பழத்திலும் நல்லகருப்புமுண்டு
ஈச்சம்பழத்திலு மிருகண்டகருப்புமுண்டு
சாமளவானமடா தையலிளங்கொடியாள்
அம்மான்மகளை யழகுமணஞ்செய்துக்கொண்டு
இவளைவிடபெண்ணுனக்கு எங்கேயுண்டென்மகனே
அப்போதுபஞ்சவர்ண மாண்டவனுமென்னசொல்வார்
வெண்ணீறள்ளிகைகொடென்றார் விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
வெண்ணீறள்ளிகைகொடுத்தாள் மெல்லியந்தகாமாட்சி
வெண்ணீறுவட்டமிட்டு விமலிபிள்ளைவாருராம்

ஆறுவது, செட்டிப்பெண் உகந்தழகி வனம்
முற்றுப்பெற்றது.

---

ஏழாவது

## பெருமாள் மகன் கருப்பழகி வனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

குஞ்சரமாமுகனே கோபாலன்மருமகனே
தஞ்சமென்றுனைப்பணிந்தேன் தமிழறியாநேயற்கு
காடுகாத்தசுவாமிகதை களிப்புற்றுயான்பாட
பீடும்பெருவாமும் பொட்டெனவேதந்தருளால்
இன்பக்கதைபடித்து துன்பக்கடனீங்க
என்பக்கநல்லவரங்க ளியாவுமினிதோங்க

### கதையின் வரலாறு

எங்குமெள்ளவாருராமெங்கள் துரைபஞ்சவர்ணம்
கருப்பழகிவனந்தேடி கட்டழகர்வாருராம்
நந்தவனம்பூந்தோட்டம் நதிக்கரையில்வந்துநின்று

### காத்தவராயசுவாமி இராஜவடிவங் கொள்ளுதல்

ஆரைநினைக்கலுற்றாரவற்றசிந்தையிலே
கொல்லிமலைக்கன்னிகளைக் கொற்றவனார்தேடிவாரார்
வாவென்றழைத்தாரே வருகுதுபார்மறுவேஷம்
என்னவேஷங்கொள்ளுகிறாரெங்கள் துரைபஞ்சவர்ணம்

இராஜவடிவெடுத்தார் நாணயமாய்க்கொல்லிமலை
மாந்தேசி வெண்புரவி மாரிபிள்ளைபஞ்சவர்னம்
கருப்பழகிவனந்தேடி கடுகவேவாராரிங்கே
சிங்கமுலாவுகுது தையலிட கோட்டையிலே
ஐந்துகொத்துகல் மணிக ளடிபடுதேகோட்டையிலே
கோட்டைக்குமேற்புறத்தே விட்டாரம்மப்பொழுது
கல்மணிகளத்தனையும் கடுகெனவேதானடித்தார்
அசையாதமணிகளெல்லா மசையுதுகோட்டையிலே
மணிகளசையுதே மாரிபிள்ளையெங்கேவந்தார்
மாமரத்துசோலையிலே மன்னவனார்வந்து நின்றார்
எமனுடையபூதமதை யிடியாட்டுக்கிடாவாகி
எமனுடையபூதமதை காவலாயுண்டுபண்ணார்
மொண்டிநல்லபூதமதை காடையாயுண்டுபண்ணார்
மொண்டிநல்லபூதமதை காவலாயுண்டுபண்ணா
இப்படிக்குயுண்டுபண்ணி இருந்தாராங்கொல விமலை
மணிகளசையயிலே மயிலணைமார்கண்டுவிட்டார்
கருப்பழகிமுன்னேவந்து கைகூப்பிதெண்டனிட்டு
ஒருநாளசையாத மணிகளசையுதப்போ
அடித்தவனாது கண்டறிந்துவாருமென்றாள்
மாமரத்துசோலைதேடி வாறார்கள்தாதியர்கள்
கொல்லிமலைசுவாமி கொற்றவரைக்கண்டார்கள்
ஆரையாமணியடித்தார் அரிவையிடகோட்டையிலே
நான் தானடித்தேனென்றார் ராஜதுரைபஞ்சவர்னம்
அப்பாவையிடகோட்டையிலே யன்பாகவாருமென்றார்
அப்படியேநான்வாறே னரிவையரேபோங்களென்றார்
கருப்பழகிமுன்னேவந்து கட்டழகிதாதியர்கள்
அழைத்தோமம்மாராஜனை நாமவருமிங்கேவாறேனெ
அவ்வசனந்தான்கேட்டா ளரிவைகருப்பழகி [ன்றார்
சிம்மாசனம்சோடியென்றாள் தேன்மொழியாள்தாதிக
அப்படியேசோடித்தார் ஆரணங்குதாதியர்கள் [ளை

## காத்தவராயசுவாமி கருப்பழகி யந்தப்புறம் வருதல்

அந்தச்சமயத்திலே பஞ்சவர்னம்வாறாராம்
தங்கமெருவடியாம் தனிக்குமிழ்ரத்தினமாம்
முத்துமெருவடியைத் தொட்டுநடந்துவாறார்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்



இரண்டாம்படித்தளமாம் இரத்தினக்கால்மண்டபமாம்
மூன்றாமபடித்தளமாம் முத்தாலேமண்டபமாம்
நான்காம்படித்தளமாம் நாகரத்தினபேடைகளாம்
மண்டபத்தில்நுழைந்து மாரிபிள்ளையுட்கார்ந்தார்
அப்போதுதாதியர்க ளன்பாகவோடிவந்து
கருப்பழகிமுன்னேவந்து கன்னியர்கள்சொல்லுகிறார்
வந்தாரம்மாராஜனென்று மங்கையர்கூறலுற்றார்

## காத்தவராயரும் கருப்பழகியும் காடைப்பந்தயம் விடுதல்

அன்னவுஞ்சல்தனிலே யசைந்தாடிக்கொண்டுமிவள்
வளர்த்தகடா கொண்டுவா வென்றாளேமங்கையரும்
எமனென்றகடாவதனை ஆண்டவனார்முன்னேவிட்டார்
இக்கடாவுமக்கடாவு மெதிர்த்துசண்டைசெய்யுதுபார்
கருப்பழகிசண்டைகடா கண்டுதுபாரக்கடாவை
ஓரிடி யிடிக்க யிரண்டுமிரண்டுதங்கே
மீறியடிபட்டவுடன் விழுந்துதேசாமிகடா
தோற்றதுசுவாமிகடா வென்றாரேதாதியர்கள்
குலுங்கநகைத்தாளே கொம்பனையாள்கருப்பழகி
சாவலைக்கொண்டுபோய் தையலரேவிடுங்களென்றாள்
அப்படியேகொண்டுவந்து ளரிவையர்கள்விட்டார்கள்
சுவாமியுடசாவலது சத்தற்றுத்தோற்றுதே [னார்கள்
தோற்றுவிட்டாரென்றுசொல்லி தோகையர்கள்சொன்
அப்போதுகருப்பழகி ஆணழகியென்னசொல்வாள்
காடையைக்கொண்டுவந்து கன்னியரேவிடுங்களென்று
கருப்பழகிகாடைதன்னைக் கட்டழகிகொண்டுவந்து [ன்
ஆண்டவனார்காடைமுன்னே யன்பாகவிட்டார்கள்
காலாலுதைத்தது காத்தவனார்காடையது
மல்லாக்காய்விழுந்தது மயிலணையாள்காடையது
மாண்டுமடிந்தது மாதுமையாள்காடையது
கோபம்பிறக்கிறது கொள்ளிதணலாகிறது
சீறியெழுந்திருந்தாள் சிங்கத்தின்குட்டியைப்போல்
ஆக்கரித்துப்பற்கடித்து அதட்டியெழுந்திருந்தாள்

## காத்தவராயசுவாமி கருப்பழகிக்குப் பயந்தொளித்தல்

கோபித்தெழுந்ததை கொற்றவனார்கண்டுவிட்டார் [னார்
இனியிருந்தாலமோசமென்று எழுந்திருந்தாராண்டவ

பிடித்தாராம்நல்லோட்டம் பிடரியிலேகாலடிக்க
காத்தவனார்முன்னோட கருப்பழகிபின் துரத்த
ஓடியொளிக்க வொருவிடமுங்காணோமென்று [ர்
பிச்சாண்டிகோயிலண்டை புண்ணியனார்போய்ஒளித்தா
கருப்பழகிபின்தொடர்ந்து கட்டழகியவள் நுழைந்தாள்
பட்டாவுருவிக்கொண்டு பாவையருமுள் நுழைய
மோசம்வந்துநேர்ந்ததென்று விமலிபிள்ளைபஞ்சவர்ண
ஆரை நினைக்கலுற்று ரளவற்றசிந்தையிலே [ம்
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சிலெண்ணி
அண்ணன் கணபதியை அன்பாய்மனதிலெண்ணி
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
கொல்லிமலைக்கன்னிகளைக் கொற்றவனார்கைதொழுது

## காத்தவராயர் முருகர்வேஷங் கொள்ளுதல்

வாவென் றழைத்தாராம் வருகுதுவேஷமங்கே
ஆறுமுகமும் அழகுபனிரெண்டுகையும்
வேலும்வடிவமாக விளங்கினார்பஞ்சவர்ணம்
பச்சைமயிலேறிப் பத்தினியாள்முன்னே நின்றார்
கண்டாள்கருப்பழகி காத்தவனார்சீர்வடிவை
அத்தைமகன் தன்வடிவை அரிவையவள்கண்டவுடன்
அடிவணங்கிதெண்டனிட்டு அருங்கிளியாளேதுசொல்வாள்
நான்கற்றதோர்மந்திரத்தைக் கட்டழகாவுந்தனுக்கு
ஆயிரங்கோடிமந்திரம் அன்பாகத்தாரேனென்றாள்
சக்கரமுந்தான்கொடுத்தாள் தையலிளங்கொடியாள்

## காத்தவராயர் கருப்பழகியை மாலையிடச் சம்மதித்தல்

பஞ்சவிருதுகளைப் பத்தினியாள்தானெடுத்து
என்னை-மாலையிட்டுக்கொள்ளுமென்று மாதவளுரைக்க
அப்படியேநல்லதென்று ஆண்ட வனார்பஞ்சவர்ணம்
அஸ்தங்கொடுத்தாரே யந்நேரங்கன்னியற்கு
கழுவடிபூசையிலே கன்னியரேவுந்தனை நான்
கலியாணஞ்செய்துகொள்வே னென்றுமவருரைத்து
போகவிடைகொடென்று புண்ணியனார்தான் கேட்டார்
அனுப்பிவிடைகொடுத்தா ளப்போகருப்பழகி



## காத்தவராயசுவாமி தாயாரைக் காணுதல்

தாயாரிருப்பிடத்தே சுவாமிதுரைவாறாராம்
சர்வதீர்த்தப்பொய்கையிலே சண்முகனார்வந்துநின்று
ஆர்க்கத்தலைமுழுகி வேர்க்கமயிராத்தி
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துப்பூவெடுத்து
ஓடுகிறகெங்கையிலே ஒருசொம்புநீரெடுத்து
கங்காநதிதேடி காமாட்சிமுன்னேவந்து
பாதந்துலக்கிப் பட்டாலடிதுவட்டி [ந்து
கொண்டுவந்தபுட் பமெல்லாம் குபுகுபென்றுதான்சொரி
காண்கிறேனாச்சியென்று கால்மேல்முடி சாய்த்தார்

## தாயார் மகனை வாழ்த்தி யெடுத்தல்

தெண்டனிட்டமைந்தனைத்தான் கண்டுமவளெடுத்து
என்னைப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்
கண்ணிரண்டும்பொல்லாது கடுகவெழுந்திரென்று
நெற்றியிலேகைகொடுத்து நேராகத்தூக்கிவிட்டாள்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்நிற்கையிலே
எங்கேயடாபோய்வந்தா யென்மகனேசொல்லுமென்றா
கருப்பழகிவனந்தேடிக் காளைநான்போயிருந்து [ள்
மாமன்மகள் தன்னுடனே மல்யுத்தம்நான்புரிந்து
அவளைச்செயங்கொண்டு ஆச்சியரேவந்தேனென்றார்
பஞ்சாயுதவிருதைப் பார்வதிக்குமுன்னேவைத்து
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடடிதாயாரே
கன்னியைச்சிறையெடுக்க கடுகவரங்கொடம்மா
கண்டுவிட்டாள்காமாட்சி கட்டழகியேதுசொல்வாள்
மாலையென்றசொல்வசன மறந்துவிடுமென்மகனே
தாயிலும்பத்தினியாள் தாரமென்றுகூறாதே
நாலானஜாதியிலே மேலானஜாதியவள்
பாப்பாரபெண்ணாலே பாவம்வந்துநேருமப்பா
வேதியர்பெண்ணாலே வெகுமோசம்வந்துவிடும்
தூண்டிலிருக்கணுமா துடிதுடித்துச்சாகணுமா
கழுவிலிருக்கணுமா கண்டவர்களேசணுமா
உன்தகப்பன் தந்தசாப முடனேவந்துநேருமப்பா
என்ன தான்சொன்னாலு மென்செவிக்கேராதென்றார்
கழுவுவந்தாற்பாவமில்லை கன்னிவந்தாற்போதுமம்மா

தூண்டிவந்தாற்பாவமில்லை தோகைவந்தாற்போதுமம்
அப்போதுகாமாட்சி யரிவையருமேதுசொல்வாள் [மா
அஸ்தத்தால்தொட்டாலே யாணழகாவுந்தனுக்கு
சிரசுவெடித்துவிடுஞ் சீக்கிரமாய்மாண்டிடுவாய்
கையால்தொடாமலல்லோ கன்னியரைக்கொண்டுவாடா
தாயாரைக்கேட்டு சுவாமிதுரை நல்லதென்று
வெண்ணீறுதாருமென்றார் விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
ஆதிசிவன்பக்கலிலே யமர்ந்தெழுந்தவெண்ணீறு
காடுவெட்டிசுட்டெரித்த கர்த்தனுடவெண்ணீறு
தெத்துவெட்டிசுட்டெரித்த சிவனுடையவெண்ணீறு
வெண்ணீறுதானெடுத்து மெல்லியவள்கொடுத்தாள்

ஏழாவது, பெருமாள்மகள் கருப்பழகி வனம்

முற்றுப்பெற்றது.

---

எட்டாவது

## வல்லத்து மாங்காளியம்மன் வனம்

### விநாயகர் துதி-வெண்செந்துரை

மாதங்கமாமுகனே மாயன்மருமகனே
வேதங்கள்சாஸ்திரங்கள் மேவும்புராணிகனே
ஆரணியங்காத்திருந்த ஆண்டவனார்தன்கதைக்கு
தாரணியங்கொன்றநின் சரணமலர்மறவேன்
தொழுதுவணங்கினேன் சொல்லும்பொருளெழுத்தும்
பழுதுவாராமல்வரம் பாலிப்பாய்நீயெனக்கு

### கதையின் வரலாறு

வெண்ணீறுவட்டமிட்டு வாறாராய்விமலிபிள்ளை
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
கொல்லிமலைகன்னிகளைக் கொற்றவனார்தானினைத்து



### காத்தவராயசுவாமி ஈஸ்வரவேஷங் கொள்ளுதல்

தகப்பனுடரூபமது தனக்குவரவேண்டுமென்றார்
அப்படியேவந்ததுகாண் ஆதிசிவன்தன்ரூபம்
ஆதிசிவன்போலாண்டவனார்வடிவெடுத்தார்
வெண்ணீறுதூளிதங்கள் மேனியெல்லாந்தாமணிந்து
காவிகாஷாயங்கள் கனமாகத்தானணிந்து
கொழுந்தலைவங்கிதேடி கொற்றவனார்வாறாராம்
ஆயிரம்பூதங்கணை மாண்டவனார்முன்பாக [னிட்டார்
அழைத்தபணிசொல்லுமென்று ஆண்டவனைத்தெண்ட
கொழுந்தலைவங்குதன்னில் பைங்கொடியாள்மாலையரை
கொண்டுவந்துவைக்கவேணுமென்றாராங்கொற்றவனார்
அப்படியேநல்லதென்று ஆரியமாலைதன்னை
செய்யான்சிறையிருக்கு செங்கழுநீரோடையிலே
கொழுந்தலைவங்குதனில் குடியமர்த்திவைக்கவேண்டும்
ஆண்டவனைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டு
ஆரியமாலைதனை யமர்த்தியேவைப்போமென்று

### காத்தவராயசுவாமி தாயாரைக் காணுதல்

பூதங்கள்போனபின்பு புண்ணியனார்ஸ்நானஞ்செய்து
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துபூவெடுத்து
தாயார்தவநிலைக்கு சுவாமிதுரைவந்துநின்று
பூப்போட்டுதெண்டனிட்டு புண்ணியனார்நிற்கையிலே
கண்டுவிட்டாள்காமாட்சி கடுகெனவேதான்வாழ்த்தி
என்னைப்பணிந்தவகை ஏதுவகைசொல்லுமென்றாள்
வாய்திறந்தேதுசொல்வார் விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
ஆச்சாளழகுபெண்ணை ளையன்மகள்மாலையரை
செய்யான்சிறையிருக்கும் செங்கழுநீரோடையிலே
கொழுந்தலைவங்குதனில் குடியமர்த்திவைப்பதற்கு
வேணமுயற்சிசெய்து வந்தேனம்மாபெற்றவளே
அவளைச்சிறையெடுக்க அன்பாய்விடைகொடம்மா
கண்டுவிட்டாள்காமாட்சி கட்டழகியேதுசொல்வாள்
ஆர்குடியைநீகெடுக்க ஆண்டிவேஷங்கொண்டாயடா
எவர்குடியைநீகெடுக்க யிந்தவேஷமானாயடா
தாயிலும்பத்தினியாள் தாரமென்றெண்ணாதே
தீண்டாநெருப்பலவோ தெய்வப்பசுங்கிளியாள்
அண்டாநெருப்பலவோ ஆச்சாளழகுபெண்ணும்

அனுசரிக்கக்கூடாது ஆரியமாலைதன்னை
நாலானசாதியிலே மேலானசாதியவள்
பிரமகுலப்பெண்ணைத்தொட்டால் பிரமகத்திவந்துவிடும்
கன்னியந்தமாலையற்காய் கழுவிலிருக்கணுமா
தோகையந்தமாலையற்காய் தூண்டிலிருக்கணுமா
மாலையரைவிடுவுமென்று மாதாவுரைக்கலுற்றாள்
கொல்லிமலைசுவாமி குமரேசரேதுசொல்வார் [மா
தூண்டிவந்தால்குற்றமில்லை தோகைவந்தால்போதுமம்
கழுவுவந்தால்குற்றமில்லை கன்னிவரவேண்டுமம்மா
மாலைகன்னிமேலாசை மறப்பதில்லையெந்தனுக்கு
போகவரங்கொடம்மா போய்வாரேன் தாயேயென்றார்
அப்போதுகாமாட்சி ஆரணங்கேதுசெய்தாள்
நெற்றிக்கண்ணைத்திறந்து நீராயெரித்துவிட்டாள்
கோமுதலைவங்கெல்லாங் குபுகுபென்றுபற்றுதங்கே
பஞ்சவர்ணசுவாமிதுரை பரிமணத்தாங்குவந்து
கோமுதலையைக்காணமல் கொற்றவனார்தான்புலம்பி
தொட்டியத்துச்சின்னானே துரைமகனேவாருமென்றார்
வங்கணத்துசின்னானும் வந்துவிட்டான்சுவாமியண்டை
சின்னானே நீர்கேளும் சிறையையெடுத்துக்கொண்டு
செட்டிபெண்ணைகொண்டுவந்து சீராகயிங்குவைத்தேன்
கோமுதலைவங்குகனில் குடியமர்த்திவைத்தேனப்பா
ஆரிட்டசாபனையோ அடிநாளைத்தீவினையோ
எவளிட்டசாபனையோ யிவளுமெரிந்துவிட்டாள்
என்னசெய்யப்போறேனென்று யிவர்புலம்பிவாறாரே
தாயாரிடம்வந்து சுவாமியவர்தெண்டனிட்டார்
தாயார்முகம்பார்த்து சண்முகனாரேதுசொல்வார்
கோமுதலைவங்குதனில் குடியமர்த்திதான்வைத்தேன்
ஆரோநெருப்புவைத்தார் அனல்பத்தியெரியுதம்மா
அப்போதுகாமாட்சி மகனுக்கேதுசொல்வாள்
அவளை-அனுசரிக்கப்போனதினால் அக்கினியாய்மூளு
தாயென்று நீபோனால் தணிந்துவிடுவக்கினிதான் [குது
அந்தவுரைகேட்டு அப்படியேநல்லதென்று
கோமுதலைவங்குதனில் கொற்றவனார்வந்துநின்று
வங்கணத்துச்சின்னானை வாவென்றுதானழைத்தார்
அழைத்தகுரல்கேட்டு அருகேவந்தான்சின்னானும்



என்னசெய்யப்போறேனென்று எடுத்துரைப்பார்சின்னா
ஆரிட்டநெருப்போ அரிவையவள்வெந்தவிட்டாள் [னுக்கு
எவரிட்ட தீநெருப்போ எனக்கறியச்சொல்லுமென்றான்
மலையாளச்சின்னானும் மன்னவருக்கேதுசொல்வான்
மாலையைச்சிறையெடுக்க மாதாவைக்கேட்டதில்லை
காமாட்சியிட்டதனல் கடுகியங்கேவேகுதென்றார்
அவளிட்டநெருப்பாலே ஆணழகாவேகுதெனறார்
என்னசெய்யப்போறேனென்று எண்ணமிட்டுவாறாராம்
தாயாருகேவந்து சண்முகனார்தெண்டனிட்டு
என்னம்மாயென் தாயே எனைவளர்த்தமாதாவே
ஆணழகிசெட்டிபெண்ணாள் அனலாகவெந்தாளென்று
கடிந்தவுரைகேட்டு காமாட்சியேதுசொல்வாள் [ர்
என்னமோயென்மகனே எந்நேரம்போராட்டம்
மாலைமாலையென்றுசொல்லி வதைக்கிறாயெந்தனை நீ

## காத்தவராயசுவாமியைக் காளியிட மனுப்புதல்

என்னிலும்பெரியவளா யிருக்கின்றாள்கன்னியவள்
வல்லத்துமாங்காளி மயிலணையாளிருக்கிறாள்காண்
அவளாலேயாகுமடா அரிவையைச்சிறையெடுக்க
ஆச்சாவயிரமுள்ள அறுபதடிவேங்கைமரம்
தச்சனுளிநாடாமல் தானாய்ச்சமைந்ததப்பா
வாச்சுளிகள்நாடாமல் வளர்ந்தகழுமரந்தான்
சித்துளிகள்நாடாமல் சிலைபோல்வளருதங்கே
ஐந்துகிண்ணிப்பார்த்து யருங்கிளியாள்வளர்த்துவாரா
அவளை நீபோய்கேட்டா ளாரணங்கைசிறையெடுக்க[ள்
அவளேவிடைதருவாள் என்னாலேயாகாதென்றாள்
அப்படியேநல்லதென்று ஆண்டவனார்தாமெழுந்து
வெண்ணீறுதாருமென்று மெல்லியரைக்கேட்கலுற்றார்
பஞ்சாட்சரமெடுத்து பைங்கிளியுந்தான்கொடுத்தாள்
நெற்றியிலேவட்டமிட்டு நிமிலிபிள்ளைபஞ்சவர்ணம்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
உற்றுநினைத்தா ரொருகோடியோசனையை
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானழைத்தார்
சின்னானும்வந்தபின்பு சுவாமியவரேதுசொல்வார்
மாலையையனுசரிக்க மாதாவைதான்கேட்டேன்
வல்லத்துகாளியராம் மயிலணையாள் கன்னிடத்தில்

அங்கேபோடாவென்று ஆச்சியனுப்பிவிட்டாள்
ஆகையாற்சின்னானே அழைத்தேனுந்தனை நான்
அப்போதுசின்னானு மாண்டவர்க்கேதுசொல்வான்
காளிவனம்போனால் கடுகிவரப்போறதில்லை
மீண்டுவரப்போறதில்லை ஆண்டவனேயிப்பொழுது [ம்
நான்வரமாட்டேனென்ன வியந்துரைத்தான்சின்னானு
கொஞ்சமடா நீபயலே பாரமில்லையெந்தனுக்கு
என்பிறகேவாடா வென்றுரைத்தார்கொல்லிமலை

## காத்தவராயசுவாமி கிழவேடங் கொள்ளல்

வாவென்றழைத்தார் வருகுதுமறுவேஷம்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்ட கிழவனைபோ
பண்டாரகிழவனைப்போல் பாங்குடனேயுருவெடுத்து [ல்
ருத்திராட்சந்தாழ்வடமும் பத்திராட்சக்குல்லாவும்
காலில்மெருவடியாங் கையில்திருவடமாம்
மாத்திரக்கோலதனை வகையாககைபிடித்து
காதுதனில்குண்டலமுங் காஷாயந்தானுடுத்தி
வெண்ணீறு தூளிதமும் மேனியெல்லாந்தானணிந்து
தொட்டியத்துச்சின்னானுந் துரைமகனுமேதுசெய்தார்
சின்னானும்சிறுபண்டாரம்போல் சீராகவடிவெடுத்து
வல்லத்துக்காளிகோயில் முன்பாகவந்திருக்க
தூக்கியடிவைப்பார் தொண்ணூரிடம்விழுவார்
எடுத்தடிவைப்பார்களிருனூரிடம்விழுவார்
தள்ளாடித்தள்ளாடி சுவாமியங்கேவாறாரே
வல்லத்துகாளிகோயில் முன்பாகவந்திருக்க
ஆண்காற்றடிக்குதென்று ஆக்கரித்துபற்கடித்து
அப்போதுகாளியற்கு ஆண்காற்றடிக்குதங்கே
தக்கையைத்தான்கழற்றி தையலவள்விட்டெறிந்தாள்
ஆங்காரக்கோபமுடன் தக்கைவருகுதங்கே
தொட்டியத்துச்சின்னான் துரைமகனுந்தான்பார்த்து
இனியிருந்தால்மோசமென்றெழுந்தோடலுற்றார்
கொல்லிமலைசுவாமி குமரேசர்தான்பார்த்து
வருகிறதக்கைதனை மாரிபிள்ளைதானெடுத்து
சோளிலேபோட்டடைத்தார் தோகைநல்லபஞ்சவர்ணம்
தொட்டியத்துச்சின்னானுந் துரைமகனும்வந்துவிட்டா
தக்கையைக்காணோமென்று தையலந்தகாளியம்மன் [ன்



டமரகத்தைதானெடுத்து தாக்குடனேவிட்டெறிந்தாள்
அவனை-கொன்றெடுத்துவாருமென கொம்பனையாள்வி
ஆங்காரக்கோபங்கொண்டு அதட்டிவருகுதங்கே [ட்டெறிந்தாள்
டமரகம்வருகுதென்று தான்பயந்துசின்னானும்
காதவழிதூரம் கடுங்காலையோடிவிட்டான்
பஞ்சவர்ணச்சுவாமி பரிமணத்தான்பார்த்து
டமரகத்தைகைபிடித்து தாமடைத்தார்சோளியிலே
ஒளித்திருந்துசின்னானும் ஓடிவந்தான்சுவாமியண்டை
டமரகத்தைகாணோமென்று தையலந்தகாளியரும்
காதோலைதான்கழற்றி கடுகெனவேவிட்டெறிந்தாள்
காதோலைவருவதைத்தான் கண்டுவிட்டான்சின்னானும்
ஓலைவருகுதென்று ஓடியங்கேபோய்மறைந்தான்
காத்தவனார்தான்பார்த்து காதோலைதனையெடுத்து
சோளியிலேபோட்டடைத்து சூத்திரமாயங்கிருந்தார்
ஓலையைக்காணோமென்று வுத்தமியாள்காளியரும்
சூலமதையெடுத்து சுழட்டிவிட்டாளப்போது
சூலம்வரவுகண்டு துலங்கிவிட்டான்சின்னானும் [ர்
இனிபிழைக்கமாட்டோமென்றெழுந்திருந்தோடலுற்று
அத்தையுஞ்சேர்த்து அடைத்தாரேசோளிதனில்
மறுபடியும்சின்னானும் வந்துவிட்டான்சுவாமியண்டை

## காத்தவராய சுவாமியைக் காளியம்மன் விழுங்கல்

அப்போதுகாளியரும் ஆங்காரக்கோபங்கொண்டு
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தத்தளிக்க
பூமிகிடுகிடென்ன பூலோகந்தத்தளிக்க
அதட்டியேபற்கடித்து ஆங்காரங்கொண்டுவாறாள்
காளியிதோவாறாளென்று கண்டுரைக்கச்சின்னானும்
காதவழிதூரங் கால்நடுங்கியோடலுற்றார்
அஞ்சாமற்றானிருந்தா ராண்டவனார்பஞ்சவர்ணம்
ஆரையாவென்றுசொல்லி யதட்டியேவாய்திறந்து
இவரை-வாரிவிழுங்கினாலே வல்லத்துமாங்காளி
எடுத்துவிழுங்கிடவே யேதுசெய்தார்பஞ்சவர்ணம்
ஓடியுலாவிக்கொண்டு வுத்தமியாள்தன்வயிற்றில்
ஈரற்குலைதனிலே யெட்டியுதைத்தாராம்
இவளுக்கு-தடுக்கமுடியவில்லை தையலந்தகாளியற்கு
உற்றுநினைத்தாளே ஒருகோடிபுத்திகளை

அஞ்சனம்போட்டுமவ ளாராய்ந்துபார்க்கையிலே
கொல்லிமலைசுவாமி குமரேசனென்றறிந்து
காத்தான்பரிமளமே கழுகுலிபெற்றவனே
நேற்றுரைத்தசந்தனமே நிமிலிபிள்ளைவாருமென்றாள்
வாடாமகனேயென்று மயிலனையாள் தானழைத்தாள்
அப்போதுபஞ்சவர்ன மாண்டவனார்வாருரே
குழந்தைவடிவாக கொல்லிமலைவந்துவிட்டான்
கேட்டவரந்தந்தாயானால்கிளிமொழியேநான்வருவேன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாள்காளியரும்
என்னவரம்வேண்டுமென் மகனேகேளுமென்றாள் [ன்
கேட்டவரந்தாரேனென கிளிமொழியே கைபோடென்றா
அப்படியேதாரேனென்று ஆரணங்குகைகொடுத்தாள்
அவள்-கைதனிலேவந்துவிட்டார்கட்டழகர்பஞ்சவர்ன
கண்டுமனமகிழ்ந்தாள் காளிபெருஞ்சூலி [ம்
காத்தவரைத்தான்பார்த்துக் காளியருமேதுசொல்வாள்
ஆர்குடியைநீகெடுக்க ஆண்டிவேஷமாகிவந்தாய்
எவர்குடியைநீகெடுக்க யிந்தவேடங்கொண்டுவந்தாய்
அப்போதுபஞ்சவர்னம் ஆண்டவனாரேதுசெய்தார்
எடுத்தார்சுயரூபம் ஏந்திழையாள்முன்னேவந்து
காண்கிறேன்பாதமென்று கால்மேல்முடிசாய்த்தார்
வாழ்த்தியெடுத்துமவள் மார்போடேதானணைத்து
என்னவேண்டியிங்குவந்தாய் எனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுகொல்லிமலை அருங்கிளிக்கேதுசொல்வார்
மாலைதனைசிறையெடுக்க மாதாவைத்தான்கேட்டேன்
தன்னாலேயாகாதென் றுன்னிடத்திற்போடாவென்றாள்
ஆகையாலுன்னிடத்தி லடுத்துவந்தேன் தாயேயென்றா
அதுகேட்டுகாளியரு மாண்டவருக்கேதுசொல்வார் [ர்
உனக்கென்றுவளருதடா உத்தமனேகழுமரங்கள்
கழுவிலிருக்கனுமா காய்ந்துலர்ந்துபோகனுமா
துண்டிலிருக்கனுமா துடிதுடித்துச்சாகனுமா
தகப்பனிடசாபமது சரியாய்பலித்ததிப்போ
என்றுமிவள்சொல்லையிலே யேதுசெய்வாராண்டவனார்
கழுமரஞ்சாருக்கே காரிழைவேண்டுமென்றார்
அப்போதுகாளியம்ம ளன்பாயெழுந்திருந்து
தரையில்விழுகாமல் தனஞ்செயனைவெட்டவேண்டும்
முப்பூசைகொடுக்கவேண்டும் மூத்தமகனாரே



அப்போது ஆண்டவனா ரங்கெனவேயேதுசெய்தார்
காளிசொல்தட்டாமல் கனமானபூசைதந்து
கள்ளிகாட்டின்பூதங்களை கண்காட்டித்தானழைத்தார்
அப்படியேவந்ததங்கே ஆயிரம்பூதங்கள்தான்
வாள்கொண்டுவெட்டினார் வகையுடனேகழுமரத்தை
உதிரங்களோடுகுது வுத்தமனாவெட்டையிலே
விபூதிதான்கொடுத்து அழகானவண்டிதனில்
வண்டியின்மேலேற்றி வாராராம்பஞ்சவர்னம்
பாசகுருசாலையிலே பாரமணல்மேடையிலே
கொண்டுநிறுத்தினார் கொல்லிமலைகழுமரத்தை
அப்போதுவல்லத்து அருங்கிளியாளேதுசொல்வாள்
மணப்பாக்கத்தாச்சாரி மன்னவரேழுபேர்கள்
அவர்களுக்குப்பிள்ளைவர மன்பாகநீகொடுத்து
அவர்களையழைத்துக்கொண்டு அடைவுடனேவந்தாக்கால்
அவர்கள்-சோதித்திடுவார்கள் சொற்பெரியகழுமரத்தை
போய்வாமகனேயென்று பொற்கொடியாள் நீறுமிட்டா
வெண்ணீறுவட்டமிட்டு விமலிபிள்ளைவாராராம் [ள்
மஞ்சையப்பன்கட்டிவைத்தமண்டபத்தில்வந்துநின்று

## காத்தவராயசுவாமி ருத்திரவேடங் கொள்ளல்

ஆரைநினைத்தாரா மளவற்றசிந்தையிலே
தகப்பனைநெஞ்சில்வைத்து தாயைமனதிலெண்ணி
வாவென்றழைத்தாராம் வருகுதுமறுவேடம்
கங்காளருத்திரர்போல் கடுகெனவேவேடங்கொண்டார்
சிவவேடந்தான்பூண்டு சீரானவடிவெடுத்து
பதினெட்டுமுத்திரையும் பாங்காகத்தான்தரித்து
ஆனந்தகவிபாடி ஆண்டவனார்வாராராம்
மணப்பாக்கந்தேடியல்லோ வாராரேயாண்டவனார்
திருவாத்திமரத்தடியில் சுவாமியவர்வந்தமர்ந்தார்
அங்கிருந்ததெய்வங்களை ஆண்டவனார்தான்துதித்து
கற்பூரதீபங் கடுகெனவேதான்கொடுத்து
சொர்னங்களைவாரிச் சுவாமிக்குத்தானமென்றார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
அங்கிருந்தமன்னரெல்லா மடிதண்டமாகவோடிவந்து
இவன்காலில்சரணமென கண்டவர்கள்தெண்டனிட்டார்

## காத்தவராயர் கம்மாளப்பெண்களுக்குப் புத்திரனளித்தல்

மணப்பாக்கத்தாச்சாரி மன்னவனார்தேவியர்கள்
செப்புக்குடங்கொண்டு ஜலமெடுக்கவாரார்கள்
சுவாமியைக்கண்டவுடன் சரணமென்றுதான்தொழுதார்
வந்துபணிந்தவரை மாரிபிள்ளைகண்டுவிட்டார்
வெண்ணீறுபஞ்சாட்சரம் பெண்களுக்கள்ளியிட்டார்
வெண்ணீறுவட்டமிட்டு மெல்லியர்கள்வாரார்கள்
பத்துப்படிதாண்டி பைங்கொடிமாரேழுபேரும்
தண்ணீறுமொள்ளையிலே தான்கெர்ப்பமானார்கள்
பத்துமாதஞ்சென்றவர்போல் பாலகரையீன்றெடுத்தார்
மைந்தரையெடுத்துக்கொண்டு தங்கள்மனையில்வந்து
பாலிப்பாய்போட்டு படுக்கவைத்தார்மைந்தர்களை
அந்தச்சமயத்தில் ஆணழகர்தச்சர்வந்தார்
கால்கைகள்சுத்திசெய்து கட்டழகருள் நுழைந்து
குழந்தைகளைப்பார்த்து கொற்றவர்களேதுசொல்வார்
ஏதடி குழந்தையென்று யின்பமுடன்கேட்கலுற்றார் [இ
ஈன்றெடுத்துவந்தோமென் றிளங்கொடிமார்தாமுரைத்
கைலைதனிலிருந்து காத்தரவரிங்குவந்து
அவரளித்தார்வெண்ணீறு யருங்குழந்தையீன்றெடுத்தோம்
அவரெங்கேயிருப்பாரென் றிவர்களைக்கேட்கலுற்றார்
திருவாத்திமரத்தடியில் சுவாமியிருப்பார்கள்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏழுபேர்தச்சர்களும்
சொர்ணங்கள்தாமெடுத்து சுவாமியண்டைவாரார்கள்
சுவாமிதனைக்கண்டவுடன் சொர்ணம்வைத்துதெண்டனி
வாழ்த்தியந்தபஞ்சவர்ணம் திருநீறு அள்ளியிட்டு [ட்டார்
பிள்ளைவரம்நான்கொடுத்தேன் புண்ணியரேவுங்களுக்கு
எனக்கு-கழுமரங்கள்சோடிக்க கட்டழகாவாருமெனறார்
இதோவந்தோமையாவென்று ஏழுதச்சர்வாறார்கள்
பாச்சூருசாலைமணல் பார்மேடைவருகையிலே
வல்லத்துக்காளியரும் வந்துவிட்டாளங்கெனவே
கழுமரங்கள்சோடியென்றாள் கட்டழகிகாளியரும்
அப்போதுதச்சர்களும் அழகாகச்சோடிக்கின்றார்
முதற்படிமாணிக்கமா மிரண்டாம்படிநாகரத்தினம்
மூன்றாம்படிமுத்துகளாம் நான்காம்படிநவரத்தினம்



ஐந்தாம்படிபச்சைகளாம் ஆறாம்படிகோமேதகம்
ஏழாம்படிநீலவர்ணம் இன்பமுடன்செய்துவைத்து
எட்டாம்படிதளத்தில் என்னென்னவைக்கலுற்றார்
கால்வைக்குமிடங்களிலே கச்சாணிமாட்டியங்கே
கால்வைக்குமிடங்களிலே கடையாணிபோட்டார்கள்
பக்கம்பதினாறெலும்புக்குப் பதினாறுமுள்ளுருவ
நாபியில்பதிந்தவாசி நடுவுச்சியுருகிடவே
இப்படிசெய்யுமென்றா ளேந்திழையாள்காளியரும்
காளிமனதின்படி கழுமரங்கள்செய்யலுற்றார்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
சூதிரமாகவல்லோ செய்தார்கழுமரத்தை
கழுமரத்தினமேலாகக் கட்டுமென்றாள்கூண்டுகளை
மாலையர்க்கொருகூண்டு மங்கையர்க்கொருகூண்டு
உகந்தழகிக்கொருகூண்டு உத்தமரேகட்டுமென்றார்
மூவருக்கும்கூண்டுகட்டி முடித்துவிட்டார்தச்சரங்கே
இப்படியாய்க்கழுமரங்க ளின்பமுடன்சொப்பனிட்டார்
கழுமரத்தைசொப்பனிட்டு காத்தவனார்வாராரே
தாயார்தவநிலைக்கு சுவாமிதுரைவந்துநின்று
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
தெண்டனிட்டதன்மகனை கண்டுவிட்டாள்காமாட்சி
என்னடாவென்மகனே என்னேரப்போராட்டம்
மாலைமாலையென்றுசொல்லி வதைக்கிறாயேயெந்நேரம்
அந்த-மாலையைச்சிறையெடுக்க மன்னவனேயாகுமோடா
ஆனாலொருவார்த்தை அன்பாகச்சொல்லுகிறேன்
ஆயிரம்வேதியரு மவர்களிடதேவிகளும்
ஆசாரந்தான்குலைந்து அதிசீக்கிரமெடுத்துவந்தால்
மாலையைச்சிறையெடுக்க வரங்கொடுப்பேன்மன்னவனே
என்றுசொல்லிக்காமாட்சி எழுந்திருந்துபஞ்சவர்ணம்
அப்படியேபோய்வாரே னனுப்பிவிடைதாருமென்றார்
வெண்ணீறுகைகொடுத்தாள் விமலியந்தகாமாட்சி
வாங்கியந்தவெண்ணீற்றை வட்டமிட்டார்நெற்றியிலே

எட்டாவது, வல்லத்து மாங்காளியம்மன் வனம்
முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது

# வேதியர்களை ஆசாரங்குலைத்த வனம்

### விநாயகர் துதி-வெண்செந்துரை

பொங்குமதசலங்கள் பொழியும்புழைக்கையனே
தங்குமெனக்குவரந் தாருமழகையனே
அந்நாளில் மாங்கனிக்காயரனைவலமாக
முன்னாகவந்தவனே மொழியீசனறந்தவனே
சுராங்காத்தார்சுவாமிகதை தொந்தமாயான் பாட
கரங்கோத்துகைகுவித்தேன் காத்தருள்வாய்கைம்மாவே

### கதையின் வரலாறு

வெண்ணீறுவட்டமிட்டு விமலிபிள்ளைவாறாரே
உப்பங்கிடாரவழி வுத்தமனார்தாண்டியல்லோ
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
சின்னானைத்தானழைக்க சேரவந்துசின்னானும்
அடிமையழைத்ததென்ன ஆண்டவரேசொல்லுமென்
புத்தூரகரமது போகவேணுஞ்சின்னானே [றார்
என்கூடவாவென்று இருவருமேதுசெய்தார்

### காத்தவராயசுவாமி மாறுவேஷங் கொள்ளுதல்

என்னவேஷங்கொள்கிறார் எங்கள்துரைபஞ்சவர்ணம்
கள்ளிக்காட்டுபூதங்களை கண்காட்டிதாமழைத்தார்
அப்போதுபூதங்க ளடங்கலுமோடிவந்து [மென்று
அடிமைகொண்டவேல்முருகா அழைத்தவகைசொல்லு
பூதங்கள்கேட்கையிலே புண்ணாயனாரேதுசொல்வார்
மாணக்கச்சேரியிலே மன்னாரந்தவேதியற்கு
பண்ணைப்பறைச்சிகளை பாங்காககொண்டுவந்து
ஆயிரம்வேதியற்கு ஆயிரம்பேர்களுக்கு
வேதியர்தன்னருகே கொண்டுவந்துவையுமென்றார்
ஆயிரம்வேதியர்க ளவருடையபெண்களை
அன்னத்துளசிமுதல் ஆயிரம்பேர்களுக்கும்
பறைச்சேரிபறையர்களைப் பார்ப்பனர்கள்தன்னிடத்தில்
ஒருத்திக்கொருவனாக வுறங்கவையுமென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு ஆண்மையுள்ளதெய்வமெல்லாம்



சுவாமியுடசொற்படிக்கு சீக்கிரமாய்த்தான்முடித்து [ல்
பறைச்சிகளைக்கொண்டுவந்து பார்ப்பார்கள்தன்னிடத்தி
றங்கவைத்துச்செய்துமல்லோ துரைமகனார்பூதமது
அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனாரேதுசெய்தார்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
அன்றையராத்திரியில் ஆயிரம்வேதியர்கள் [ர்
பறைச்சிகள்தம்மிடத்தில் படுத்துக்கொண்டுதாமிருந்தா
பாப்பாத்திதம்மிடத்தில் பறையர்படுத்திருந்தார்
கங்குல்விடிந்துதங்கே கதிரோனும்வந்துதித்தார்
அப்பாபட்டர்தாமெழுந்து அன்னத்துளசியம்மா
முற்றபொருக்கவல்லோ மெல்லியரையெழுப்பலுற்றார்
ஸ்நானஞ்செய்யப்போகவேண்டும் தையலெழுந்திரடி
என்றிவர்சொல்லையிலே கண்டுவிட்டாள்பறைச்சி
என்னடாதலைமகனே இப்பேச்செங்கேகற்றாய்
அப்பாபட்டர்தன்வீட்டில் அடிமைப்பறையாநீ
பார்ப்பாரப்பேச்சுகளை பறையாநீயெங்குகற்றாய்
என்றுயிப்பறைச்சி எதிர்வார்த்தைசொல்லையிலே [ளை
பார்த்துமந்தவப்பாபட்டர்பறைச்சிசொன்னவார்த்தைக
அன்னத்துளசியென்ன அதிசயமாய்ச்சொல்லுகிறாள்
பறைச்சிபோல்வார்த்தைகளை பைங்கொடியேசொல்லுகிறாய்
என்றிவர்சொல்லையிலே இளங்கொடியாள்தான்கேட்டு
இதுவென்ன அன்னீதம் என்னிடத்தில்நீர்படுத்தீர்
வாழ்பறைச்சியென்னிடத்தில் வந்துபடுத்தீரோ
எந்தவூர்நீரு மெங்கிலும்நான்கண்டதில்லை
என்றிவள்சொல்லையிலே இதுகேட்டுஅப்பாபட்டர்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தார்
பறைச்சிமுகம்நோக்கி பட்டரெடுத்துரைப்பார்
எங்கும்நீசொல்லாதே என்றெழுந்தோடலுற்றார்
மாணக்காணச்சேரிவிட்டு வாறாரேஅப்பாபட்டர்
புத்தூர்தனிலிருக்கும் பொற்கொடிபிராமணத்தி
அன்னத்துளசியவள் ஆரணங்குதாமெழுந்து
என்னகாணப்பாபட்டா யின்னமுறங்குகின்றீர்
ஸ்நானங்கள்செய்துமல்லோசெபதபங்கள்தான்முடிக்க
எழுந்திருங்களென்றுசொல்லிஎழுப்புகின்றவேளையிலே
கண்டுவிட்டான்பறையன் கடுகெனவேயேதுசொல்வான்
என்னடியென்பெண்சாதி எங்குகற்றாயிப்பேச்சு

பாப்பாத்திபோலேயல்லோ பாஷைகள்பேசுகிறாய் [ட்டு
என்றுமிவன்சொல்லையிலே இளங்கொடியாள் தான்கே
என்னடாபண்ணைக்காரர் என்னிடத்திலேன்படுத்தாய்
வந்துபடுத்திருந்த வகையெனக்குச்சொல்லுமென்றாள்
பாப்பாத்திதானுரைக்க பறையன்மனங்கலங்கி
கெட்டேன்சிவன்செயலோ கேடுவந்துநேர்ந்தது
மாங்காணிச்சேரிதாண்டி வாரானேபண்ணைக்காரன்
இப்படியாய்வேதியர்கள் எல்லோரும்சென்றுவிட்டார்
பறைச்சியருகிருந்து பார்ப்பார்களோடிவாரார்
பாப்பாத்திவீட்டிலிருந்து பறையரெல்லாம்வாறார்கள்
ஆசாரந்தான்குலைந்த ஆயிரம்வேதியர்கள்
இதுவென்னகாரணமோ என்றார்கள்வேதியர்கள்
பறைச்சிகள்தன்வீட்டில் நாம்போய்படுத்திருந்தோம்
இப்படிக்குவந்ததென்ன ஈஸ்வரனார்தன்செயலோ
ஆரியப்பூராஜன்கண்டால் ஆக்கினைகள்வந்துவிடும்
இரங்கரிடகோவிலுக்கு நாமெப்படிசென்றிடுவோம்
ஆசாரியருடனே யறிக்கையிடுவோமென்று
ஆறாயிரம்வேதியரும் அவர்களிடதேவியரும்
காசிநதிதேடி கடுகியேவாறார்கள்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுவாரார்கள்
காசிக்குருக்களண்டை கர்மந்தொலைக்கவாரார்
புத்துாரகந்தாண்டிப் புண்ணியர்கள்வாராரென்று
அஞ்சனத்தில்தாமறிந்து ஆண்டவனாரேதுசெய்தார்
மாமன்மாமிவாராரென்று மாரிபிள்ளையேதுசெய்தார்

## காத்தவராயர் மாறுவேஷங் கொள்ளல்

இதுதான்தருணமென்று எடுத்தார்மறுவேஷம்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்
பழுத்தகிழமானார் பஞ்சவர்ணசுவாமியவர் [போல்
காசிக்குருக்களைப்போல் கடுகவடிவெடுத்தார்
பூநூல்செபமாலை புண்ணியனார்தான்தரித்து
பஞ்சாங்கங்கைபிடித்துப் பல்லக்குமீதேறி
பூதங்கள்சேவகரைப் புண்ணியனாருண்டுபண்ணார்
முத்திரைபில்லைசேவகரைப்போல் மூன்றுபூதமுண்டுப
சிஷப்பிள்ளைபோலாகச் சின்னானையுண்டுபண்ணார் [ண்ணார்
திருவாங்கப்பெட்டிதனைச் சிஷப்பிள்ளைகைகொடுத்து



மாட்டுத்தோல்தன்னால் வரிசையுள்ளபூநூலும்
ஓலைவாளபஞ்சாங்க முத்தமனார்கைபிடித்து
காசிநல்லசுப்பையைப்போல்கருஞ்சிஷர்கொண்டுவந்து
பூதத்தின்மூத்திரத்தைப் புட்டிதனில்தான்பிடித்து
இத்தனைவஸ்துக்களை மெத்தெனவேசேகரித்து
பல்லக்கின்மேலேறிப் பார்வதியாள்புத்திரனார்
பூதங்கள்முன்சூழப் பிசாசுதுடர்ந்துவர
காசிவழிதேடிக் கட்டழகர்வாறாரே
பக்கத்தில்சின்னானும் பாங்குடனேவாரானே
வேதியர்கள்வைத்ததொரு வழிதனிலேயேதுசெய்தார்
மண்டபங்களுண்டுபண்ணி மாரிபிள்ளைவீற்றிருந்தார்
மேளமுழக்கத்துடன் விமலிபிள்ளைவீற்றிருந்தார்

## காத்தவராயசுவாமியை வேதியர் காணல்

அந்தச்சமயத்தில் ஆறாயிரம்வேதியரும்
குருக்களண்டைதாம்போய் கொள்ளுவோம்தீட்சையெ
வருகின்றவேளையிலேமண்டபத்தைக்கண்டார்கள் [ன்று
ஆரென்றுசொல்லியவ ரன்பாகக்கேட்கலுமே
காசிக்குருக்களென்று கண்டவர்கள்தாமுரைக்க
அப்போதுவேதியர்க ளாச்சரியங்கொண்டுமல்லோ
நாம்செய்துவந்தபாக்கியமோ நல்லதவப்பயனோ
காசிக்குருக்களிங்கு கண்ணெதிரேவந்தாரே
குருக்களிடத்திலதைக் கூறுவோமென்றுசொல்லி
எண்ணுதுமெண்ணி யிருக்கின்றவேளையிலே
சர்க்கரைநெய்தனக்குச் சிற்றெறும்புற்றதுபோல்
தேன்குடத்திலீக்கள்வந்து ஆழ்ந்திருக்கிறபாவனைபோ
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்வேதியரும் [ல்
பஞ்சவர்ணசுவாமிதன்னைபக்கம்படைசூழ்ந்துகொண்டா
வந்திருக்கும்வேதியரை மாரிபிள்ளைதான்பார்த்து [ர்
இருங்களிருங்களென்று யிவர்களைக்கையமர்த்தி
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானழைத்து
இவர்கள்-எங்குவந்தாரென்றுசொல்லியிதமாகக்கேளுமெ
சின்னானதைக்கேட்டு சீக்கிரமாயோடிவாறான் [ன்றார்
என்காணும்வேதியரே எங்குவந்தீர்சொல்லுமென்றான்
தீட்சைபெறவேண்டுமென சாமியண்டைவந்தோமென்
என்னதீட்சைவேண்டி யிங்குவந்தார்வேதியர்கள் [றார்

அதுகேட்டுசொல்லுமென் றனுப்பிவிட்டார்சின்னானை
என்னதீக்ஷைவேண்டிவந்தீர் எடுத்துரையுமாண்டவற்கு
குருக்களண்டைசொல்லுதற்கு கூசுதென்றார்வேதியர்க
சின்னானதுகேட்டு சீக்கிரமாயேது சொல்வான் [ள்
ஆண்டவனார்முன்புரைக்க அஞ்சுதென்றார்வேதியர்கள்
காத்தவனார்தான்கேட்டு கடுகவெடுத்துரைப்பார்
ஆயிரம்வேதியரு மச்சம்பயமொழிந்து
சந்தேகமில்லாமல் தாமுரைக்கவேணுமென்றார்
கூட்டமுடன்வேதியர்கள் சொல்லிமலைக்கேது சொல்வார்
பறைச்சிகள் தம்மிடத்தே பிராமணர்படுத்திருந்தோம்
பார்ப்பனியிடங்களிலே பறையர்படுத்திருந்தார்
இத்தோஷந்தீருதற்கு யிங்குவந்தோம்தீட்சைகொள்ள
இவ்வசனங்கேட்டுமவ ரேதுசெய்தாராண்டவனார்
யாகம்வளர்த்துமென்று மங்கிருந்தசின்னானை
ஓமம்வளர்த்தினானே யுடனேகச்சின்னானும்
பஞ்சவர்ணசுவாமிதுரை பக்குவமாயேதுசெய்தார்
முன்குடுமிதான்பிடுங்கி யக்கினியில்போடுமென்றார்
சுவாமிகுடுமிதனைத் தான்போடகண்டவனும்
சின்னான்குடுமிதனைச் சிறப்பாகவேபோட்டான்
சுவாமிகுடுமிதனை யக்கினியில்போடக்கண்டு
ஆறாயிரம்வேதியர்க ளடங்கலுமோடிவந்து
தங்கள்குடுமிதனைத் தான்பிடுங்கிப்போட்டார்கள்
சுவாமியவர்பூநூலைச் சிறப்பாகபோட்டுவிட்டார்
சின்னானும்பூநூலைச் சிறப்பாகபோட்டுவிட்டான்
வேதியர்கள்தான்பார்த்து வேதியர்களோடிவந்து
பூநூல்கழற்றிப் போட்டார்நெருப்பதனில்
பஞ்சாங்கந்தானெடுத்துப் பஞ்சவர்ணம்போட்டுவிட்டார்
ஆயிரம்வேதியர்க ளன்பாகத்தான்பார்த்து
காலங்கண்டபஞ்சாங்கம் கடுகவெடுத்தெறிந்து
அக்கினியிற்போட்டுவிட்டா ரன்பாகவேதியர்கள்
தலையிலிருந்தகுல்லா சுவாமியவர்தான்போட்டார்
அதைப்பார்த்துசின்னானு மப்பொழுதேபோட்டுவிட்டா
சங்குசக்கரம்வைத்திழைத்த சகலாத்துகுல்லாவை [ர்
அப்பாபட்டர்தான்முதலா யனைவருமபோட்டுவிட்டார்
இந்தநல்லவேதியர்க ளவர்களுமங்கிருக்க
வெந்துதணியுதுபார் விதமான அக்கினியில்



சின்னானைக்கண்காட்டி தேவிபிள்ளையேதுசெய்தார்
வெண்ணீறுதானெடுத்து சின்னானுங்கைகொடுத்தார்
திருவாங்கபெட்டிதனைச் சுவாமியவரெடுத்து
ஆறாயிரம்வேதியற்கு அன்பாககைகொடுத்தார்
வேதியர்கள்தாம்வாங்கி வேந்தர்கள்பார்க்கையிலே
என்னடாவெங்குபட்டா யேதடாசோமுபட்டா
கால்கையாயிருக்குதென்று கலக்கமிட்டார்வேதியர்கள்
விபூதியல்லவிது வேந்தனேமச்சமடா
அப்படிச்சொல்லாதே யபசாரம்வந்துவிடும் [டார்
என்றிவர்கண்ணிலேயெடுத்துமெள்ளவொத்திக்கொண்
விபூதியையெடுத்து விட்டெறிந்தாரக்கினியில்
சின்னானும்விபூதியைச் சீக்கிரமாய்விட்டெறிந்தான்
வேதியர்களப்பொழுது விட்டெறிந்தாவிபூதியை
நல்லநல்லதீர்த்தமென்று சுவாமியவர்பொசித்தார்
சுவாமிபொசிக்கையிலே சின்னானும்வாரியுண்பான்
அப்போதுவேதியர்க ளடங்கலுங்கைநீட்ட
பூதத்தின்மூத்திரத்தைப் புண்ணியனார்வார்க்கலுற்றார்
சாப்பிடுங்களென்று சொல்லிதனஞ்செயனார்தாமுரைத்தா
ஆறாயிரம்வேதியரு மன்பாய்பொசிக்கலுற்றார் [ர்
நல்லதோர்பூமாலை சுவாமிதரித்துக்கொண்டார் [டான்
வணங்கத்துச்சின்னானும் மன்னவனும்தரித்துக்கொண்
மாட்டுத்தோல்பூநூலை மறையவர்க்குத்தான்கொடுத்தார்
பூநூல்தரித்துக்கொண்டார் புகழாகவேதியர்கள்
தலைபஞ்சாங்கமதை நாயகனார்கைபிடித்து
இன்னமொருபஞ்சாங்க மெடுத்துக்கொண்டான்சின்னா
காத்தவனாரப்பொழுது கடுகவேயேதுசெய்தார் [னும்
ஓலைவாளபஞ்சாங்க முத்தமற்குகைகொடுத்து
மாட்டுத்தோல்குல்லாவை மறையவர்க்குதான்கொடுத்து
எடுத்துத்தரியுமென்று ஏதுசெய்தார்பஞ்சவர்ணம்
ஆயிரம்பொன் அபசாரம்வையுமென்றார்
ஆண்டவனார்சொற்படியே யபசாரம்வைத்தபின்பு
வேதியர்க்குபஞ்சவர்ணம் வேந்தரெடுத்துரைப்பார்
குளத்தங்கரையருகில் கொற்றவனார்போயிருந்து
விபூதிபஞ்சாங்கம் விளங்குபூநூலுடனே
ஒவ்வொருவேதியர்க்கு ஆயிரந்தலைமுழுக்காய்
பூநூலிருக்கவேண்டும் குல்லாவைக்காக்கவேண்டும்

பஞ்சாங்கந்தேய்க்கவேண்டும் பாவங்கள்தீரவேண்டும்
ஆறாயிரம்வேதியரும் ஸ்நானங்கள்செயயுமென்ன
சுவாமியுரைகேட்டு தான்மகிழ்ந்துவேதியர்கள்
ஆற்றருகில்போயிறங்கி அடங்கலும்ஸ்நானம்செய்தார்
ஆயிரமுழுக்காக ஆண்டவனார்சொற்படிக்கு
ஸ்நானங்களானபின்பு தாங்கள்தரையில்வர
தலையிலிட்டகுல்லாக்கள் சலங்களையுட்புகுந்து
மார்பிலிட்டபூநூலும் வகையாகப்பெருகுதங்கே
கைதனிலேபஞ்சாங்கம் கனநாற்றமாகிடுமாம்
என்னகாண்பட்டார்களே யிதுநாற்றநாறுவதேன்
பூநூலிதுவல்லகாண் பெருமாம்சத்தோல்தான்
நேமங்கள்தான்குலைந்தோம் நிஷ்டைகளும்பாழாச்சு
விபூதியல்லவடா திருவாங்கப்பெட்டி
தீர்த்தமதுவல்லவடா திருநீறுதான்கொடுத்தார்
இவர்-காசிக்குருக்களல்ல கனமழிக்கவந்தவர்காண்
ஆரியமாலைதனை அவளையெடுத்துப்போக
வந்ததொருகள்ளனிவ னென்றுமனதிலெண்ணி
இனியிருந்தால்மோசம்வரும் எழுந்திருங்கள்போவோ
ஆரியப்பூராசன் அனர்த்தம்விளைந்துவிடும் (மென்று
ஐயோசிவனேயென்று அழுதுமந்தவேதியர்கள்
பத்தூரகரந்தேடிப் புண்ணியரும்வந்துவிட்டார்
அவரவர்களரண்மனையில் அமர்ந்திருந்தார்வேதியர்க
இப்படிக்குத்தானிருக்க எங்கள்துரைபஞ்சவர்னம் [ள்
சின்னானைத்தானழைத்து சீக்கிரமாயேதுசொல்வார்
மலையாளம்போடாவென்று மாரிபிள்ளைவாராராம்
தாயார்தவநிலைக்கு சுவாமிதுரைவாராராம்
ஓடுகிறகெங்கையிலே ஒருசொம்புநீரெடுத்து
வண்ணலட்சம்புட்பங்களை மாரிபிள்ளைகைபிடித்து
ஆலம்வேரோசிறிது ஆலமரமோபெரிது
பக்கம்பதினாறுகிளை பத்துலட்சம்கோடியுண்டு
அந்தமரத்தருகே ஆச்சித்தவமிருந்தாள் [கொண்டு
கண்ணிரண்டுமூடிக்கொண்டு கைகள்ரெண்டுமேந்திக்
அரனேசிவனேயென்று ஆண்டவனைத்தோத்தரித்து
அந்தசமயத்தில் அங்கேவந்துகாத்தவனார்
பாதமதுலக்கிப் பட்டாலடிதுவட்டி
புஷ்பங்கள்தான்சொரிந்து போட்டார்திருமுடியை



சரணமென்றுதெண்டனிட்டு சாய்த்தார்திருமுடியை
வந்துபணிந்தவரைக் கண்டுவிட்டாள்காமாட்சி
வாயாலேவாழ்த்தியவள் பார்போடேதானணைத்து
பூங்காவனங்களது புட்பவனங்காத்தவனே
வந்துபணிந்தவகை யெனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுபஞ்சவர்னம் ஆச்சியருக்கேதுசொல்வார்
ஆயிரம்வேதியரை யவருடையதேவிகளை
நியமமதுகுலைத்துதா னிஷ்டையடைந்துவந்தேன்
என்றுமவருரைக்க ஈஸ்வரியாள்தான்கேட்டு
முத்துவிரல்சுற்றி முகத்தின்மேல்கையைவைத்தாள்
தங்கவிரல்சுற்றி தாடையில்கையைவைத்தாள்
பவழவிரலைச்சுற்றி பார்வதியாளேதுசெய்தாள்
ஆர்குடியைநீகெடுக்க ஆண்டிவேஷங்கொண்டாயடா
எவர்குடியைநீகெடுக்க யிந்தவேஷங்கொண்டாயடா
நான்-கட்டிவரச்சொன்னால் நீவெட்டியேவந்திடுவாய்
ஏதுக்குஞ்சமர்த்தனடா யேதுக்கும்வல்லவனடா
பெண்ணென்றஆசைதனைப் போட்டுமறந்துவிடு
கன்னியென்றஆசைதனைக் கடக்கயெறிந்துவிடு
ஆரியப்பூராசாவி னாக்கினைகள்மெத்தவுண்டு
துர்போசிராசாவும் துளசிங்கராசாவும்
மூன்றுபேர்ராசாக்க ளொன்பதுபேர்மந்திரிகள்
வலியன்சிவப்புடையான் மன்னன்தலையாரி
அவனுடையகாவலிலே அதிகாரமெத்தவுண்டு
அடிமேலடியெடுப்பான் அழகுசிவப்புடையான்
முள்மேலடியெடுப்பான் முனைவேலிசிவப்புடையான்
கல்மேலடியெடுப்பான் கட்டழகன்சிவப்புடையான்
அவனுடையகாவலது அருமகனேசொல்கிறேன்கேள்
சிட்டுப்பறவாது சிறுகுருவிநாடாது
காகம்பறவாது கருங்குருவிநாடாது
அள்ளப்பறவாது அணிகள்வந்துசேராது
கிள்ளப்பழுத்தாலும் கிளிகள்வந்துசேராது
அவன்-உடைதப்பிப்போனாலும் உயிர்தப்பபோறதில்லை
குண்டுதப்பிப்போனாலும் உயிர்தப்பபோறதில்லை
அவனுடையகாவலிலே ஆணழகாநீதானும்
எப்படிக்குப்போய்வருவா யென்மகனேகண்மணியே
மாலையென்றசொல்லையல்லோ போட்டுமறந்துவிடு

பெண்ணென்றசொல்லையல்லோ போட்டுமறந்துவிடு
நாலானசாதியிலே மேலானசாதியவள்
ஐயன்மகளைத்தொட்டா லளவற்றபாவம்வரும்
தாயிலும்பத்தினியாள் தாரமென்றெண்ணாதே
என்னிலும்பத்தினியா ளிடையூறுசொல்லாதே
தீண்டாத அக்கினிதான் தெய்வப்பசுங்கிளியாள்
அண்டாப்பெருநெருப்பு ஆரியமாலையவள்
வேதியன்பெண்ணாலே வீணாய்மடியணுமோ
ஐயன்மகளாலே யனீதமாய்மாளணுமா
இவளுக்குமுனைக்கும் ஏணிவைத்துபாக்கணுமா
உன்-தகப்பனிட சாபமது தானேபலிக்குமடா
ஐயரிட்ட சாபது அன்பாய்பலிக்குமடா
உனக்கென்றுகழுமரந்தான் ஊசிபோல்வளருதடா
தூண்டில் துடைப்பெருமன் தூண்டிமுள்ளுகைபெரும
கழுவோகழுவழகோ கழுவினிடசிங்காரம் [ன்
தூண்டில் துடைப்பெருமன் தூண்டிமுள்ளுகைபெருமன்
மண்டைக்குகோடாலி மார்புக்கிருப்புலக்கை
அவளாருஐயன்மகள் நீயாரு ஆண்டிமகன் [முள்ளு
தொண்டைக்குப்பாயுமுள்ளு தொண்டைகளுக்குருகு
நாபியிற்பாயுமுள்ளு நடுவுச்சிக்கேகுமடா
தூண்டிலிருக்கணுமா துடிதுடித்துச்சாகணுமா
கழுவிலிருக்கணுமா கண்டபேர்களேசணுமா
ஏசணுமோபேசணுமோ யாவரும்நிந்திக்கவோ
மாலையென்றசொலவசனம் மறந்துவிடுயென்மகனே [ம்
பெண்ணுனக்குவேண்டுமானால் போறேனடாதெய்வபுர
தெய்வபுரம்தான்போயி தெய்வபெண்கொண்டுவாறேன்
சத்தலோகம்போயிருந்து சத்தகன்னிகொண்டுவாறேன்
என்-அண்ணன்மகளாரை யரிவையரைகொண்டுவாறேன்
அண்ணன்மகளென்று ளவள்பேரைசொல்லுமென்று
அப்போதுகாமாட்சி யரிவையெடுத்துரைப்பாள் [ன
ஏழுகருப்பனென்று லவர்பேரைச்சொல்லுமென்றான்
மைந்தனுரைகேட்டு மாதாவெடுத்துரைப்பாள்
வாங்கருப்பன்பூங்கருப்பன் மதுரைச்சிறுகருப்பன்
சங்கிலிகருப்பனுடன் தனிக்கருப்பனேழுபேர்கள்
அம்மான்மகள்கருப்பழகி அவளழகைசொல்லுகிறேன்
சந்திரற்குஞ்சூரியற்குஞ் சற்றேகருப்புமுண்டு [கேள்



அந்திரற்கும்வானவற்கு மெள்ளளவும்மச்சமுண்டு
ஓங்கிறகெங்கையற்கு உள்ளேசுழலுமுண்டு
குண்டுமணிக்கானுலும் கொஞ்சங்கருப்புமுண்டு
கோவைப்பழத்துக்கு குவளைசிவப்புமுண்டு
ஆடிவருநாகத்திற்கு நடுத்தலையில்மச்சமுண்டு
அம்மான்மகளாற்கு அணுவளவுந்தோஷமில்லை
மயிரேகருப்பொழிய மற்றதெல்லாந்தங்கநிறம்
விழியேகருப்பொழிய மேனியெல்லாந்தங்கநிறம்
பொட்டேகருப்பொழிய பொற்கொடியாள்தங்கநிறம்
சாமளவர்னமடா தையலிளங்கொடியாள்
கெருடக்கண்பார்வையடா கிளிமொழியாள்கருப்பழகி
அவளுடையகோட்டையிலே அஞ்சுசுற்றுகல்மணிகள்
கல்மணிகட்டிருக்குங் கட்டழகிகோட்டையிலே
சக்கரமுலாவிவரும் தையலிடகோட்டையிலே
அவளைகெலிப்பார்க ளாருமில்லைவையகத்தில்
அவ்வளவுபெருமையுள்ள அம்மான்மகளிருக்க
மாலைமாலையென்றுசொல்லி வதைக்கிறாயெந்தனை நீ
மாலைதனையொழிய மற்றொருபெண்ணேதுக்கடா
சொந்தப்பெண்தானிருக்க இரவல்பெண்ணேதுக்கடா
வேண்டாமடாயென்மகனே மெல்லியந்தமாலையவள்
மாலையென்றசொல்வசனம் மறந்துவிடுயென்மகனே
மாலையரேவேண்டுமானால்மன்னவனே சொல்லுகிறேன்
சத்தகன்னிதன்வனத்தே தனஞ்செயனே நீபோயி
அவள்-பன்னிரண்டொருவருஷம்பாரதவஞ்செய்கிறாள்
ஈஸ்வரனைத்தானோக்கி யிருந்துதவஞ்செய்கிறாள்
அவள்-தவநெறியைதான்குலைத்து தனஞ்செயனேவந்
உச்சிமலையைவிட்டு உத்தமிகள் தாமிறங்கி [தாயானால்
மைத்தனேயுன்கூட வரவேண்டுங்கன்னியர்கள்
சத்தகன்னியானவர்க்குந் தகுந்தபுருஷன்வேண்டி
தவமிருக்குங்கன்னிகளை இவ்விடத்திற்கொண்டுவந்தால்
அப்போதுநீசமர்த்தன் ஆணழகாபஞ்சவர்னம்
கேட்டவரம்தான்தாரேன் கீர்த்தியுள்ளமன்னவனே
அப்படியேநான்போறேன் ஆச்சிவிடைதாருமென்றான்
ஆதிசிவன்கப்பலிலே அமர்ந்தெழுந்தவெண்ணீறு
பரமசிவன்கப்பலிலே பதித்தெழுந்தவெண்ணீறு
காடுவெட்டிசுட்டெரித்த கர்த்தரிடவெண்ணீறு

தெத்துவெட்டிசுட்டெரித்த சிவனார்தன்வெண்ணீறு
வெண்ணீறுதானெடுத்து விமலியவள்கைகொடுத்தாள்
வெண்ணீறுவட்டமிட்டு விமலிபிள்ளையேதுசெய்தார்

ஒன்பதாவது வேதியர்களை ஆசாரங்குலைத்த வனம்
முற்றுப்பெற்றது.

---

பத்தாவது

## சத்தகன்னி வனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

சாரும்பணியுமையாள் தந்தக்கணபதியே
ஆம்பல்முகத்தோனே ஐந்துகரத்தோனே
நற்றவமிகுந்தவராய் நாயேற்குமுன்வாராய்
புறவந்தனைக்காத்த பூபாலன்தன்கதைக்கு
மாசொன்றும்வாராமல் வன்பொருளுஞ்சொற்சுவையும்
ஆசுடனே தந்தெனக்கு அளிப்பாய்மதக்களிறே

### கதையின் வரலாறு

எங்குமெள்ளவாரூரா மெங்கள்துரைபஞ்சவர்ணம்
உப்பங்கிடாரவழி நினைத்தாராங்கோடிபுத்தி
வணக்கத்துச்சின்னானே மதகளிறேவாருமென்றான்
சின்னானுமங்கேவந்து சிறப்பாகவேதுசொல்வான்
என்னையழைத்தபணியெனக்கறியச்சொல்லுமென்றான்
வகைபிரித்துசொல்லுமென்றான் வங்கணத்துசின்னானு
மாலையைச்சிறையெடுக்க மாதாவைநான்கேட்டேன் (ம்
மாதாயெனக்குரைத்த வகைதனைச்சொல்லுகிறேன்
சத்தகன்னியேழுபேராம் தையலிளங்கொடிமார்
உச்சிமலைமேலே உத்தமிகளேழுபேரும்
தவஞ்செய்திருக்கிறார்கள் தையலந்தயேழுபேரும்
அவன்-தவத்தைக்குலைத்துமல்லோ தையலரைக்கொண்டுவந்தால்
மாலையைச்சிறையெடுக்க வரந்தாரேனென்றுரைத்தாள்
அப்படியேபோறேனென் றன்பாகவந்தேனடா



என்றிவர்சொல்லையிலே ஏதுசொல்வான்சின்னானும்
கெட்டேன்சிவனேயென்றான் கேடுவந்துநேர்ந்ததென்றான் [ன்றான்
ஐயோசிவனேயென்றான் அனர்த்தம்வந்துநேர்ந்ததே
பாரவனங்களெல்லாம் பன்னிரண்டுதன்வருஷம
ஊசிமுனைபோலே யொருகாலையூணவைத்து
அரனேபரனேயென்று ஆண்டவனைத்தானினைந்து
அடித்துவருங்காற்றுகளை ஆகாரந்தான்புசித்து
கண்களைமூடிக்கொண்டு கன்னிதவஞ்செய்கின்றார்
அவர்களைக்கொண்டுவர வாகுபோவுன்னாலே.
அப்பனைசுவாமியானை ளரிவையரேகொண்டுவர
உன்னாலேயாகாது யமனாலுமாகாது
ஆண்டவன்மேலாணைகண்டா யடியேனும்வாரதில்லை
சின்னானுரைகேட்டுச் சுவாமியெடுத்துரைப்பார்
பஞ்சையடா நீபயலே பாரமில்லைபெந்தனுக்கு
கொஞ்சமடா நீபயலே கூளமடா நீயெனக்கு
நானேறிப்போவதற்கு நல்லகுதிரையொன்று
கொண்டுவாருமென்றார் குமரேசர்பஞ்சவர்ணம்
அட்சணத்திலோடிவந்தார் ஆணழகர்பஞ்சவர்ணம்
மான்தேசிவெண்புரவி வகையாகவுண்டுபண்ணார்
ஆண்டவனுந்தான்பார்த்து அங்ஙனமேயேதுசொல்
என்னடாசின்னானே யிப்புரவிகொண்டுவந்தாய் [வார்
என்றுமிவருரைக்க ஏதுசொல்வான்சின்னானும்
அதின்பேரிலேறினாலோ அப்போதெரியுமையா
நாகங்கடிவாளம் நலமான அங்குபிடி.
கடிவாளங்கைபிடித்துக் கட்டழகரேறினாரே
ஏறினமாத்திரத்தில் யிரடிவிழுந்துதங்கே
என்னடாசின்னானே ஏளனமோசெய்யவந்தாய்
என்றிவர்சொல்லையிலே ஏதுசொல்வான்சின்னானும்
லகானையிழுத்து நலமாகப்பிடித்தீரானால்
அப்போபறக்குமையா ஆண்டவனேவெண்புரவி
அப்படியேதானிருந்தார் ஆண்டவனார்கொல்லிமலை
அந்தரத்திற்பறக்குதுபார் அழகானவெண்புரவி
ஆலிலைசலசலென்ன அலைகடலுந்தானடுங்க
செந்தூள்பறக்குதங்கே சூரியனைக்கண்மறைக்க
கருந்தூளெழும்புதங்கே கதிரோனைக்கப்புகுது
ஆகாயம்பறக்கையிலே ஆண்டவனார்வெண்புரவி

மெத்தப்பயந்தாராம் மேனியெல்லாந்தானடுங்கி
அடித்தொடையுங்காலிரண்டும் அதிரநடுங்கிடவே
தம்பிதம்பிசின்னானே தனஞ்செயனே என்னசெய்வேன்
ஆபத்துவேளையிலே ஆதரிக்கவேண்டுமடா
அபயமபயமென்று அலறலுற்றாராண்டவனார்
நீ-எங்கேயிருந்தாலு மிங்குவரவேண்டுமடா
வாராமல்நீயிருந்தால் மாண்டுமடிந்திடுவேன்
என்றிவர்சொல்லையிலே யிதுகேட்டுசின்னானும்
கோடையிடிபோல் கொப்பென வேஷங்கொண்டு
ஆண்டவரைத்தானினைந்து ஆகாயமேபறந்து
கொல்லிமலைகாணாமல் குதிரையடி வயிற்றில்
இருந்துகொண்டுசின்னானு மேதுசொல்வானப்போது
சுவாமியழும்வேளையிலே தான்கேட்டுச்சின்னானும்
ஏனையாவென்று எதிர்வந்துநிற்கையிலே
எங்கேயடா நீயிருந்து யின்பமுடன்வந்தாயென்றார்
இங்கேயிருந்தேனையா வென்றுசொன்னான்சின்னானும்
குதிரையிறங்கும்வகை கொற்றவனே சொல்லுமென்றார்
லகானைத்தளரவிட்டு நலமாயிறங்குமென்றார்
மாஞ்சோலைக்குள்ளாக வந்துயிறங்குறார்கள்
மண்டபத்துக்குள்ளாக வந்தாரிருவர்கள்
பஞ்சணைமெத்தைமுதல் பலவிதமுண்டுபண்ணார்
ஒரிகிண்ணரிகைசோடியென்றார் கிளிமொழியாள்புத்திர
அதுகேட்டுசின்னானும் அவசரமாயோடிவந்து [னும்
ஈழத்துமூங்கிலதை யிழுத்தெடுத்துகைபிடித்து
நாணயத்துமூங்கிலதை நடுத்தரமாய்கொண்டுவந்து
தரையிற்படர்ந்ததொரு தங்கநல்லபேய்ச்சுரைக்காய்
நிலத்திற்படர்ந்ததொரு நீலவர்னப்பேய்ச்சுரைக்காய்
முதற்குடுக்கைமுத்துவாளம் நடுகுடுக்கைநாகரத்தினம்
கொனைகுடுக்கைபவளதிறம்கொற்றவனாருண்டுபண்ணார்
முன்னான்குபணிரெண்டு மெட்டுவைத்தாரப்போது
நால்நான்குபதினாறு நலமாகமெட்டுவைத்தார்
மயிலோடுகுயிலிறகை வைத்திழைத்தகிண்ணாரம்
ஆனைநரம்பெடுத்தா ராட்டிவைத்தார்கிண்ணாரம்
அப்படியும்பேசவில்லை அழகுடையகிண்ணாரம்
முன்கைநரம்பெடுத்து மூன்றுதந்திபிகுவெடுத்தார்
மார்பில்வைத்தார்கிண்ணரியை படியில்வைத்தார்சிற்றுடுக்கை



தோளில்வைத்தார்கிண்ணரியை துடையில்வைத்தார்சிற்றுடுக்கை
ஆள்காட்டிவிரல்சுழற்றி யடித்தாராம்கிண்ணரியை
தட்சணைவிரல்சுழற்றி தானடித்தார்கிண்ணரியை
என்னசொல்லிபாடுதுபார் யின்பமுடன்கிண்ணாரம்
அடி-கொல்லிமலைகன்னிகளே கொடியிடையாளப்போ
என்னைக்குறித்துதவ மிருக்கிறீர்கன்னிகளே [து
பன்னிரண்டுநல்வருடம் பாரதவஞ்செய்துவாரீர்
ஊசிமுனையில்நின்று வுகந்துதவஞ்செய்கிறீர்
எண்ணமெல்லாமிப்பொழுதே மீடேறவந்ததடி
கைலைகனில்தானிருந்து கன்னியரேயிங்குவந்தேன்
உங்கள்பலனீடேற வொளியுடனேயிங்குவந்தேன்
சல்தியாய்வந்தாலே தையலரேவுங்களுக்கு
கோரும்வரங்களெல்லாம் கொடுத்திடுவேனிப்போது
சல்தியாய்நீவராவிட்டால் தாண்டிநடந்திடுவேன் [யை
சீக்கிரத்தில்வாருமென்று தெரிந்துவிட்டார்கிண்ணரி
உங்கள்மார்புக்கிசைந்தவண்டி மன்மதண்டியுங்களுக்கு
தோளுக்கிசைந்தவண்டி துரைமகண்டியுங்களுக்கு
கைநிறைந்தரத்தினத்திலுங் கண்ணிறைந்தபுருஷனடி
தேடித்திரிந்தாலும திருவழகைக்காணீர்கள்
ஓடித்திரிந்தாலும் ஒளியழகைக்காணீர்கள்
சீக்கிரத்தில்வந்தாலே திருமுகத்தைக்கண்டிடலாம்
என்றிவர்சொல்லையிலே யடித்தாரேகிண்ணரியை
அடித்தநல்லசத்தமதை ளரிவையர்கள்தான்கேட்டு
நேம மறந்தார்கள் நிஷ்டைகளைத்தான்மறந்தார்
செபதபங்களைமறந்து திகைத்துமதிகுலைந்து
இளையகன்னியானவளும் மற்றவரைத்தாமழைத்து
வாங்களடிகன்னிகளே மாதர்களேசொல்லுகிறேன்
நாம்செய்தநற்றவங்கள் நலமாய்பலித்ததடி
எண்ணினவெண்ணமெல்லா மீடேறிவந்ததிப்போ
கைலையிற்றானிருந்து கடவுளாவந்தாரே [போம்
இனிமேற்குறைகளென்ன எழுந்திருங்கள்போய்ப்பார்ப்
என்றுஇளையகன்னி யெடுத்துரைக்கும்வேளையிலே
மற்றபேர்கன்னியர்கள் மாதருரைகேட்டு
ஏதடியிளையகன்னி யெங்கேயழைக்கிறாய்
ஆண்டவனார்வந்தார்காண் அன்பாயெழுந்திருங்கள்
நமக்கேற்றநாயகனார் நலமாகவந்தாரே

ஆகையாலுங்களைத்தா னன்பாயெழுப்பினேனுன்
இளையகன்னிதானுரைக்க யாவர்களுங்கேட்டு
உச்சிமலையைவிட்டு வுடனேயிறங்கலுற்றார்
இளையகன்னிதன்னுடனே ஏழுகன்னிவாரார்கள்
மலையைவிட்டுகீழிறங்கி மயிலணைமார்வாரார்கள்
ஆண்டவனைத்தேடியல்லோ ளரிவையர்கள்வாரார்கள்
கண்டுவிட்டார்காத்தவனார் காரிகைமார்வரவுதன்னை [தார்
இனியிருந்தால்மோசமென்று எங்கள் துரையேதுசெய்

## காத்தவராயசுவாமி மாறுவேடங் கொள்ளல்

வாவென்றழைத்தாராம் வருகுதுமாறுவேடம்
கொல்லிமலைக்கன்னிகளைக் கொற்றவனார்தானினைத்து
நாணற்பூப்போலே நரைத்தகிழவனார்
குக்கென்றிரும்புவாராம் கோழைவந்துமாரடைக்கும்
வப்புவாய்கொட்டிவர வாய்நீரொழுகிவர
கண்ணிரண்டுங்கீரைவிரை காதிரண்டுங்கேளாது
கொட்டாங்கிச்சிகிண்ணரியை கொற்றவனார்கைபிடித்து
மண்டபத்தின்பின்னாலே படுகுழிதானுண்டுபண்ணார்
நவரத்தினசல்லாவை நலமாகமேற்போர்த்து
இரத்தினகிண்ணரியை நலமாகசாத்திவைத்து
படுகுழியிற்போயுமல்லோ பாங்காகவுட்கார்ந்து
மேலேபலகைகொண்டு மணல்மூடிவிட்டார்
இப்படிக்குத்தானிருந்தார் எங்கள் துரைபஞ்சவர்ணம்
அந்தசமயத்திலே அருங்கிளியார்கன்னியர்கள்
ஈஸ்வரனைத்தேடியல்லோ ஏழுபேர்வாரார்கள்
மண்டபத்தருகாக வந்துமவர்பார்த்து
ஆறுபேர்கன்னிகளும் இளையவளைக்கேட்கலுற்றார்
என்னடி இளையகனனி யெங்களையழைத்துவந்தாய் [யே
அத்தைமகன்வந்தானென்றுயழைத்துக்கொண்டுவந்தா
எங்கேயவர்போனாரடியெனக்கறியச்சொல்லுமென்றாள்
மண்டபத்துக்குளக்கரையில் வாங்களடியென்றுரைத்தா
அப்படியேவந்தார்களாறுபேர்கன்னியர்கள் [ள்
மண்டபத்துக்குள்ளேவந்து மயிலணைமார்பார்க்கலுற்றா
உல்லாசமாகவல்லோ வுத்தமனார்நித்திரைபோறார் [ர்
நம்மிலும்வல்லவன்றான் நலமுடனேயத்தைமகன்
ஏதுக்கும்சமர்த்தனடி யேதுக்கும்வல்லவண்டி



வல்லாண்மையுள்ளவண்டி மகாவுபாயங்கள்கற்றவண்டி
நித்திரைபோறாரென்று நேராகவந்துநின்று
தட்டியெழுப்பினாலே சல்தியிலேயெழுந்துநிற்பார்
கால்மாட்டிலேயொருத்தி கன்னியரேவுட்காரும்
பக்கத்திலிரண்டுபேர் பாங்காகவுட்காரும்
அப்படியேவுட்கார்ந்தாள் தையலிளையகன்னி
சுவாமியுடகாலிரண்டுந் தையலர்பிடிக்கலுற்றார்
காலொருத்திதான்பிடிக்க கையொருத்திதான்பிடித்தார்
கைகால்பிடிக்கையிலே கட்டழகர்தேகமது [கு
சொரசொரென்றுதானிருக்கும் தோகையர்கள்கைகளுக்
என்னடியிளையகன்னி யிப்படிக்குத்தோற்றுகுது
மூக்காட்டை நீக்கியல்லோ மெல்லியர்கள்பார்க்கலுற்றார்
வைக்கோலைக்கண்டார்கள் மயிலணைமாரேழுபேரும்
அத்தைமகனென்றுசொல்லி வைக்கோலைக்காட்டிவிட்
என்னடியிளையகன்னி யென்றிவர்சொல்லையிலே [டாய்
அடி-நம்மிலும்வல்லவண்டி நம்முடையஅத்தைமகன்
அஞ்சனத்தைத்தான்போட்டுஆராய்ந்துபார்க்கலுற்றார்
அஞ்சனத்திற்றோற்றுகுது ஆண்டவனிருப்பிடங்கள்
மண்டபத்தின்பின்னாலே மன்னவனார்தானிருப்பார்
ஒளித்தேயிருக்கின்ற வுத்தமரைக்காட்டுகிறேன் [ந்து
வாங்களென்றுசொல்லியல்லோ மயிலணையாள்கூட்டிவ
படுகுழியைத்தான்திறந்து பார்த்துவிட்டாளிளையகன்னி
தள்ளாதகிழவன்தான் சுவாமிதனைக்கண்டார்கள்
என்னடியிளையகன்னி எங்களைக்கொண்டுவந்து
சாகுங்கிழவன்றனைத் தையலரேகாட்டிவிட்டாய்
இவன்தானோஅத்தைமகனிவனுக்கா நாங்கள்வந்தோம்
பண்ணினதவங்களெல்லாம் பாழாகிப்போச்சுதே
பன்னிரண்டுதன்வருஷம் பண்ணினதவங்களெல்லாம்
இந்தக்கிழவனுக்கா யிருந்தோம்பெருந்தபசு
என்றிவர்கள்சொல்ல இளையகன்னியேதுசொல்வாள்
இவனைவிடாதீர்கள் எழுந்திருங்களேழுபேரும்
ஆளுக்கொருகைகொடுத்து அழகுள்ளகன்னியர்கள்
வீரமலைசுரிகை வெள்ளிமலைதன்னருகே [ள்
கொண்டுபோகவேண்டுமென்று கொம்பனைமார்வாரார்க

## காத்தவராயசுவாமியும் கன்னிகளும் பல வேஷங் கொள்ளுதல்

காத்தலிங்கசுவாமிதுரை கண்டுவிட்டார்பஞ்சவர்னம்
கெட்டதுகுடிகளென்றார் கேடுவந்துநேர்ந்ததென்றார்
என்னடிஎன்தாயே எனைவளர்த்தமாதாவே [வேன்
மோசம்வந்துநேர்ந்ததிப்போ விமலியரேயென்னசெய்
என்னசெய்யப்போறேனென்று எண்ணமிட்டாராண்ட
கன்னியர்களேழுபேரும் காளைவரும்போது [வனார்
உடலைவிட்டுயிப்போது உத்தமனாரெங்குவாரார்
ஆயிரங்கொக்குதனில் தோசிகொக்காய் தானிருந்தார்
பார்த்துவிட்டார்கன்னியர்கள் பங்கயஞ்சீர்கண்ணாளே
என்னடியிளையகன்னி யெங்களைக்கொண்டுவந்து
சாகும்கிழவன் தன்னைத் தையலே தூக்குமென்றாய்
எடுத்துவரும்பொழுது யிறந்துமடிந்துவிட்டான்
அப்போதிளையகன்னி யவர்களுடசொற்கேட்டு [ற்றாள்
அஞ்சனத்தைப்போட்டுமல்லோ ஆராய்ந்துபார்க்கலு
நமக்கெல்லாம்வல்லவண்டி நலமுள்ள அத்தைமகன்[ன்
அத்தைமகனிருப்பிடத்தை ஆராய்ந்துசொல்கிறேன்மீக
ஆயிரங்கொக்குதனில் அருந்தோழிகொக்கானார் [டான்
அந்த-கொக்குக்கெதிரியல்லோ ராஜாளிவேஷங்கொண்
வேட்டைக்காரபெண்களைபோல் மற்றபெண்கள் வேஷங்கொண்டார்
உண்டைவில்லுதுப்பாக்கி யுடனேயவர்கைபிடித்து
சுத்திவளைத்தார்கள் தோகையிளங்கொடிமார்
இளையகன்னிதானுமப்போ ராஜாளிபோலேவந்து (லே
காத்தவனார்கொக்குதனை கவ்விக்கொண்டாள்வாய்தனி
வில்லென்றுதைத்துக்கொண்டார் விமலிபிள்ளைபஞ்சவர்னம்
வாங்களடிபெண்களே மைத்துனனார்சிக்கிக்கொண்டார்
ஓட்டப்பெருநடையா யோடிவந்தாராறுபேரும்
சேர்த்துபிடித்தார்கள் தேன்மொழிமாராண்டவரை
அப்போதுபஞ்சவர்னம் மோசம்வந்துநேர்ந்ததென்று

## காத்தவராயசுவாமி மாறுவேஷங் கொள்ளல்

என்னவேஷங்கொள்ளுகிறா ரினிமையுள்ளகாத்தவனார்
தாயைமனதிலெண்ணி தகப்பனை நெஞ்சிலெண்ணி
உடல்விட்டுபிர்போந்து ஓடியேயெங்குவாரார்
வாளைகொண்டமடுவை வையையாறுதேடிவாரார்



ஆயிரமாமையிலே தானுமொருவாமையானார்
வெள்ளாமைபோலேயல்லோ விமலிபிள்ளையுருவாகி
தாழப்புதருக்குள்ளே சுவாமியவர்நுழைய
கண்டார்கன்னியர்கள் கட்டழகர்தன்ரூபம்
என்னடியிளையகன்னி எங்களைக்கொண்டுவந்து
அத்தைமகன்வந்தானென்று அரிவையரே நீயழைத்தாய்
எங்கடியத்தைமக னென்றார்களாறுபேரும்
நம்மைவிடகெட்டிக்காரன் நன்மையுள்ளமாமிமகன் (ள்
அஞ்சனத்தைப்போட்டுமவ ளாராய்ந்துப்பார்க்கலுற்றா
என்னடிபெண்டுகளே இளங்கொடிமார்கன்னிகளே
ஆயிரமாமையிலே பாலாமைபோலாகி
தாழம்புதருக்குள்ளே சுவாமிபதுங்கினாரே
ஆமைக்குவைரியாக யெடுங்களடிவேஷமென்றாள் (டு
வில்லியபெண்களைபோல் மெல்லியர்கள்வேஷங்கொண்
சில்லாக்கோல்பிடித்து தேன்மொழிமாரேதுசெய்தார்
குளத்திலுள்ள ஆமைகளை குத்திவெட்டித்தானெறிந்து
வெள்ளாமைபோலிருந்த விமலாண்டைவோடிவந்து
இளையகன்னிதான்பார்த்து யிருக்கிப்பிடித்துக்கொண்டு
வாங்களடி பெண்டுகளேமைத்துனனார்சிக்கிக்கொண்டா
ஓடி நீங்கள்வாங்களடி உத்தமனார்சிக்கிக்கொண்டார் (ர்
இளையகன்னிசொற்கேட்டு யாவர்களுமோடிவந்து
காத்தவரைத்தாமெடுத்து கன்னியர்கள்வாரார்கள்
பார்த்தாராம்பஞ்சவர்னம் பாவைமார்வித்தைகளை
என்னசெய்யபோறாமென் றெண்ணுதுமெண்ணியவர்
உடலைவிட்டுப்பிரிந்து உத்தமனாரோடிவந்து
ஆயிரம்ஆடுகளில் அதிலொருஆடானார்
கண்டாரேகன்னியர்கள் காளையிடகோலங்களை (டாய்
அத்தைமகனென்றுசொல்லி ஆமைதனைக்காட்டிவிட்
ஆமையதுஎங்கேயடி அருங்கிளியேசொல்லுமென்றார்
வல்லாண்மையுள்ளவண்டி மாமிமகன் தான்சமர்த்தன்
மந்தையிலிருக்கிறார் மைத்துனரும்வாருமென்றார்
ஆட்டுக்குவைரியது கோனாயபோல்வேஷங்கொண்டு
ஆயிரம்ஆடுகளை யதஞ்செய்தோர்கன்னியர்கள் (ண்டு
இளையகன்னியோடிவந்து யிவரைமெள்ளக்கவ்விக்கொ
வாங்களடிமாதர்களே மைத்துனனார்சிக்கிக்கொண்டார்
ஈசன்மகன்தானும் ஈசல்வடிவானார்

ஆயிரம்பீசலிலே அழுகிசல்போலானார்
என்னடியிளையகன்னி யெங்கேயடி மைத்துனனார்
ஈஸ்வரனார்மைத்துனனார் யென்பிறகேவாருமென்றார்
ஈசனுக்குவைரியைப்போ லெடுத்தார்கள்வேஷமங்கே
சாவல்கோழிகாடைப்போல் மையிலர்கள்வேஷங்கொண்
ஈசல்களைத்தான்பிடித்து செல்லாயுதறிவிட்டார் (டார்
இளையகன்னியோடிவந்து யிவரைப்பிடித்துக்கொண்டு
அனைவரும்வாங்களடி அகப்பட்டாரத்தைமகன்
ஓடிவந்துகன்னியர்கள் வுத்தமரைக்கவ்விக்கொண்டார்
கண்டாரேபஞ்சவர்னம் கனமோசம்வந்ததென்று
உடலைவிட்டுயிரெழும்பி உத்தமருமேதுசெய்தார்
வலையன்சிவப்புடையான் மன்னன்தலையாரி
அவனுடையகாதுதனி லணிந்தகடுக்கனிலே
ஆணிமுத்துபோலாக ஆண்டவனார்போயளித்தார்
என்னடியிளையகன்னி வயக்கிறாயெங்களை நீ
எங்கேயடியத்தைமகன் என்றார்கள் கன்னியர்கள்
அப்போதிளையகன்னி அஞ்சனத்தில்பார்க்கலுற்றாள்
சிவப்புடையான்காதுகளில் தரித்தகடுக்கனிலே
அத்தைமகன்மைத்துனரும் ஆணிமுத்தாகிநின்றார்
எடுங்களடிவேஷமென்றாளிளையகன்னியப்போது [ண்டு
வித்வானைப்போலேயல்லோ மெல்லியர்கள்வேஷங்கொ
சிவப்புடையானிருப்பிடத்தே தேடி மெள்ளவாறார்கள்
கவிபாடும்புலவரைப்போல் கன்னியர்வேஷங்கொண்டு
சிவப்புடையான்றனைக்கண்டு தெரிவையர்களேதுசொ
மன்னுதலையாரி மன்னவனே நீகேளு [ல்வார்
வெகுதூரந்தனிலிருந்து வித்வான்கள்தேடிவந்தோம்
உன்னைப்போல்தருமவான்க ளுலகத்திற்கண்டதில்லை
நாங்கள்பாடுங்கவிகளுக்கு தியாகங்கொடுக்கவேணும்
என்றுசொல்லிகன்னியர்க ளெடுத்தார்சிலகவிகள்
கட்டழகன்மீதிலல்லோ கவிகட்டிபாடினார்கள்
வலையன்சிவப்புடையான் மன்னன்மனமகிழ்ந்து
என்னவேண்டுமுங்களுக்கு எனக்கறியச்சொல்லுமென்றான்
அப்போதுகன்னியர்கள் அன்பாகயெடுத்துரைப்பார்
கடுக்கனில்தரித்திருக்கும் கட்டாணிமுத்துவேண்டும்
அப்படியேதான்கொடுத்தான் அழகான ஆணிமுத்தை
இளையகன்னிவாங்கிக்கொண்டு யேழுபேரும்வாறார்கள்



கொல்லிமலைதேடிக் கொம்பனைமார்வாறார்கள்
முத்தையமுத்தையிலே விமலிபிள்ளைகண்டுவிட்டார்
இதுவென்னமோசமென்று ஏதுசெய்தார்பஞ்சவர்னம்
பிள்ளைபூச்சிபோலாக புண்ணியனார்வேஷங்கொண்டு
கையைத்துளைக்கையிலே கன்னியர்கள்தானபார்த்து
திடுக்கிட்டுகன்னியர்கள் சீக்கிரமாய்கீழேபோட்டார்
சுண்டெலியைப்போலேயல்லோ சுவாமிவடிவானார்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாராண்டவனார்
கழனிவரப்புகளில் கட்டழகரோடிவந்து
அங்கேயொருவளையி லாண்டவனார்போயொளித்தார்
என்னடியிளையகன்னி எங்குகற்றாய்சூதுகளை
அத்தைமகனென்றுசொல்லி யாசைகாட்டிகொண்டுவந்
எங்கேயடியத்தைமக னென்றார்கள்கன்னியர்கள் [தாய்
வல்லாண்மைக்காரனடி மாமிமகன்மோசமில்லை [னாரும்
சுண்டெலிபோலேயல்லோ சுரூபங்கொண்டார்மைத்து
வாங்களடியென்றுசொல்லி மயிலனைமார்ஓடிவந்து
எலிவளையைத்தான்மூடி இளையகன்னியங்கிருந்தாள் [ர்
குசவன்வீடுபோய்நீங்கள்குடுவைகொண்டுவாருமென்று
ஒருத்தியையவளழைத்து நெருப்புபெடுத்துவாருமென்று
செவ்விளநீர்தோட்டந்தனிலே தேன்மொழிமார்சென்றமல்லோ [ன்
பன்னாடைகொண்டு வாருமென்றாளிளையகன்னி
வளையதனைக்காத்திருந்த மயில்போலிளையகன்னி
பன்னாடைகொண்டுவரப் போனதொருபைங்கொடியாள்
செவ்விளநீர்கண்திறந்து தேடிப்பொசிக்கலுற்றாள்
மற்றுமொருகன்னியவள் புன்னைமரத்தேடிவந்து
அவளுமரமேறி யன்பாய்ப்பொசிக்கலுற்றாள்
இன்னமொருகன்னியவ ளிருவர்களைத்தேடிவந்து
தென்னமரமேறித் தேங்காய்ப்பொசிக்கலுற்றாள்
இப்படியாயிவர்கள் தேங்காய்ப்பொசிக்கையிலே
இளையகன்னியானவளும் இவர்களைக்காணோமென்று
ஆறுபேரைக்காணோமென்று அவளுமெழுந்திருந்து
பாறைகொண்டுவந்து பருத்தவளைமூடி
அஞ்சனச்சுவடி ரசக்குளிகைச்சிமிழை
பாறையின்கீழாகப் பக்குவமாய்வைத்துவிட்டு [ன்
ஆறுபேரைத்தேடிக்கொண்டு னரிவையருமிங்குவந்தா
கன்னிகளைக்கண்டவுடன் கடுகெனவேயேதுசெய்தாள்

தென்னமரமேறித் தேங்காய்போசிக்கலுற்றாள்
இப்படியாகயிங்கே யேழுகன்னிதவமிருக்க
கண்டுவிட்டார்பஞ்சவர்ணங் கடுகெனவேயேதுசெய்தார்
இதுதான்சமயமென்று எழுந்திருந்துகாத்தவனார்
வளையைவிட்டுவெளியில்வந்து மாரிபிள்ளை ஏதுசெய்தார்
ரசக்குளிகைமைச்சிமிளு அஞ்சனச்சுவடியதை
எடுத்துக்கொண்டுவந்து எங்குமெள்ளவாறாராம்
வாரவழிதனிலே வாவென்றார்சின்னானை
ஓட்டம்பெருநடையா யோடிவந்துதெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அப்போது ஆண்டவனா ரங்கொருவார்த்தைசொல்வார்
எழுபேர்கன்னிகளு மென்னைத்துரத்திவந்தார்கள்
அவர்கையில்சிக்காம லவனியெல்லாஞ்சுற்றிவந்தேன்
அவர்கள்-தென்னமரமேறித் தேங்காய்ப்புசிக்கிறார்கள்
நீ-தோட்டக்காரப்பையனைப்போல் துரிதமாகவேஷங்
எழுபேர்கன்னிகளை யிழுத்துவரிந்துகட்டி [கொண்டு
இங்கேகொண்டுவாருமென்றா மெங்கள் துரைபஞ்சவர்ண
அந்தவுரைகேட்டு அழகுசின்னான் நல்லதென்று [ம்
தோட்டக்காரமுத்தனைப்போல் சுருக்காகவேஷங்கொண்டு
செவ்விளநீர்தோட்டத்திலே சின்னானும்வந்துநின்று
சுற்றிபெங்கும்பார்த்தானே தோகைதின்னுந்தேங்காயை
போராய்குவித்திருக்கும் பொற்கொடிமார்தின்றகனி
ஆரடிநீங்களென்று அதட்டியவன்கேட்கையிலே
மிரளவிழிக்கின்றார்கள் மெல்லியிளங்கொடிமார்
மரத்தைவிட்டிறங்குமென்றான் வகையுடனேசின்னானும்
அப்படியேயிறங்கினார் அந்தயிளங்கன்னியர்கள் [ம்
தோட்டத்தைகொள்ளையிட தோகையரேவந்தீர்கள்
நீங்கள்யாரென்றுசொல்லி நிஷ்டூரமாகக்கேட்க
சத்தகன்னிஎழுபேர் தையல்மார்தவமிருந்தோம்
கிண்ணாரக்காரனவன் கிளிமொழிமார்முன்னேவந்தான்
அவனையேதேடிக்கொண்டு அருங்கிளிகளிங்குவந்தோம்
எங்கெங்குத்தேடி இனியவிடமாராய்ந்து
பசியின்கொடுமையினால் பொறுக்கமுடிகூடவில்லை
தென்னமரமேறித் தேங்காய்பூத்தின்றோம்
என்றிவர்சொல்லையிலே ஏதுசெய்தான்சின்னானும்



அண்ணனண்டை வாங்களென்று யரிவையரைகொண்டு
அந்தச்சமயத்திலே ஆண்டவனாரேதுசெய்தார் [வாரான்
சிவப்புடையான்போலாகச் சீராய்வடிவெடுத்து [னார்
முத்திரைபில்லைச்சேவகன்போல் மூன்றுபூதமுண்டுபண்
அங்கேயொருமண்டபத்தி லவர்களும்வீற்றிருந்தார்
அந்தச்சமயத்திலே அழகுசின்னானேதுசெய்தான்
கன்னிகளைக்கூட்டிக்கொண்டு கட்டழகன்முன்வந்தான்
சுவாமியவர்பார்த்து சடுதியிலேதுசொல்வார்
என்னடாபிராதென யின்பமுடன்கேட்கலுற்றார்
செவ்விளநீர்மரங்களெல்லாம் சீராககொள்ளையிட்டார்
நாள்தோறுமிப்படியே நங்கையர்கள் தின்றுவாரார்
ஆரோயெவரோவென் றறியாமல்நானிருந்தேன்
இவர்களாலென் தோட்டமெல்லாம்பாழாச்சுதையா
இன்றையதினத்திலே என்கையிலகப்பட்டார் [ட்டான்
கொண்டுவந்தேனையாவென்றுகொற்றவனுந்தெண்டனி
அப்போது ஆண்டவரும் சேவகருக்கேதுசொல்வார்
கட்டிவைத்துமொத்துகிறார் கட்டழகர்பஞ்சவர்ணம்
எழுபேர்கன்னிகளை யிழுத்துவந்து அக்கணமே
மரத்துடன்வரிந்துகட்டி மாறுகுதுபூதமெல்லாம்
கட்டியடிக்கையிலே கன்னியர்களேதுசொல்வார்
அடிபொறுக்கமாட்டாம லழுதுபுலம்புகிறார்
ஐயோசிவனேயென் றழுதுமவரேதுசொல்வார்
கிண்ணாரக்காரனாலே கேடுவந்துநேர்ந்ததென்று
தம்பூருக்காரனாலே தாழ்வுவந்ததெங்களுக்கு
உனக்குபுண்ணியமாய்ப்போகுதப்பா பிழைக்கின்றோம்
பதினாயிரம்சரணம் பாவையரைவிட்டுவிடு [விட்டுவிடு
சரணமென்றுசொல்லையிலே தான்கேட்டுபஞ்சவர்ணம்
கட்டையவிழ்த்துவிட்டார் கன்னியாவெளியானார்
அழுதுபுலம்பிக்கொண்டு எரிவையர்கள்வாரார்கள்
அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனாரேதுசெய்தார்
ஐந்துநிறமைந்துவர்ணம் பஞ்சவர்ணக்கிளியானார்
ஆலமரத்தின்மேல் ஆண்டவனார்வீற்றிருந்தார்
எழுபேர்கன்னிகளு மெரிந்துவருகையிலே
தேமங்குலைந்துவிட்டோம் நிஷ்டையதுகுலைந்தோம்
பண்ணினதவங்களெல்லாம் பாழாச்சுதன்னாலே
எண்ணினவெண்ணமெல்லா மிழிவாச்சுதன்னாலே

உன்னாலேகெட்டோமடி ஊதாரியானவளே
என்றிவர்கள்சொல்லியல்லோ ஏழுபேரும்வாரார்கள்
பட்டுக்கிடப்பானவன் பாவியகனெங்கிருந்தான்
உன்னாலேகெட்டதெல்லாம் ஒருவனால்கெட்டதில்லை
என்றிவர்கள்சொல்லியல்லோ தேடுகிறாராயுதங்கள்
சரக்குளிகைமைச்சிமிளும் அஞ்சனச்சுவடிகளை
நம்மை-இம்மோசஞ்செய்யவென்று எத்தனைநாள் காத்திருந்தான்
அவனுக்குஆகாதநோய்வந்து ஆளாய்ச்சமையானோ
பொல்லாதநோய்வந்து போகானோபடுபாவி
என்றிவர்கள் திட்டிக்கொண்டு ஏழுபேரும்பேசும்போது
ஆலமரமேலிருந்து ஆண்டவனார்தான்கேட்டு
என்னசொல்லிப்பாடுகிறார் எங்கள் துரைபஞ்சவர்ணம்
ரங்காரங்காவென்றுசொல்லி ரங்கர்கவிபாடுகிறார்
இவர்-ரங்காவென்றசத்தம் நாயகியார்தான்கேட்டு
நீர்-ஆர்வளர்த்தரங்கனடா அன்பாகசொல்லுமென்றார்
பார்வதிவளர்த்ததுவோ பரமசிவன்வளர்த்ததுவோ
இலட்சுமிவளர்த்ததுவோ நாராயணர்வளர்த்ததுவோ
சரஸ்வதிவளர்த்ததுவோ சதுர்முகனார்வளர்த்ததுவோ
வள்ளிவளர்த்ததுவோ வேலவர்வளர்த்ததுவோ
தெற்கேயிருந்தவரோ திசைதப்பிவந்தவரோ
வடக்கேயிருந்தவரோ வகைதப்பிவந்தவரோ
அப்போதுரங்கையனரிவையருக்கேதுசொல்வான்
நான்-தெற்கேயிருந்ததில்லை திசைதப்பிவந்ததில்லை
வடக்கேயிருந்ததில்லை வகைதப்பிவந்ததில்லை
காமாட்சிவளர்த்தெடுத்த காத்தவரங்கநான்தாண்டி
என்றிவர்சொல்ல ஏந்திழைமாரேதுசொல்வார்
எங்களிடத்துக்கு வாருமென்றுதாமழைத்தார்
இப்படியென்னையழைத்தாலெப்போதும்வாரதில்லை
அத்தைமகனென்று அழைத்தால்வருவேனென்றார்
மாமிமகனென்று மரியாதைசொல்லுமென்றார்
அதுகேட்டுகன்னியர்களதிசயமாயேதுசொல்வார்
இப்படிக்குபேசுங்கிளி இவ்வுலகிற்கண்டதில்லை
நம்மாசைதீரவந்த நல்லதோரங்கனடி
அத்தைமகன்ரங்கையனே அப்படியேவாருமென்று
மாமிமகன்ரங்கையனே மைத்துனனேவாருமென்றார்
வாருமென்றுதானழைக்க மாரிபிள்ளையேதுசெய்தார்



செட்டைதட்டிசிறகொதுக்கி சிவ்வென்றுதான்பார்த்து
இளையகன்னிகையிலே இன்பமுடன்வந்துநின்றார்
தழுவியவள்முத்தமிட்டு தையனல்லாளேழுபேரும்
எங்குகொண்டுவாரார்கள் இன்பமுள்ளஆண்டவரை
திருப்பாற்கடல்தேடி தேவியவர்வாறார்கள் (ர்
சமுத்திரக்கரையோரம்வந்து தையலர்களேதுசொல்வா
என்-அருமைத்திருமேனியனே ஆணழகாரங்கையனே
வசந்தநீராடிநாங்கள் வருமளவுமிவ்விடத்தில்
இங்கேயிருமென்று இளையகன்னிதாமுரைத்தாள்
அப்போதுஆண்டவனாருங்கிளியாட்கேதுசொல்வார்
சமுத்திரக்கரையதிலே தையலரேமுளையடித்து
கட்டிவைத்துப்போங்களடி கன்னியரேநானிருப்பேன்
உங்கள்-ஆடைதனையிக்குவைத் தரிவையரேபோங்களென்றார்
அதுகேட்டுகன்னியர்களருங்கிளிமாரேதுசொல்வார்
என்னவதிசயமோ இப்பெரியரங்கையன்
என்றவர்கள்சொல்லி ஏழுபேருந்தாமெழுந்து
முளையடித்துரங்கையனை மெதுவாகயிழுத்துக்கட்டி
ஆடையவர்களைந்து ஆபரணந்தான்களைந்து
பந்திரஆடைகளை மயிலனைமார்தான்களைந்து
முன்களைந்தஆடைகளை ரங்கையனருகில்வைத்து
பார்த்திரும்ரங்காவென்று பாவையர்கள்போய்நடந்து
சமுத்திரத்திற்றானிறங்கி தையலர்கள்நீஞ்சலுற்றார்
கழுத்தளவுகங்கையிலே கன்னியர்கள்ஸ்நானஞ்செய்து
மாரளவுகங்கையிலே வசந்தநீராடலுற்றார்
தோளளவுகங்கையிலே தும்பிபறக்கலுற்றார்
இதுதான்சமயமென்று எங்கள்துரைபஞ்சவர்ணம்
நிசரூபந்தானெடுத்து நிமிலிபிள்ளைபஞ்சவர்ணம்
ஆடையெடுத்துக்கொண்டு ஆண்டவனாரேதுசொல்வார்
போறேனடியென்பிறகேபொற்கொடியேவாங்களென்று
ஓடுகின்றாரப்போது உத்தமனார்வேல்முருகன்
காளையவரோடுவதைக் கன்னியர்கள்கண்டார்கள்
கெட்டுதடிநம்குடிகள் கேடுவந்துநேர்ந்ததடி (ண்டி
கிள்ளையென்றுநாமிருந்தோம் கொள்ளைகொள்ளவந்தவ
கிண்ணாரக்காரனிவன் கிளிமொழியேமோசமில்லை
தம்பூருக்காரனிவன் தானுரைக்ககுற்றமில்லை (னி
இனி-இவனைவிடலாகாது எழுந்திருங்களென்றுசொல்

ஆண்டவனார்முன்னே அரிவையர்கள்பின்றொடர
அவர்முன்னோடப் பின்தொடர்ந்தாரேழுபேரும்
இப்படியாய்வெகுதூரம் எட்டுபேருமோடலுற்றார்
விடுவிடென் றுதாமோடி மெல்லியர்கள்பின்றொடர்ந்தார்
காலுகைநொந்துதங்கே கையிரண்டுமோய்ந்துதங்கே
இனியோடசத்தியில்லை எங்கள் துரையானவற்கு
என்னவேஷங்கொள்ளுகிறு ரியலானமாரிபிள்ளை
கருங்குருமான் போலாகக் கடவுளபிள்ளைவேஷங்கொண்
பட்டுப்போன ஆலமரக் கிளைப்பேலேவந்திருந்து (டு
கன்னியர்களோடுவதை கண்டவருமேதுசொல்வார்
அவர்முன்னாலேபோகட்டுமென்று பின்னாலேஏதுசெய்வார்
சுழல்காற்றையுண்டுபண்ணார் தோகைபிள்ளைபஞ்சவர்ண
காற்று அடிக்கையிலே கன்னியர்கள்சேலையெல்லாம் (ம்
அடித்துக்கொண்டுபோகுதங்கே அழகுதுகிலாடை
அவர்நேமங்குலைந்துவிட்டார் திர்வாணமாகிவிட்டார்
கொஞ்சித்தழையொடித்து கொம்பனையார்தாமுடுத்தி
வேப்பந்துகிலாடை மெல்லியர்களுடுத்திக்கொண்டார்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவாறார்கன்னியர்கள்
அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனாரேதுசெய்தார்
கள்ளிகாட்டுபூதங்களை கண்காட்டித்தாமழைத்து
கன்னியர்கள்தாமுடுத்துங் கனத்ததழைகளதை
பள்ளாடுபோலேநீ பாரில்வடிவெடுத்து
கன்னிகட்குபின்னாலே கடுகப்போய்மேயுமென்றார்
அந்தவுரைகேட்டு வந்தபூதமேதுசெய்யும்
கன்னியர்களுடுத்ததழை கடுகெனவேமேயுதங்கே
வெட்கங்குலைந்தார்கள் மெல்லியர்களேழுபேரும்
ஆடைகளுமில்லாமல் அம்மணமாயோடலுற்றார்
அவர்ஓடுகின்றவேளையிலே வுத்தமனார்முன்புகுந்து
போறேனடிவாங்களென்று புண்ணியனாரோடலுற்றார்
கண்டுவிட்டாரேழுபேருங் கலக்கமிடுங்காளைதன்னை
ஓடுராண்டிபாவியவன் விடப்போகாதென்றுசொல்லி
கையாலுங்கூந்தலாலும் கன்னியர்கள்மேல்மறைத்து
ஓட்டம்பெருநடையா ரோடிவாராரேழுபேரும்
முன்னாகவோடையிலே விமலிபிள்ளைபஞ்சவர்ணம்
அங்கேயொருவோடை யெதிர்வாகவுண்டுபண்ணி
படகின்மேல்தானேறிப் பாங்குடனேவீற்றிருந்தார்



அப்போதுகன்னியர்க ளங்கனமேயோடிவந்து
ஓடமதுகண்டு வுத்தமிமாரேதுசொல்வார்
ஓடக்காரமன்னவனே ஓடம்விடவேண்டுமென்றார்
அப்போது ஆண்டவனா ரரிவையருக்கேதுசொல்வார்
ஒவ்வொருபெண்களுக்கு யெவ்வேழுபொன் கொடுத்தால்
அப்போதுவிடுவேண்டி அழகுபொன்னாலோடமென்றார்
அப்படியேதான்கொடுத்தார் ஆரணங்குகன்னியர்கள்
படகின்மேலேறியல்லோ பாவையரைத்தள்ளிவாறார்
அக்கரையில்வந்தவுட னரிவையர்களோடலுற்றார்
வாங்களடியென்றுசொல்லி மாரிபிள்ளையோடுகிறார்
முன்னாலவரோட பின்னாற்றுடருகின்றார்
மானீசன்துரைதேடி மாரிபிள்ளைவாறாரே (ண்டு
வண்ணானைப்போலேயல்லோவகையுடனேவேஷங்கொ
ஏழுபேர்துகிலாடை யெடுத்துவந்தேதுசெய்தார்
தம்பியவர்சுவாமி தாழவேயுலரவைத்தார்
தாம்பூலந்தாமருந்தி துகிலாடைமேலுமிழ்ந்தார்
ஏழுபேர்கன்னியர்க ளவரிடத்திலோடிவந்து
வண்ணாரமன்னவனே வகையுடனேசொல்லுகிறோம்
ஆடைகளுமில்லாம லம்மணமாய்வந்துவிட்டோம்
ஆளுக்கோர்முழுங்கந்தை யாணழகாநீகொடுத்தால்
மார்பின்மேல்போர்த்துக்கொண்டு மன்னவரேபோறோமென்றார்
அப்போதுபஞ்சவர்ணம் ஆண்டவனாரேதுசெய்தார்
ஏழுமுழங்கிழித்து ஏழுதுண்டாக்கியவர்
பந்துபோல்தான்சுருட்டி பாவையர்முன்விட்டெறிந்தார்
அம்மணமாய்நின்றவர்க ளனைவரும்போர்த்துக்கொண்
முன்னாலேபோறனடி பின்னாலேவாங்களென்று (டு
ஆண்டவனாரோடுவதை யரிவையர்கள்கண்டவுடன்
கன்னியர்கள்பின்தொடர்ந்து காந்தாளகோபங்கொண்டு
கல்லாகக்கண்ணைக் கரியாய்சபிப்போமென்று (றதை
பொறுக்கவொண்ணாக்கோபமுடன் பூவையர்கள்வருகி
கண்டுவிட்டாராண்டவனார் கன்னியர்கள்கோபமதை
திரும்பிநாம்பார்த்தோமானால் சிறுகல்லாய்ச்சபிப்பாரெ
கம்பாநதிதேடிக் கடவுள்பிள்ளைவாராரே (ன்று
அபயமபயமென்று அலறிவந்துநிற்கையிலே
அப்போதுகாமாட்சி யரனேபரனேயென்று
கண்ணிரண்டுந்தான்மூடி கன்னித்தவமிருந்தாள்

அந்தச்சமயத்தில் ஆண்டவனார்பஞ்சவர்ணம்
அபயமென்றுபோய்விழுந்து ஆச்சிசரணமென்றார்
நெற்றிக்கண்ணைத்திறந்து நிமலியவள்பார்த்தவுடன்
மோசங்கள்வந்ததென்று மெல்லியருந்தானறிந்து
கன்னியர்கள்வாரா ரென்று கடுகெனவே நீறெடுத்து
வெண்ணீறு தூவிவிட்டாள் மெல்லியவள்புத்திரன்மேல்
அன்றுபிறந்ததொரு அருங்குழந்தைபோலாகப்
பாலனைப்போ லுண்டுபண்ணி பார்வதியாளே துசெய்தா
ஆலமரத்தில் அன்னவூஞ்ச லுண்டுபண்ணி [ள்
மான்தோலைத்தோலால் மரத்தொட்டி லுண்டாக்கி
அதன்மேல்குழந்தைதனை யருமையாய்தான்வளர்த்தி
நான்சாகிறநாளையிலே மகாதேவர் தான்கொடுத்தார்
எப்படிவளர்ப்பேனென்று யீஸ்வரியாளே துசெய்தாள்
ஆராரோ ஆராரோ அப்பனுக்கு ஆராரோ
ஆடிகிழவியே ஆளொருவன்வந்தானே
அவன்எங்கேயடியென்று யிளங்கொடிமார்கேட்கையி
நானறியேனென்றாளே நலமுடனே காமாட்சி [லே
அப்போதுகன்னியர்க ளருங்கிளிமாரே துசொல்வார்
வந்தவனையெங்கொளித்தாய் மாயக்கள்ளிகூன்கிழவி
காட்டடிஎன்றுசொல்லிகன்னியர்கள்கோபங்கொண்டார்
பார்த்தாளே காமாட்சி பைங்கிளிமார்கோபங்களை
இவர்சபித்தால்செபித்திடுவார் தையர்களென்றுசொல்லி
நெற்றிக்கண்ணைத்திறந்து நிமலியவள்பார்க்கையிலே
கல்லாய்சபித்துவிட்டாள் கன்னியர்களேழுபேரை
ஏழுபேருங்கல்லாகி யீஸ்வரிக்குமுன்னே நின்றார்
அவர்களிடதல் லுயிரை யரிவையருந்தாமழைத்து
ஏழுசெப்புகாகம்போல்சோடித்தாளீஸ்வரியும [பண்ணி
பொற்பிறப்பங்கோலதுபோல் பொற்கொடியாளுண்டு
விபூதிப்பையதுபோல் மெல்லியவளுண்டுபண்ணி
அபமையப்பன்காவலாளன் அவனையவள் தானழைத்து
இத்தனையுங்கொண்டுவந்து தவசடியைக்காருமப்பா
அப்படியேநல்லதென்று ஆணழகன்காத்திருந்தான்
அப்போதுகாமாட்சி யள்ளியவள் நீறெடுத்து (ள்
குழந்தையின்மேல்தான்போட்டு காத்தனெழுந்திரென்றா
ஈஸ்வரியாள் நீறுபட வெழுந்திருந்துகாத்தவனார்
கைகட்டிவாய்புதைத்து காமாட்சிமுன்னே நின்றார்



கண்டாயோவென்மகனே கன்னியர்களேழுபேரை
கல்லாய்ச்சபித்துவிட்டேன் காத்தவனேபாருமென்றார்
மாதாவுரைக்கையிலே மன்னவனாரே துசொல்வார்
உன்னுடையமகிமைதனை யுத்தமியே நானறியேன்
என்னமோயேதோவென்று யிருந்தேனிதுநெடுநாள்
இன்றுதெரிந்ததம்மா யீஸ்வரியேயுன்மகிமை
என்றிவர்சொல்லி யேதுரைப்பாரீஸ்வரிக்கு
என்தாயேயீஸ்வரியே எனைவளர்த்தமாதாவே
பட்டேனொருகோடி பாடுபட்டேன்முக்கோடி
நான்-பட்டகஷ்டமெத்தவுண்டு பாவையைகண்டதில்லை.
எத்தனையோபாடுபட்டு யிடிக்குத்தலைகொடுத்தேன்
ஆரியமாலைதனை யழைக்கவிடைகொடுத்தால்
போறேனடியென்தாயே பொற்கொடியேமாலைவனம்
போய்வாமகனேயென்று வெண்ணீறுகைகொடம்மா
வாக்கிட்டால்தப்பாது வரங்கொடுத்தால்பொய்யாது
பொய்யாதுபொய்யாது புனற்கிளியேயுன்னாவு
பூவிரண்டுபூத்தாலும் நாவிரண்டும்பொய்யாது
என்றிவர்சொல்லையிலே யீஸ்வரியாளே துசொல்வாள்
ஏதடாவென்மகனே எந்நேரம்போராட்டம்
மாலைமாலையென்றுசொல்லி வதைக்கிறாய்எந்தனை நீ
கிள்ளிவருங்கீரையல்ல அள்ளிவந்துநான்கொடுக்க
மாங்காயோதேங்காயோ வரவழைத்துகைகொடுக்க
ஆண்டிபரதேசியல்ல அழைத்துவந்துஒப்படைக்க
மாலையிடவதிகார மன்னவனேகண்டிருந்து
எந்நேரமுமாலையென்று யேனோவருந்துகின்றாய்
மாலையென்றசொல்வசன மறந்துவிடுஎன்மகனே
அப்பெண்ணைமறந்து வெப்பெண்ணைக்கேட்டாலும்
கொண்டுவந்துயான்தருவேன் கொற்றவனேஎன்றுரை
தாயாரைக்கேட்டு சுவாமியவரே துசொல்வார் [த்தார்
மண்டலத்துமாதர்களைக் கொண்டுவந்துவிட்டாலும்
மாலைகன்னியாவார்களோ மண்டலத்துபெண்களெல்
எத்தனைநாள்கேட்கிறது என்தாயேபெற்றவளே [லாம்
என்றிவர்சொல்லி யிளங்கொடியாள்முன்னிலையில்

பத்தாவது, சத்தகன்னி வனம் - முற்றுப்பெற்றது.

---

பதினொராவது

# காத்தவராயசுவாமியும், ஆரியப்பூராசாவும் கட்டுண்ட வனம்

### விநாயகர் துதி வெண் செந்துறை

தந்தாவளமேயுன்றன் செந்தாமரைபோற்றி
நந்தா திருக்கவளை யுத்தா தரிப்பவனே
கந்தராங்காத்தசுவாமி கதைபாடத்தீதோட
சந்ததமுன்வரங்கள் தந்தளிப்பாயாண்டவனே
உன்னைப்பணிந்தவற்கு பின்னைப்பிணிதீரும்
என்னைப்போல்வடியவ ரிவ்வுலகிலேனுமுண்டோ

### கதையின் வரலாறு

தவநிலையைவிட்டெறிந்து தனஞ்செயனார்வாராரே
ஆலமரம்சுமைதாங்கி ஆண்டவனார்வந்துநின்று
எண்ணாதுமெண்ணுகிறார் எண்ணமற்றசிந்தையதாய்
எத்தனைவிதத்தினாலே யென்தாயேகேட்டாலும்
எள்ளளவுமனமிரங்கி எனக்குவிடைதாரேனென்றாய்
ஆரைகொண்டிவள்மதத்தை யடக்கிவிடலாமென்றுசொல்லி
வேதியரைக்கொண்டு இவள்மதத்தையடக்கவேண்டும்
என்றுமனதிலெண்ணி ஏதுசெய்தார்பஞ்சவர்ணம்
வாவென்றழைத்தாராம் வெருகுதுமாறுவேஷம்
அஞ்சனக்காரனைப்போ லாண்டவனார்வேஷங்கொண்டு
காவிதிலர்தமிட்டு கஸ்தூரிபொட்டணிந்து
சேலத்துருமாலை செகதாடுபொன்சரிகை
ஒற்றைக்கம்பிசோமனதை யுத்தமனார்தாமுடுத்தி
அஞ்சனச்சுவடி தன்னை யாண்டவனார்கைபிடித்து
சுமைதாங்கித்தன்னருகில் சீராகவுட்கார்ந்தார்
ஆஆஆவென்றுசொல்லி ஆகாயம்பார்த்திருந்தார்
இப்படிக்கிவரிருக்க யெழிலான வேதியர்கள்
ஆலோசனைசெய்கிறார் ஆயிரம்வேதியரும்
ஆரிய மாலைதனை யரிவையைக்காணாமல்
ஆரெடுத்துப்போனாரோ ஆரியப்பூமாலைதனை
கொண்டுபோனமன்னவனைக் கொற்றவனைத்தாமறியார்



அஞ்சனக்காரன்தனை அழைத்தவனைக்கேட்டாக்கால்
அப்போதெரியவரு மாரியப்பூமாலைசெய்தி
வெங்குபட்டனருகில்வந்து வேதியர்களேதுசொல்வார்
அஞ்சனக்காரன்தன்னை யழைத்துவாடாவெங்குபட்டா
அப்போதுவெங்குபட்ட னரியவெடுத்துரைப்பான்
கயவுடையமாலைதனை எனக்குத்தரமாட்டேனென்றீர்
போனாலும்போய்ப்போறாள் பொல்லாதமாலைகன்னி
என்றிவன்சொல்கேட்டு ஏதுசொல்வார்வேதியர்கள்
உனக்கேதருகிறேண்டா உத்தமியாள்மாலையரை
அஞ்சனக்காரன்தன்னை யழைத்துவாவென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு வாறாராம்வெங்குபட்டர்
ஆலமரத்தருகே ஆண்டவனைக்கண்டுவிட்டார்
ஆரையாவென்றுசொல்லி யருகினிலேயுட்கார்ந்தார்
அஞ்சனக்காரனென்று ஆண்டவருந்தாமுரைத்தார்
மாமன்மார்தம்பியுடன் வாருமென்றார்வெங்குபட்டர்
அப்படியேவாறேனென்று ஆண்டவருந்தானெழுந்து
வேதியர்க்குமுன்பாக வந்தாரிருவருமே
அஞ்சனக்காரன்தன்னை ஐயமார்கண்டவுடன்
அஞ்சனத்தைப்பாருமென்று ஆண்டவற்குதாமுரைத்தா
அப்போதுசுவாமிதுரை அஞ்சனத்தைப்பார்த்துரைப்பார் [ர்
மங்கையரைக்கொண்டுபோன மன்னவனொருவனுண்டு
கிளைபெருத்தஆலமரம் விழுதுபதினாயிரமாம்
ஆலமரத்தடியில கிழவிதவமிருப்பாள் [ன்றான்
அவளிடத்தில்தானிருப்பா ளரிவையரைக்கொண்டுசெ
அவளாலேவந்தவினை ஆரணங்குசென்றதுக்கம்
கிழவியைக்கொண்டுவந்தால் கிளிமொழியாள்வந்திடுவா
அவளாலேநடந்தமோச மனவற்றகோடியுண்டு [ன்
என்றிவர்சொல்லையிலே இதுகேட்டுவேதியர்கள்
ஆமாங்காணப்பாபட்டா ளனைவோருமெழுந்திருங்கள்
கிழவிதனைப்பிடித்து கிளிமொழியைக்கொண்டாவென்
என்றுமிவருரைத்து யாவர்களும்போகலுற்றார் [போம்
கயிறுந்தடியெடுத்து கட்டழகர்வந்துநின்றார்
இவர்கள்வந்துநிற்பதுவை மீஸ்வரியுந்தாமறிவாள்
ஆர்குடியையிவள்கெடுக்க ஆண்டிச்சியாகிவந்தாள்
ஆளுக்கொருசடையை யப்பால்பிடித்திழுத்து
ஆளுக்கோர்தடியாலே யடிக்கலுற்றாரீஸ்வரியை

எங்கேயொளித்துவைத்தா யெங்கள் மகள் மாலையரை
காட்டடியென்றுசொல்லி கடுகவிழுக்கையிலே
என்றிவர்கள்சொல்லி யிழுத்துப்பறிக்கையிலே
என்னகூச்சலென்று யீஸ்வரியுந்தானெழுந்தாள்
சடைகுலுங்கமுடியசையத் தையலிளங்கொடியாள்
கலைத்தோலும்புலித்தோலும் காட்டுமான்தோலசைய
காமாட்சிதானெழுந்தாள் கம்பாநதியைவிட்டு
இங்குயிவர்களெல்லா மிந்தவிதமாயிருக்க
கண்டுமனங்கொதித்து காளைமனம்பதைத்து
என்னதான்செய்கின்றாரோ யியலானவேதியர்கள்
சடைபிடித்தாரோ தையலிளங்கொடியை
இப்பாவமெந்தனுக்கு எப்பொழுதுசுற்றுமல்லோ
இதற்கென்னசெய்வோமென்று எங்கள் துரையிங்குவந்
ஆரடாபிராமணர்களே யடிக்கின்றீர்கிழவிதனை (து
ஆரியமாலைதனை அவளையெடுத்துக்கொண்டு
போனவன்நான்தாண்டா புத்தியில்லாவேதியரே
இதுகேட்டவேதியர்கள் ஏதுசெய்தாரப்போது
மாதளம்பூசவுக்கதனை மன்னவருங்கைகொடுத்து
மல்லிகைப்பூதன்கயிற்றை மன்னவருங்கைகொடுத்து
என்னை-கட்டிக்கொண்டுபோங்களென்றார் காளையந்தபஞ்சவர்னம்
அதுகேட்டுவேதியர்க ளப்பொழுதேதுசெய்தார்
மல்லிகைக்கயிற்றினாலே மன்னவர்கள்வரிந்துகட்டி
மாதளம்பூசவுக்காலே மாரியடித்தார்கள்
அடித்திழுத்துக்கொண்டு ஆரியப்பூராசன்முன்னே
வேதியர்கள்வாய்திறந்து விவரமாயேதுசொல்வார்
கன்னியரைகொண்டுபோன கள்ளனிவன்வந்தானே [ம்
மாலைதனைகொண்டுபோன மன்னவனைகொண்டுவந்தோ
என்றிவர்சொல்லையிலே இதுகேட்டுராஜன்சொல்வார்
நீதானோகொண்டுபோய் நேரிழையாள்மாலைதனை (றான்
எங்குகொண்டுவைத்தாயடா எனக்கறியசொல்லுமென்
சுவாமி-வாயைத்திறவாமல் மவுனமாய்த்தானிருந்தார்
ஆரியப்பூராஜாவும் அதிகமாய்க்கோபங்கொண்டு
வலையன்சிவப்புடையான் மன்னனையழையுமென்றார்
அப்போசிவப்புடையா னரசன்முன்வந்து நின்று
அரசதுரைத்தினமே அழைத்தவகைசொல்லுமென்று
வலையன்சிவப்பனுக்கு மன்னவருமேதுசொல்வார் (ன்



கன்னியைக்கொண்டுபோன கள்ளனகப்பட்டாண்டா
மாலையைத்திருடிப்போன மாயனகப்பட்டாண்டா
காளையிவனைக் கழுமரத்திற்போடவேண்டாம்
கள்ளன் திருடினவன் கனமானகாவல்வையும் (விலங்கு
இவனுக்கு-கால்விலங்குகைவிலங்கு கனத்ததொருபெரு
மார்விலங்குதோள்விலங்கு மணிவிலங்குபூட்டினார்கள்
உழக்கோலும்பாய்ச்சினார் உத்தமனாரண்டவற்கு
ஒற்றைச்சாணீளம் ஒருசாணகலமது
இரண்டுமுழங்கள் இரும்புபெட்டிகொண்டுவந்து
இவரைக்கவிழ்ந்தபடியாக பெட்டியிலேதானடைத்து
மேற்பெட்டிதான்மூடி முத்திரையும்போட்டார்கள்
எட்டுகட்டுகட்டினார்க ளிரும்புநல்லபெட்டிதனை
ஆராரைக்காவல்தேடி அங்ஙனேவைக்கலுற்றான்
பெட்டியருகாக குறிப்பாகவுட்கார்ந்தான்
இன்னமற்றசேனைகளைப் பெட்டிசுற்றிசூழவைத்தான்
இரவும்பகலாக ஏமாறுமலேயிருந்தார்
இப்படியாக யிவர்களிருக்கையிலே
அந்நேரவேளையிலே எந்தநேரமாச்சுதென்றால்
கல்லோடேகல்லனையும் காளியுடசேனைவரும்
டல்லோடேபுல்லனையும் பிடாரியம்மன்சேனைவரும்
சுவாமி-அந்தநல்லவேளையிலே ஆரைநினைக்கலுற்றார்
வாங்குறும்பினாலேயல்லோ வந்துஅகப்பட்டேனே
அத்தையரேமூதேவி யரிவையரேயிங்குவாருமம்மா
வாராமல்தானிருந்தால் மார்பைப்பிளந்திடுவேன்
மண்டையுடைத்திடுவேன்கொண்டையறுத்தெடுப்பேன்
இந்தக்ஷணந்தனிலே யிங்குவரவேண்டுமென்றார்
அப்போதுமூதேவி யங்ஙனமேதுசெய்தாள்
ஆலமரத்தருகே கழுதைதனைக்கட்டிவைத்து
படுத்திருக்கும்வேளையிலே பஞ்சவர்னந்தானழைக்க
கேட்டுவிட்டாள்மூதேவி கிளிமொழியானந்நேரம்
பொல்லாக்குணமுடைய போக்கிரியழைத்தானே
போகாமல்நாமிருந்தால் பிழைமோசம்வந்துவிடும்
என்றுகழுதையின்மே லேறியந்தமூதேவி
கவரிபழமுறமாம் வெண்சாமரைத்துடப்பம்
காத்தனருகில்வந்து கண்டுவிட்டாள்சேனைகளை
எடுத்தாள்பழமுறத்தை ஏற்றினாள் துடப்பக்கட்டை

விசிரியவிக்கலுற்றார் வீசினார்மன்னர்கள்மேல்
நின்றிருந்தமன்னரெல்லா நீலவிழிசோர்ந்தார்
கண்டுபிடித்தவர்கள் களைத்தூக்கமாகிவிட்டார்
எல்லோருங்கண் ணுறங்கும் வேளையதுதனிலே
அந்த-பெட்டியின்மேல்வந்நின்றாள் பொற்கொடியாள்மூதேவி
ஏண்டாமருமகனே என்னையழைத்தாய்சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு ஆண்டவனாரேதுசொல்வார்
பெட்டியையவிழுமென்றார் பொல்லாதவித்தைதனை
அந்தவுரைகேட் டவிழ்த்துவிட்டாள்பெட்டிதனை
பெட்டிவிட்டுத்தானெழுந் துபுண்ணியரும்வெளியில்வந்
கால்விலங்குகைவிலங்கு கழட்டியவரேதுசெய்தார் (து
தன்னருகிலிருந்த ஆரியப்பூராஜனுக்கு
கால்விலங்குகைவிலங்கி கனவிலங்குதான்பூட்டி
உழக்கோலம்பூட்டியங்கே உத்தமனாரேதுசெய்தார்
பெட்டியிற்போட்டடைத்து பூட்டியேசாவியிட்டு
வலையன்சிவப்புடையான் பன்னான் தலையாரி (அது
அவன்-வலதுபக்கம்மீசைதன்னை வகையுடனேகத்தரித்
இடதுபக்கம்மீசைதன்னை யிருகையால்கத்தரித்து
மீசைதனைக்கத்தரித்து விடலிபிள்ளையெங்குவந்தார்
மஞ்சையப்பன்கட்டிவைத்தமண்டபத்தில்வந்துநின்று
அத்தையரேமூதேவி யிருப்பிடத்தேபோடியென்றார்
போரடாமருமகனே யென்றுமவள்போய்நடந்தாள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
வலையன்சிவப்புடையான் மன்னனெழுந்திருக்க
அங்கிருக்குமன்னரெல்லா மனைவோருங்கண்விழித்தார்
அந்தச்சமயத்திலே சிவப்புடையானேதுசொல்வான்
பெட்டிதனைத்திறந்து பொருமைகொண்டுதானவனும்
மாலைதனைக்கொண்டுபோன மாபாவியென்றுசொல்லி
அப்போதுவேதியர்களை வருந்தாமுரைத்தார்
உதைத்தவுதையாலே வுதிரங்கள்கக்குகின்றான்
இனியடித்தோமாகி லிறந்துபடிவானென்று
பெட்டிதனைமூடிவைத்து போதவேதான்பூட்டி
எட்டுகட்டுங்கட்டியவ னெங்கெங்குஞ்சுற்றிவந்து
ஆரியப்பூராஜா அவரையிங்குகாணோமென்று
எங்கேயவர்போனாரோ ஏதுமறியோமென்று
இவனிருக்கும்வேளையிலே யாவருந்தான்சூழ



பொழுதுவிடிந்தது பொற்கோழிகூவுகுது
நிலமுந்தெளிந்தது நிலக்கோழிகூவுகுது
அதுவரையில்மன்னவரை யிவ்விடத்தில்காணவில்லை
என்னபோயேதோவென்று இனியசிவப்புடையான்
பெட்டிதனைத்திறந்து புண்ணியனும்பார்த்துவிட்டான்
ஐயோசிவனேயென் றழுதுகொண்டேயேதுசொல்வான்
திருடனிவன்கள்ளனென்று யாவர்களுந்தாமுரைத்தோ
என்றிவன்சொல்லையிலே யங்கிருந்தோர்தாம்கேட்டு (ம்
என்னசெய்யப்போறோமென்று ஏங்கிமனம்நடுங்கி
அடிதண்டம்பிடிதண்டம் அரசனுக்கேதுசொல்வார்
அறியாமற்செய்தபிழை ஆண்டவரே நீர்பொறுப்பீர்
என்றிவர்சொல்லி யிரக்கமுடனிற்கையிலே
அப்போதரசனவ னவர்களுக்கேதுசொல்வார்
என்விதியைநான் துலைத்தே னெந்தனமைப்புப்படி
திருடனைநான்கட்டிவைத்தேன் திருடனென்னைகட்டிவைத்தான்
அந்தத்திருடனவ னதிகசமர்த்துடையான்
அவனைப்பிடிப்பதற்கு ஆராலுமுடியாது
அவனைப்பிடிப்போமானால் நம்மைபிடித்திடுவான்
அவன்மாலைதனையழைத்து வருவானேயாமாகில்
ஏனென்றுகேட்கவேநாம் கூடாதொருநாளும்
என்றிவரெல்லோரு மிப்படியாய்ப்பேசிக்கொண்டார்
இப்படியாய்ப்பேசி யிருக்கின்றவேளையிலே
எங்குமெள்ளவாறரா மெங்கள்துரைபஞ்சவர்னம்
வீரசூரங் காவேரி வெற்றிபுகழோமத்தூர்
ஓமந்துரெல்லைதேடி யுத்தமனார்வந்துமிங்கே
அமளியிட்டகங்கையிலே குமளியிடஸ்நானஞ்செய்து
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீறுக்காப்பணிந்து
மாடியதுதிறந்து வர்னலட்சம்பொன்னெடுத்து
ஆற்றலரிகொன்றைதுப்பை அடுக்கலரிமந்தாரை
சேற்றலரிமல்லிகைச் செவ்வலரிப்பூவெடுத்து
ஓடுகிறகங்கையிலே ஒருசொம்புஜலமெடுத்து
தாயார்தவநிலைக்குச் சண்முகனார்வந்துநின்றார்
அப்பொழுதுகாமாட்சி யரிவைதவமிருந்தாள்
கண்ணிரண்டுமூடிக் கையிரண்டுந்தானேந்தி
அரனேபரனேயென்று அம்மன்தவமிருந்தாள்

வந்ததொரு சண்முகனார் மலரெடுத்துக்கைபிடித்து
கர்த்தாவின்முன்பாக மலர்தூவிதெண்டனிட்டு
காண்கிறேனாச்சி யென்று கால்மேல்முடிசாய்ந்தார்
வந்துபணிந்தவனைக் கண்டந்தகாமாட்சி
என்னைப்பெறுவா யெந்திர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
பக்கத்தில்கைகொடுத்தால் பஃகெலும்புநோகுமென்று
நெற்றியிற்கைகொடுத்து நிமிலியவள் தூக்கிவிட்டாள்
கைகட்டிவாய்புதைத்து கட்டழகர்நிற்கையிலே
எங்குவந்தாயெந்தன்மகனே எனக்கறியச்சொல்லுமென்
மாலைவனம்போவதற்கு வரம்கேட்கவந்தேனம்மா [றார்
அதுகேட்டுகாமாட்சி ஆரணங்கேதுசொல்வாள்
வேண்டாமடாயென்மகனே விண்ணவரைத்தீண்டாதே
அவள்-துடையில் துடைநாகம் தொட்டவனைக்கொல்லு
தாவிதரித்தோனை தப்பாமற்கொல்லுமடா [மடா
அவளுக்கு-ஐந்துவிரல்கோணலடா அடியிடுப்புசாய்ப்புமுண்டு
முகத்திலேமுன்சுழிதான் மூத்தோரைகொன்றிடுவாள்
மேலும்மவள்பிர்மகுலம் மேலானசாதியல்லோ
பார்ப்பான்மகளாலே பாபம்வந்துநேர்ந்துவிடும்
ஐயன்மகளாலே யவகேடுவந்துவிடும்
பறையாபறையாவென்று சாமியிட்டசாபத்தினால்
கன்னியவளாலே கழுமரங்கள்நேர்ந்துவிடும்
தூண்டிலிருக்கணுமா துடிதுடித்துச்சாகணுமா
என்றுமவளுரைக்க ஏதுசொல்வார்காத்தவனார்
தூண்டில்வந்தால்குற்றமில்லை தோகைவந்தாற்போது
மாண்டுமடிந்தாலும் மாலைதனையான்மறவேன் [மம்மா
செத்துமடிந்தாலுந் தேன்மொழியைநான்மறவேன்
ஆசையவளிடத்தே செத்தகட்டையுன்னிடத்தே
சீவனவளிடத்தேசெத்தகட்டையுன்னிடத்தே [றைத்தார்
எனக்கு-போகவிடைகொடம்மா போய்வாரேனென்று
அந்தவுரைகேட்டரிவையருமேதுசொல்வாள்
ஆசைக்குரோஷமில்லை யங்கட்போனாற்பங்கமில்லை
பெண்ணாசைபொல்லாது போறேனென்றுதுள்ளாதே
நான்-எத்தனைதான்சொன்னாலு மேற்காதேயுன்செவிக்
சொந்தத்திற்பெண்ணிருக்க தூரப்பெண்களேதுக்கடா [கு
அம்மான்மகளிருக்க அயல்பெண்களேதுக்கடா



பெண்ணென்றஆசைதனை போட்டுமறந்துவிடு
உண்டிடுஞ்சாதமது உடலிற்றரிக்கவில்லை
தின்னாலிலையடைக்காய் திருவாய்சிவக்கிலையே
பாயிற்படுத்தாலும் பாம்பாய்புரட்டுதம்மா
தரையிற்படுத்தாலுஞ் சாடாயுருக்கிடுதே
பொன்னோடுபொருளோநான் போட்டுமறந்திருக்க
காசுபணமோநான் கைவிட்டுமறந்திருக்க [பேல்
அவள்மாணிக்கமாளிகையில் பணப்பலகைசேர்ந்தநின்
சிங்காரமேடையில்மேல் சேர்ந்திருப்பதெக்காலம்
சப்ரகூடமஞ்சத்தில் சார்ந்திருப்பதெக்காலம்
நீ-வாக்கிட்டால்தப்பாது வரமளித்தாற்பொய்யாது
பூவிரண்டுபூத்தாலும் நாவிரண்டுபூவாது
போய்வாமகனேயென்று வெண்ணீறுநீகொடம்மா
நீ-வெண்ணீறுதந்தாலே யெல்லியரைகொண்டுவாரேன்
என்றிவர்சொல்லையிலே ஈஸ்வரியுமேதுசொல்வாள்
வரும்விதியைச்சொன்னேனப்பா படும்விதியைப்பட்டு
பொன்திருடிகழுவிருப்பார் பூதலத்திலுள்ளவர்கள் [விடு
மண்திருடிக்கழுவிருந்தார் மண்டலத்திலுள்ளவர்கள்
பெண்ணுக்காய்கழுவிருந்தால் பூலோகத்தாரேதுசொல்வார்
கன்னியாய்கழுவிருந்தால் கலியுகத்தாரேதுசொல்வார்
மாலையென்றவசனம் மறந்துவிடுயென்மகனே
என்றிவளுரைக்க யேதுசெய்தார்பஞ்சவர்னம
இனியிருந்தாலாபமில்லை என்றுயவரெழுந்தார்

பதினொருவது, கட்டுண்ட வனம்-முற்றுப்பெற்றது.

---

பன்னிரண்டாவது

## காத்தவராயசுவாமி

## ஆரியமாலையின் வரலாறு கூறும்வனம்

**விநாயகர் துதி வெண் செந்துறை**

ஆகுவாகனமுடைய ஆரனாரின்புத்திரனே
பாகுபயருடனே பட்சமாயான்படைப்பேன்
ஆரணியத்தான்காத்த ஆண்டவனார்தன்கதையைப்

பூரணமாய்யான்பாட புத்திமிகச்சிறந்து
குறைகள்மிகவாராமல் கூடத்துணையிருக்க
விரைவினில்வந்திருந்து விமலனார்தன்புதல்வா
கவிவாணர்தான்புகழக் காரியார்தான்கவிழப்
புவியினிற்கீர்த்திபெற்றப் புண்ணியரேகதைநடத்தும்

## கதையின் வரலாறு

தாயைவிட்டுத்தானடந்தார் சுவாமிதுரைபஞ்சவர்ணம்
மனஞ்சலித்துமாரிபிள்ளை வாருரேவீதியிலே
உப்பங்கிடாரவழி யுடனேயவர்தாண்டி
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
உற்றுநினைத்தார் ஒருகோடியோசனையை
தானாய்விசாரமிட்டு தலையிறங்கிக்கொண்டவரும்
வங்கணத்துச்சின்னானை வாருமென்றுதானழைத்தார்
இந்தநல்லவேளையிலேயெனக்குத்துணைவாருமென்றார்
அந்தவுரைகேட்டான் ஆணழகன்சின்னானும்
ஆடலும்பாடலு மமருமென்றுகையமர்த்தி
தான்-தாலிகட்டும்பெண்களைத் தன்னருகிலேயழைத்து
போய்வாறேனென்றுசொல்லிப் புத்திமதியுரைத்து
தூக்கிவைக்குங்கால்களுக்குத் துத்திப்பூச்சுங்குவிட்டு
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஆண்டவரைத்தேடியல்லோ ஆணழகன்வாரானே
உப்பங்கிடாரவழி யுத்தமனுந்தேடிவந்து
சரணஞ்சரணமென்று சாய்த்தான்திருமுடியை
என்னையழைத்தவகை எனக்கறியச்சொல்லுமென்றான்
சின்னானுரைகேட்டு சுவாமியவரேதுசொல்வார்
அல்லவடாசின்னானே விதிதன்னையென்னசொல்வேன்
என்தாயார்செய்தசதி யெண்ணமுடியாது
மாலைதனைசிறையெடுக்க மாதாவுங்கூடாதென்றாள்
எத்தனைதான்கேட்டாலும் எள்ளளவுங்கூடாதென்றான்
மாலையென்றவாசையது மறந்திருக்கமாளாது
பாயிற்படுத்தாலும் பாம்பாய்ப்புரட்டுதடா
தரையிற்படுத்தாலும் சரடாயுருளுதடா
எப்படிமறந்திருப்பேன் எனக்கிசைந்தகன்னியரை
மறந்திருப்போமென்றாலும் மறக்கமுடிகூடவில்லை
மாலையைச்சிறையெடுக்க வகையுண்டோசின்னானே



உன்னாலேயானதொரு உதவிகளைச்சொல்லுமென்றான்
சுவாமி-உன்னாலுமென்னாலுஞ் சிறையெடுக்கமாளுமோ
அற்பசொற்பமானவளோ ஆரியப்பூமாலைகன்னி [தான்
வரத்தில்மிகுந்தவள்தான் வல்லமைகளுள்ளவள் தான்
இராங்கர்வலிமையுண்டு தாச்சியார்தயவுமுண்டு
பெண்ணாய்ப்பிறந்தாலும் பூமுடிக்கபெண்பிறந்தாள்
ஸ்திரீயாய்பிறந்தாலும் சிறப்புடனேதான்பிறந்தாள்
அவள்கட்டுடென்னகாவலென்ன காவலதிகாரமென்ன
சுற்றிலுமதிலென்ன துரைமன்னகாவலென்ன
பக்கமதிள்களென்ன படைமன்னர்காவலென்ன
மூன்றுபேர்ராசாக்க ளொன்பதுபேர்மந்திரிகள்
நாட்டுக்கணக்கெழுதும் நாயகத்தார்பிள்ளையென்றும்
ஊருக்கணக்கெழுதும் உகந்தாச்சுபிள்ளையென்றும்
சுண்டுவில்லுராங்கப்பையா துரைமகனார்மந்திரியாம்
வலையன்சிவப்புடையான் மன்னன்தலையாரி
அண்ணன்தம்பியேழுபேர்க ளாரண்மனைக்குக்காவலுண்
அடிமேலடியெடுப்பா ராண்மையுள்ளயேழுபேரும் [டு
முள்ளுமேலடியெடுப்பார் மூக்கர்சிவப்புடையார்
கல்மேலடியெடுப்பார் காளைசிவப்புடையார்
தண்ணீர்மேலடியெடுப்பார் தயவுள்ளசிவப்புடையார்
அவனுடையகாவலிலே அதிகாரமெத்தவுண்டு
சிவப்புடையான்காவலிலே சிட்டுபறவாது
சிட்டுப்பறவாது சிறுகுருவிநாடாது
வக்காபறவாது வனக்குருவிநாடாது
காகம்பறவாது கருங்குருவிநாடாது
அள்ளிபழுத்தாலும் அணிகள்வந்துமோதாது
கிள்ளிப்பழுத்தாலுங் கிளிகள்வந்துமோதாது
கறந்துவைத்தபாலதனைக் காகம்வந்துதீண்டாது
மொண்டுவைத்தநீரதனை முகம்வைத்துவேண்டாது
ஆண்பக்ஷிபறவாது அவனுடையகாவலிலே
உண்டைதப்பிப்போனாலும் குண்டுதப்பிப்போறதில்லை
குண்டுதப்பிப்போனாலும் குறிதப்பிப்போறதில்லை
இவைகளுமல்லாமல் இனிபுதுமைமெத்தவுண்டு
மாலையிடகோட்டைசுற்றி வளைந்தவகழிதன்னில்
வயிரிவயிரியென்று வண்ணலட்சமுதலையுண்டு
அத்தமுதலைகட்கு மாலையவளேதுசெய்தாள்

மூக்குத்திகா துகுத்தி முகத்திலவள்பொட்டுமிட்டாள்
அந்தவகழியினி லளவற்றகெண்டையுண்டு [டுத்தாள்
சொர்னகெண்டையென்று சொல்லி சுந்தரியாள்பேர்கொ
இன்னம்புதுமையுண்டு இளங்கொடியாள்மாலையற்கு
சின்னரங்கபெரியரங்கம் ஸ்ரீரங்ககிளியொன்று
அப்படிக்குப்பத்துலட்சம் அழகுள்ளகிளியுண்டு
சின்னிசின்னியென்றுதாதி சேனைலட்சங்கோடியுண்டு
இப்படியாய்க்காவலது எத்தனையோகோடியுண்டு [ன்
அவள்குளிக்குமஞ்சளது ஆண்டவனே சொல்லுகிறே
கொச்சிமஞ்சள்குடகுமஞ்சள் கொல்லத்தரக்குமஞ்சள்
திருவல்லிக்கிழங்குமஞ்சள் ஸ்ரீரங்கசிவப்புமஞ்சள்
ஒன்பதுமஞ்சள்வகை உத்தமியாள்தான்குளிப்பாள்
அவள்குளிக்குமஞ்சளோடை ஆறாய்ப்பெருகுதுபார்
தாளிப்பனைஞ்சோலை கூந்தற்பனைஞ்சோலை
அகழிதான்கரைபுரண்டு ஆறாய்ப்பெருகுதுபார்
அந்தச்சலமதனை யாரொருவர்கண்டாலும்
எடுத்துதெளித்துக்கொள்வா ரின்பமுடன்தன்சிரசில்
அல்லார்தலைகூந்த லறுபதுமூன்றுமுழம்
அவள்கூந்தல்தான்சுமக்க ஆயிரம்பேர்தாதியுண்டு
அதை-வாரிமுடிப்பதற்கு வர்னலட்சங்கோடியுண்டு
சந்திரகண்டி சூரியகண்டி தையல்தரித்திருப்பாள்
தங்கப்பதுமைரெண்டு தலைமேல்விளக்கெடுக்கும்
அன்னவுஞ்சல்மேலாக அவளும்படுத்திருப்பாள்
பொன்னுக்களஞ்சியங்கள் போதவேகட்டிவைத்தார்
அவள்-கைகொண்டுசிலவழிப்பாள் கன்னியிளங்கொடி
இரங்கரிடசந்நிதியில் நாணயமாகவேதான் [யாள்
பொங்கல்தளிகையும் பொற்கொடிக்குவந்துவிடும்
ஆயிரங்கிள்ளைகட்கு மள்ளியவள்படைத்திவொள்
தானும்புசித்திருப்பாள் தையலிளங்கொடியும்
இவ்வளவுபோகத்துட னிருக்கிறமாலைதனை
அவளை-எப்படிக்குநீபோ யெடுத்துவந்துசேர்த்திடுவாய்
உன்னாலுமாகாது என்னாலுமாகாது
தம்மைப்பிறப்பித்த ஈஸ்வரனாலாகாது
வீணாசைகொள்ளாதே வேந்தரேயென்சாமி
இந்தவகையறிந்து ஈஸ்வரியுங்கூடாதென்றாள் [கு
அறிந்தமட்டுஞ்சொன்னேனையா ஆண்டவரேயுந்தனுக்



மாலையென்றசொல்வசனம் மறந்துவிடுகொல்விமலை
கன்னியென்றசொல்வசனங் கனவிலுமெண்ணாதே
என்றுசொல்லசின்னானும் இதுகேட்டுஆண்டவனார்
கொஞ்சமடா நீபயலே கூளமடாயெந்தனுக்கு
பஞ்சையடா நீபயலே பதருதடாயெந்தனுக்கு
எடுத்தாலுமாலையைத்தா னிருந்தாலுங்கழுமரந்தான்
மாலையைமறப்பதற்கு மனம்வருமோசின்னானே [ம்
நீகெட்டாய்பயலேயென்று எடுத்துரைத்தார்பஞ்சவர்ண
அவள்காவலிலிருந்தாலென்ன கன்னியரைக்கொண்டுவாரேன்
என்னுடையசாமர்த்திய மிருப்பது நீபாருமென்றார்
அதுகேட்டுச்சின்னானும் அப்படியேசெய்யுமென்றான்
கட்டாணிபெற்றபிள்ளை கழுக்காணியென்பார்கள்
அனைவோருஞ்சொல்வசன மப்படியேயாச்சுது
கேடுவரும்போது மதிகெட்டவருமென்பார்கள்
பெட்டியிலிருந்தவனீ புற்றில்நுழையாதே
என்றுசொல்லிசின்னானு மெடுத்துரைக்கும்வேளையிலே
அதுகேட்டுஆண்டவரு மப்பொழுதேதுசொல்வார்
ஆசையலையுதடா அருங்கிளியாள்மாலையின்மேல்
நீஎன்ன தான்சொன்னாலு மேறாதுயென்செவியில்
அப்போதுசின்னானு மாலோசனைகள்செய்து
சுவாமிதனைப்பார்த்து சடுதியிலேதுசொல்வான்
நான்சமுசாரக்காரனையா நான்போகவேண்டுமிப்போ
பெண்டுபிள்ளைக்காரனையா போகவிடைதாருமிப்போ
நீஎப்படியிருந்தாலு மேனென்றுகேட்பாரில்லை
சாதுக்கிழவியவள் தாயாரந்தகாமாட்சி
அவளை நீயேமாற்றி எங்குத்திரிந்திடுவாய்
உன்னைப்போல்நானிருந்தா லொவ்வாதுமன்னவரே
எனக்கு-குலந்தனிலேழுபெண்கள் கோத்திரத்தில்மூன்றபெண்கள்
திருப்பாற்கடல்தனிலே தான்பரியம்போட்டுவந்தேன்
எனக்குபோகவிடைதாரும் புண்ணியரேஎன்சாமி
அந்தவுரைகேட்டு ஆண்டவனாரேதுசொல்வார்
இவ்வளவுதானடா நீ என்னைவிட்டுப்போறேனென்றாய்
செத்தாலும்செத்திடுவேன் சிறையெடுத்துவந்திடுவேன்
மாண்டாலுமாண்டிடுவேன் மாலைதனைகொணர்ந்திடுவேன்
என்றுபோகவிடைகொடுத்தார் போய்ச்சேர்ந்தான்சின்
மலையாளம்போய்ச்சேர்ந்து மாதர்களுடன்கூடி [னானும்

சுகமாகவாழ்ந்திருந்தான் சொற்பெரியசின்னானும்
இப்படியாக இவனிருக்குபவேளையிலே
இந்தச்சமயத்திலே ஆண்டவனாரேதுசெய்தார்
உப்பங்கிடாரவழி உயர்ந்தகுன்றுமலையருகில்
இங்கிருந்துநினைத்தாரா மளவற்றயோசனையை
ஆண்டுநினைத்தாரா மளவற்றயோசனையை
வாவென்றழைத்தாராம் வருகுதுமாறுவேஷம்
வெட்டியானைபோலாக வேந்தர்வடிவெடுத்து
கம்பளிமேல்போர்த்துக் கனகத்தடிகைபிடித்து
எங்குமெள்ளவாறாரா மெங்கள்துரைபஞ்சவர்ணம்
கோமுதலைவங்குதனில் கொல்லிமலைவந்துநின்று
ஆரியமாலைதனை யழைக்கலுற்றார்சீக்கிரமாய்
அப்பாபட்டரீன்றெடுத்த அருங்கிளியேவாடியென்றார்
அன்னத்துளசிபெற்ற அழகுகன்னிவாடியென்றார்
நான்-அப்பாபட்டராணவர்க்கு அடிமைபறையனல்லோ
பாராமல்வாடுகிறார் பால்மோர்குடியாமல்
நான்-மாங்கனிச்சேரிதேடி வந்தேதனிதுவழியாய்
மரத்தின்மேலேறி யிறக்குபபறவையது
என்பேரைசொல்லியல்லோ உகந்தழைக்கும்வேளையிலே
அதுகேட்டுவந்தேனிங்கே யரிவையரேவாருமென்றான்
அப்பாபட்டர்தம்மிடத்தி லழைத்துப்போறேன்வாருமெ
அந்தவுரைகேட்டருங்கிளியும்வந்துவிட்டாள் (ன்றான்
இருவரும்போகையிலே ஏலக்கருங்குழலாள்
காலோய்ந்துகையமர்ந்து களைகள்மிகவாகி
மெல்லநடக்கலுற்றாள் மெல்லியிளங்கொடியாள்
அதுகண்டுஅப்பைய னானுவமாயேதுசொல்வான்
நடக்கமுடியலையோ நங்கையிளங்கொடியே
தெய்யுஞ்சோறுபட்டவற்கு நிலத்திற்கால்பாவலையோ
என்று-அதட்டிவழிநடந்தா னானுவத்தினாலேயவன்
அப்போதுமாலைகன்னி யஞ்சிப்பயந்தவளும்
வேதனைகளுள்ளடக்கி வீசிநடந்துவாறாள்
அந்தநல்லவேளையிலே அசலூர்சமுசாரி
கழனியுழுகையிலே கன்னியரைக்கண்டுவிட்டார்
இவள்-அழகும்வடிவுகளு மவர்கண்டேதுரைப்பார்
ஆரம்மாதாயாரே அருந்ததிபோலாக
கொண்டுபறையனுட னோண்டியாய்ப்போவதென்ன



போகும்வகையதனைப்பொறுமையாய்சொல்லுமென்றார்
அப்போதுமாலைகன்னி யருங்கிளியாளேதுசொல்வாள்
முன்னாளிலெந்தனுக்கு முக்கணனார்தீவினைதான்
எந்தன்தலைவிதிதா னென்றுவழிநடந்தாள்
அப்போபறையன் அருங்கிளியையழைத்துவந்து
தாயார்தவமிருக்குந் தவசடியினோரத்தில்
மாதாவறியாமல் மங்கையரைக்குந்தவைத்து
இங்கேயிருங்காணு மிளங்கொடியாள்கன்னியரே
ஒண்ணுக்குப்போய்வந்து ஊருக்குக்கொண்டுபோறேன்
என்றுசொல்லிப்பறைய னேகவழிநடந்தான்
அந்தவுருமாற்றிச் சொந்தவுருவெடுத்து
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்திருந்து
தாயைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சிலெண்ணி
வாவென்றழைத்தாராம் வருகுதுமாறுவேஷம்
ஆறுமுகந்துலங்கப் பன்னிருகைவேல்துலங்க
பச்சைமயில்துலங்கப் பஞ்சாக்ஷரம்விளங்க
எங்குமெள்ளவாறாரா மெங்கள்துரைபஞ்சவர்ணம்
ஐந்நூற்றெட்டுகிராமமது ஆண்டவனார்தாண்டியல்லோ
புத்துராகந்தேடிப் புண்ணியரும்வாறாராம்
ஆண்டவனார்வருகிறதை யனைவோருங்கண்டார்கள்
அரசன்முதலாக அங்கிருக்கும்வேதியர்கள்
காட்சிதருவதற்கு கர்த்தரிங்குவந்தாரென்று
சாம்பிராணிவாடை தணிவாடைதான்கொடுத்து
தூபதீபந்தான்கொடுத்து தொழுதிரங்கித்தெண்டனிட்டு
காட்சிதரவேண்டுமென்று கைதொழுதாரெல்லோரும்
அப்போதுகொல்லிமலை ஆண்டவனாரேதுசெய்தார்
பஞ்சாட்சரமெடுத்துப் பணிந்தவர்க்குத்தான்கொடுத்து
எழுந்திருங்களென்றுசொல்லி யினியமொழியுரைத்து
இராஜன்முகம்பார்த்து நலமாகவேதுரைப்பார் [கான்
மாலைதன்னைக்கொண்டுபோன மன்னவனும்நான்தான்
கன்னிதனைக்கொண்டுபோனகட்டழகன்நான்தான்காண்
கோமுதலைவங்குதனில் குடியமர்த்திவைத்தேனென்றார்
அங்கேயிருக்கிறாள்காண் ஆரணங்குமாலைகன்னி
மகளாரைக்காணுமென்று மனஞ்சலிக்கவேண்டாங்கா
ஒன்றுக்குமஞ்சாதீர் ஊரிலுள்ளவேதியரே [ண்
கானை-மழுவடியில்வந்தீராகில் கன்னியரைக்கண்டிடலாம்

நீங்கள் கழுவடி பூசைசெய்யக் கடுகவேவாருமென்றார்
அதுகேட்டவேதியரு மரசருமேதுசொல்வார்
ஆரோயெவரோவென்று ஆலோசனையாயிருந்தோம்
சுவாமி நீரெங்கள் பெண்ணைத்தானெடுத்துப்போன தினு
சந்தோஷமாச்சுதுகாண் சண்முகனேயெங்களுக்கு [ல்
வாடியென்று நீரழைத்தால் வாருளோமாலைகன்னி
நீ-அழைத்துக்கொண்டுபோவதற்கு அதிஷ்டங்கள்செ
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே [ய்திருந்தோம்
ஆரியப்பூராசரவ ரட்சணமேயோடிவந்து
கைகுவித்துவாய்புதைத்துக் கட்டழகனேதுசொல்வான்
அடிமைக்குஎன்னதொழி லாண்டவனேசொல்லுமென்
அப்போதுகொல்லிமலையரசனுக்கேதுசொல்வார் [றான்
நாளை-கழுவடி பூசையிலே காணவேவந்தாலே
காட்சியதுதந்திடுவேன் கடவுளபலம்கண்டி . வே
அதுகேட்டராஜனவன் அப்படியேநல்லதென்றான்
மாலைகன்னிசேதிதன்னை மன்னவர்க்குத்தாமுரைத்து
அந்தயிடத்தைவிட்டு அப்பால்வருகலுற்றான்
ஏழுபேர்மன்னர்களாம் மச்சான்மாரேழுபேராம்
வாங்கருப்பன் பூங்கருப்பன் மதுரைபெருங்கருப்பன்
அண்ணன்தம்பியேழுபேரா மவர்களுக்கேதுரைப்பார்
நாளை-கழுவடி பூசைக்கு கடுகவேவாங்களென்று
அந்தவிடத்தைவிட்டு அப்புறத்தேவாறாராம்
சுவாமிபரிமணத்தார் சத்தகன்னிபுத்திரரும்
மாதாதவநிலையில் மாரிபிள்ளைவாறாராம்
ஆர்க்கத்தலைமுழுகி வேர்க்கமயிர்கோதி
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துப்பூவெடுத்து
பொன்னீருஞ்சொம்புதனில் பன்னீருந்தானெடுத்து
பாதமதுவலம்பி பட்டாலடிதுவட்டி [ந்து
கொண்டுவந்தபுட்பமெல்லாங் குபுகுபென்றுதான்சொரி
காண்கிறேனுச்சியென்று கால்மேல்முடிசாய்த்தார்
வந்துபணிந்தவனை வாரியெடுத்தணைத்து
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன் நிற்கையிலே
அப்போதுகாமாக்ஷி ஆரணங்கேதுசொல்வாள்
என்னைபணிந்தவகை யெனக்குறையுமென்றுரைத்தாள்
அதுகேட்டுபஞ்சவர்ன மேதுரைப்பாரீஸ்வரிக்கு
மாலையைச்சிறையெடுக்க கடுகவரந்தாரும்



கன்னியரைச்சிறையெடுக்க கடுகவரந்தாரும்
அதுகேட்டுயீஸ்வரியு மப்போதுமேதுசொல்வாள்
நீண்டாநெருப்படா தெய்வப்பசுங்கிளியாள்
அண்டாநெருப்படா ஆரணங்குமாலைகன்னி .
இப்படிக்கானவளை எப்படிநீதொட்டணைவாய்
அம்மான்மகளாரை ஆசைகொண்டுநீர்தானும்
அவளையனுசரித்தா லாருமுன்னைக்கேளார்கள்
கருப்பழகிதன்னிடத்தே கடுகவேபோடாவென்றாள்
என்னடிஎன்தாயே இழிவானவார்த்தைசொன்னாய்
நான்-மாலைவனம்போறேனென்றால் மற்றவனம்போவென்றாய்
வன்னிவனம்போறேனென்றால் வேறுவனம்போடாவென்றாய்
மாலையைநான் சிறையெடுக்க வரங்கொடம்மாபெற்றவ
நீவரங்கொடுத்தாலாச்சு யில்லாமற்போனாலே [ளே
நான்சீராகநாட்டிடுவேன் சிவவதைசெய்திடுவேன்
கத்தியைமாட்டிவைத்து கடுகவுயிர்வாங்கிக்கொள்வேன்
எட்டியலரிதின்று எந்தனுயிர்வாங்கிக்கொள்வேன்
நீவிடை தந்தனுப்பாவிட்டால் விருதாவில்மாளுகிறேன்
என்றிருவர்சொல்லையிலே யீஸ்வரியுந்தான்கேட்டு
ஆனாற்போனென்மகனே ளரியவொருவார்த்தை
பாச்சூருசாலையிலே பாரமணல்மேடையிலே
தச்சனுளிநாடாமல் தானாய்வளருதடா
சிற்றுளிநாடாமல் சீராய்வளருதடா
ஆச்சாரவயிரமுள்ள அறுபகடிவேங்கைமரம்
ஐங்கலப்பால்வார்த்துமல்லோ ளாழுகாய்வளர்த்துவாரா
கதிர்கம்பிபோலாக காளிவளர்த்துவாரான் (ள்
உமக்கென்றுகழுமரந்தா னுடனேவளருதடா
மாலையென்றுசொன்னவற்கு வளருதேகழுமரங்கள்
கன்னியென்றுசொன்னவற்கு கழுமரம்வளருதடா
பக்கம்பதினாறெலும்பு பாய்ந்திடுமேமேற்குறடு
நாபிக்குகுத்திலமுள் நாசிக்குருகிடுமே
கைவைக்குமிடங்களெல்லாம் கட்டாணிதைத்திடுமே
இரண்டுகால்வைப்பிடத்தில் இருப்பாணிதைத்திடுமே
கழுவில்நீமாளனுமா கண்டவர்களேசனுமா
பெண்ணுக்காய்கழுவிருக்க யென்மகனேவுன்விதியோ
உன்தலையின்விதியதனை தடுக்கமுடிகூடலையே
சாதகமுந்தப்பாது தலைவிதியும்பொய்யாது

தகப்பனிடசாபமது தப்பாதொருக்காலும்
உன்விதியையென்றால் விதிக்கமுடிந்திடுமோ
வரவிட்டயேமனைத் தரவிட்டழைத்தானே
என்றிவள்சொல்லையிலே யேதுரைப்பார்பஞ்சவர்ணம்
எந்தன்-தலைவிதியைத்தப்பிவைக்க தாங்குமோசானுன்
வந்தவினைகளெல்லாம் வழிதங்கப்போறதில்லை [ஞலே
எந்தனுக்குவந்தவிதி யானேயனுபவிப்பேன்
இப்போமாலைதனையணைய வரங்கொடம்மாதாயாரே
வெண்ணீறு அள்ளியிடு விமலியரேயென்றுரைத்தார்
என்றிவர்கேட்கையிலே யீஸ்வரியுமேதுசொல்வாள்
வெண்ணீறுதான்கொடுத்தாள் விமலியந்தகாமாட்சி
வெண்ணீறுவட்டமிட்டு விமலிபிள்ளைதானெழுந்தார்

பன்னிரண்டாவது, காத்தவராயசுவாமி
ஆரியமாலையின் வரலாறு கூறும் வனம்
முற்றுப்பெற்றது.

---

பன்னிரண்டாவது

# காத்தவராயசுவாமி முடியில் கழுவேறி மீளுதல்

### விநாயகர் துதி-வெண்செந்துரை

தூங்கண்முகமுடைய துய்யக்கணபதியே
மாங்கனிக்காகபூமி வலமாகவந்தவரே
தேங்காய்கொழுக்கட்டை தெவிட்டாதமுக்கனியும்
பாங்காகயான்படைப்பேன் பையனுனக்கடிமை
அந்தரமெல்லாம்புகழும் ஆண்டவனார்பஞ்சவர்ணம்
சுந்தரத்தவசடியிற் சிறப்போடிருந்தகதை
மங்கையர்கள்தங்கையர்கள் மனக்களிப்புமேலோங்க
சங்கைமிகவில்லாமல் தயவாகத்தான்வாழ்க
கற்றவர்கள்மற்றவர்கள் கருதிமிகப்பார்க்க
நற்றவத்தோர்கள்கண்டு நல்லதென்றுதானேற்க
அடியேன்பொருட்டாக அகடொன்றும்வாராமல்



அடியாகவென்றனவில் அகளொன்றும்நேராமல்
வந்துகுடியிருந்து வரங்கள்மிகத்தந்து
எந்தையேயான்பாட விசைந்தருளுங்கயமுகனே.

### கதையின் வரலாறு

என்-கொல்லிமலைசுவாமி குமரேசர்பஞ்சவர்ணம்
வையாபுரித்தலைவன் மாலையணிமார்பழகன்
தாயார்தவத்தைவிட்டு சண்முகனாரெங்குவாரார்
மஞ்சையப்பன்கட்டிவைத்த மண்டபத்தில்வந்துநின்று
தொட்டியத்துச்சின்னான் துரைமகனேவாருமென்றார்
சுவாமியழைத்தகுரல் சின்னானவனறிந்து
கட்டுரைக்கப்பெட்டிகட்டிக் கட்டழகன்கொண்டுவந்து
இவர்முன்னிலையிற்கொண்டுவந்துவைத்துமவனெதெண்
காத்தலிங்கமானவற்கு கடுகவலங்கரிப்பான் (டனிட்டு
ஒண்டிக்கநெக்க னொருகாதில்மேல்முருகு
சவுளிக்கடுக்கன்களாம் சன்னல்பின்னல்தாழ்வடமாம்
முன்விரல்மோதிரமாம் பின்விரலாழிகளாம்
ஆணிமுத்துத்தோடாவு மலங்கரித்தான்சுவாமியற்கு
நெற்றியினில்சுட்டிகட்டி நீலத்துரூய்சொருகி
இட்டாரொருதிலர்தம் ஏழுலக்ஷம்பொன்பெறுமே
வைத்தாரொருதிலர்தம் வர்னலக்ஷப்பொன்பெறுமே
ஆண்டியப்பன்கெந்தபொடி யைங்காதவாசனையாம்
அள்ளித்தெளித்துக்கொண்டா ரத்தர்பன்னீ டனே
காந்தியுருமாலை கள்ளர்கட்டுமுண்டாசு
சேலத்துருமாலை செகநாடுபொன்சரிகை
முடியின்மேல்தானணிந்தார் மூன்றுலகந்தாமதிக்க
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு அத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்தான்தரித்து தட்டிவரிந்துகட்டி
கச்சைவரிந்துகட்டி காவிகச்சைசுங்குவிட்டு
எண்ணைகச்சையேழுமுழம் எட்டுசுற்றூய்பிகுவெடுத்தார்
அவா-முன்புறத்தொங்கலிலே மோககன்னியட்சரமாம்
பின்புறத்தொங்கலிலே பிரமனிடயட்சரமாம்
இடதுபுறத்தொங்கலிலே ஏமனிடயட்சரமாம்
வலதுபுறத்தொங்கலிலே மகாதேவரட்சரமாம்
மங்கமானசெட்டிவீடு மதுரைசெட்டிவீடெழுதி

தெப்பக்குளமெழுதி தென்னமரங்கண்டெழுதி
காலில்மெருவடியுங் கட்டழகர்தானணிந்து
சாய்ந்தநடையழகும் சன்னல்பின்னல்தாழ்வடமும்
ஓய்ந்தநடையுடனே யுன்னிதமாய்வாராரே
அப்போதுசின்னானும் ஆண்டவர்க்கேதுசெய்தார் [ர்
என்னைமுன்னே நீரழைத்தீரேதுவகைசொல்லுமென்றா
உன்னையழைத்தவகை உத்தமனேசொல்கிறேன்கேள்
கழுமரங்களலங்கரிக்க கட்டழகனானழைத்தேன்
வண்ணாரவல்லியவள் வனத்திலுள்ள ஆடைகளை
இந்தட்சணந்தனிலே யிங்குகொண்டுவாருமென்றார்
அப்படியேநல்லதென்று அழகுடையசின்னானும்
கோமுதலைவங்குதேடி கொற்றவனுமங்குவந்து
அங்கே-வைத்திருந்தஆடைகளை வர்னலட்சந்தானெடு
கழுமரத்தின்தன்னருகில் கட்டழகனோடிவந்து [த்து
ஆரியமாலையது ஆணழகன்தானெடுத்து
கழுமரத்தைசுற்றியவன் கனக்கவலங்கரித்தான்
மூன்றுநல்லகூண்டதனை விதமாகவுண்டுபண்ணார்
ஆரியப்பூமாலையற்கு அழகானகூண்டுமொன்று [ன்று
அன்னமுத்துமங்கையற்கு அரிவையற்குங்கூண்டுமொ
செட்டிபெண்ணாகந்தழகிதேன்மொழிக்குகூண்டுமொன்
மூவருக்குமூன்றுகூண்டு விதமாகக்கட்டிவைத்தான் [று
கழுமரத்தின்தன்னருகில் காலைவைத்தேறுதற்கு
முதற்படிமுத்துரத்னம் இரண்டாம்படிநாகரத்னம்
பச்சைமரகதத்தால் பத்துபடிசெப்பனிட்டான்
இவ்விதமாகவேதான் சோடித்தான்சின்னானும்
சோடித்தாயிற்றென்று சொன்னானேசின்னானும்
வந்துநீபாருமையா வானக்கழுமரத்தை
அந்தவுரைகேட்டு ஆண்டவருந்தாமெழுந்து
வந்துகழுமரத்தை பார்த்துமவரேதுசொல்வார்
சபாஷடாசின்னானே சந்தோஷமானேண்டா
உன்னைப்போலூழியனை உலகத்தில்நானறியேன்
எதுக்கும்வல்லவண்டா எதுக்குஞ்சமர்த்தனடா
என்றிவர்புகழ்ந்தார் எங்கள்துரைபஞ்சவர்னம்
அப்போதுபஞ்சவர்னம் ஆரைநினைக்கலுற்றார்
தாயார்க்குமுன்பிறந்த தையலந்தகாளியரை
வல்லத்துமாங்காளியை மனதிலவர்நினைத்து



என்னடியென்தாயே எனைவளர்த்தயீஸ்வரியே
இக்ஷணத்திலிங்குவர வேண்டுமம்மாயீஸ்வரியே
ஆண்டவனார்தானினைக்க அறிந்தாளேமாங்காளி
வல்லத்துமாங்காளி மாதேவிதானறிந்து
டக்கைடமாரமுந் தன்னுடைய ஆயுதமும்
சூலமொருகையிலும் சுக்குமாந்தடியதுவும்
கன்னங்கருத்தசூரி கைதனிலேதான்பிடித்து
ரணசட்டிபொலிசட்டி நேரிழையாள்கைபிடித்து
மாடறுக்குஞ்சூரியது மடிதனிலேதான்சொருகி
கலைத்தோல்புலித்தோலுங் காட்டுமான்தோலுடனே
சடைகுலுங்கமுடியசையத் தான்வாராள்காளியரும்
தடிக்காரர்தர்க்கமிடப் பொலிக்காரரொப்படைக்க
அண்ணன்மார்கொக்கரிக்க அநேகபூதந்தள்ளிவர
இத்தனைபேர்கூட்டத்துடன் வாராளேமாங்காளி
கழுகத்தைத்தேடியல்லோ காளியம்மன்வாராளே
காளிவருகிறதைக் கண்டாராம்பஞ்சவர்னம் [ந்து
எதிர்நோக்கித்தெண்டனிட்டு ஏந்திழையாள்முன்னேவ
பாதமதுவலம்பி பட்டாலடிதுடைத்து
வர்னவர்னப்புட்பங்களை மலரடியில்தான்சொரிந்து
மூக்கால்வலம்வந்து முடிசாய்ந்துதெண்டனிட்டார்
அஞ்சலடிமேலேவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டந்தகாளியம்மன்
நமஸ்கரித்தபாலனை வாரியெடுத்தணைத்து
என்னைப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைபெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
வாயினால்வாழ்த்தியந்த மைந்தனைத்தழுவிக்கொண்டாள்
இவர்-கைகட்டிவாய்புதைத்துக் காளிமுன்னே நிற்கையி
வல்லத்துமாங்காளி மயிலனையாளேதுசொல்வாள் [லே
மணப்பாக்கத்தாச்சாரி மன்னவரையழையுமென்றாள்
அப்படியேநல்லதென்று ஆண்டவருந்தானடந்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்துபஞ்சவர்னம்
அண்ணன்தம்பிமூபேரு மவர்களங்கேதுசெய்தார்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கைதனிலிறங்கி புனல்கங்கைநீராடி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து

இட்டமுள்ளநெற்றியிலே சந்தனப்பொட்டுமிட்டு
ஆற்றலரிகொன்றைதும்பை யடுக்கலரிப்பூவெடுத்து
செவ்வலரிப்பூவெடுத்து சேற்றலரிமந்தாரை
ஆற்றுமணலெடுத்து ஆவுடையாருண்டுபண்ணி
சேற்றுமணலெடுத்து சிவலிங்கமுண்டுபண்ணி
அபிஷேகஞ்செய்துவைத்து ஆடை துகிலணிந்து
கொண்டுவந்தபுட்பத்தை கொட்டெனவேபூசைசெய்து
அரனேபரனேயென்று அவர்கள் துதித்துநின்றார்
ஈஸ்வரனைக்கைபிடித்து இவர்களெழுந்திருந்து
மாளிகைதேடியல்லோ மன்னவர்கள்வந்தவுடன்
மங்கையர்களேழுபேரும் மனதுசந்தோஷமுடன்
வாழையிலைபோட்டு மணிச்சொம்புநீர்தெளித்து
சுற்றிப்பதார்த்தம்வைத்து மங்கையர்களன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்சொரிந்தார்
ஏழுபேர்மன்னர்களு மின்பமுடன்போசித்து
போசனங்களுண்டுமவர் பொடியிட்டுகைதிமிறி
அரிபிளவும்வெற்றிலையு மள்ளியவர்தரித்து
உடுப்புகளுந்தான்தரித்து வுத்தமனோரேதுசெய்தார்
வாசியுளிகைபிடித்து வந்துநின்றார்வீதியிலே
அந்தச்சமயத்தி லாண்டவரங்குவந்து
சுவாமிவருகிறதைத் தச்சர்களுந்தாமறிந்து
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துப்பூவெடுத்து
பொன்னீருஞ்சொம்புதனில் பன்னீருங்கொண்டுவந்து
பாதமதுதுலக்கிப் பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபுட்பமதை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டந்தபஞ்சவர்ணம்
வாழ்த்தியெடுத்துமவர் மறுவார்த்தையேதுசொல்வார்
உங்களாலெனக்கு ஒருவேலையாகவேண்டும்
கழுமரத்தைச்சோதிக்க கடுகெனவேவாருமென்றார்
அந்தவுரைக்கேட்டு அன்பாகதச்சர்களும் [றோம்
நீர்வந்தெமையழைக்க நாங்கள்மெத்தபாக்கியம்பெற்
அப்படியேவாரோமென்று அவர்களுந்தாமெழுந்து
சுவாமியுடபின்னாலே தச்சர்களும்வந்துவிட்டார்
கழுமரத்தின்முன்பாகக் கடுகெனவேவந்துநின்றார்
வல்லத்துமாங்காளி மகமாயீஸ்வரியை



காளிதனைக்கண்டவுடன் கடுகெனவேதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்த்தியந்தகாளியம்மாள்
எழுந்திருங்களப்பாவென்று ஈஸ்வரியும்விடைகொடுத்தாள்
கைகட்டிவாய்புதைத்துக் காளியற்குமுன்னே நின்று
எங்களையழைத்தவகை ஏதுவகைசொல்லுமென்றார்
அப்போதுகாளியம்ம னவர்களுக்கேதுசொல்வாள்
கழுமரத்திற்சூத்திரங்கள் கட்டவேணுந்தச்சர்களே
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
நீயறியநானறிய வேணுமென்றுகாளியம்மாள்
கால்வைக்குமிடங்களெல்லாம் கட்டாணிபாயவேணும்
வைக்குமிடங்களெல்லாம் கழுவாணிதைக்கவேணும்
நாபியிற்றைக்குமுள்ளு நாசிக்குருகவேண்டும்
பக்கம்பதினாறு பழுவெலும்பாவதற்கு
ஒப்பிட்ட ஆணியது ஒன்றொன்றாய்தைக்கவேண்டும்
இப்படியாய்ச்சூத்திரங்கள் செய்யுமென்றாள்காளியம்மா
அப்படியேநல்லதென்று ஆணழகர்சம்மதித்து [ள்
காளிசொன்னவாக்கதுபோல் கழுமரத்தைச்செப்பனிட்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல் (டார்
சூத்திரமாகவேதான் செய்துமுடித்தார்கள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
அப்போதுபஞ்சவர்ண ராணழகரேதுசெய்தார்
தொட்டியத்துச்சின்னானே துரைமகனே நீர்கேளும்
வங்கணத்துசின்னானே துரைமகனே நீர்கேளும்
ஆச்சிதவமிருக்கும் கம்பாநதியருகில்
கோமுதலைவங்குதேடி கொற்றவனே நீர்போயி
ஆச்சாளழகுபெண்ணை லையன்மகள்மாலையரும்
செட்டிபெண்ணாகந்தழகி தேன்மொழியாளன்னமுத்து
இந்தமூவரையுந்தானழைத்துவிதமுடன்வாருமென்றார்
ஆடலும்பாடலுட னழைத்துவந்துசேருமென்றார்
சின்னானதுகேட்டு சீக்கிரமாய்போகலுற்றான்
அப்போது ஆண்டவனா ராயிரம்பூதங்களை
கள்ளிக்காட்டின்பூதங்களைக் கண்காட்டித்தானழைத்தா
கொல்லிமலைப்பூதங்களைக் குமரேசர்தானழைக்க [ர்
சுவாமி-வாவென்றழைக்கையிலே வந்துதேபூதமெல்லா
மூக்கில்லாச்சேவகர்போ லுண்டுபண்ணார்பூதங்களை [ம்
அதிலேசிலபூதங்களை ஆண்டவனார்தானழைத்து

நட்டுமுட்டுநாடகமும் நலமாகக்கேளிக்கையும்
டமாகமுமேளங்களும் பேரிகையுந்தான்முழங்க
பூரிகைதாளூத பெரியடமர்தானடிக்க
கட்டியங்கள்கூறிவரக் கவிவாணர்பாடிவர
புள்ளாங்குழலூதப் பேரிகைகள்தான்முழங்க
ஆடுவாராடிவர ஆலவட்டம்வீசிவர
பாடுவார்பாடிவர பலஜனங்கள்சூழ்ந்துவர
இந்தவிதவேடிக்கையாய்ச் செய்துகொண்டுநீங்களுந்
சின்னமுடனுக திரும்பிவந்துசேருமென்றான் [தான்
கோமுதலைவங்குதேடிக் கொப்பெனவேயோடிவந்து
செய்யான்சிறையிருக்குஞ் செங்கழுநீரோடையிலே
கோமுதலைவங்குதனில் வந்துமந்தசின்னானும்
ஆச்சாளழகுபெண்ணை ளையன்மகளங்கிருந்தாள்
செங்கல்முதலையின்மேல் தேன்மொழியாளங்கிருந்தாள்
இம்மூன்றுமாதர்களு மிருக்கின்றவேளையிலே
அந்தயிடந்தனிலே சின்னானுமங்கிருந்து
வாருங்களம்மாவென்று வருந்தியழைக்கலுற்றான்
இம்முதலைபாறைவிட்டு யாவரும்வாருமென்றான் [ருன்
உங்களைக்-கொண்டுவந்தகொற்றவனுர் கூப்பிட்டழைக்கி
வாருங்களென்றுசொல்லி வருந்தினன்சின்னானும்
அப்போதுமெல்லியர்க ளரிவையர்களேதுசெய்தார்
முதலைபங்குபாறைவிட்டு மெதுவாயெழுந்திருந்து
பத்துபடி தாண்டி பாவையர்கள்வாராரே
ஆடலும்பாடலுட னருங்கிளிமார்வாரார்கள்
ஒய்ந்தநடை நடந்து ஒளிவுள்ளசோதியைப்போல்
சாய்ந்தநடையுடனே தையலரும்வாரார்கள்
கழுமரத்தைத்தேடியல்லோ கன்னியர்கள்வாரார்கள்
அவர்கள்வரும்வேளையிலே ஐயமாராயிரம்பேர்
ஆயிரம்வேதியரு மாரியப்பூராசாவும்
துற்போசிமகாராஜா துளசிமகாராஜாவும்
ஒன்பதுபேர்மந்திரிகளு மொருகோடிசேனைகளும்
வலையன்சிவப்புடையான் மன்னவர்களேழுபேரும்
ஆரியப்பூமாலையரை யவர்கள்கண்டநாழிகைக்கு
அம்மணிவாராளென்று அனைவருங்கைதொழுதார்
மாணிக்கச்செட்டிமகள் மயிலனையாளன்னமுத்து
அன்னமுத்துவாராளென் றனைவோருங்கைதொழுதார்



வயிரசெட்டியாரீன்ற மங்கையாளுகந்தழகி
உகந்தழகிவாராதுவை வுத்தமர்கள்தான்பார்த்து
வருகின்றதூவர்களை யனதாரப்பார்த்தார்கள்
கண்டுமனமகிழ்ந்தார் காரிழையாள்மூவர்களை
இதுவரையிற்காணாத மாலைகன்னிநாயகியை
இன்றையதினமதிலே ஏந்திழையைக்கண்டோமென்று
ஆனந்தமாகவல்லோ அனைவோருந்தாமிருந்தார்
இப்படியாகவே இருக்கின்றவேளையிலே
அந்தச்சமயத்திலே யரிவையர்கள்மூன்றுபேரும்
கழுமரத்தின் தன்னருகில் கன்னியர்கள்வந்தபின்பு
அங்கிருந்தசேனைகளை யனைவரையுந்தான்பார்த்து
கலக்கமுற்றுகன்னியர்கள் கடுகெனவேதான்திரும்பி
அருங்கிளியாள்மூவர்களு மாண்டவர்க்கேதுசொல்வார்
கழுமரத்திலேறுமென்று கன்னிகட்குதாமுரைத்தார்
ஆண்டவனுர்சொற்படியே யரிவையர்களேறலுற்றார்
ஒன்பதுபடிதாண்டி யுத்தமரேறினபின்
பத்தாம்படிதனிலே பரமசிவன்தன்னருளால்
ஆரியப்பூமாலையம்மா ளன்பாயிடதுபுறம் [தில்
வாழ்வரசிவன்னமுத்துவலதுபுறம்வந்துநின்றாள்
செட்டிப்பெண்ணுகந்தழகி தேன்மொழியாள்பின்புறத்
அவரவர்கூண்டுதனி லரிவையர்கள்போய்புகுந்தார்
அப்போதுஆண்டவனுர் ஆரையழைக்கலுற்றார்
கொல்லிமலைக்கன்னிகளைக் குமரேசர்தானினைந்து
கண்டுமந்தபஞ்சவர்ணம் கடுகவேதாமெழுந்து
தும்பைமலர்போட்டுத் தொழுதாரவர்பாதம்
[illegible]மலர்போட்டுப் பாதம்தொழுதுநின்றார்
[illegible]ந்தவனை வாழ்த்தினர்கன்னியர்கள்
[illegible]ப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்
[illegible]பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
கண்ணேறுபொல்லாது கடுகவெழுந்திரென்று
எங்களையழைத்ததென்ன எங்கள்மைந்தாகூறுமென்றார்
அப்போதுஆண்டவனு ரழுதமுகமாயுரைப்பார்
தான்-கழுவுக்கு ஆளானேன் கன்னிகளேயென்தாயே
என்னை நீங்களிப்பொழுது இனிகாத்தருளவேண்டும்
எனக்கொருதுன்பமது வாராமற்காருமென்றார்
மைந்தனையேற்றிக்கொண்டு மங்கையர்களேறினர்கள்

நடுவிருந்தகூண்டுகளி லிவரிருந்தார்மூவரும்
மணப்பாக்கத்தாச்சாரி மன்னவரைத்தாமழைத்து
கழுமரத்திலேறுமென்றார் காத்தலிங்கசுவாமியவர்
சுவாமியுடனேறித் தாமிருந்தார்மன்னவர்கள்
இப்படியாக இவரிருந்தார்கழுமரத்தில்
அப்போது ஆண்டவனா ரையரவரேதுசொல்வார்
கூப்பிட்டழைத்தாராம் குறித்ததுமாறுவேஷம்
இராஜவடிவாக நலமாகவேஷங்கொண்டு
கழுமரத்தின் தன்னடியில் காத்தவனார்வீற்றிருந்தார்
சின்னானுந்தன்னருகே சீமானும்வீற்றிருந்தார்
ஏழுநல்லகன்னிகளி லிரண்டுபேர்கன்னியர்கள்
மந்திரவாள்கைபிடித்து மன்னவரைக்காத்திருந்தார்
இத்தண்டபேர்களெல்லாம் இங்கேயிருக்கையிலே
ஆரியப்பூராசாவும் அந்நேரமேதுசெய்தார் [லாம்
தண்டோராபோடவைத்தார் தனஞ்சயனார்சீமையெல்
என்னவென்று தண்டோரா போடலுற்றார்பூமியெங்கும்
கழுமரம்பூசைசெய்யக் கட்டழகரெல்லோரும் [ர்
வீட்டுக்கொருகுடுவை பொங்கல்வைக்கவேண்டுமென்று
அதற்குள்ள சாங்கியங்க ளனைவோருஞ்செய்யவேண்டும்
இவ்வகையாய்த்தண்டோரா அவ்வூரில்போடலுற்றார்
தேசத்தார்தான்கேட்டு சீக்கிரமாயவெழுந்து
அவரவர்கள்பொங்கலிட ஆனதெல்லாஞ்சேகரித்து
ஆடுகோழிபன்றிகளாம் அபினிகெஞ்சாயாஜினமும்
சீசாவில்சாராயம் தினைமாவும்ரொட்டியுடன்
கழுவடிக்குப்பூஜைசெய்ய கடுகவேவந்துவிட்டார்
கழுமரத்தைச்சுற்றியவர் கடுகெனவேபொங்கலிட்டார்
தேங்காயுடைத்துவைத்தார் செவ்விளநீர்கண்திறந்தார்
பாணக்கநீர்மோரும் பச்சரிசிவைப்பார்கள்
தண்ணீர்தெளிப்பார்கள் தாகவிடாய்தீர்ப்பார்கள்
கற்பூரதீபம் கடுகெனவேகொடுப்பார்கள்
இப்படியாக இவர்களிருக்கையிலே
அப்பொழுதுயேதுசெய்தா னங்கிருக்கும்சின்னானும்
சந்தடிசெய்யாதிருங்கள் என்றுமவன்கைகொடுத்தான்
அரசனதுசொற்படியே அடக்கினார்சந்தடியை
வந்தஜெனங்களெல்லா மாலையற்குதெண்டனிட்டார்
மச்சான்மாரேழுபேரும் வந்தார்கழுவடிக்கு



வாங்கருப்பன்பூங்கருப்பன் மதுரைப்பெருங்கருப்பன்
சங்கிலிகருப்பன்முதல் தனிக்கருப்பனேழுபேரும்
அவர்களிடதேவியாம். ஆரணங்குநல்லதங்கை
தயிர்கூடைதலையில்வைத்து தையலரும்வாராளே
தையலிளங்கொடியாள் வருகின்றவேளையிலே
இங்கிருக்குஞ்சேனைகளை ஏந்திழையாள்பார்க்கையிலே
கால்தவறிகீழ்போட்டு தயிர்ப்பானையையுடைத்தாள்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்பிக்கொண்டு
அறியாமலிங்குவந்து அநீதமாய்போட்டுடைத்தேன்
மாளிகைக்குச்சென்றவுடன் மாமியார்க்கேதுசொல்வே
அடித்தென்னைகொல்வாளே யத்தைமாமிதப்பாமல் [ன்
இந்தஅநீதத்துக்கென்சொல்வேனென்றழுதுவாராளே
அரண்மனையிற்போய்புகுந்தா ளருங்கிளியாள்நல்லதங்
வரவுகண்டுமாமியவள்மனங்கொள்ளாகோபமுடன் [கம்
என்னடிசிறிக்கிநீ யிந்நேரமெங்கிருந்தாய்
பொழுதெல்லாம்போக்கடித்து வந்தாயடிமாளிகைக்கு
ஆரிடத்திற்சந்ததமோ அசல்புருஷர்நேசமுண்டோ
தயிர்ப்பானைதானுடைத்து வந்தாயடிசக்களத்தி
தின்றிருந்தமாமிசத்தால் ஏசியவள்தானடித்தாள்
மைத்துனனுமோடிவந்து மாறியடிக்கலுற்றான்
அடிபொறுக்கமாட்டாமல் அழுகலுற்றாள்நல்லதங்கம்
நீ-பொல்லாதவியாதிவந்து போராய்ச்சமையாயோ
தூண்டிலிருக்கானா அடிஅடித்துச்சாகானா
மரக்கழுவில்தானிருந்து மாண்டுமடியானா
என்றிவள்வைத்துக்கொண்டு ஏந்திழையாள்தானிருக்க
பஞ்சவர்ணசுவாமிதுரை பரிசனத்தார்தான்கேட்டு
கெட்டதுகுடிகளென்றார் கேடுவந்துநேர்ந்ததென்றார்
பத்தினியாள்சாபமது பலித்திடுமேயெந்தனுக்கு
உத்தமியாள்சாபமது உடனேபலிக்குமென்றார்
கழுமரத்தைவிட்டிறங்கி கடுகெனவேயோடிவாரார்
ஓட்டப்பெருநடையா யோடிவந்தாராண்டவனார்
அத்தையருகாக ஆணழகர்வந்துநின்றார்
மச்சான்வரவுதன்னைக் கண்டுகருப்பழகன்
எங்குவந்தீரென்று இன்பமுடன்கேட்கலுற்றார்
அப்போதுபஞ்சவர்ணமவர்களுக்கேதுசொல்வார் [தான்
தங்கையென்னைபார்க்கவந்தாள் தானிடறபோட்டுடைத்

ஏனடித்தீர் தங்கையரை என்றுமவர் தான்கேட்க
அற்பமுள்ளபானைக்கோ யடித்ததைத்தீர் மைத்துனரே
என்னவிலையுள்ளதோ இப்பொழுது நான் தருவேன்
பானைக்கிரயத்துக்கு பகுந்தாயிரம்பொன்னை
ஆயிரம்பொன் தானெடுத்து அடியாதீரென்றுசொல்லி
தங்கையருகில்வந்து சுவாமிதுரையேதுசொல்வார்
என்பிறவி நல்லதங்கம் என்வார்த்தைகேளுமம்மா
நீயிட்டசாபமது நீக்கிவிடுமென்றுரைத்தார் [வான்
அண்ணனைப்பார்த்துமவ ளழுதுகொண்டேதுசொல்
நீர்-தாண்டிலிருந்தாலும் துடித்துலர்ந்துசாகாதே
கழுவிலிருந்தாலும் காய்ந்துலர்ந்துசாகாதே
மரக்கழுவிலிருந்தாலு மாண்டுமடியாதே
என்றுவரங்கொடுத்தா ரேந்திழையாள் நல்லதங்கம் [ர்
மைத்துனர்மார் தங்கங்களிடம் மன்னவனாரேதுசெய்தா
கழுமரத்துப்பூசையண்டை கட்டழகாவாங்களென்று
சொல்லியவர் நடந்தார் சுவாமிதுரைபஞ்சவர்னம்
கழுமேடைதேடியல்லோ கட்டழகரங்குவந்து
சவுகடையின்மேடையிலே சுவாமியவர்வீற்றிருந்தார்
சுவாமியவர்பக்கத்தில் சின்னானும்வீற்றிருந்தார்
துரும்புநுழைந்தாலு மிருக்கவிடமில்லையே
கடுகுருண்டுவந்தாலும் சால்வைக்கயிடங்களில்லை
பூசையடிகாண்பதற்கு வெகுகோடிசேனைவாரார்
கருந்துளெழும்புதங்கே கதிரோனைக்கப்புதங்கே
செந்துளெழும்புதங்கே சூரியனைக்கப்புதங்கே
நீ-தண்டுமாரியாகவல்லோ மண்டலத்தைக்காருமென்று
அவனையுஞ்சாதிகட்டி யடக்கமதுசெய்தார்கள்
அந்நேரவேளையிலே ஆண்டவனாரானவர்க்கு
தகப்பனந்தயீஸ்வரனார் தான்கொடுத்தசாபமது
பறையாபெரும்பறையா வலையாகழுவாவென்று
அவரிட்டசாபமது அப்போபலிக்குதங்கே
அனைவரை நமஸ்கரித்து ஆண்டவனாரேதுசெய்தார்
சாசரென்றேறினாரே தானுங்கழுமரத்தில்
கழுமரத்தினுச்சியிலே கடவுள்பிள்ளை நின்றாராம்
இவருடையதன்னழகு யேந்திழைமார்கண்டார்கள்
சுவாமியவரழகைத் தையலர்கள் தான்பார்த்து
கனைத்துவிழுந்தார்கள் கன்னியர்தமூன்றுபேரும்



விழுந்தவர்கள் தானெழுந்து மெல்லிமாரேதுசொல்வார்
இவ்வளவழகுடைய இவரைநாம்சேர்ந்திருக்க
என்னதவஞ்செய்தோமே யென்றுமிவர்கைதொழுதார்
நீங்கள்-தேடித்திரிந்தாலும் திருவழகைக்காணலாமோ
என்றறிந்தமூவர்களு மிவரழகைப்பார்த்திருந்தார்
ஆரியப்பூராஜாவும் அவருடையமந்திரிகளும்
நாக்கதனைத்தொங்கவிட்டார் நயனவிழிபிதுங்க
அவனுடையபஞ்சவுயிர் அந்தரத்திற்போகுதுபார்
அப்போதுதன்னுடைய அறிவுவந்தேதுரைப்பான்
என்சாமிஎன்குருவே எனக்கென்னபுத்தியென்றான்
கொல்லிமலைசுவாமி குமரேசரேதுசொல்வார்
அவனை-கழுவைவிட்டுக்கீழிறக்கிகட்டழகரேதுசெய்தார்
கழுவடிமேடையின்கீழ் சமாதியங்கேயுண்டுபண்ணார்
இன்றுமுதலுந்தனுக்கு முன்பூசைதாரேனென்று
அவனைச்சமாதிக லடக்கிவிட்டார்பஞ்சவர்னம்
அவனுடையதாயா ரரிவையருந்தான்கேட்டு
மகனேமகனேயென்று அலைந்துகொண்டோடிவாரார்
ஐயோமகனேயென்று அலைந்துகொண்டோடிவாரார்
உன்னை-பெற்றவருமையென்ன வளர்த்தவந்தநேர்த்தியென்ன
நடவிவளர்த்தேனே தவடையெல்லாம்நெய்யொழுக
ஒருபிள்ளையென்றுசொல்லி ஊட்டிவளர்த்தேனே
எனறழுதுகொண்டு இங்குவாராளவ்விடைச்சி
உந்தனுடனே நான் உயிர்விடுவேனென்றழுது
அலறியழு. வேளையிலே அவளுமிறந்துவிட்டான்
அவளுடையபஞ்சவுயி ரலையுதேயந்நேரம்
அதுகண்டுபஞ்சவர்ன மந்நேரமேதுசெய்தார்
கன்னிடையனாகமுத்து கல்வண்ணர்தானோடி
கழுமரத்தினோரத்திலே கட்டழகன்பார்க்கலுற்றார்
இதென்னசத்தமென்று ஏறெடுத்துபார்க்கலுற்றார்
மரத்தின்மேல்மூன்றுபெண்கள் மங்கையரிருப்பதென் [ன
னென்றிவன்கலங்கி பெண்ணரிட்டுதாகமுத்து
அங்கிருக்கு-ன்னர்களை அவனுமேகேட்கலுற்றான்
மாத்திலே மேலேறியேநான் மகிழ்ச்சியாய்வந்தாலே
மூன்றுபேர்கன்னிகளை எந்தனுக்குதருவீர்களோ
அதுகேட்டுமன்னவர்கள் ஆகாதுயென்றுரைத்தான்
தானேறியிங்குவந்தா லென்னயினிதுரைத்தான்

சின்னானதுகேட்டு சீக்கிரமாயேதுசொல்வான்
நீ-அப்படியேவந்தாயானா லரிவையரைத்தாரேன்
அந்தவுரைகேட்டு அழகுள்ள கன்னிடையர்
வண்டிவிட்டுத்தானிறங்கி மன்னவனும்என்னென்றான்
கடுகவேவோடிவந்து கழுமரத்தின்மேடைமேல்
ஆசுமணமீதில் ஆணழகன்காலைவைத்து
கால்வைத்தயிடங்களெல்லாம் இருப்பாணிதைக்குதங்கே
நாபியிற்றைத்தமுள்ளா நாசிக்குருகுதுபார் [தார்
அனைவோருங்கைதொழுது ஆண்டவரைத்தோத்தரித்
இப்படியாக யிவர்தொழும்வேளையிலே
உச்சிதன்லேறி உட்கார்ந்தசுவாமிக்கிப்போ [தங்கே
இவர்-கால்வைத்தயிடங்களெல்லாம் கட்டாணிதைக்கு
இருகைகள்வைத்திடத்தி லெழுத்தாணிதைக்குதங்கே
நாபியிற்பாய்ந்தமுள்ளா நாசிக்குறுகுதுபார்
நல்லவுயிர்சோருதுபார் கண்கள்பிதுங்குதங்கே
தாயார்கொடுத்தவரம் சுவாமிதுரையாண்டவர்க்கு
வேகாச்சுடலையிலே சாகாவரங்கொடுத்தாள்
அதினாலேதானவர்க்கு அனர்த்தம்வந்துநேர்ந்ததப்பா
வாதனையும்வேதனையும் வருத்தம்வந்துநேர்ந்ததப்பா
அந்தநல்லவேளையிலே ஆதிசிவன் தாமறிந்து
முக்கண்ணுடையசிவன் மிகவுமவறிந்து
மட்டுக்கடங்காத மதமடக்கவேண்டுமென்று
குண்டோதரனவனை யழைத்துமவரேதுசொல்வார்
நீ-வண்டாகப்போயிருந்து மரத்தைத்துளைத்துவிடு
மரத்தைத்துளைத்துவிடு மண்மேல்விழுந்துருள
என்றுமிவருரைக்க யெழுந்திருந்தான்குண்டோதரன்
வண்டாய்வடிவெடுத்து குண்டோதரன்வாரானே
கழுமரத்தினோரத்திலே கடுகவனோடிவந்து
மரத்தைத்துளைப்பதற்கு வழிபார்க்கும்வேளையிலே
மலையாளச்சின்னானு மன்னனிதுவறிந்து
அஞ்சனத்தைப்போட்டுமவர் பார்க்கலுற்றாந்நேரம்
வெற்றிலையில்மைதடவி விவரமாய்ப்பார்க்கலுற்றார்
மையுருகமையுருக மையழகுதோற்றுதங்கே
அறுமாருமங்கதனு மவர்கள்முன்னோடிவந்து
குண்டோதரனும்வந்தான் கழுமரத்தைத்தான்துளைக்க
என்றுமிவனுக்கு எடுத்துரைத்தாரிக்ஷணத்தில்



அப்போதுசின்னானு மவசரமாய்த்தானெழுந்து
கெட்டதுகுடிகளென்று கேடுவந்துநேர்ந்ததென்று
குண்டோதரனவனைக் காணோமென்றீஸ்வரனார்
நந்தியைத்தானழைத்து நல்லகுண்டோதரனை
அழைத்துவந்துசேருமென்று ஆதிசிவன்தாமுரைத்தா
அந்தவுரைகேட்டுநந்தி யப்பொழுதுவாராரிங்கே [ர்
கழுமரத்தின்மேடையண்டை கடுகெனவேயோடிவந்து
கட்டுபட்ட குண்டோதரன காளையிருப்பதுவை
கண்ணாலேகண்டவருங் கடுகெனவேயோடிவந்து
கட்டையவிழ்த்துக்கொண்டு கைலங்கிரிவந்தார்கள்
ஐயனிட்சாபத்தினா லருமையுள்ளபாலனுக்கு
வாதனையும்வேதனையும் வருத்தங்களுண்டாயிற்று
என்றுமிவரெண்ணமிட்டு யிங்கிருந்தார்நந்தீசர்
உமையவள்தன்னிடத்தி லோடிவந்தார்தூதுவர்கள்
ஈஸ்வரியைக்கண்டார்க ளின்பமுள்ளதூதுவர்கள்
கண்ணிரண்டுமூடிக்கொண்டு கையிரண்டுமேந்திக்கொண்டு
அரனேபரனேயென்று ஆண்டவரைத்தான்துதித்து
கைலைதனில்வாழும் கடவுளேஈஸ்வரரே
என்றைக்கென்சாப மெப்போதுலைந்திடுமோ
என்றிவள்சொல்லி யிருந்தாள்தவநிலையில்
அந்தநல்லவேளையிலே வந்தபெருந்தூதுவர்கள்
யோகத்தில்தானிருந்து சித்தடிக்கேதுசொல்வார்
உன்-மைந்தன்கழுமரத்தில் வாதனைகள்பட்டானென்று
தூதுவர்கள்தாமுரைத்து தூரவழிபோய்நடந்தார்
அதுகேட்டுகாமாட்சி ஆரணங்கேதுசெய்தாள்
மைந்தன்படுந்துயரம் மாதாவவளறிந்து
[illegible]குலுங்கமுடியசைய சன்னியாசிவேஷத்துடன்
[illegible]த்தோல்புலித்தோலும் காட்டுமான்தோலுடனே
[illegible]யில்செபமாலைகளும் கனத்தநல்லகப்பறையும்
[illegible]வெண்ணீறுதூளிதமு மேனியெல்லாந்தான்குலுங்க
பாதக்குறடணிந்து பார்வதியாள்தானெழுந்து
கம்பாநதியைவிட்டுக் கட்டழகிவாராளே
ஆலமரத்தைவிட்டு அழகுசர்வப்பொய்கைவிட்டு
அடா-அம்மையப்பகாராளா அழகுடையவேளாளா
கம்பாநதியதனைக் காத்திருடாவென்றுசொன்னாள்
ஆதிசிவசத்தியற்கு அடிவணங்கித்தெண்டனிட்டான்

மண்ணுடுக்கைவாள்பிரம்பு மந்திரவாள்விபூதிப்பை
இந்தாடாயம்மையப்பா வென்றுமிவள்கைகொடுக்க
செப்புகுடம்வேப்பங்கொத்து ஓடுமிவள்கொடுத்தாள்
என்தவசடியைக்காத்தியென்றாள் தையலந்தகாமாட்சி
அப்படியேநல்லதென்று னம்மையப்பகாராளன்
என்னவரம்வேண்டு மென்றனைக்கேளுமென்றாள் [ண்
இந்தமுத்திரைபிடித்தவர்க்கு நீதானேதெய்வமென்று
இன்றுமுதலெல்லோர்க்கு நீதானேதெய்வமென்றான்
முத்திரைக்கால்செப்பூசி மெல்லியவள்தான்கொடுத்து
இங்கேயிருமென்று ஈஸ்வரியுங்கையமர்த்தி
காமாட்சியென்றுசொல்லி கலியுகத்தில்விளங்கும்படி
என்பேரைச்சொல்லியல்லோ யிங்கிருவென்றுரைத்தாள்
அப்படியேநல்லதென்று ஆச்சியற்குதெண்டனிட்டான்
என்னவென்றுசொல்லியல்லோ வாழ்த்துகிறாளீஸ்வரியும்
உன்னைப்போலூழியனை ஒருவரைநான்கண்டதில்லை
உன்னாலேஎந்தன்பெயருலகமெல்லாம்விளங்கவைத்து
இந்த-கம்பாநதியதனைக் காத்திருநீயென்றுரைத்தாள்
அப்படியேநல்லதென்று னம்மையப்பன்காராளன்
அவனுக்குவிடைகொடுத்து அங்கேநிறுத்திவிட்டு
ஆலமரந்தாண்டி அப்பால்வருகையிலே
ஏழுபேர்கன்னியர்க ளிங்கேயிருக்கிறார்கள்
அவர்களைப்பூசித்து அன்பாயிருடாவென்று
மகனேமகனேயென்று வாராளேயீஸ்வரியும்
முன்னாள்விதிப்பயனோ முக்கணனார்சாபனையோ
அடினாள்விதிப்பயனோ அரனாரின்சாபனையோ
அன்றெழுதும்பிரம னழித்தெழுதமாட்டானோ [றான்
என்னதான்சொன்னாலும் என்வார்த்தைக்கேளேனென்
ஆச்சாவயிரமுள்ள அறுபதடிவேங்கைமரம்
உனக்கென்றுவளர்ந்ததடா உன்னுயிரைவாங்குதற்கு
அடிமுடிசேர்வதற்கு அரனுமுனையுண்டுபண்ணார்
மாலைதனை நீயெடுக்க கழுமரங்களுண்டாச்சே
நீ-கழுவிலிருக்கணுமா காய்ந்துலர்ந்துசாகணுமா
அண்டிலிருக்கணுமா துடிதுடித்துச்சாகணுமா
மாக்கழுவில்நீயிருக்க மண்டலத்தாரேசணுமா
காமாட்சிபிள்ளையென்று கண்டவர்களேசணுமா
கழுவுக்குப்பால்வார்த்து உண்டுபண்ணுனத்தமியும்



உரியில்தயிர்வார்த்து உண்டுபண்ணுனத்தமியும்
மகனேமகனேயென்று அலைந்துகெட்டுவாராளே
உன் ஆவிபதைபதைக்க சீர்குலைந்துமாள்கிறையோ
சீவன்பதைபதைக்கச் சீர்குலைந்துமாள்கிறையோ
கன்னியைநீதொடவுங் கழுமரத்திற்றூங்கிடவும்
மாலையைநீதொடவும் மாக்கழுவிற்றூங்கிடவும்
கண்ணாலேபார்ப்பேனோடா கட்டழகாவென்மகனே
குடியிருந்தயென்வயிறு குலைவயிறுபற்றுதடா
அண்டியிருந்தவிட மடிவயிறுபற்றுதடா
இப்படியாய்த்தான்புலம்ப யீஸ்வரியுமங்குவந்து
பார்த்துவயிறெரிந்து பைங்கொடியாள்தானெழுந்தாள்
கண்டுவயிறெரிந்து காமாட்சியழுகலுற்றாள்
உனக்குவந்ததீவினைக்கு உத்தமிநானேதுசெய்வேன்
இப்படியாய்ச்சொல்லியல்லோ யீஸ்வரிதானழுகையிலே
ஆடவர்களெல்லோரும் கலங்கியழுகலுற்றார்
கண்துயரப்பார்த்தவர்கள் பக்கமழுகலுற்றார்
பரிஜனங்களெல்லாம் வாய்விட்டழுகலுற்றார்
வந்தஆயிரம்வேதியரு மழுதுபுலம்பினார்கள்
அன்னத்துளசியம்மாள் அவளுமழுகலுற்றாள்
இராஜாக்கள்மந்திரிக ளனைவரும்புலம்பலுற்றார்
வலியன்சிவப்புடையான் மன்னனழுகலுற்றான்
மேலூரில்வாழுகின்ற மாணிக்கச்செட்டியவன்
பஞ்சவர்ணசுவாமிகளைப் பார்த்துப்புலம்பலுற்றான்
வயிரஞ்செட்டிபாளையார் வர்த்தகர்கள்தாமறிந்தார்
கழுமரத்துமேலிருக்குங் கொல்லிமலைக்கன்னியர்கள்
ஆண்டவரைத்தான்பார்த்து அழுதுபுலம்புகிறார்
ஆச்சாலழகுபெண்ணு ளையன்மகள்மாலையரும்
காத்தவனார்தன்பாதங் கன்னியவள்பார்த்து
அரிகரிரங்கநாதா ளரிவையாலேதுசெய்வேன்
என்னைவிட்டுத்தானிவர்க்கு இவ்வளவுவேதனையா
சொற்கிளியாளென்னாலே வருத்தப்படவாச்சுதிவர்
எத்தனைதவஞ்செய்து இளங்கொடியாள்பெண்பிறந்தே
எனனிமித்தமாகவல்லோ யிக்கழுவில்தொங்குகிறார் [ன்
கன்னிகையினாலேயிவர் கழுமரத்திற்றூங்குகிறார்
இப்பெரியபாவமதை எங்கேதுலைத்திடுவேன்
என மன அதாளலேயே எதுசெய்வேன்ரங்கநாதா

கன்னிமனந்தாளலேயே காளைபடுந்துயரம்
ஆதரிக்கவேண்டுமையா ஆண்டவனரிவ்வேளை
என்றுசொல்லிமாலைகன்னி ஏங்கியழுகலுற்றாள்
அம்மாடியென்றுசொல்லி யழுதுபுலம்பியவள்
கூவியழுதாளே கோகிலன்னங்கள்போல்
வாய்விட்டழுதாளே மேனாட்டுபிள்ளைகள்போல் [தாள்
அடிவயிறுமார்பின்மேலே யறைந்துகொண்டுதானழு
வாயிலறைந்துகொண்டாள் வயிற்றைப்பிசைந்துகொண்
இந்தவிதமாக யிவளழுதுதான்களைத்து [டு
கழுமரத்துக்கூண்டுக்குள்ளே காளையவள்விழுந்தாள்
இவளழுதசத்தமதைக் கேட்டுவுகந்தழகி
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்பலுற்றாள் [னே
பஞ்சிகொள்ளுஞ்செட்டியைப்போல் வந்தீரேமன்னவ
பஞ்சிகொண்டெந்தனையும் பாங்காயெடுத்துவந்து
கோமுதலைவங்கிலென்னை குடியமர்த்திவைத்தீரே
ஆரோயெவரோவென் றறியாமல்நானிருந்தேன்
வேல்முருகாவென்குருவே நீவேதனைப்படலாச்சே
எங்களாலுங்களுக்கு இவ்வளவு துன்பமுண்டோ
என்றுவுகந்தழகி யேங்கிப்புலம்பலுற்றாள்
அறைந்துக்கொண்டழுததினா லவளுங்களையாகிவிட்டா
அன்னமுத்துபெண்மயிலா லவளுமழுகலுற்றாள் [ள்
ஐயோசிவனேயென்று அழுதுமவளேதுசொல்வாள்
அப்போதுமாயவனு ராண்டவனுர்தாமறிந்து
தங்கையழுகிறதை சுவாமியவாறிந்து
காமாட்சிகண்ணீறு கழன்றுவிழலாகாது
நிலத்தில்விழுமாகில் நீராயெரிந்திடுமே [ரார்
இதற்கென்னசெய்வேனென்று எம்பெருமாளங்கேவா
கைலைபதிதேடி கரிமேகவண்ணர்வாரார்
ஆதிசிவன்தன்னிடத்தே ஆதிமூலம்வந்துநின்றார்
மாயவரைத்தான்பார்த்து மகாதேவரேதுசெய்தார்
எங்குவந்தீர்மைத்துனரே யென்றுமிவாகேட்கையிலே
பரமசிவனுற்கு பாரளந்தார்தானுரைப்பார்
பிள்ளைபடுந்துயரம் புண்ணியரேகேட்கிலையோ
மைந்தன்படுந்துயரம் மகாதேவர்கேட்கிலையோ
வாதனையும்வேதனையும் மகாதேவர்க்குண்டுபண்ணுர்
தங்கையழுகிறது தாணியிடங்கொள்ளவில்லை



கண்ணீர்நிலத்தில்பட்டால் கனமோசம்வந்திடுமே
பாராமுகமாயிருந்தால் பாலனிறந்திடுவான்
வாதனையும்வேதனையால் பாலனிறந்திடுவான்
வருத்தமதைத்தீர்க்க மகாதேவர்வாருமென்றார்
சீக்கிரமாய்வாருமென்று திருமாலழைக்கையிலே
ஆண்டவனரீஸ்வரர்க்கு அதிககோபமுண்டாகி
அண்டாதகோபமது அனலாகப்பற்றுதங்கே
தீராதகோபமது போராய்முடிகையிலே
அடங்காப்பிள்ளையவ னவத்தாற்கெட்டவன்தான்
அவனுக்கிரங்கமாட்டே னப்பால்நடவுமென்றார்
என்னதான்சொன்னாலு மிரங்கவில்லையீஸ்வரர்க்கு
குண்டோதரனந்திசர் நாரதருமோடிவந்து
சுவாமிக்குமுன்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
ஈஸ்வரிபடுந்துயரம் எண்ணமுடிகூடவியே
பார்வதிப்படுந்துயரம் பார்க்கமுடிபோகலியே
எங்களுக்குரியசுவாமி எழுந்தருளவேண்டுமென்று
வரவேணடுமென்றுசொலலி மறுத்தொருக்கால்சொன்
அப்போதுபரமசிவ னவர்மனதுதானிரங்கி [னார்
கைலையைவிட்டுமந்த கர்த்தனெழுந்தாரே
ஈஸ்வரரெழுந்தவுட னெல்லோருந்தாமெழுந்தார்
நந்திசர்குண்டோதரர் நாரதருந்தானெழுந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வாரார்கள்
விக்கினவிநாயகரும் வேலவரும்வாரார்கள்
கழுமரத்தைதேடியல்லோ கடுகவேவாரார்கள்
திருச்சினாப்பள்ளியது ஸ்ரீரங்கந்தேடிவாரார்கள்
ஆரியப்பூராஜாவை யணைடிருக்குஞ்சீமையைவிட்டு
உப்பங்கிடாரவழி யுயர்ந்திருக்குந்தன் றருகில்
பாச்சூருசாலையிலே பாந்தமணலமேடையிலே
ஆச்சாவபிரமுள்ள அறுபதடிவேங்கைமரம்
தச்சனுளிநாடாமல் வளர்ந்தகழுமரந்தான்
வாச்சுளிநாடாமல் வளர்த்தகழுமரந்தான்
கழுமரத்தின்மேடையண்டை கடுகவேவந்தார்கள்
அப்போபார்வதிபடுந்துயரம் பார்க்கமுடியாமல்
அப்போதுஈஸ்வரனுர் அரனுருமேதுசெய்தார்
காணுதபோல கண்டுவிட்டாரீஸ்வரியை
அனலற்றதுக்கழுட ஆண்டவனாரப்பொழுது

மர்மமாய்விட்டுவிட்டார் மகாதேவரீஸ்வரரும்
அப்போதுபஞ்சவர்ண மாண்டவனார்தன்கழுத்தில்
வாதனையும்வேதனையும் வருத்தமுடன்தானிருந்தார்
ஆரியமாலையரு மன்னமுத்துவுகந்தழகி
இம்மூன்றுகன்னிகளு மேங்கிப்புலம்பலுற்றார்
அங்கிருந்தாரெல்லோரு மழுதுபுலம்பலுற்றார்
கழுவடிக்குப்பூஜைசெய்து காவுகொடுத்தார்கள
இந்தவிதங்களெல்லா மீஸ்வரனார்தாமறிந்து
மைந்தன்படுந்துயரம் மகாதேவர்தாமறிந்து
தனக்குமனந்தாளாமல் சுவாமியங்கேதுரைப்பார்
பறையாபறையாவாடா வழுவாயழுவாயென்று
இரங்கடா அடாபயலே யென்றிவர்தானழைக்க
கைலைதனிலிருக்கும் கர்த்தரழைக்கையிலே
அப்போது ஆண்டவனார் அவரிறங்கும்வேளையிலே
காலிற்கடையாணி கடுகெனவேதைக்குதங்கே
இருகைக்கிரும்பாணி யெழுந்துபோர்கொடுத்துதங்கே
பக்கம்பதினாறாணி பழுவெலும்புகுத்துதங்கே
நாபியிடநாட்டின் நாசிக்குருகுதங்கே
அப்போதுபஞ்சவர்ண மாண்டவரேதுசெய்தார்
சோபக்களையாகி சோர்ந்தாப்போல்தானிருந்தார்
வெந்நீரும்நீர்மோரும் வேணமட்டும்பாணக்கமும்
ஆண்டவர்க்குத்தான்கொடுத்தா ரந்நேரவேளையிலே
களைதெளிந்துதானெழுந்தார் கட்டழகர்பஞ்சவர்ணம்
கழுமரத்தைவிட்டிறங்கி கடுகவேவாரார்கள்
ஆரியமாலையரும் அன்னமுத்துவுகந்தழகி
கழுமரத்தைவிட்டுமல்லோ கன்னியர்கள்தாமிறங்கி
மூவருந்தாமிறங்கி சுவாமியவர்முன்னேவந்து
பாதமதுவலம்பிப் பட்டாலடிதுவட்டி
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை கண்டந்தபஞ்சவர்ணம்
வாழ்த்தியெடுத்து மலர்கையால்தூக்கிவிட்டார்
அப்போதுபஞ்சவர்ண மங்கனமேயேதுசெய்தார்
ஈஸ்வரர்க்குமாயவர்க்கு மினிதுடனேதெண்டனிட்டு
அண்ணன்கணபதிக்கு அடிவணங்கிதெண்டனிட்டு
தாயார்பாதமது சாஷ்டாங்கதெண்டனிட்டு
கண்டுவிட்டாள்காமாட்சி கண்ணிரண்டுத்தான்குளிர



அப்பாமகனேயென் னுண்மையுள்ளகண்மணியே
ஆரனார்கடாட்சம்பெற்று புகழாகவந்திடுவாய்
கண்ணிரண்டும்பொல்லாது கடுகயெழுந்திரென்றாள்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர் நிற்கையிலே
மூவாந்தகன்னிகளும முக்கணரைத்தெண்டனிட்டு
வந்துபணிந்தவரை வாழ்த்தினாரீஸ்வரரும்
காமாட்சிபாதமதில கன்னியர்கள்தெண்டனிட்டார்
அவளையும்தான்வாழ்த்தி யம்மனெடுத்துவிட்டாள்
கைகட்டிவாயபுதைத்து கன்னியர்கள் நின்றார்கள்
இப்படியாக யிவர்களிருக்கையிலே
மாயவரீன்றெடுத்த மகளாங்கருப்பழகி
மைத்துனரைத்தேடியல்லோ மயிலணையாள்வாராளே
ஏழுகருப்பர்களும் இளங்கொடியும்வந்தார்கள்
கழுமரத்தின்மேடையண்டை கடுகவேயோடிவந்து
ஈஸ்வரனார்பாதமதில் யாவர்களுந்தெண்டனிட்டார்
வாழ்த்தியெழுந்திரென்றார் மகாதேவரானவரும்
அத்தையர்பாதமது அடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டுமந்தகாமாட்சி கடுகெனவேயேதுசொல்வார்
அண்ணன்பெற்றசெல்வங்களே அருமையுள்ளபாலர்க (ளே
ஊழியூழிகாலமெல்லாம் வாழியெழுந்திரென்றார்
காத்தவனார்பாதமதில் கடுகெனவேதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டுவிட்டார்பஞ்சவர்ணம்
ஏழுபேர்மைத்துனரை யின்பமுடன்வாழ்த்தலுற்றார்
கருப்பழகிநாயகியைக் காத்தவனார்வாழ்த்தலுற்றார்
மாமன்மகளாரே மல்லிமருக்கொழுந்தே
ஏலக்கருங்குழலே யெழுந்திரடியென்றுரைத்தார்
அண்ணனைதம்பியேழுபேரு மாமன்மகளாரும்
மாயவனார்பாதம் வணங்கிநமஸ்கரித்தார்
வந்துபணிந்தவரை கண்டந்தமாயவரும்
என்னைப்பெறுவீர்களெதிர்த்தார்முடியறிவீர்
பிள்ளைப்பெறுவீர்கள் பேருலகில்வாழ்ந்திருப்பீர்
வாயாரவாழ்த்தியவர் மைந்தர்களைத்தூக்கிவிட்டார்
கைகட்டிவாய்புதைத்துக் கரியவண்ணர்பக்கம்நின்றார்
இப்படியாகவிங்கே யாவர்களுந்தாமிருக்க
பரமசிவன்தான்பார்த்து பாங்காயவரேதுசொல்வார்
புத்தலலங்கரித்து பரமசிவன்சோடியென்றார்

வாழைமரம்தென்னைமரம் வகையுடனே கட்டுமென்றார்
கலியாணச்சடங்குகளை கருத்தாய்முடியுமென்றார்
ஈஸ்வரர்சொற்படிக்கே யாவர்களுந்தாமெழுந்து
பச்சோலைப்பந்தலது பாங்காயலங்கரித்து
சாலுங்கரகங்களும் சந்திரர்க்குமுன்புவைத்தார்
அரசாணிநட்டார்கள் அம்மியொன்றங்குவைத்தார்
வட்டமணையுமிட்டார் வகையுடனேயிவ்விடத்தில்
பக்ஷமுடன்பாய்போட்டு அக்ஷணமேயேதுசெய்தார்
செட்டிப்பெண்ணழகி தேன்மொழியைக்கொண்டுவந்து
ஆர்க்கத்தலைமுழுகி வேர்க்கமயிர்கோதி
சீவிமயிராற்றி கிளிமொழிமார்கொண்டையிட்டு
உச்சியதுதொங்கி யுள்ளங்கால்மட்டாக
இச்சையுள்ளோர்மெச்சும்படி யிட்டார்பணிதிகளை
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டார்
ஆடையாபரணங்கள அலங்கிர்தமான பின்பு
ஆண்டியப்பன் கெந்தபொடியை யள்ளித்தெளித்தார்கள்
அலங்கரித்துக்கொண்டுவந்தார் நந்நோந்தாதியர்கள்
மாமன்மகளாரை மாற்றவர்கள்சோடித்து
கருப்பழகிநாயகியைக் கடுகெனவேகொண்டுவந்தார்
சோடித்துவந்தபொரு தோகையவரிருவருக்கும்
அழகுடையமேனியெல்லாம் ஊருபணக்குதங்கே
முத்துமெருவடியைத் தொட்டுநடந்துவந்து
கவுரிபரிமாறக் கன்னியர்கள்வந்து நின்றார்
கன்னியர்கள்வருகிறதைக் கண்டுவிட்டாபஞ்சவர்ணம்
ஆனந்தமாகவல்லோ அவரெழுந்தோடிவந்து
கழுமரத்துமேடையண்டை கட்டழகாப்போது
அத்தர்பன்னீரதனை யள்ளித்தெளித்துவிட்டார்
அங்கிருக்கும் மங்கையர்க ளப்பொழுதேதுசொல்வார்
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமச்சாந்தினால குளிரவேவீசலுற்றார்
ஈஸ்வரரும்பார்வதியும் இனிதாகவீற்றிருந்தார்
வந்ததோர்தேவரெல்லாம் வரிசையாய்வீற்றிருந்தார்
மாயவர்லட்சுமியும் வகையாகவீற்றிருந்தார்
நான்முகனுஞ்சரஸ்வதியும் நலமாகவீற்றிருந்தார்.
ஆரியப்பூராஜாவும் அவனுடையமந்திரிகளும்
ஆருயிரம்வேதியரும் அவருடையதேவிகளும்



வளையல்சிவப்புடையான் மன்னர்களேழுபேரும்
ஐம்பத்தாறுதேசத்துள் ளானபடைவீரர்களும்
சந்திரருஞ்சூரியருந் தானவரும்வானவரும்
ஆனைவருப வந்திருக்க அழகுள்ளபந்தலிலே
ணிக்கச்செட்டிமகள் மாதரிளங்கொடியை
வளையுமலங்கரித்து அங்ஙனலவேகொண்டுவந்தார்
கைகையர்நாலுபேரும் வகையுடனேவாருர்கள்
யாணமேடையின்மேல் கன்னிகளைவைத்தார்கள்
ஆரியப்பூராஜனவன் ஆரியமாலையற்கு
வேணதிரவியங்கள் வெகுமதியாய்க்கொண்டு
ஆனைபடைசேனையுட னைவில்லாதாதிகளும்
சிவப்புடையகன்னியற்கு சீதனமாய்த்தான்கொடுத்தார்
இப்படியாக இவர்களிருக்கையிலே
வேலவருஞ்சின்னாணும் வேகத்துடனோடிவந்து
காத்தலிங்கசுவாமிகளைக் கடுகவலங்கரிக்க
கழுமரத்தின்மேடைதனில் காளையவனேறும்போது
சோடித்தசோடிப்பில் சுவாமிதனையலங்கரிக்க
பரதேசம்போவதற்கு பாங்காயலங்கரித்தார்
பரமசிவன்புத்திரரும் பரதேசம்போகிறார்
காசியாத்திரைபோகையிலே கண்டாரேவேதியர்கள்
மருமகனைத்தானழைக்க வாராார்மகிழ்ச்சியுடன்
மைத்துனன்மாரேழுபேரும் வந்தாரழகாக
அப்போதுவேதியர்க ளாண்டவர்க்கேதுசொல்வார்
வெளிப்பாக்குவெற்றிலையுங் கைநிறம்பவள்ளியிட்டு
கனிதேங்காகைகொடுத்து மாயவர்களேதுசொல்வார்
சூரியபூமாலைதனை ஆணழகாநாம்தருவோம்
பரதேசம்போகவேண்டாம் பட்சமுடன்வாருமென்றார்
ஏழுபேர்கன்னிகளும் இனிதாகவேதுரைப்பார்
மங்கைக்கருப்பழகி தையலரைநாம்கொடுப்போம்
காசிக்குப்போகவேண்டாங் கட்டழகாவாருமென்றார்
செட்டியார்மகளோடிவந்து சீக்கிரமாயேதுசொல்வார்
மகளாரையாம்தருவோம் மன்னவரேவாருமென்றார்
ஆனைவருந்தான்கூடி ஆண்டவரைக்கொண்டுவந்து
பிள்ளைபஞ்சவர்ணம் மணக்கோலமவந்தார்
வீதிசுற்றியல்லோ நலமாகக்கொண்டுவந்து (தார்
டிகழித்துமல்லோ தெருவெல்லாம்விட்டெறிந்

ஆலங்கள்சுற்றியல்லோ அங்கங்கேவிட்டெறிந்து
அந்தந்தவீதிதாண்டி வாராரே ஆண்டவனார்
ஆரியப்பூமாலையற்கு அங்குள்ளான்வாரானே
உகந்தழகிக்கேற்றதொரு வுத்தமரும்வாறாரே
அன்னமுத்துநாயகிமார் அழகுதுரைவாறாரே
கருப்பழகிமணவாளன் கட்டழகர்வாறாரே
மாப்பிள்ளைவீதிசுற்றி மணவறையில்வந்தமர்ந்தார்
கலியாணமேடையிலே கட்டழகர்வந்துநின்றார்
ஆண்டவனார்வந்தபின்பு அரிவையர்களெடுத்துரைத்தா
நான்குபேர்கன்னிகளை நலமாயழைத்துவந்து [ர்
ஆண்டவர்க்குதன்னருகி லரிவையரைக்குந்தவைத்து
ஓமம்வளர்த்தியல்லோ ஓதுகின்றார்வேதங்களை
மற்றுஞ்சடங்குகளை வகையாகத்தான்பிடித்து
கலியாணசடங்குகளை பிரளாமலேமுடித்து
மங்கிலியங்கொண்டுவந்து வாழ்த்தலுற்றாரெல்லோரும்
ஈஸ்வரரும்பார்வதியும் இவர்களுமஸ்தமிட்டு
மாயவருமலட்சுமியும் மனமகிழ்ந்தஸ்தமிட்டார்
தேவேந்திரனிந்திராணி சிறப்பாகயஸ்தமிட்டார்
விக்கினருமப்பொழுது விளங்கவேயஸ்தமிட்டார்
சந்திரருஞ்சூரியருந் தாங்கள்வந்தஸ்தமிட்டார்
வானவரும்தேவர்களும் வாழ்த்தியேயஸ்தமிட்டார்
ஆயிரம்வேதியரு மவர்களிடதேவியரும்
ஆரியப்பூராசாவு மவர்களிடசேனைகளும்
வர்த்தகரும்செட்டிகளு மண்டலத்தோரெல்லோரும்
அனைவோருமப்பொழுது அஸ்தமிட்டார்மங்கிலியம்
மங்கிலியஸ்தமிட்டு மாரிபிள்ளைகைகொடுத்து
தாலிதரியுமென்று தயவாகத்தானெடுத்து
மாலைதரியுமென்று மகாதேவர்தாமுரைத்தார்
மங்கிலியந்தான்வாங்கி மாரிபிள்ளையேதுசெய்தார்
கட்டுகிறேன்தாலிதன்னைக் காமாட்சிகண்டுகொள்ளும்
பட்டேனொருகோடி பாடுபட்டேன்முக்கோடி
இன்றோடேவிட்டொழிந்தே னென்றன்துயரமதை
தந்தையைமனதிலெண்ணி தகப்பனைநெஞ்சில்வைத்து
அண்ணன்கணபதியை அன்பாகக்கைதொழுது
அரிகரியென்றுசொல்லி யழுத்தினார்மங்கிலியம்
சிவசிவாவென்றுசொல்லி குறித்தாராம்மங்கிலியம்



கோவிந்தாவென்றுசொல்லி குறித்தாராம்மங்கிலியம்
மாதர்கள்நால்வருக்கு மங்கிலியந்தான்தரித்தார்
கன்னியர்கள்நால்வருக்கு கட்டினார்மங்கிலியம்
நெற்றிசுற்றியஸ்தமிட்டார் நிமிலிபிள்ளைபஞ்சவர்ணம்
அங்கிருந்தமன்னரெல்லாம் அட்சதையள்ளியிட்டார்
சேஷையரிசியிட்டார் தேவிபிள்ளையாண்டவற்கு
அம்மிமிதித்தார்க ளருந்ததியுங்கண்டார்கள்
சாலுங்கரகமுஞ் சந்திரரைக்கைதொழுதார்
அரசாணிசுற்றிவந்து அரண்மனையினுட்புகுந்து
பாலும்பழம்புசித்து பாவையரும்ஆண்டவரும்
பலதானந்தான்கொடுத்தார் பிராமணனானவற்கு
மூன்றுநாள்கலியாண முடிந்துதான்போனபின்பு
நாலாம்நாள்நாகவல்லி நலமாய்க்கழிந்தவுடன்
காப்புமதுகளைந்து கணையாழிமாற்றிக்கொண்டார்
தந்ததொருமன்னருக்கு மவர்களிடதேவியற்கு
தாம்பூலபுஷ்பமது சந்தனமுந்தான்வழங்கி
ஆரியப்பூராஜாவு மளவற்றதானஞ்செய்தார்
வந்தவுறன்முறைக்கும் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
அனைவோர்க்கும்பந்திவைத்து அன்னமும்வழங்கலுற்
வாழையிலைபோட்டு மணிச்சொம்பில்நீர்வார்த்து [றார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கரியு மிருபத்தோர்பச்சடியும்
அப்பமதிரசமும் ஆனபழவகையும்
பாற்குழம்புசர்க்கரையும் பாங்காகத்தான்படைத்து
புத்துருக்குநெய்வார்த்து போதவேயுபசரித்து
[illegible]த்தஜனங்களெல்லாம் வயிறாறதான்புசித்து
[illegible]ப்ராஜனங்களுண்டபின்பு பொடியிட்டுகைதிமிறி
[illegible]லோடுங்கையும் கனிவாயும்சுத்திசெய்து
[illegible]லியாணபந்தலிலே வந்தமர்ந்தரெல்லவரும்
[illegible]றிபிளவுவெற்றிலையும் அள்ளியவர்தான்கொடுத்தார்
[illegible]ங்கித்தரித்துக்கொண்டார் வந்தவர்களெல்லோரும்
[illegible]ப்படியாக யிவர்களிருக்கையிலே

அப்போதுஈஸ்வரருமாருமேதுரைப்பார்
மைந்தனைத்தானழைத்து மகாதேவரோதுசொல்வார்
கருப்பழகிவுகந்தழகி கன்னியந்தவன்னமுத்து
இம்மூன்றுகன்னிகளை எப்போதுஞ்சேர்ந்திருநீ
மாலையவளாசைதனை மறந்துவிடுயென்மகனே
அனுசரிக்கக்கூடாது ஆணழகாவென்றுரைத்தார்
என்றிவருரைத்து ஈஸ்வரருமப்போது
பச்சைநிறமாகவென்று பார்வதிக்குவாக்குரைத்தார்
ஈஸ்வரருமவ்வேளை ஏதுசொல்வார்மைந்தனுக்கு
திருச்சினாப்பள்ளியிலே தேவிகளுநீயுமாக
அங்கேயிருந்துமல்லோ வாழ்ந்திருங்களென்றுரைத்தா
வெள்ளரிஷபத்தின்மேல் விமலரும்பார்வதியும் [ர்
ஏறியவர்நடந்து யிருவர்களுமப்போது
கைலைபதிசேர்ந்தார்கள் கர்த்தருமீஸ்வரியும்
மாயன்பெருமாளும் மாதுநல்லாள்லட்சுமியும்
மக்களும்புத்திசொல்லி துவாரகைக்குப்போய்நடந்தார்
பிரம்மாசரஸ்வதியும் போய்நடந்தார்சத்தியலோகம்
வேலவரும்தேவிகளும் வந்திருந்தார்திருத்தணிகை
ஆரியப்பூராஜாவை அங்ஙனமேயேதுசெய்தார்
ஆடலும்பாடலு மாண்டவர்க்குதானமைத்து
இம்மூன்றுபெண்களுக்கு மினியில்லாவேடிக்கையாய்
திரிச்சிராப்பள்ளிக்குச் சுவாமிவாருமென்றுரைத்தார்
அப்போது ஆண்டவனு ரன்பாகத்தான்கேட்டு
நான்குபோர்கன்னிகளு நாகர்பிள்ளையாண்டவரும்
சிவனாரின்சொற்படியே வாரார்களைந்துபேரும்
பாச்நூருசாலைவிட்டு ஆண்பிள்ளைவாராரே
ஆடலுடன்பாடலுட னாண்பிள்ளைவாராரே
திருச்சினாப்பள்ளிதனில் தேவிபிள்ளைவந்தமர்ந்தார்
வந்தவர்கள்யாவருக்குஞ் சுவாமிவிடைகொடுத்து
ஆரியப்பூராஜனுக்கு மவனுடையசேனைகட்கும்
போகவிடைகொடுத்தார் புண்ணியனார்பஞ்சவர்ணம்
விடைபெற்றுத்தாமெழுந்து வேந்தர்கள்போனபின்பு



கருப்பழகிகோட்டைதனைக் கட்டழகரானவர்க்கு
சீதனமாய்த்தான்கொடுத்தார்சிறப்புள்ளமைத்துனர்கள்
[illegible]செட்டிபாளையத்தை மாதுமணவாளனுக்கு [ன்
[illegible]யாய்த்தான்கொடுத்தார் சிறப்புள்ளமைத்துனர்க
[illegible]க்கச்செட்டியார்தான் மருமகனானவற்கு [ய்
அன்னமுத்துக்கோட்டைதனை அவர்கொடுத்தசீதனமா
இத்தனைசீதனமும் பெற்றுக்கொண்டாராண்டவனார்
சீதனங்கள்பெற்றவுடன் தேவிபிள்ளையானவரும்
திருச்சினாப்பள்ளியிலே சீராகவாழ்ந்திருந்தார்
ஆரியமாலையம்மா யிவ்வனத்தில்வாழ்ந்திருந்தாள்
செட்டிபெண்உகந்தழகி சுவாமியுடன்வாழ்ந்திருந்தாள்
அன்னமுத்துமாதுகன்னியவருடனேவாழ்ந்திருந்தாள்
கருப்பழகியானவளும் கலந்துமவன்வாழ்ந்திருந்தாள்
இந்தவிதமாக யிருந்தாரேகாத்தவனார்
காத்தவனார்தன்கதையை கலியுகத்தில்கேட்டவரும்
பார்த்துபடித்தவரும் பண்பாய்முடித்தவரும்
முத்திக்குவித்தான முருகர்பதமடைவார்
மாரியருளினால் மண்மீதில்வாழ்ந்திடுவார்
ஊழியூழிதோறு முலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

காத்தவராயசுவாமி கதை

முற்றிற்று.

0/86PU, N51
77845

